# தி. மு. க

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ

தமிழ்நாடு புத்தக நிலையம்
5, ஸ்டேட் பாங்க் தெரு - சென்னை-2.

முதற்பதிப்பு 1961

விலை ரூ 2-00

மெட்ரோபாலிடன் பிரிண்டர்ஸ் சென்னை-2

# முன்னுரை...

**தி. மு. க.** என்ற மூன்று எழுத்துக்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ளோர்க்கும் கழகத்திற்கு ஆதரவு நல்கிவரும் ஆதரவாளர்க்கும், கழகத்தினிடத்து அன்பும், மதிப்பும் காட்டிவரும் பொதுமக்களுக்கும் மகிழ்ச்சியூட்டிவரும் எழுத்துக்களாகக் காட்சியளித்துவருகின்றன என்றால், அது மிகையாகாது. அத்துணைப்பேர்க்கும் தி. மு. க. என்று சொல்ல நா இனிக்கும். கேட்கச் செவி இனிக்கும். எழுதிப் பார்க்கக் கண் இனிக்கும்; எண்ணச் சிந்தை இனிக்கும்!

1949-ஆம் ஆண்டில் பெரியார் இராமசாமி அவர்கள் திருமணம் என்ற பெயரால் ஓர் ஏற்பாடு செய்ய முற்பட்டுக் கொள்கையைப் புறக்கணித்த போது, அவரது போக்குக் கண்டு மனம் பொறாத கழகத்தவர்கள், கண்ணீர் சிந்திப் பெரியார் அவர்களை விட்டுப் பிரிந்து, ஆனால் கொள்கைகளை விட்டுப் பிரியாமல், 1949 செப்டம்பர் 17-ஆம் நாள் சென்னையில் கூடிச் சுமார் நூற்றைம்பது பேர்களைப் பொதுக் குழு உறுப்பினர்களாகவும், அறிஞர் அண்ணா அவர்களைப் பொதுச் செயலாளராகவும் கொண்டு அமைத்த தி. மு. க. தலைமை அமைப்பு 1961-ஆம் ஆண்டில், ஜூன் திங்களில் சுமார் நாலாயிரத்திற்கு மேற்பட்ட கிளைகளையும், சுமார் மூவாயிரத்திற்கு மேற்பட்ட துணைச் சார்பு மன்றங்களையும், மூன்றரை இலட்சத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களையும், நூற்றெண்பது வட்டக் கழகங்களையும், பன்னிரண்டு மாவட்டக் கழகங்

களையும், மூன்று மாநில அமைப்புக் குழுக்களையும், பல இலட்சக் கணக்கான மக்களின் ஆதரவையும், பல ஊராட்சி மன்றங்களிலே உறுப்பினர்களையும், சில ஊராட்சி மன்றங்களிலே தலைவர்களையும், பல நகராட்சி மன்றங்களிலே உறுப்பினர்களையும், சில நகராட்சி மன்றங்களிலே ஆளும் கட்சியின் பொறுப்புக்களையும், சென்னை மாநகராட்சி மன்றத்திலே தலைவர் பொறுப்பையும் கொண்டிருக்கிற அளவுக்கு வளர்ந்து பெயரும் செல்வாக்கும் பெற்று ஓங்குபுகழ் எய்தித் திகழ்கிறது.

இப்படிப்பட்ட தி. மு. க.-வின் வரலாற்றையும், வளர்ச்சியையும், வலிவையும், பொலிவையும் குறிக்கோள்களையும் கொள்கைகளையும், திறத்தையும், திட்டங்களையும், அமைப்பு முறைகளையும், அலுவல் வகைகளையும், வழிகாட்டும் தலைமையாளர்களையும், வளர்ச்சிகாணும் தொண்டர்களையும், அருமைகளையும், பெருமைகளையும், சீர்களையும், சிறப்புக்களையும், அறியப்பொது மக்கள் பலரும் ஆவலுற்றுக் கிடக்கின்றனர். அப்படிப்பட்ட பொதுமக்களின் ஆவலை நிறைவேற்றி வைக்கும் வகையில் நூல்ஒன்று வெளிவர வேண்டும் என்று கழகத் தோழர்கள் பலரும் பலகாலமாகவே விரும்பி வருகின்றனர். பொதுமக்களின் ஆவலையும் கழகத் தோழர்களின் விருப்பத்தையும் நிறைவேற்றி வைக்கும் தகுதியும், திறமையும் இல்லாமற்போனாலும், அவற்றை ஓரளவுக்கேனும் நிறைவேற்றி வைக்கவாவது பயன்படுமே என்று கருதித்தான் இந்நூலைக் கொண்டுவர முற்பட்டேன். 'ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சர்க்கரையாம்' என்ற பழமொழிக் கிணங்க, தி. மு. க. பற்றிக் கொள்கை விளக்க நூல் எதுவும் பெரிய அளவில் தோன்றாத இப்போதைய நிலையில், இந்நூல் 'இலுப்பைப்பூ சர்க்கரை' போலாவது பயன்படுமே என்பது எனது பணிவான எண்ணமாகும்.

கழகத்தைப் பற்றித் தெளிவாக அறியாதோரும் புரியாதோரும், தெரியாதோரும் ஓரளவுக்குத் தெளிவு பெறவாவது பயன்படட்டுமே என்றுகருதித்தான் கழகத்தோடு தொடர்புடைய பொருள்கள் குறித்துத், தனித்தனித் தலைப்புக்களின் கீழ், விளக்கம் தரப்பட்டிருக்கின்றது. இந்நூலில் படிப்போர்க்குத் தெளிவாகப் புரியவேண்டும் என்பதற்காகத் தான், சில பல நிகழ்ச்சிகளும் செய்திகளும், கருத்துக்களும், பொருள்களும் வாய்ப்பு ஏற்படும் இடங்களிலெல்லாம் மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளன. இந்நூலில் ஏதேனும் குற்றங் குறைகள் நல்லறிவு படைத்த நடுநிலையாளர்க்குத் தென்படுமாயின், அவை என்னுடைய சிற்றறிவின் காரணமாக ஏற்பட்டவையாக இருக்குமேயல்லாமல், அவை கழகத்தைப் பொறுத்தவையாகவோ, அல்லது கொள்கைக்குறிக் கோள்களைப் பொறுத்தவை யாகவோ இருக்கா என்பது மட்டும் உறுதி.

ஏதும் அறியாப் பொதுமக்களுக்குத் தி.மு.க-வை அறிமுகப்படுத்தி வைக்க இந்நூல், ஓரளவுக்குப் பயன் படுமேயானல், இந்நூலின் நோக்கம் பெருமளவுக்கு வெற்றி பெற்றது என்று பொருள்.

கழகத் தோழர்கள்—ஆதரவாளர்கள்—பொது மக்கள் ஆகியோரின் கண்ணையும், கருத்தையும் ஈர்க்கிறவகையில், இந்நூலை அழகாகவும், அருமையாகவும், செம்மையாகவும், சிறப்பாகவும் வெளியிட முன்வந்துள்ள 'தமிழ்நாடு புத்தக நிலையத்'தார்க்கு என் நன்றி உரித்தாகுக! இதனைப் பயன்படுத்திக் கொள்ளும் நண்பர்களுக்கு என் அன்பும், மகிழ்ச்சியும் உரியவாக!

சென்னை,
1—7—'61

இரா. நெடுஞ்செழியன்

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கழகமும் கொள்கைக் குறிக்கோள்களும் | 5 |
| 2. | கழகமும் வளர்ச்சியும் | 24 |
| 3. | கழகமும் சனநாயகமும் | 37 |
| 4. | கழகமும் அண்ணாவும் | 47 |
| 5. | கழகமும் சட்டமும் | 66 |
| 6. | கழகமும் கட்டுப்பாடும் | 76 |
| 7. | கழகமும் மொழிக் கொள்கையும் | 92 |
| 8. | கழகமும் பாடமொழித் திட்டமும் | 108 |
| 9. | கழகமும் மாணவர்களும் | 115 |
| 10. | கழகமும் கலைஞர்களும் | 121 |
| 11. | கழகமும் தொழிலாளர்களும் | 134 |
| 12. | கழகமும் பொதுத்தேர்தலும் | 139 |
| 13. | கழகமும் காங்கிரசும் | 151 |
| 14. | கழகமும் புதியகட்சியும் | 158 |
| 15. | கழகமும் கனவும் | 170 |

# கழகமும்
# கொள்கைக் குறிக்கோள்களும்

திராவிட முன்னேற்றக் கழகம், அரசியல் துறையில், மொழிவழித் தனித்தனி மாநிலங்களாகப் பிரிந்து, தேவையான உரிமைகளையும், அதிகாரங்களையும், வசதிகளையும், வாய்ப்புக்களையும் பெற்று அமைந்த தமிழகம் ஆந்திரம் கருநாடகம் கேரளம் ஆகிய நான்கும், பிரிந்து போகிற உரிமையோடு, குறைந்த அளவுத் திட்ட அடிப்படையில், திராவிட இனவழி விரும்பி ஒன்றாக இணையும் கூட்டாட்சிக் கொள்கையையும், பொருளியல் துறையில் சமதர்மக் கொள்கையையும், சமூகவியல் துறையில் சமத்துவக் கொள்கையையும் தன் கொள்கைக் குறிக்கோள்களாகக் கொண்டு அரும்பாடுபடத் தோன்றியிருக்கும் சீரியதொரு அமைப்பாகும். தி. மு. கழகம் ஓர் அரசியல் கட்சியாக மட்டுமல்லாமல் ஒரு விடுதலையியக்கமாகவும் இருந்து செயலாற்றி வருகிறது.

'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற முழக்கத்தைக் கழகம் முழங்கியவுடனே, திராவிடம் என்பது எது? அதன் எல்லைகள் எவை? என்று மாற்றுக் கட்சியினரும் பிறரும் வினவுகின்றனர்.

தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் எனும் முக்கியமான திராவிடக் குழு மொழிகள் நான்கும் வழங்கப்படுகின்ற பகுதிகள் நான்கும், ஒன்றாக இணைந்த நிலப்

பரப்பே திராவிடம் ஆகும் என்று, உலக வரலாற்றுப் பேரறிஞர்கள் கூறியுள்ளனர்; இந்தியத் துணைக் கண்ட வரலாற்றுப் பேரறிஞர்களும், தென்னக வரலாற்றுப் பேரறிஞர்களும் அதனைச் செப்பியுள்ளனர்; இந்திய மொழி யாராய்ச்சி வல்லுநர்கள் அதனைத் தெளிவு படுத்தியுள்ளனர்; திராவிட மொழியாராய்ச்சியாளர்கள் அதனை வரையறுத்துக் கூறியுள்ளனர்; தமிழ்ப் பேரறிஞர்கள் பலர் அதனை விளக்கிக் காட்டியுள்ளனர். அத்தகையோரின் கூற்றுக்களின் அடிப்படையில் நின்றுதான், திராவிட முன்னேற்றக் கழகமும், தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும் இணைந்த நிலப்பரப்பைத் திராவிடம் என்று அழைக்கிறது.

தி. மு. கழகம் 'திராவிடம்' என்பதனைப் புதிதாகக் கற்பனை செய்து சொல்லவில்லை; வரலாற்றுப் பேரறிஞர்களும் மொழியாராய்ச்சியாளர்களும் குறிப்பிட்டு வந்த அந்தச் சொல்லைத்தான் தி. மு. கழகமும் எடுத்துக் கையாளுகிறது. 'பாக்கிச்தான்' என்ற சொல்லாவது, புதிதாகக் கண்டு பிடிக்கப்பட்டுப் புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட நாட்டுக்கு வைக்கப்பட்ட பெயராகும். ஆனல், 'திராவிடம்' என்ற சொல் பல நூற்றாண்டுகளாகவே ஒரு குறிப்பிட்ட நிலப் பரப்பைச் சுட்டிக்காட்டும் ஒரு சொல்லாக வரலாற்று அறிஞர்களால் பயன்படுத்தப்பட்டு வருகின்றது.

அகில இந்தியக் கட்சிக்காரராக விளங்கும் காங்கிரசுக் காரர்கள் மேற்கண்ட உண்மைகளை நன்கு அறிந்து கொள்ளாமலும் தெரிந்து கொள்ளாமலும், "திராவிடம் என்பது எது?" என்று கேட்கிறார்கள் என்பதுதான் வியப்பாக இருக்கிறது. அதுவும் இந்த வினவை அவர்கள் எழுப்புகிருர்களே என்று எண்ணும்போதுதான் பெருவியபபுத் தோன்றுகிறது.

காங்கிரசுக்காரர்கள் "திராவிடம் எது?" என்பதனை விரும்பி ஏற்றுக்கொண்டு, சட்டப்படி அதனை ஒப்புக்கொண்டுமிருக்கிறார்கள். காங்கிரசு அமைச்சர்களும், தலைவர்களும், தொண்டர்களும் நாள் தோறும் பாடி மகிழ்கிறார்களே 'ஜன கண மன' எனும் இந்தியாவின் நாட்டுப் பாடல், அதிலே தி. மு. கழகம் குறிப்பிடுகிற 'திராவிடம்' தெளிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றது. 'திராவிடத்'தைப் பற்றிப் பாடிக்கொண்டே "திராவிடம் எங்கே இருக்கிறது?" என்று பல காங்கிரசுக்காரர்களும் கேட்பதுதான் நமக்குப் பெருஞ் சிரிப்பை விளைவிக்கிறது. "திராவிடம் எங்கே இருக்கிறது?" என்று காங்கிரசுக்காரர்கள் கேட்கும்போதுதான், "நீங்கள் பாடுகிற 'ஜன கண மன' பாட்டிலே, நாங்கள் கேட்கிற திராவிடம் இருக்கிறது!" என்று எக்கொலி கொட்டி நகைத்துக் கூற வேண்டியிருக்கிறது.

'ஜன கண மன' எனும் நாட்டு வாழ்த்துப் பாடல், கவிஞர் இரவீந்திரநாத்தாகூர் பாடிய வங்க மொழிப் பாடலாகும். அந்தப் பாடலில் அவர் இந்தியாவின் பல்வேறு பகுதிகளையும் குறிப்பிட்டும் பாராட்டிப் புகழ்ந்தும் வாழ்த்துகிறார். அதில் பஞ்சாப், சிந்து, குஜராத்தி, மராட்டியம், உத்கல எனும் மத்தியப் பகுதி, வங்காளம், இமய மலைப் பகுதி, கங்கை யமுனை பாய்கிற பகுதி போன்ற பலவற்றையும் குறிப்பிட்டுத், 'திராவிடம்' என்ற பகுதியையும் அழுத்தந் திருத்தமாகக் குறிப்பிடுகிறார். "பஞ்சாப சிந்து குசராத்த மராட்டா திராவிட உத்கல வங்க" என்பது பாடலில் வரும் அடி!

தி. மு. கழகத்தார் எதைத் திராவிடம் என்று குறிப்பிடுகிறார்களோ, அதைதான் இரவீந்திரநாத்தாகூரும் குறிப்பிடுகிறார். தமிழகம்— ஆந்திரம்— கருநாடகம்— கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும் ஒன்று சேர்ந்த நிலப்பரப்பைத்தான்

'திராவிட' என்ற ஒரே சொல்லால் தாகூர் குறிப்பிடுகிறார். "பஞ்சாப சிந்து குசராத்த மராட்டா" என்று பாடிக் கொண்டு வருகின்ற தாகூர் மேற்கொண்டு பாடும்போது "ஆந்திர கருநாடக கேரள தமிழக உத்கல வங்க" என்று பாடவில்லை; "திராவிட உத்கல வங்க" என்றுதான் பாடுகிறார். தாகூர் தென்னக மொழிவழி மாநிலங்கள் நான்கையும் ஒன்றாகச் சேர்த்துத் 'திராவிட' என்றுதான் அழைக்கிறார். தாகூரின் 'ஜன கண மன' பாடலைப் பலமுறை பாடி மகிழ்கிற காங்கிரசுக்காரர்கள் 'திராவிடத்'தைக் காணத் தேடி அலைவதுதான் விந்தையினும் விந்தையாக இருக்கிறது.

'ஜன கண மன' பாடல் இந்திய அரசியல் அமைப்புச் சட்டப் புத்தகத்தின் முதல் பக்கத்தில் தெள்ளத் தெளியப் பதிப்பிக்கப் பெற்று இந்தியப் பாராளு மன்றத்தால் சட்டப்படி ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது.

'ஜன கண மன' பாடலிலே வருகிற திராவிடம் தி. மு. கழகம் கோருகிற திராவிடத்தைத்தான் நூற்றுக்கு நூறு அப்படியே குறிப்பிடுகிறது. "திராவிட நிலப்பரப்பை அந்தச் சொல் குறிப்பிடவில்லை. அது கழுதை, குதிரை, ஆடு, மாடு, கடல், குட்டிச்சுவர் போன்ற ஏதேனும் ஒன்றைத்தான் குறிப்பிடுகிறது" என்று எந்தக் காங்கிரசுக்காரராவது வாதிட்டு நிற்க முடியுமா? முடியாதே! அவ்வளவு தெளிவாகத் தாகூர் கூறக், காங்கிரசுக்காரர்கள் ஏற்றுக்கொண்டிருக்கிறார்களே! எனவே, 'திராவிடம் என்பது எது? எங்கே இருக்கிறது?' என்று காங்கிரசுக்காரர் இனியும் கேட்டுக்கொண்டிருப்பதில் பொருளில்லை.

"திராவிடத்தின் எல்லை எது?" என்று காங்கிரசிலுள்ள அமைச்சர்களிலிருந்து சாதாரண ஆண்டிப் பண்டாரங்கள் வரை எல்லோரும் அடிக்கடி கேட்கிறார்கள்.

தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும் சேர்ந்த நிலப்பரப்பின் எல்லைதான் திராவிடத்தின் எல்லையாகும் என்றும், அதாவது கிழக்கே வங்காள விரிகுடாவும், தெற்கே இந்துமாகடலும், மேற்கே அரபிக்கடலும், வடக்கே கருநாடக-ஆந்திர வட எல்லைகளும் திராவிடத்தின் சுற்று எல்லையாக அமைந்து கிடக்கின்றன என்றும் தி. மு. கழகத்தார் பல காலமாகக் கூறி வருகின்றனர். இதனை அறிந்து கொள்ள மறுக்கும் காங்கிரசுக்காரர்கள் மீண்டும் மீண்டும் கேட்கின்றனர், "திராவிடத்தின் எல்லை எது?" என்று. இந்தக் காங்கிரசுக் காரர்கள் இந்திய யூனியனின் எல்லையை அங்குலத்திற்கு அங்குலம் வரையறுத்துத் தெரிந்து வைத்துக்கொண்டிருப்பவர்கள் போல் எண்ணிக்கொண்டு திராவிடத்தைப்பற்றிக் கிண்டலாகக் கேட்கிறார்கள். தி. மு. கழகத்தவர்கள் திராவிடத்தின் எல்லையைக் குறிப்பிடும்போது மூன்று புறம் கடல் எல்லையாகவும், வடக்கே கன்னடியரும், ஆந்திரரும் சேர்ந்தாற்போல் பரவியிருக்கும் அளவு எல்லையாகவும் அமைந்திருக்கின்றன என்று திட்டவட்டமாகச் சொல்லுகிறார்கள். இந்த அளவுக்குத் திட்டவட்டமாக இந்திய யூனியன் எல்லையைக் காங்கிரசுக்காரரால் கூற முடியுமா? முடியாதே! 'இந்தியா'வுக்கு அமைந்திருக்கிற எல்லையைவிட, 'திராவிடத்'திற்கு அமையக்கூடிய எல்லை தெளிவானது, திட்டவட்டமானது, நிலையானது, நியாயமானது ஆகும்.

தமிழ்நாட்டைத் தனிநாடாகப் பெற முயலுவதை விட்டுவிட்டுத், திராவிடநாட்டைத் தனிநாடாகப் பெற தி. மு கழகம் முயலுவதன் நோக்கம் என்ன? என்று கேட்கிறார்கள் சிலர். முழு உரிமை பெற்ற தனித்தமிழ்நாடு பிரியவேண்டும் என்று சிலர் இப்பொழுது சிற்சில இடங்களில் கூறிவருவதன் காரணமாகப் பொதுமக்கள் சிலரின் உள்ளத்தில் மேற்கண்ட ஐயவினா எழும்பியுள்ளது.

அந்தச் சிலர், "தமிழ்நாடு தமிழர்க்கு" ஆகவேண்டும் என்ற கருத்தைத் தாமே முதன்முதலாகக் கண்டுபிடித்தது போலவும், இந்த எண்ணம் இதுவரையில் வேறு யாருக்குமே தோன்றாதது போலவும், தமிழர்களின் உரிமைக்கும், வாழ்வுக்கும், வளத்திற்கும் பாடுபடும் உணர்ச்சி தமக்குமட்டுமே ஏற்பட்டிருப்பது போலவும் எண்ணிக் கொண்டு சிலபல பகன்று வருகிறார்கள்.

"தமிழ்நாடு தமிழர்க்கே" ஆகவேண்டும் என்ற எண்ணம் இப்பொழுதுதான் புதிதாகத் தோன்றியிருக்கிறது என்று யாரும் எண்ணவேண்டாம். அந்தக் கருத்துக்கு 1938-ஆம் ஆண்டிலே முதன் முதலாக வித்திட்டவர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தின் முன்னைய பரம்பரையினர் ஆவார்கள். தமிழ்நாடு தனிநாடாகப் பிரியவேண்டும் என்ற கருத்து வலுப்பெற்று வளர்ந்து, சில ஆண்டுகளில், அனுபவ அறிவின் விளைவாகவும், வளர்ச்சியின் அறிகுறியாகவும் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற கருததாக மாறிற்று. "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற கருத்தை உள்ளடக்கிக்கொண்டு வளர்ந்த கருத்துத்தான் "திராவிடநாடு திராவிடர்க்கே" என்பது.

இந்தியத் துணைக்கண்டத்திலிருந்து தமிழகம் தனியே பிரியவேண்டும் என்ற கருத்து இந்தி எதிர்ப்பின் விளைவாக 1938-இல் உருவாகியது. இந்தியாவின் தேசிய மொழியாகவும், ஆட்சி மொழியாகவும், பொதுமொழியாகவும் ஆக்கிடும் நோக்கத்தில், தமிழகத்தில் கட்டாய இந்தி புகுத்தப்பட்ட நேரத்தில், தமிழார்வம் கொண்ட பேரறிஞர்களும், பொதுமக்களும் அந்தக் கட்டாய இந்தியைத் தீவிரமாக எதிர்க்கும் பணியில் ஈடுபட்டார்கள். இந்தி எதிர்ப்பு இயக்கம் தமிழகத்தின் பல பகுதிகளிலும் ஓங்கி வளரத் தொடங்கிற்று. 1937-ஆம் ஆண்டில், ஆச்சாரியார் முதல் அமைச்சராக இருந்த காலத்தில் தோன்றிய இந்தி எதிர்ப்பு

இயக்கம் மக்களின் உள்ளத்தில் தமிழார்வத்தையும், தமிழனின் பண்டைய பெருமைகளையும், அவன் ஆண்டு புகழ்பெற்ற வரலாறுகளையும், தமிழிலக்கியங்களின் சிறப்புக்களையும் தூவியது. வடநாட்டு இந்தி ஏகாதிபத்திய ஆதிக்கம், வடநாட்டு அரசியல் ஆதிக்கத்தையும், பொருளாதார ஆதிக்கத்தையும், வாணிக ஆதிக்கத்தையும் நாளடைவில் தமிழ்ப் பேரறிஞர்களுக்கு உணர்த்திற்று. அதன் விளைவாக, 1938-ஆம் ஆண்டு மே திங்களில் சென்னைக் கடற்கரையில் கூட்டப்பெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்புப் பொதுக்கூட்டத்தில், 'தமிழ்நாடு தமிழர்க்கு ஆகவேண்டும்' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் பேராசிரியர் மறைமலையடிகள் ஆவார்கள். அதனை வழிமொழிந்து பேசியவர்கள் பெரியார் இராமசாமி, ச. சோமசுந்தர பாரதியார் ஆகியோர் ஆவார்கள்.

பெரியார் இராமசாமி அவர்கள் 1938-இல் சென்னையில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் நீதிக்கட்சித் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபின் நாட்டுப் பிரிவினைக் கருத்து நீதிக்கட்சியினரிடையே பரப்பப்பட்டது, 1940 ஆம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டிற்கு வருகை தந்திருந்த ஆந்திர—கருநாடக—கேரளப் பிரதிநிதிகள் "தமிழ்நாடு தமிழர்க்கே" என்ற பிரிவினை முழக்கத்தின் விளக்கத்தைக் கேட்டறிந்தனர். தமிழ்நாடு எந்த எந்தக் காரணங்களுக்காக வடநாட்டிலிருந்து பிரியவேண்டும் என்று கூறப்படுகிறதோ, அந்த அந்தக் காரணங்கள் அப்படி அப்படியே முழுக்க முழுக்க ஆந்திராவுக்கும் பொருந்தும், கருநாடகத்துச்குப் பொருந்தும், கேரளத்துக்கும் பொருந்தும் என்று அவர்கள் வாதிடவே, தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு நாடுகளும் மொழிவழிப் பிரிந்து, குறைந்த அளவு திட்டங்களிலே ஒன்றுபட்ட ஒரு கூட்டாட்சி நாடாக மலரமுடியும் என்ற கருத்து கூறப்

பட்டது. அதன் காரணமாகத் "திராவிடநாடு திராவிடருக்கே" என்ற இலட்சிய முழக்கம் உருவாகியது.

"திராவிடநாடு" என்பது முழுக்க முழுக்க ஒரே ஆட்சி அமைந்த ஒரு தனிநாடு அல்ல. நான்கு நாடுகள் தமக்குத் தேவையான அளவுக்குத் தனித்தனி உரிமைகள் பெற்று, தனித்தனி மாநில ஆட்சிகள் அமைத்துக்கொண்டு, மேலை நாட்டு—வடநாட்டுச் சுரண்டல் தடுப்பு, வடநாட்டு ஆட்சி ஆதிக்கத் தடுப்பு,வடநாட்டு இந்தி ஏகாதிபத்தியத் தடுப்பு, உள்நாட்டுப் பாதுகாப்பு, நாணயச் செலவாணி, இரயில்வே, தபால்—தந்தி, வெளிநாட்டு விவகாரம் போன்ற குறைந்த அளவுத் திட்டங்களில் ஒன்றுபட்ட ஒரு கூட்டாட்சிப் பெருநாடாகும்.

திராவிடக் கூட்டாட்சி நாடுகள் நான்கும் ஒன்றோடொன்று இயற்கையால், இனத்தால், மொழியால், வரலாற்றால், வாணிகத்தால், உறவால், நாகரிகத்தால், பண்பாட்டால், பழக்க வழக்கத்தால் நெருங்கிய தொடர்புடையன வாகும். தமிழகத்திற்கும் ஆந்திராவுக்கும், தமிழகத்திற்கும் கருநாடகத்திற்கும், தமிழகத்திற்கும் கேரளத்திற்கும் இருக்கும் தொடர்பு, மாடப்புறுவுக்கும் மணிப்புறுவுக்கும் உள்ள தொடர்பு போன்றது என்று வைத்துக் கொண்டால், திராவிடக் கூட்டாட்சி நாடுகளுக்கும் வடநாட்டுக்கும் உள்ள தொடர்பு, மாடப் புறுவும் வல்லூறுக்கும் உள்ள தொடர்பாகும். மாடப் புறுவும் மணிப்புறுவும் சேர்ந்து வாழக்கூடியன; ஆனால், மாடப் புறுவும் வல்லூறும் சேர்ந்து வாழக்கூடியன அல்ல. திராவிடக் கூட்டாட்சி நாடுகள் நான்கும் ஒன்றையொன்று அறவே துண்டித்துக்கொண்டு அமைதியாகவும் வசதியாகவும் வாழமுடியாத அளவுக்குத்தொடர்புடையன வாகும். இவை நான்கும் ஒன்றையொன்று பகைத்துக் கொண்டு வாழ்வதைவிட ஒன்றோடொன்று தேவையான

அளவுக்கு உறவு கொண்டாடிக்கொண்டு வாழ்வது மிக்க பலன் தருவதாகும். ஆனால், இந்த நான்கு நாடுகளும் சேர்ந்து வடநாட்டிலிருந்து அறவே துண்டித்துக் கொண்டு தனிக் கூட்டாட்சி நாடுகளாக இருந்து வாழமுடியும்; அப்படி வாழ்வது நலம் பயக்கும். திராவிடத்தின் வளமும் வரிப்பணமும் வடநாடு சென்று வடநாட்டவர்க்குப் பயன் படுவது நின்று அவை திராவிடத்துக்கே பயன்படும் நிலை ஏற்படும்.

இந்தியத் துணைக்கண்ட ஆட்சியைப்போல் எல்லாப் பகுதிகளையும் அடக்கியாளும் ஒரு தனி ஆட்சியை நாம் திராவிடத்தில் ஏற்படுத்த விரும்பவில்லை. பிரிந்துபோகும் சுய நிர்ணய உரிமையோடு கூடிய நான்கு தனிநாடுகள் தேவையான அளவுக்கு ஒன்றுசேர்ந்த ஒரு கூட்டாட்சி யைத்தான் திராவிடத்திலே நிலைநாட்ட விரும்புகிறோம்.

தமிழ்நாடு தனிநாடாக அமைந்தால் என்ன என்ன பலன் ஏற்படும் என்று எதிர்பார்க்கப் படுகின்றதோ, அந்தப் பலன் முழுவதும் திராவிடக் கூட்டாட்சியின் கீழும் தமிழகத்திற்கு உண்டு என்பதோடு, அதற்கு மேலும் சில தேவையான பலன்கள் ஏற்படும். ஒரு அணை வில் காலணு உறுதியாக இருப்பதைப்போல் திராவிடக் கூட்டாட்சியில் தமிழகம் உறுதி பெறும்.

திராவிடப் பகுதிகள் நான்கும் தனித்தனியே பிரிந்து தனிநாடுகளாக ஆனால், அவைகளுக்கிடையே ஏற்படக் கூடிய மாற்சரியங்கள், திராவிடக்கூட்டாட்சியில் பெரு மளவுக்குத் தவிர்க்கப்படும்; முடிந்தால் அறவேகூட தவிர்க் கப்படக் கூடும். திராவிடப் பகுதிகள் நான்கிலும் ஒரு பகுதியைச் சேர்ந்தவர்கள் மற்றொரு பகுதியில் குறிப்பிடத் தகுந்த பெரிய எண்ணிக்கையோடு வாழ்கிறார்கள். "தமிழ் நாடு தமிழர்க்கே" என்ற உணர்ச்சி வெறியுணர்ச்சியாக வளர்க்கப்பட்டுவிடுமேயானால், தமிழகத்திலுள்ள தெலுங்

கர்களும், கன்னடியர்களும், மலையாளிகளும் அந்தந்தப் பகுதிகளுக்கு விரட்டியடிக்கப் படவேண்டும் என்ற நிலைமைக்கும் கொண்டுபோய்விடும். அதைப் போன்றே ஆந்திர-கருநாடக-கேரளப் பகுதிகளிலும் நடைபெறக்கூடும். இப்படிப்பட்ட இடர்ப்பாடுகளைத் தவிர்க்கவும் கூட்டாகச் சேர்ந்து பெறக்கூடிய சில பலன்களை அடையவும் அரும் பெருந்துணையாக அமையக்கூடியதுதான் திராவிடக் கூட்டாட்சி நாடு.

உலகின் எந்த எந்தப் பகுதிகளிலோ கிடக்கும் பல் வேறு நாடுகள் சில பல திட்டங்களிலே ஒன்றுசேர்ந்து ஒரு 'காமன்வெல்த்' அமைப்பாக அமைந்து பலன்காண முற்படுவதைப் பார்க்கின்றோம். அதைவிடத் தெளிவான—மிக வான—தேவையான—எழிலான—ஏற்றமான—வெற்றிகரமான பலன்களைத் தரக்கூடியது திராவிடக் கூட்டாட்சி நாடாகும்.

எனவே "திராவிடநாடு திராவிடர்க்கே" என்பது "தமிழ்நாடு தமிழர்க்கே" என்றதின் முரண்பாடான கருத்து அல்ல; அதன் வளர்ச்சியின் அறிகுறியாக விளங்கும் மிக்க பலன்தரக்கூடிய, சீரிய, ஓங்கு புகழ்கொண்ட கருத்தாகும்.

**திராவிட நாட்டுப் பிரிவினையை ஆந்திரத்தான் ஆதரித்தானு? மலையாளத்தான் மதித்தானு? கன்னடத்தான் காது கொடுத்துக் கேட்டானு? அப்படிக்கில்லாதபோது திராவிடநாடு எப்படிக் கிட்டும்? என்று கேட்கிருர்கள்.**

திராவிட நாட்டு விடுதலைக் கொள்கை, ஆந்திர—கருநாடக—கேரளப் பிரதிநிதிகளின் ஆதரவின்பேரில் தான், நீதிக்கட்சியின் மாநில மாநாட்டில் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது என்பது, மேலே விளக்கிக் காட்டப் பட்டுள்ளது.

## 15

திராவிடநாட்டு விடுதலைக் கிளர்ச்சிக்குத் தமிழகத்தில் மலர்ந்திருக்கும் அளவு மக்கட் சக்தியின் ஆதரவு, மற்றப் பகுதிகளில் மலரவில்லை என்பது உண்மைதான். அங்கெல்லாம் மலராததற்குக் காரணம், அப்பகுதி மக்கள் விடுதலைக் கொள்கையை வெறுத்தொதுக்கிவிட்டார்கள் என்பதல்ல; விடுதலைக் கொள்கை இன்னமும் சரியானபடி அவர்கள் முன், எடுத்து வைக்கப்படவில்லை என்பதேயாகும். விடுதலை முழக்கம் திராவிடமெங்கும் சரியானபடி பரவாததற்குக் காரணம் விடுதலைக் கொள்கையிடத்து ஏற்பட்டுள்ள குறைபாடு அல்ல; கழகத்திடத்து ஏற்பட்டுள்ள வசதிக் குறைவுதான். விடுதலை முழக்கத்தைத் தமிழகத்தில் எழுப்பிவரும் திராவிட முன்னேற்றக் கழகம், போதுமான வசதியையும், வாய்ப்பையும் தேடிக் கொண்டான பிறகு, பிற பகுதிகளிலும் உறுதியாக அந்த முழக்கத்தை எழுப்பியே தீரும்.

திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கையை முதலில் ஏற்றுக்கொள்ள மறுத்த தமிழகத்தின் பல பகுதிகள், எப்படிச் சிறுகச் சிறுக நாளடைவில் ஏற்றுக்கொள்கிற தன்மையைப் பெற்றுவருகின்றனவோ, அதுபோலவே ஆந்திரமும், கருநாடகமும், கேரளமும் விடுதலைக் கோரிக்கைக்கு நாளடைவில் ஆதரவு காட்டும் என்ற உறுதிப்பாடு நமக்கு உண்டு. வடநாட்டுத் தொடர்பினின்றும் தன்னை அறுத்துக்கொள்ள வேண்டும் என்ற உணர்வு திராவிட இயக்கத்தின் முயற்சியில்லாமலேயேகூட, பிற பகுதிகளில் சிறுகச்சிறுக அரும்பத் தொடங்கியுள்ளது. வடநாட்டு ஆதிக்கத் தொடர்பினின்றும் கேரளத்தைத் தனியே பிரிக்க வேண்டும் என்ற முழக்கத்தைக் கேரளப் பகுதிகளில், கேரள சோசியலிஸ்ட்டுக் கட்சி மிகத் தீவிரமாகச் செய்துவருகிறது. வடநாட்டினின்றும் தென்னாடு ஏன் பிரியவேண்டும் என்பதற்கான காரணங்களைத், திராவிட முன்னேற்றக் கழகம் போய்க் கேரளத்தின் பட்டி தொட்டி

களில் வைக்கவேண்டிய இன்றியமையாமைக்குக் கழகத்தை உள்ளாக்காமல், அந்தப் பணியைக் கேரள சோசியலிசுட்டுக் கட்சியே திறம்படச் செய்துவருகிறது. சென்ற பொதுத் தேர்தலின்போது, கேரளப் பகுதிகளில் சுற்றுப் பிரயாணம் செய்யப் பண்டித நேரு வந்தகாலை, அங்குள்ள நகரங்களின் சில சுவர்களில், "மார்வாடியே வெளியேறு" என்பது போன்ற முழக்கங்கள் எழுதப்பட்டிருந்ததையும், அதனை நேரு பார்த்துவிட்டு, அதுபற்றிக் கண்டித்துப் பொதுக் கூட்டங்களில் பேசியதையும் நினைவு கூர்ந்து பார்த்தால், வடநாட்டுச் சுரண்டலுக்கு எதிர்ப்பு கேரளத்தில் உருவாகி வருவது விளங்கும். சேலத்தில் நடைபெற்ற திராவிடக் கழக மாநில மாநாட்டில் பேசிய மலையாளத்தைச் சேர்ந்த தலைவர்கள் வடநாட்டுத் தொடர்பினின்றும் தென்னாடு பிரிந்துபோக வேண்டியதன் இன்றியமையாமையை மிகவும் வற்புறுத்திக் கூறியுள்ளார்கள்.

சென்ற ஓராண்டு காலத்திற்கு முன்பு கருநாடக மாநில முன்னாள் முதலமைச்சர் தோழர் அனுமந்தையா, மத்திய சர்க்கார் எப்படி வடநாட்டுக்காரர்களால் ஆட்டிப் படைக்கப்படுகிறது என்பது பற்றியும், தென்னாட்டு அரசுகள் அதற்கு எப்படி எடுபிடியாக நடக்கவேண்டிய நிலைமையிலிருக்கிறது என்பது பற்றியும், தென்னாட்டின் மீது இந்தி மொழியைத் திணிக்கும் ஆதிக்கத்தைப்பற்றியும் குறிப்பிட்டதிலிருந்தே வடநாட்டின்மேல் கருநாடகத்திற்கு ஏற்பட்டிருக்கும் மனக்கசப்பு நன்கு தெளிவாகும். கன்னட மக்களுக்குத் தாய்மொழிப் பற்றின் வழியில் கருநாடக நாட்டுப்பற்றும், மேற்கூறிய மனக்கசப்பும் தொடர்ந்து வளருமேயானால், வடநாட்டினின்றும் அறுத்துக்கொண்டு போக வேண்டும் என்ற உணர்வு அவர்களிடம் உறுதியாகக் கொழுந்துவிட்டு எரியவே செய்யும். மேலும் கன்னடியர்கள் தங்கள் பகுதியின் வளத்தையும், வடநாட்டோடு கருநாடகம் தொடர்பு

பூண்டிருப்பதால் இலாபமா அல்லது நட்டமா என்பதையும் கணக்குப் போட்டுப் பார்க்கும்போது, வடநாட்டின் தொடர்பை நீக்கிக்கொண்டு, பிற தென்னாட்டுப் பகுதிகளோடு குறைந்த அளவுத்திட்ட அடிப்படையில் உறவு கொண்டு வாழ்வது, கருநாடகத்துக்கு ஏற்றத்தையும் எழிலையும் தருவதாகும் என்பதை உணர்ந்தே தீருவார்கள்.

திராவிட நாட்டு விடுதலையைப்பற்றி ஆந்திரத் தோழர்களுடன் தனிப்பட்ட முறையில் விளக்கங் கொடுத்து அலசிக்காட்டிப் பேசும்போது, அவர்கள் ஏற்றுக் கொள்ளவே செய்கின்றனர். ஆனால், ஆந்திராவிலுள்ள பெரும்பாலோரின் எண்ணம், ஆந்திர மாநிலத்தை நிலையுள்ளதாக்க முனைவதில், இப்பொழுது ஈடுபட்டுள்ளதால், திராவிடநாட்டு விடுதலை முழக்கத்தைச் செவிமடுக்கவோ, அதுபற்றிச் சிந்தித்துப் பார்க்கவோ முனைப்பில்லை. ஆனால், இன்னும் சிறிது காலத்திற்குள் ஆந்திரம் ஒரு வலிவு பொருந்திய ஆதிக்கங்கொண்ட மத்திய ஆட்சியின் கீழ்த் தான் அடங்கிக்கிடப்பது, தனக்குப் பயன்தருமா அல்லது தனியே தன்னைத் துண்டித்துக்கொண்டு, பிறகு தன்னோடு நெருங்கிய தொடர்புடைய கருநாடகம், தமிழகம் ஆகிய வற்றோடு தேவையான அளவுக்கு உறவு வைத்துக்கொண்டு வாழ்வது பயன்தருமா என்று எண்ணிப்பார்க்கும் நிலை, அதற்கு ஏற்பட்டே தீரும். அப்பொழுது அது பிரிவினைக் கோரிக்கையை வலியுறுத்தத்தான் செய்யும்.

இப்படியாகத் தமிழகம், ஆந்திரம், கருநாடகம் கேரளம் ஆகிய நான்கு பகுதிகளிலும் உருவாகிவரும் சூழ்நிலைகள் திராவிட நாட்டு விடுதலைக் கோரிக்கைக்குத் துணியாக நிற்பவையேயொழிய, மாறுகொளக் கிடப்பவையல்ல.

மத்தியப் பேரரசிடம் போய்க் குவிந்துகிடக்கும் அதிகாரங்களில் பலவும், வரியினங்களில் பலவும் மாநில-

அரசுகளுக்கு உரிமையாக்கப்பட வேண்டும் என்ற கருத்தைத் தென்னாட்டு மாநில அரசுகளின் முதலமைச்சர்கள் அவ்வப்போது வெளியிடுவது பிரிவினைக் கிளர்ச்சிக்கு உறுதுணை செய்வதேயாகும். அன்பர் ஆச்சாரியார் சென்னை முதலமைச்சராக இருந்தபோது இந்தக் கருத்தைச் சிற்சில பொழுது வெளியிட்டிருக்கிறார்.

இந்திய விடுதலைப் போராட்டத்தோடு சேர்ந்து வளர்ந்த தலைவரும், பெருவாரியான மக்களின் அன்பையும், ஆதரவையும் பெற்று வாழும் நிலையிலுள்ளவருமான பண்டித ஜவாகர்லால் நேரு, இந்தியப்பிரதமராக இருந்துவருவதால், தென்னாட்டு அரசுகள் இந்தியப் பேரரசோடு கொண்டிருக்கும் பிடிப்பை அவ்வளவு எளிதாகக் குறைத்துக் கொள்ளவோ, தளர்த்திக் கொள்ளவோ, வெட்டிக் கொள்ளவோ இயலாத நிலையிலிருக்கின்றன. இந்தியாவை ஒன்றுபடுத்தும் ஒரு பெரும் ஆற்றலின் சின்னங்களாக விளங்கிய காந்தியாரும், பட்டேலும் மறைந்து விட்டார்கள். அவர்களது பெயர்களைக் காங்கிரசுக்காரர்களே நினைவுபடுத்திக் கொள்வது என்பது அருமையாகிவிட்டது. இப்பொழுது இந்தியாவை ஒன்றுபடுத்தும் ஒரு பெரும் ஆற்றலின் சின்னமாக, விட்டகுறை தொட்டகுறையாக விளங்கும் ஒரே தலைவர் பண்டித நேருதான். அவர் நீடூழி காலம் வாழட்டும்! ஆனால், அவர் காலத்திற்குப் பிறகு எந்த வடநாட்டு லால்பகதூர் சாத்திரிக்கும், தாண்டனுக்கும், தேசாய்க்கும், தேபருக்கும் தென்னாட்டு மக்கள் வழிபட்டு நடப்பார்கள் என்று எதிர்பார்க்க முடியும்? பண்டித நேருவின் சுட்டுவிரல் காட்டியவழி இன்று இந்தியா இயங்குகிறது. நேருவின் சுட்டுவிரல் அவ்வளவு வலிவு படைத்தது! ஆனால், நேருவிற்குப் பிறகு வரும் எந்தத் தலைவரின் சுட்டுவிரலும், தென்னாட்டைப் பொறுத்த வரையில், அறிஞர் அண்ணா அவர்களின் சுட்டுவிரலைக் காட்டிலும் வலிவற்றதாகவே இருக்கும்! ஆனால், அறிஞர்

அண்ணாவின் சுட்டுவிரல் காட்டியவழி திராவிடம் இயங்கும்; அதனை வேறுபக்கம் திருப்பும் ஆற்றல் படைத்தோர் வேறு யாரும் எதிர்ப்பட்டு நிற்க இயலாது!

இப்பொழுது இந்தியத் துணைக் கண்டத்தில் மூண்டெழுந்துவரும் மொழிவழி நாட்டுணர்ச்சியைப் பார்த்தால், இந்தியா—தமிழகம், ஆந்திரம், கருநாடகம், கேரளம், மராட்டியம், ஒரியா, வங்கம், குஜராத், பஞ்சாப் என்று பல்வேறு துண்டுகளாக நாளடைவில் பிரிந்தே தீரும் என்பது உறுதி. ஒவ்வொரு மொழியினரும் தங்கள் தங்கள் பகுதியைத் தாங்களே ஆளமுடியும்—ஆள வேண்டும் என்று முயலுவார்கள். அப்படிப் பிரிந்து போகும் மொழிவழி மாநிலங்களில் தென்னாட்டு மாநிலங்கள் நான்கும் ஒரு கூட்டாட்சியில் அமைவது எளிது; இயல்வதான செயலாகும். ஏனெனில், இந்த நான்கு பகுதிகளும் ஒரு கூட்டாட்சியில் அமைவதற்கான பொதுமைப் பண்புகள், இவற்றிடத்தே நன்கு பொதிந்து கிடக்கின்றன. தென்னாட்டு அரசுகள் நான்கும் வடநாட்டுத் தொடர்பை வெட்டிக்கொண்டு வாழுகிற இயற்கையமைப்பிலும், தங்களுக்குள் ஒன்றோடொன்று கூட்டுறவு வைத்துக் கொள்கிற இயற்கை யமைப்பிலும் தாம் அமைந்துகிடக்கின்றன. என்றைக்கேனும் ஒருநாள் தென்னாடு திராவிடக் கூட்டாட்சி நாடாக மலர்வதற்கான அறிகுறிகள் நாளுந்தோறும் வளர்ந்து வருவதைக் காணலாம்.

தமிழகத்தில் விடுதலை முழக்கம் செய்யும் மனப்பான்மையுடையோர் ஆட்சிப் பீடத்திலிருக்க வேண்டிய நிலைமை ஏற்படுமாயின், பிறகு, நான்கு தென்னாட்டு அரசுகளிடையே இருக்க வேண்டிய கூட்டுறவு பற்றியும், வடநாட்டினின்றும் பிரியவேண்டிய அவசியம் பற்றியும் தமிழகம் பிற பகுதிகளிடையே அடிக்கடி பேச்சுவார்த்தைகள் நடத்த, அந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றிபெறும்

கட்டம் வரும்போது, திராவிடநாடு திராவிடர்க்கே ஆகித் தானே தீரும்! தென்னாட்டு அரசுகளுக்கு மத்திய அரசாங்கத்திடத்தும், வடநாட்டு வாணிகப் படையெடுப்பிடத்தும் நாளுக்கு நாள் வெறுப்புத் தோன்றி வருகிறது; அந்த வெறுப்பு திராவிடக் கூட்டாட்சி தனியே மலர்வதற்குத் துணை செய்வதாக முடியும். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வசதியும் வளமும், சிறப்பும் செல்வாக்கும் வளர வளர, அரசியல் சூழ்நிலைகள் மாறமாற, மத்திய அரசாங்கத்திடத்து வெறுபபு தோன்றத்தோன்ற, வெள்ளையன் சுரண்டலையும் வடநாட்டுக் கொள்ளையன் சுரண்டலையும் வெறுக்க வெறுக்கத் 'திராவிடநாடு திராவிடர்க்கே' என்ற கோரிக்கையை ஆந்திரத்தான் ஆதரிக்கவே செய்வான்; கன்னடத்தான் காது கொடுத்துக் கேட்கவே செய்வான்; மலையாளத்தான் மதிக்கவே செய்வான்!

உலகில் தோன்றிய விடுதலை இயக்கம் எல்லாம் மக்களின் ஆதரவைப் பெற்ற பிறகே திட்டம் தீட்டின என்பதில்லை; திட்டம் தீட்டிக் கொண்டுதான் மக்களின் ஆதரவைப் பெற்றன. அது போலவேதான் திராவிட முன்னேற்றக் கழகம் திட்டம் தீட்டிக்கொண்டு ஆதரவைத் திரட்டுகிறது. 'காலம் மாறுகிறது' கருத்து வெல்லும்; என்ற உறுதிப்பாடு கழகத்திற்கு உண்டு.

கழகம் கேட்பது, 'திராவிட நாட்டுப் பிரிவினையா?' அல்லது 'திராவிட நாட்டு விடுதலையா?' என்று கேட்கின்றனர்.

'திராவிட நாட்டு விடுதலை' என்று குறிப்பிடுவதுதான் சாலச்சிறந்ததாகும்; அதுதான் பொருத்தமான சொற்றொடருமாகும்.

'பிரிவினை' என்ற சொல் பொதுவாகப் பழக்கத்தில் கையாளப்பட்டு வருகின்ற சொல்லாக இருந்தாலும், 'விடுதலை' என்ற சொல்தான் பொருள் தருவதும், பொருத்

தம் நிறைந்ததும், விளக்கம் பயப்பதும், வீரம் செறிந்ததும், உணர்ச்சி ஊட்டுவதும், எழுச்சி தருவதும், வலிவு பயப்பதும், பொலிவு நிரம்பியதும் ஆன சொல்லாகும்.

பிரிவினை என்ற சொல் தரும் பொருளையும் ஊன்றிக் கவனித்தால் அவற்றிற்கிடையே உள்ள வேறுபாடு இனிது விளங்கும்.

ஒன்றாக—முழுமுதலாக இருக்கும் ஒரு பொருளிலிருந்து, அதன் ஒரு பகுதியையோ அல்லது கூறுபாட்டையோ தனியாகப் பிரித்தெடுக்கும்போது, பிரித்தெடுத்தலாகிய அந்தச் செய்கையை 'பிரிவினை' என்கிறோம்.

தனித்தனியாக இருந்த இரண்டு பொருள்கள் ஒன்றோடொன்று ஏதோ ஒரு காரணம் பற்றிப் பிணைந்து கட்டுப்பட்டு இருக்க, பிணைக்கப்பட்ட இரண்டு பொருள்களும் மீண்டும் தனித்தனியே விடுபட்டுச் செல்லுமேயானால், விடுபடுதலாகிய அந்தச் செய்கையை 'விடுதலை' என்கிறோம்.

ஒரு மூங்கில் இருந்து, அதனை நடுவே பிளந்து, அதனை இரண்டு பாதிகளாக்குகிறோம் என்றால், அது பிரிவினை என்று பெயர் பெறும். தனித்தனியாக இருந்த இரண்டு மூங்கில்கள் ஒன்றாகச் சேர்த்துக் கட்டப்பட்டுக் கிடக்குமேயானால், அந்தக் கட்டிலிருந்து ஒரு மூங்கிலைத் தனியே விடுவிக்கிறோம் என்றால், அது விடுதலை என்று பெயர் பெறும்.

'பிரிவினை' என்ற சொல்லைக் கழகத்தின் மாற்றார்கள் அடிக்கடி பயன்படுத்தி வருவதன் காரணம், இந்தியா என்றென்றும் ஒரே நாடாக இருந்தது என்னும் கற்பனைக் கருத்தை நிலைநாட்டவும், அதிலிருந்து திராவிடத்தைப் புதிதாகப் பிரிக்கவே நாம் விரும்புகிறோம் என்ற எண்ணத்தை வளர்க்கவுமே யாகும்.

உள்ளபடியே பார்த்தால் இந்தியா என்றென்றும் ஒன்றாக இருந்ததில்லை என்பது எவருக்கும் புலனாகும்.

இந்தியாவை ஆங்கிலேயர்கள் அடக்கியாள முற்பட்டதற்கு முன்னால், அது ஒரே நாடாகக் காட்சியளிக்கவில்லை. அது பல்வேறு அரசுகளாகத்தான் காட்சியளித்தது. ஆங்கிலேயன் தன் படை வலிவு, துப்பாக்கி வலிவு, பீரங்கி வலிவு, அரசியல் தந்திர வலிவு போன்ற பல்வேறு வலிவுகளை அடிப்படையாகக்கொண்டு இந்தியத் துணைக்கண்டத்திலிருந்த பல்வேறு நாடுகளையும் மெல்ல மெல்ல வென்று தன் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவந்தான். சிராஜ்—உ—உத்தௌலா, மீர்சாபர், மீர்காசிம், ஹைதர், திப்பு, ஆற்காடு நவாப், பீஷ்வாக்கள் போன்ற பல்வேறு அரசர்களை முறியடித்து அவர்களின் அரசுகளைக் கைப்பற்றியும், நைசாம், திருவாங்கூர், கொச்சி, புதுக்கோட்டை, மைசூர், குவாலியர், கெய்க்குவாப், பீஜ்பூர், ஜெயப்பூர் போன்ற 583 சமஸ்தானங்களை அடிமைகொண்டும் ஆங்கிலேயன் இந்தியாவை ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்தான். ஆங்கிலேயனுடைய துப்பாக்கி முனைதான் இந்தியத் துணைக்கண்ட ஓராட்சியின் எல்லைக் கோட்டைக் கிழித்தது. அதற்கு முன்னால் எந்தக் காலத்திலும் இந்தியா ஒரே நாடாகக் காட்சியளித்ததில்லை. அலெக்சாண்டர் படையெடுத்தபோதும் சரி, செலுக்கஸ் நிக்கோடர் வந்தபோதும் சரி, மீனண்டர் வந்தபோதும் சரி, மெகஸ்தெனிஸ் நுழைந்தபோதும் சரி, செங்கிஸ்கான் படையெடுத்தபோதும் சரி, பாபர் படையொடு நுழைந்தபோதும் சரி, தைமூர் வந்தபோதும் சரி, கோரி நுழைந்தபோதும் சரி, கஜினி முகமது பதினேழு தடவை படையெடுத்தபோதும் சரி, போர்த்துகேசியின் வந்தபோதும் சரி, டச்சுக்காரன் நுழைந்தபோதும் சரி, பிரெஞ்சுக்காரன் நாடு பிடித்தபோதும் சரி, ஆங்கிலேயன் இந்தியாவில் அடி எடுத்துவைத்தபோதும் சரி, இந்தியா ஒன்றாக இருந்ததில்லை என்பதைத்தான் வரலாற்று ஏடுகள் அழுத்தந் திருத்தமாகக் கூறுகின்றன. தென்னகம் தனி நாடாகவும், சேர சோழ பாண்டியன் அரசுகளாகப் பிரிந்த தனி நாடாகவுங்

தான் பல நூற்றாண்டுகளாகக் காட்சியளித்து வந்திருக்கிறது. இந்த வரலாற்று உண்மைகளிலிருந்து இந்தியா ஒரு நாடல்ல என்பதையும், பல நாடுகள் சேர்ந்த ஒரு துணைக்கண்டமாகும் என்பதையும் உணரலாம். அந்த இந்தியத் துணைக்கண்டம் இன்று ஒரே ஆதிக்க ஆட்சியின் கண்ணே கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இந்தியாவோடு இணையாமல் இருந்த தென்னகத்தை—திராவிடத்தை, இந்தியத் துணைக்கண்ட ஆதிக்க ஆட்சியினின்றும் விடுவித்து, மீண்டும் தனித்திராவிடக் கூட்டாட்சியாக ஆக்கிடும் பணியில்தான் திராவிட முன்னேற்றக் கழகம் ஈடுபட்டிருக்கிறது. எனவேதான் திராவிட நாடு விடுதலை பெறவேண்டும் என்று முழக்கமிட்டு வருகிறோம்.

# கழகமும் வளர்ச்சியும்

திராவிட முன்னேற்றக் கழகத்தின் வளர்ச்சியையும், செல்வாக்கையும், பெருமையையும், புகழையும் கண்டு பொறாமையால் மனம் புழுங்கும் மாற்றார்கள், கழகத்தின் வலிவையும் பொலிவையும் குறைக்கவும், அடியோடு அழித்தொழிக்கவும் அல்லும் பகலும் அரும்பாடு பட்டுவருகின்றனர்.

தி. மு. கழகம் தோன்றிய பதினொன்றரை ஆண்டு காலமாகக், கழகத்தினரைப் பகைவர்களாகக் கருதிக்கொண்டிருக்கிற மாற்றார்கள், கழகத்தையும், கழகத்தின் காவலர்களையும் இல்லாதது பொல்லாதுகளை இட்டுக்கட்டி, இழித்துரைத்தல்—பழித்துப் பேசுதல்—ஏளனம் செய்தல்—வசைபாடுதல்—தூற்றித் திரிதல்—கழகத்தோழர்களை அடித்தல்—உதைத்தல்—வாட்டுதல்—வறுமைப்பட வைத்தல்—கொடுமைக்குள்ளாக்குதல்—கொலை செய்ய முயலுதல்—கழகத்தோழர்களுக்குத் துன்பம் கொடுத்தல்—துயரிழைத்தல்—இடுக்கண் விளைவித்தல்—இடையூறு பயத்தல்—தொல்லைகள் தருதல்—துக்கம் ஏற்படுத்துதல்—இழப்புக்கள் உண்டாக்குதல், கழகக் கொடிமரத்தை வெட்டுதல், கழகக் கொடியைக் கிழித்தெறிதல்—அதற்குத் தீ வைத்துக் கொளுத்துதல், கழகப் பணிமனைகளை இடித்தல்—அகற்றுதல்—பிரித்தல்—சூறையாடுதல்—அவற்றிற்குத் தீ வைத்தல், குறை ஏற்படுத்துதல், கழகக் கூட்டங்களையும், மாநாடு

களையும் கலைத்தல் போன்ற இழிசெயல்களை அங்கொன்றும் இங்கொன்றுமாகச் செய்து, கழகத்தை அழித்தொழிக்க முயன்றனர். தி. மு. கழகத்தின் வளர்ச்சிக்கு முட்டுக் கட்டைகளாக வைக்கப்பட்ட மேற்கண்ட தொல்லைகளையும், துயரங்களையும், இடுக்கண்களையும், இடையூறுகளையும் தாண்டித் தாண்டித்தான் தி. மு. கழகம், வலிவோடும், பொலிவோடும், வெற்றிப் பாட்டையில் நடை போட்டு வந்திருக்கிறது.

மாற்றார்கள் இழைத்த கொடுமைகளையும், கூறிய இழிசொற்களையும் தி. மு. கழகத்தினர், 'எதையும் தாங்கும் இதயம் உண்டு' என்ற முறையில், தாங்கிக் கொண்டார்கள். அவற்றைக் கண்ணால் கண்ட—காதால் கேட்ட பொதுமக்கள் அன்பையும், ஆதரவையும், தி. மு கழகத்தின் பக்கம் வைத்து, அருவருப்பையும், வெறுப்பையும் மாற்றார் பக்கம் மெல்ல மெல்லக் காட்டி வரத் தலைப்பட்டனர். இத்தகைய நிலைமைகள் கழகத்தின் வலிவைப் பெருக்கவும், மாற்றாரின் வலிவைக் குறைக்கவும் பயன்பட்டுவருகின்றன என்று கூறினால் அது மிகையாகாது.

இழித்துப் பழித்து ஏசுவதன் மூலம் தி. மு. கழகத்தை அழித்து ஒழித்து விடலாம் என்று மாற்றுக் கட்சியினர் கருதி, அந்த இழிசெயல்களில் மிகத் தீவிரமாக இறங்கிப் பார்க்கின்றனர். ஆனால், மாற்றார்கள் ஏச ஏசத்தான், தி. மு. கழகத்தின் மாண்பும் மதிப்பும் நாளுக்கு நாள் பொலிவு பெறுகின்றன. அடிக்க அடிக்கப்பந்து உந்துவதைப் போல், அரைக்க அரைக்கச் சந்தனம் மணப்பதைப்போல், புகைக்கப் புகைக்கக் காரகில் மணங் கமழ்வதைப் போல், சுடச் சுடச் செம்பொன் ஒளிவீசுவதைப் போல், அறுக்க அறுக்க வைரம் மின்னுவதைப் போல் திராவிட முன்னேற்றக் கழகமும் மாற்றாரின் சொல்லாலும், செயலாலும் தாக்கப் படத் தாக்கப்படப், பொலிவு பெற்று வளருகிறது.

தி. மு. கழகத்தை ஏசுவதன் மூலம் மாற்றார் பெறும் பலன் என்ன? என்று சிலர் கேட்கக் கூடும். சொரி பிடித்தவன் சொரிந்து கொள்வதன் மூலம் எப்படி எரிச்சலைத் தணித்துக்கொள்ள முயலுகிறானோ, அது போலவே, தி. மு கழகத்தைக் கண்டு மனவெரிச்சல் கொண்டுள்ள மாற்றார்கள், தம் மனவெரிச்சல் தணியவேண்டிக் கழகத்தவர்களை ஏசித் தீர்க்கிறார்கள்.

தி. மு. கழகத்தைப் பற்றி மாற்றார்கள், என்ன மதிப்பு அளிக்கிறார்கள் என்பதல்ல முக்கியம்; கழகத்தைப்பற்றி மக்கள் மன்றம் என்ன கருதுகிறது, எத்தகைய மதிப்பினை அளிக்கிறது என்பதுதான் முக்கியம். மாற்றார்கள் தொடக்க காலத்திலிருந்து கழகத்தைப் பற்றி இழிவாகக் கருதியும், ஏளனமாகப் பேசியும்தான் வருகிறார்கள்; இனியும் அப்படித்தான் இருந்து வருவார்கள் என்பதிலும் ஐயமில்லை. ஆனால், கழகத்தை ஐயப்பாட்டோடும், பகையுணர்ச்சியோடும், வெறுப்புணர்ச்சியோடும் ஆரம்ப நாட்களில் எண்ணிவந்த மக்கள் மன்றம், வரவரச் சிறிது சிறிதாக ஐயப்பாட்டை அகற்றிக்கொண்டு, பகைமையுணர்ச்சியைத் தணித்துக்கொண்டு, வெறுப்புணர்ச்சியைக் குறைத்துக்கொண்டு, தி. மு. கழகத்தின் கொள்கைகளுக்கு நல்லதீர்ப்பு அளித்துக்கொண்டு, நல்ல ஆதரவு காட்டிக் கொண்டு வருகிறது.

மாற்றுக் கட்சியினர், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவையும் ஆற்றலையும், தகுதியையும் திறமையையும் ஏற்றுக்கொண்டால்என்ன? ஏற்றுக்கொள்ளாமல் போனால் என்ன? மக்கள் மன்றம் ஏற்றுக்கொள்ளுகிறதா? இல்லையா? என்பதுதான் முக்கியம். மாற்றாரின் பேச்சையும், அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சையும், மாற்றாரின் பேச்சிலே உள்ள அரசியல் தெளிவையும், அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சிலே உள்ள அரசியல் தெளிவையும், மாற்றார்க்

குப் புரிந்த அரசியல் அறிவியல்—அரசியல் தத்துவம் ஆகிய வற்றையும், அறிஞர் அண்ணா அவர்களுக்குப் புரிந்த அரசியல் அறிவியல் தத்துவம் ஆகியவற்றையும், மாற்றார் எழுதித் தள்ளியிருக்கிற கட்டுரைகள்—நூல்கள் ஆகியவற்றையும், அறிஞர் அண்ணா அவர்கள் எழுதித் தள்ளியிருக்கிற கட்டுரைகள்—நூல்கள் ஆகியவற்றையும் ஆய்ந்து சிந்தித்துச் சீர் தூக்கிப் பார்க்கிற பொதுமக்கள் மன்றம், யாருக்கு நல்ல தீர்ப்பு அளிக்கும், யாருக்கு நல்ல தீர்ப்பு அளித்து வருகிறது என்பது சொல்லாமலே விளங்கும். பொதுமக்கள் மன்றத்தின் நல்ல தீர்ப்பு அறிஞர் அண்ணா அவர்களின் பக்கமும், அறிஞர் அண்ணா அவர்களை வழிகாட்டியாகக் கொண்டிருக்கிற தி.மு. கழகத்தின் பக்கமும் நாளுக்கு நாள், மெல்ல மெல்ல, ஆனால் உறுதியாக—நிலையாகக் கிடைக்கப் பெற்று வரும்போது, கழகத்தைப் பற்றிப் பொறாமையுற்ற மாற்றார்கள் என்ன கருதினால்தான் என்ன?

வழக்கு மன்றத்தின்கண் தன் வழக்கை எடுத்துவைத்து வாதாடிக்கொண்டிருக்கும் வாதி, தன்னைப் பற்றி, பிரதி வாதி என்ன கருதிக்கொண்டிருக்கிறான் என்று கவலைப்பட மாட்டான். அவன், தன்னுடைய வழக்கையும், பிரதி வாதியின் வழக்கையும் செவிமடுத்துக் கேட்டுக்கொண்டிருக்கும் நீதிபதி என்ன தீர்ப்பு அளிக்கப் போகிறார் என்றுதான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பான். நீதிபதியிடம் நல்ல தீர்ப்புக் கிடைக்க வேண்டும் என்றுதான் எதிர்பார்ப்பான். அப்படி நல்ல தீர்ப்புக் கிடைக்கும்போது பெருமகிழ்ச்சியடைவான். அதுபோல வாதிகளாகிய தி. மு. கழகத்தார், "திராவிட நாடு விடுதலை பெறவேண்டும்; மொழிவழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட திராவிடம் அமையவேண்டும்" என்ற வழக்கைப் பொதுமக்கள் மன்றத்தின் முன் எடுத்து வைத்து, பொதுமக்களாகிய நீதிபதிகளைத் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறார்கள். பிரதிவாதிகளாகிய மாற்றுக் கட்சியினர் எதிர் வழக்காடி

வருகின்றனர். அவர்கள் கழகத்தார் எடுத்துவைக்கும் கருத்துக்குக் கருத்துச், சான்றுக்குச் சான்று, புள்ளிவிவரத்திற்குப் புள்ளிவிவரம், உண்மைக்கு உண்மை, வாதத்திற்கு வாதம் என்ற முறையில் வாதாடாமல், ஏசல்—தூற்றல்—இழிசொல்—பழிச்சொல் ஆகியவற்றை எதிர்வழக்காக எடுத்துவைக்கிறார்கள். இரு சாராரின் வாதங்களையும் செவியாரக் கேட்கின்ற பொதுமக்களாகிய நீதிபதிகள் தி. மு. கழகத்தினரின் பக்கம் நாளுக்கு நாள்—மெல்ல மெல்ல நல்ல தீர்ப்பு அளித்து வருகிறார்கள் என்பது கண்கூடு. வழக்கு மன்றத்திலே நிற்கும் வாதி, பிரதிவாதியின் கருத்தையும் பேச்சையும் பற்றி எப்படிக் கவலைப்பட மாட்டானோ, அப்படித்தான் கழகத்தோழர்களும் மாற்றார்களின் கருத்தையும், பேச்சையும், ஏச்சையும் பற்றிக் கவலைப்படவேண்டிய இன்றியமையாமையில்லாதவர்களாக இருக்கிறார்கள். வாதி எப்படி நீதிபதியின் தீர்ப்பை எதிர்பார்க்கிறானோ, அப்படியேதான், கழகத் தோழர்களும், பொதுமக்கள் மன்றத்தின் தீர்ப்பை எதிர்பார்க்க வேண்டியவர்களாக இருக்கிறார்கள். கழகத் தோழர்கள் எதிர்பார்க்கிற அளவுக்குப் பொதுமக்கள் மன்றத் தீர்ப்பும், ஆதரவும் நாளுக்கு நாள் கிடைக்கப்பெற்று வருகின்றன. அவை காரணமாகத்தான் கழகத்தின் வலிவும் பொலிவும் நாளுக்கு நாள் மேலோங்கி வருகின்றன.

'மக்கள் மன்றத்தில் பெற்ற நல்ல ஆதரவின் காரணமாகத்தான், தி. மு. கழகம், 1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாளில் சுமார் நூற்றைம்பது பேர்களைக் கொண்ட தலைமை அமைப்பாகத் துவங்கி இன்று சுமார் ஐயாயிரம் கிளைகளையும், மூவாயிரத்திற்கு மேற்பட்ட துணைச்சார்பு மன்றங்களையும், பன்னிரண்டு மாவட்டக் கழகங்களையும், சுமார் மூன்றரை இலட்சம் உறுப்பினர்களையும், பாராளுமன்றம்— சட்ட மன்றம்— சென்னை

மாநகராட்சி மன்றம், பிற நகராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பாராட்டத்தக்க வகையில் இடங்களையும் பெற்றுள்ள ஒருபெரும் அமைப்பாகக் காட்சியளிக்கிறது. தி. மு. கழகம் பொதுவாகத் தென்னகத்தில், குறிப்பாகத் தமிழகத்தில் வேறு எந்த அரசியல் கட்சியும் நடத்திக் காட்டாத அளவுக்கு மாவட்டந்தோறும் மூன்று மாவட்டக் கழக மாநாடுகளை நடத்திக் காட்டியிருக்கிறது; மிகப்பெரிய அளவில் இரண்டு கழகப் பொது மாநாடுகளைக் கூட்டி யிருக்கிறது; மூன்றாவது கழகப் பொதுமாநாட்டை மிகச் சீரோடும், சிறப்போடும் மதுரை மாநகரில் கூட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கிறது; இவை தவிர, முத்தமிழ் மாநாடு—எழுத்துரிமை பேச்சுரிமை மாநாடு—சமூக சீர்திருத்த மாநாடு—பொதுத் தேர்தலுக்கான தனி மாநாடு—இந்தி எதிர்ப்பு மாநாடு—வட்டார அரசியல் மாநாடு—குடிசை வாழ்வோர் மாநாடு—நிதிச் சிறப்புக் கூட்டங்கள்—நிதி நாடகங்கள்—நிதி நிகழ்ச்சிகள் ஆகியவை பரவலாகவும், பெருமளவிலும் நடைபெற்றிருக்கின்றன. கழகம், கழகத்திற்கான சொந்தப் பணிமனைகள்—படிப்பகங் கள்—நூலகங்கள்—கட்டடங்கள்-திடல்கள் ஆகியவற்றை ஆங்காங்கு நிறுவியிருக்கிறது. கழகத்திற்குச் சொந்தமான 'நம் நாடு' நாளிதழும், ஆதரவான நாளிதழ்—வார இதழ்—இருவார இதழ்—திங்கள் இதழ்—ஆண்டிதழ் பலவும் சென்ற பதினொரு ஆண்டு காலத்திற்குள்ளாக ஏற்பட்டிருக் கின்றன. எழுத்துரிமை பேச்சுரிமைத் தடை எதிர்ப்புப் போராட்டங்கள்—144 தடை எதிர்ப்புப் போராட்டங்கள்—நாடகத் தடை எதிர்ப்புப் போராட்டங்கள்—குலக் கல்வித்திட்ட எதிர்ப்புப் போராட்டங்கள்-பண்டித நேருவின் கூற்றுக்கு எதிர்ப்பாக இரயில் நிறுத்தப் போராட்டம்—கல்லக்குடி எனும் பெயரை நிலைநாட்டும் போராட்டம்—தமிழக எல்லைப் பாதுகாப்புக் கிளர்ச்சிகள்-இந்திப் பெயர்ப் பலகை அழிப்புப் போராட்டம்—இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி

கள்—ஆட்சியாளர்க்கு அவ்வப்போது எதிர்ப்பைக் காட்டக் கறுப்புக்கொடிகாட்டும் ஆர்ப்பாட்டங்கள்—கைத்தறி நெசவாளர், நூல் ஆலைத் தொழிலாளர்கள், சர்க்கரை ஆலைத் தொழிலாளர்கள், மோட்டார் போக்குவரத்துத் தொழிலாளர்கள், பீடித் தொழிலாளர்கள், உழவர்கள், மின்சாரத் துறைத் தொழிலாளர்கள், பாங்கித் தொழிலாளர்கள், ஆயுள்பாதுகாப்புத் துறைத் தொழிலாளர்கள், இரயில்வேத் துறைத் தொழிலாளர்கள், தபால்-தந்தித் துறைத் தொழிலாளர்கள், செய்தித்தாள் தொழிலாளர்கள், மாணவர்கள், கெசட் பதவியில்லாத அரசாங்க ஊழியர்கள், மருத்துவத் துறைத் தொழிலாளர்கள், டாக்சி டிரைவர்கள், ரிக்சா இழுக்கும் தொழிலாளர்கள், கட்டை வண்டித் தொழிலாளர்கள், துறைமுகத் தொழிலாளர்கள், தோட்டப் பயிர்த் தொழிலாளர்கள், தோல் பதனிடும் தொழிலாளர்கள், லாரி வண்டித் தொழிலாளர்கள் போன்ற பல்வேறு வகையான தொழிலாளர்களுக்கு ஆதரவாகத் துணைப் போராட்டங்கள் ஆகிய பலப்பல போராட்டங்களைத் தி.மு. கழகம் ஏற்று நடத்தியிருக்கிறது. இவற்றில் வெற்றி பெற்ற போராட்டங்கள் பல; வெற்றி பெறுவதற்கான வித்திடப்பட்டவைகள் பல; எதிர் காலத்தில் வெற்றி கொள்வதற்கான வகையில் உணர்ச்சி ஊட்டப்பட்டன பலப்பல. மேற் கூறப்பட்ட இவையெல்லாம், கழகத்தின் வலிவையும் பொலிவையும் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டி நிற்பனவாகும்.

தி. மு. கழகத்தில் அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும் மிகுந்து, ஆன்றடங்கிய கொள்கைச் சான்றோரான அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டியாக இருக்கிறார்கள்; கேட்டார்ப் பிணிக்கும் தகையவராகவும், கேளாரும் வேட்ப மொழியும் இயல்புடையவராகவும், பொய்யாச் செந்நாவெளிய எத்திப் பேசும் தன்மையராகவும் உள்ள சொற்பொழிவாளர்கள் கொள்கை பரப்பும் வீரர்

களாக இருக்கிறார்கள்; இனிமையாகவும், அழகாகவும் கட்டுரை—கதை—கவிதை எழுதும் தலைசிறந்த எழுத்தாளர்கள் கழகக் கருத்துக்களை ஏடுகள் மூலம் வெளியிடும் விற்பன்னர்களாக இருக்கிறார்கள்; நீங்காப் பற்றோடும், தணியா ஆர்வத்தோடும் உள்ளன்போடும் அரும்பணி ஆற்றி வரும் இலட்சக்கணக்கான தொண்டர்கள் கழகக் கிளைகளைக் கட்டிக் காத்து வளர்த்துவரும் காவலர்களாக இருக்கிறார்கள்; ஈடும் எடுப்பும் அற்றுத் திராவிடத்தின் கலையுலகில் தலைசிறந்து விளங்கும் கலைஞர்கள், கழகத்தின் பெருமையையும், புகழையும் ஓங்கிடச் செய்யும் தீரர்களாக இருக்கிறார்கள். வேறு எந்த அரசியல் கட்சியிலும் காணப்படாத, ஒப்புயர்வற்ற அறிஞரும், சொல்லேருழவர்களும், புலவர்களும், பாவலர்களும், கவிஞர்களும், கலைஞர்களும், காவலர்களும், வீரர்களும், தீரர்களும் தி. மு. கழகத்தில் இருப்பதே, கழகத்தின் வலிவுக்கும், பொலிவுக்கும் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இவ்வளவு வலிவோடும், பொலிவோடும் விளங்கிவரும் கழகத்தைத்தான், மாற்றுக் கட்சியினர் அழிந்துவிட்டது, ஒழிந்துவிட்டது, உட்கார்ந்து விட்டது, படுத்துவிட்டது, படுகுழிக்குப் போய்விட்டது, மண்ணோடு மண்ணாய்க் கலந்துவிட்டது, சாம்பலாய் மாறிவிட்டது என்றெல்லாம் ஏடுகளில் கொட்டை எழுத்துக்களில் எழுதித், தாமே பார்த்து, தாமே படித்து, தாமே மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்டன மகிழ்ச்சியில் பழைய தேசியக் கட்சியினரும், புதிய தேசியக் கட்சியினரும், தமிழரசுக் கட்சியினரும், நாம் தமிழர் கட்சியினரும், பிற அகில இந்தியக் கட்சியினரும் திளைத்துப் போயிருக்கிறார்கள். அவர்கள் அப்படித் திளைத்திருப்பதில், தி. மு கழகத்தார்க்குத் தொல்லையோ, துயரமோ இல்லை. 'கழகம் அடியோடு அழிந்து விட்டது. அதனை ஆதரிப்பார் எவரும் இல்லை. எங்கும் இல்லை. அறிஞர் அண்ணாவின் அறிவுரையை ஏற்றுக்

கொள்வார் யாருமில்லை. அண்ணா அவர்களுக்குப் பின்னால் ஆறு பேர்களோ அல்லது ஐந்து பேர்களோதான் இருக்கிறார்கள், மற்ற மூன்றரை இலட்சத்திற்கு மேற்பட்டவர்கள் கழகத்திலிருந்து பிரிந்து புதிய கட்சியில் சேர்ந்துவிட்டார்கள். திராவிட நாட்டு விடுதலை வேட்கை கொண்டவர்கள் ஒருவர் கூட இல்லை' என்ற கருத்தில்—நம்பிக்கையில்—முடிவில் அவர்கள் வாழ்வார்களே யானால், அவர்கள் அந்தக் கருத்தில்—நம்பிக்கையில்—முடிவில் வளம் பல பெற்று நலம் பல எய்திப் பல்லாண்டு, பல்லாண்டு, பல்லாயிரத் தாண்டு, பலகோடி நூறாயிரம் ஆண்டுக் காலம் இனிது வாழ்வார்களாக என்று நாம் வாழ்த்துவோமாக! களத்திலே நிற்கும் மாற்றார்கள் கழகத்தைப் பற்றித் தப்புக்கணக்குப் போட்டால்தான், அது கழகத்திற்கு வருவாய்க் கணக்காக முடியும். மாற்றார்கள் கண்ணிலே சதையை வளர்த்துக் கொண்டு, காதிலே சதையை வளர்த்துக்கொண்டு, நாக்கைத் தடிப்பாக ஆக்கிக் கொண்டு ஆணவத்தோடு வாழட்டும்; கழகம் அந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு ஆக்கத்தோடு வளரட்டும்.

'அறிஞர் அண்ணா அவர்களுக்கு தி. மு. கழகத்தை அறிவோடும், ஆற்றலோடும், வலிவோடும், பொலிவோடும் வளர்க்கத் தெரியவில்லை. அவர்கள் அரசியலைப் பற்றிச் சிந்திப்பதே இல்லை. கலையுலகைப்பற்றியே ஓயாமல், ஒழியாமல் எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் என்ற பொறாமையின் அடிப்படையில் பூத்த வீண் குற்றச்சாட்டைச் சில மாற்றுக் கட்சியினர் வீசுகிறார்கள். அரசியலிலும் கலையுலகிலும் ஏற்ற அளவு தொடர்பு கொண்டிருக்கும் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின்கீழ் வளர்ந்து வந்துள்ள தி. மு. கழகத்தையும், அரசியலை மட்டுமே ஓயாமல் சிந்தித்து வந்ததாகக் கூறப்படும் தலைவர்களால் வளர்க்கப்பட்டு வந்துள்ள மற்ற அரசியல் கட்சிகளையும் ஒப்பிட்டு

நோக்கினால், எந்தக் கட்சி வலிவோடும், பொலிவோடும் வளர்ந்து வந்துள்ளது என்பது விளங்கும்.

தி மு. கழகத்தின் நடைமுறை வரலாற்றுக் காலமாகிய 1949-ஆம் ஆண்டிலிருந்து 1960-ஆம் ஆண்டுவரையிலுள்ள பதினொரு ஆண்டுக் காலத்தில் ஒவ்வொரு கட்சியும் வளர்ந்ததா அல்லது வீழ்ந்ததா என்று கணக்கிட்டுப் பார்த்தால், உண்மை விளங்கும்.

1949-ஆம் ஆண்டில் பெற்றிருந்த அளவுக்கா செல்வாக்கையும்—புகழையும்—பெருமையையும்—ஆதரவையும் காங்கிரசுக் கட்சி பெற்றிருக்கிறது? என்று வினவிப் பார்த்தால், அது நாளுக்கு நாள் எல்லா வகையிலும் வீழ்ந்து வருகிறது என்ற விடைதான் கிடைக்கும். அது வீழவேண்டிய அளவுக்கு இன்னமும் வீழ்ச்சியுறவில்லையே தவிர, ஆனால், அது வீழ்ந்து கொண்டிருக்கிறது என்பது மட்டும் உறுதி. 1885-இல் தோன்றிய காங்கிரசு 1948 சனவரி 30-ஆம் நாள் வரையில், அதாவது காந்தியார் மறைவு நாள் வரையில் வளர்பிறையாக இருந்து, அதற்குப் பிறகு இப்பொழுது, அது தேய்பிறையாக மாறியிருக்கிறது என்று கூறினால் மிகையாகாது. காங்கிரசுக்கட்சி 1949-இல் பெற்றிருந்தவற்றில் பலவற்றை 1961-இல் இழந்து காணப்படுகிறதேயல்லாமல், புதிதாக எதையும் பெற்றுவிடவில்லை. அப்பொழுது காங்கிரசிடமிருந்த சட்டமன்ற—பாராளு மன்ற—மாநகராட்சி மன்ற—நகராட்சி மன்ற—ஊராட்சி மன்ற இடங்களில் சிலபல இப்பொழுது காங்கிரசிடம் இல்லை. சென்னை, மதுரை, கோவை, சேலம், விருதுநகர், கடலூர், திண்டிவனம் போன்ற நகராட்சி மன்றங்கள் அப்பொழுது காங்கிரசின் கையில் இருந்தன. இப்பொழுது அவைகள் எதிர்க்கட்சிகளின் கைகளில் இருக்கின்றன. அப்பொழுது நூற்றுக்கு நூறு ஊராட்சி மன்றங்கள் காங்கிரசுக் கட்சியிடமிருந்தன; இப்பொழுது நூற்றுக்கு ஐம்பது ஊராட்சி

மன்றங்கள் காங்கிரசல்லாதவர்கள் கையில் இருக்கின்றன. நூற்றுக்குப் பத்து ஊராட்சி மன்றங்களாவது தி. மு. கழகத்தாரிடம் இருக்கக் கூடும் என்று கூறத்தக்கவகையில் நிலைமை மாறியிருக்கிறது. காங்கிரசுக் கட்சி மட்டுமே செல்வாக்குச் செலுத்தி வந்த ஊர்கள் பலவற்றில், தி. மு. கழகமும் கொடி நாட்டி வளர்ந்து வரத் தலைப்பட்டிருக்கிற நிலைமை ஏற்பட்டிருக்கிறது. காங்கிரசு கரைந்தது, கழகம் வளர்ந்தது என்ற நிலைதான் எங்கும் காணப்படுகிறதே யல்லாமல், கழகம் கரைந்தது, காங்கிரசு புதிய செல்வாக் கைப் பெற்றது என்று ஓர் இடத்திலும் சொல்லமுடியாது. அல்லும் பகலும் அரசியலைப் பற்றியே எண்ணிக்கொண் டிருக்கிற தோழர் காமராசர் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இருந்து வருகிற தமிழகக் காங்கிரசை எடுத்துக் கொண்டால், சென்ற பதினைந்து ஆண்டுக் காலத்தில், அது வீழ்ச்சியுற்று வருவதாகத்தான் வரலாறு தெரிவிக்குமே யல்லாமல், வளர்ச்சிபெற்றுத் திகழ்வதாகக் கூறாது.

திராவிடக்கழகத்தை எடுத்துக் கொண்டால், அது 1949 துவக்கத்தில் கொண்டிருந்த உறுப்பினர்களையா, கிளைகளையா — சொற்பொழிவாளர்களையா,— தொண்டர் களையா,—எழுத்தாளர்களையா,—கலைஞர்களையா, — ஆதர வாளர்களையா, — நடத்திய கூட்டங்களையா, — மாநாடு களையா—பரப்பிய 'விடுதலை' இதழ்களையா,—துணை ஏடு களையா, இன்று பெற்றிருக்கிறது என்று பார்த்தால், இல்லவே இல்லை. திராவிடக்கழகம் எல்லாவகையிலும் பெருமளவுக்கு வீழ்ச்சியுற்று விட்டது என்றுதான், நடு நிலையாளர்கள் அனைவரும் கூறுவர். பெரியார் அவர்கள் ஒருநாளைக்கு ஒரு கூட்டத்திற்கு நகர்ந்தால், திராவிட முன்னேற்றக் கழகச் சொற்பொழிவாளர்கள் நூறு கூட் டங்களுக்கு நகருகிறார்கள். பெரியார் அவர்கள் இரண்டு கூட்டங்களுக்கு நகருவதற்குள், தி. மு. கழகச் சொற் பொழிவாளர்கள் இருநூறு கூட்டங்களுக்கு நகருகிறார்கள்.

அரசியலிலேயே முழுக் கவனத்தையும் செலுத்தி வருபவ ராகக் கூறப்படுகிற பெரியார் அவர்களின் தலைமையின் கீழ் இயங்கி வருகிற திராவிடக்கழகம், சென்ற பதினொரு ஆண்டுக் காலத்தில் தேய்ந்துதான் வந்திருக்கிறது என்பது கண்கூடு.

1949, 50, 51, 52 ஆண்டுகளில் கம்யூனிசுட்டுக் கட்சி பெற்றிருந்த மதிப்பையா—செல்வாக்கையா—புகழையா—பெருமையையா—வளர்ச்சியையா இப்பொழுது பெற்றிருக் கிறது என்று பார்த்தால், அதன் தலைவர்கள் இருபத்து நான்கு மணி நேரமும் அரசியல் சிந்தனையுடையவர்களா கவே இருந்து வந்தும், அது வளர்ச்சி குன்றிவந்திருக்கிற நிலைமையைத்தான்; பொதுவாகத் தென்னகமும், குறிப் பாகத் தமிழகமும் கண்டு வருகிறது.

சோசியலிசுட்டுக் கட்சியும், பிரசா—சோசியலிசுட்டுக் கட்சியும் நாளுக்குநாள் தேய்ந்து வருகிற நிலைமையை யாவரும் நன்கு அறிவர்.

தமிழரசுக் கட்சி காங்கிரசை விட்டுப் பிரிந்தபோது அது துள்ளி விளையாடிய அளவுக்கு, இப்பொழுது அதனால் விளையாட முடியவில்லை; சோர்ந்து அலுத்துப் போய் உட்கார்ந்து விட்டது.

நாம் தமிழர் கட்சி மிகச் சிலரோடு தோன்றி, அந்த மிகச் சிலரோடு நின்றுவிட்டது. அது வளர்ச்சிபெற என்ன என்னவோ முறைகளை யெல்லாம் கையாண்டு பார்க்கிறது; பணம் செலவழிந்தபாடேயல்லாமல், வளர்ச்சி யுற வழி ஏற்படவில்லை.

புதிய தேசியக் கட்சியைப் பற்றிச் சொல்ல வேண்டுவ தில்லை; அது பிறந்திருக்கிற நிலையே, அது எப்படிப்பட்ட வளர்ச்சியைப் பெறும் என்பதைக் காட்டும்.

ஆனால், தி. மு. கழகத்தை எடுத்துக்கொண்டால், சென்ற பதினொரு ஆண்டுக் காலத்தில், அறிஞர் அண்ணா

அவர்களின் சீரிய தலைமையின் கீழ், எல்லா வகையிலும், கண்டோர் பாராட்டத்தக்க முறையில், கேட்போர் போற்றத்தக்க முறையில் ஓங்கு புகழ் எய்தி, இடையீடில்லாமல் வளர்ந்து வந்திருக்கிறது என்பதை நல்லறிவு படைத்தவர்கள் அனைவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

அரசியலுலகில் மட்டுமே வாழ்ந்து வருவதாகக் கருதப்படுகிற தலைவர்களின் கீழ் இருந்து வரும் அரசியல் கட்சிகள் வீழ்ச்சியுற்றுவர, அரசியல் கலையியல் இரண்டிலும் தொடர்பு கொண்டுள்ள அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையின் கீழ் இயங்கிவரும் தி. மு. கழகம் தான் சென்ற பதினொரு ஆண்டுக் காலத்தில பலவகையிலும் வளர்ச்சியுற்று வந்திருக்கிறது.

தி. மு. கழகத்தை அழித்தொழிக்க முயன்ற கட்சிகள் எல்லாம் வீழ்ந்து வருகின்றன என்பதும், தி. மு. கழகம் எதையும் தாங்கும் இதயம் கொண்டு வலிவோடும், பொலிவோடும் வளர்ந்து வருகிறது எனபதும், மேற்கண்டவற்றால் நன்கு தெளியலாம்.

வலிவோடும் பொலிவோடும் வளர்ந்து வருகிற கழகம் கடமை யுணர்ச்சியோடும், கட்டுப்பாட்டு முறையோடும், மேலும் மேலும் வெற்றிபுரி நோக்கி வளர்ந்து வருவதாக!

# கழகமும் சனநாயகமும்

திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு சனநாயக அமைப்பா, அல்லது ஒரு சர்வாதிகார அமைப்பா என்ற ஐயப்பாடு பொதுமக்களுக்கு ஏற்படுகிற அளவுக்குச் செய்தித்தாள்களில், செய்திகள் குழப்பி வெளியிடப் படுகின்றன.

விருப்பு வெறுப்பற்ற நடுநிலை யுணர்வோடு நின்று காண்போர்க்கும், அழுக்காறற்ற தூய உள்ளத்தோடு நோக்குவோர்க்கும், ஏதேனும் குற்றஞ் சுமத்தவேண்டும், குறை கற்பிக்கவேண்டும் என்ற இழிந்த நோக்கமற்று தூயமனச்சான்றோடு ஆராய்ந்து பார்ப்போர்க்கும் திராவிட முன்னேற்றக் கழகம், முழுக்க முழுக்க, எல்லா வகையிலும், ஒரு சிறந்த 'சனநாயக அமைப்பு' என்பது வெள்ளிடை மலைபோல் விளங்கும் என்பது திண்ணம்.

தி. மு. கழகத்தின் அமைப்பு முறையில் சர்வாதிகாரம் தலைதூக்குவதற்கு ஒரு துளியும் இடமில்லை. தி. மு. கழகம், சனநாயக மலர்ச்சியில் நாளுக்கு நாள் வியக்கத்தக்க முறையில் வளர்ச்சி பெற்று வருகிறது என்பதைக் கழகத்தில் சென்ற பன்னிரண்டு ஆண்டுக் காலமாகத் தூய உள்ளத்தோடு ஈடுபாடு கொண்டுவருவோரும், ஆதர வுணர்ச்சியோடு நெருங்கி நின்று கண்டுவருவோரும் தெளி

வாக அறிவர். 1949-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் தி. மு. கழகத்தைத் துவக்கியபொழுது, அது கொண்டிருந்த அமைப்பு முறையையும், 1960-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்றதலைமைக் கழகத் தேர்தலுக்குப் பிறகு அது ஏற்றுக்கொண்டிருக்கும் அமைப்பு முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால், தி. மு. கழகம் சனநாயக மாண்பை எந்த அளவுக்கு அமைப்பு முறையில் மேலும் மேலும் பெருக்கி வந்திருக்கிறது என்பதையும், சனநாயகத்தை எந்த அளவுக்கு விரிவாகவும் உறுதியாகவும் தலைமைக் கழக அமைப்பிலிருந்து சிற்றூர்க் கிளை அமைப்பு வரையில் கடைப்பிடித்து வந்திருக்கிறது என்பதையும், பொதுச்செயலாளரிடத்தில் ஒப்படைக்கப் பட்டிருந்த உரிமைகளையும், அதிகாரங்களையும் எந்த அள வுக்கு நாளுக்கு நாள் பரவலாக்கி வந்திருக்கிறது என்பதை யும் தெளிவாக அறியலாம்.

தி. மு. கழகம் சட்ட திட்டமற்ற ஓர் அமைப்பு அல்ல; கழகம் எப்படி இயங்கிச் செல்லவேண்டும் என்பதை வரையறுத்துக் காட்ட, முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்ட சட்ட திட்டங்கள் இருக்கின்றன.

தான் கொண்டதே கோலம், தான் கண்டதே காட்சி, தான் காட்டியதே வழி, தான் கூறியதே நீதி, எவரும் தன்னை எதிர்க்க முடியாது, ஏன் என்று கேட்க முடியாது என்ற நிலையிலிருக்கும் மடாதிபதியைப் போலவோ அல்லது சர்வாதிகாரத் தலைவரைப் போலவோ தலைமையாளரைக் கொண்டிருக்கும் அமைப்பு அல்ல, தி. மு. கழகம். மடாதி பதியும், சர்வாதிகாரியும் தாமாகவோ அல்லது வாரிசு வழி முறையாகவோ ஏற்படுபவர்கள்; ஆனால், தி. மு. கழகத் தலைமையாளராக விளங்கும் பொதுச்செயலாளர் கழக உறுப்பினர்களால் முறைப்படி தேர்ந்தெடுக்கப்படுபவர்கள். ஏற்பட்ட மடாதிபதியையும், சர்வாதிகாரியையும் யாரும்

அகற்ற முடியாது; ஆனால், தேர்ந்தெடுக்கப்பட்ட பொதுச் செயலாளரைப் பொதுக்குழு விரும்பினால் முறைப்படி அகற்ற முடியும். மடாதிபதியும், சர்வாதிகாரியும் யாருக் கும் கட்டுப்படவேண்டியவர்களல்லர்; யாருக்கும் கட்டுப் பட மறுக்கலாம்; ஆனால், தி. மு. கழகப் பொதுச்செய லாளர் பொதுக்குழுவிற்குக் கட்டுப்பட்டவர். பொதுக்குழு வின் முடிவை அவர் மறுக்க முடியாது. தி. மு. கழகப் பொதுச்செயலாளராக வரும் எவரும் மடாதிபதியாகவோ அல்லது சர்வாதிகாரியாகவோ ஆக முடியாது; அப்படித் தப்பித் தவறி ஆனாலும் அவரை முறைப்படி அகற்றப் பொதுக்குழுவிற்கு எல்லா உரிமைகளும் உண்டு. அது மட்டுமல்லாமல் மடாதிபதி மனப்பான்மையையோ அல்லது சர்வாதிகார மனப்பான்மையையோ கொண்டிருக்கும் ஒருவர் பொதுச்செயலாளராக வரக்கூடாது என்று கருதினால், அவரைத் தேர்ந்தெடுக்காமல் தடுத்து நிறுத்திக் கொள்ளப் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு முழு உரிமை யிருக்கிறது. பொதுக்குழு உறுப்பினர்களின் கருத்துக் களையும், முடிவுகளையும் மீறி எவரும் மடாதிபதித் தன்மை யிலோ சர்வாதிகாரித் தன்மையிலோ தி. மு. கழகத் தலைமையிடத்தில் வீற்றிருக்க வழியில்லை.

தி. மு. கழகம் உண்மை சனநாயக முறைகள் அனைத்தையும் பெற்றிருக்க விரும்புகிற அமைப்புத்தான். இயன்ற அளவுக்கு அந்த முறைகளைப் படிப்படியாகப் பெற்றுக்கொண்டே வந்திருக்கிறது. மேலும் அவ்வப்போது எழும் சனநாயக முறைகள் பற்றிய கோரிக்கைகளை, வாய்ப்பும், வசதியும், வழியும் கண்டறிந்து மேற்கொள் ளவே செய்யும் என்பதும் திண்ணம்.

தி. மு. கழகத்தின் சட்ட திட்டங்களைக் காண்போர், கழகத்தின் சனநாயக முறைகள் எந்த அளவுக்கு மதிப்புக் கொடுக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கின்றன என் பதை நன்கு அறியலாம்.

கழகத்தின் முழு அதிகாரங்களைக் கொண்ட தலைமை அமைப்பு பொதுக்குழுவாகும் என்பது சட்ட திட்ட நூலில் திட்டவட்டமாகச் சொல்லப்பட்டிருக்கிறது. பொதுச்செயலாளர் எல்லா வகையிலும் பொதுக்குழுவிற்குக் கட்டுப்பட்டவராவார். இதிலிருந்து கழகத்தின் பொதுச்செயலாளராக வருவோர் எந்தவிதத்திலும் சர்வாதிகாரியாக ஆக இடமில்லை என்பதைத் தெரிந்துகொள்ளலாம். கழகத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் முழுமனதோடு ஏற்றுக்கொள்ளுகிற சாதாரண உறுப்பினர்கள் அனைவரும் ஆங்காங்கு ஒன்றுகூடித்தான் ஆங்காங்குக் கிளைகளை அமைக்கிறார்கள். கிளைகள் வட்டக் கழகத்திற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. வட்டக் கழகங்கள் மாவட்டக் கழகத்திற்காக பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. மாவட்டக் கழகங்கள் தலைமைக் கழகம் அல்லது பொதுக்குழுவிற்கான பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கின்றன. கிளை—வட்டக் கழகம்—மாவட்டக் கழகம் போன்ற அமைப்புக்களில் அவைத் தலைவர்—செயலாளர்—துணைச்செயலாளர் —பொருளாளர் போன்ற எந்த ஒரு பதவிக்குப் போட்டியிடுவதாயினும் சரி, தலைமைக் கழகத்தைப் பொறுத்த வரையில் அமைகின்ற பொதுக்குழு உறுப்பினர்—அவைத்தலைவர்—பொதுச்செயலாளர்—பொருளாளர் போன்ற எந்த ஒரு பதவிக்குப் போட்டியிடுவதாயினும் சரி, கழகத்திலுள்ள தகுதி பெற்ற எந்த ஒரு சாதாரண உறுப்பினரும் போட்டியிடலாம் என்று சட்ட திட்ட நூல் கூறுகிறது. இதிலிருந்து பொதுச்செயலாளர் போன்ற மிகப் பொறுப்பு வாய்ந்த பதவிகளைச் சர்வாதிகாரத்தன்மையோடு, எவரும் தமக்கு மட்டுமே அவை உரித்தானவை என்று கைப்பற்றி வைத்திருக்க முடியாது என்பதையும், அந்த இடங்களைப் பெரும் உரிமை, தகுதிபடைத்த எந்த ஒரு சாதாரண உறுப்பினருக்கும் உண்டு என்பதையும், சர்வாதிகாரத்தன்மைக்கு

மாறான சனநாயகத்தன்மை விரிவான முறையில் எல்லோர்க்கும் வாய்ப்பளிக்கும் முறையில் வழங்கப்பட்டிருக்கிறது என்பதையும் உணரலாம்.

கழகத்தை இயக்கிச் செல்லும் நிருவாக அமைப்பு முறைகளை எடுத்துக்கொண்டால், கழகத்தைக் கண்காணித்தல், கழகத்திற்கான திட்டம் தீட்டுதல், கழகத்திற்கு வழி காட்டுதல் போன்ற முழு அதிகாரங்களையும் உரிமைகளையும், பொதுக்குழு மேற்கொண்டிருக்கிறது. இந்தப் பொதுக்குழு கீழ் மட்டத்திலிருந்து படிப்படியாக முறைப்படி, தேர்ந்தெடுக்கப்பட்டுவரும் உறுப்பினர்களைக் கொண்டது.

பொதுக்குழு, செயற்குழுக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கி நடத்தித் தரும் பொறுப்பு, பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் அவைத்தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

கழகத்தின் பொதுக்குழுவையும், செயற்குழுவையும் கூட்டுதல், அவை முடிவெடுக்கும் திட்டங்களையும் தீர்மானங்களையும் செயற்படுத்துதல், கழக அமைப்புக்களின் தேர்தல்களை நடத்திவைத்தல், தணிக்கைக்குழு மூலம் எல்லா அமைப்புக்களின் வரவு செலவுகளை ஆராய்தல், கழகச் சொத்துக்களின் நிருவாகப் பொறுப்பை வகித்தல், சொத்துக்களைப்பற்றி எழும் சட்டரீதியான பிரச்சினைகளில் கழகத்தின் சார்பில் நடவடிக்கைகளில் ஈடுபடுதல், மாநில மாநாட்டுக்குத் தலைமை வகித்தல், அமைப்பின் மீதோ, நிருவாகி மீதோ அல்லது தனிப்பட்ட உறுப்பினர் மீதோ ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல், ஒழுங்கு நடவடிக்கைத் தீர்மானங்கள் மீது தீர்ப்புக்குழுவின் மூலம் இறுதித் தீர்ப்புக் காணுதல், மற்றும் கழகத்தின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும், அமைப்பு முறைகளையும் வளர்க்கவும், காப்பாற்றவுமான எல்லா நடவடிக்கைகளையும் மேற்

கொள்ளுதல் போன்ற பொறுப்புக்கள் பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் பொதுச்செயலாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

கழகத்தின் நிதியைப் பெற்று வைத்துக் காப்பாற்றிச் செலவினங்களுக்கு வழங்கி, வரவு-செலவுக் கணக்கை நிருவகிக்கும் பொறுப்பு பொதுக்குழுவால் தேர்ந்தெடுக்கப்படும் பொருளாளரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

தலைமை நிலையம்—அமைப்புத் துறை—கொள்கை பரப்புத்துறை—தொழிற்சங்கத்துறை—கழகவெளியீட்டுத் துறை போன்ற துறைகளைப் பொறுத்துப் பொதுச்செயலாளர் தரும் பொறுப்புக்கள் முறையே பொதுச்செயலாளருக்குத் துணையாயிருந்து பணிபுரியும், பொதுச்செயலாளரால் நியமிக்கப்படும் தலைமை நிலையச் செயலாளர்—அமைப்புச் செயலாளர்—கொள்கை பரப்புச் செயலாளர்—தொழிற்சங்கச் செயலாளர்—கழக வெளியீட்டுச் செயலாள ஆகியோரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

இவை மட்டுமல்லாமல் வரவு-செலவுக் கணக்குகளைத் தணிக்கை செய்யும் பொறுப்பு தணிக்கைக் குழுவிடமும், பிரச்சினைகள் குறித்து நீதி கோரி முறைப்படி அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மீது தீர்ப்பு அளிக்கும் பொறுப்பு தீர்ப்புக்குழுவிடமும், கழகச் சொத்துக்களைப் பாதுகாக்கும் பொறுப்பு சொத்துப் பாதுகாப்புக் குழுவிடமும், பொதுத்தேர்தலின்போது வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் பொறுப்பு ஆட்சிமன்றக் குழுவிடமும் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றன.

தலைமைக் கழகத்தின் பொறுப்புக்களை இந்த அளவுக்கு வகைப்படுத்திப் பரவலாக்கி, அத்துணைப் பொறுப்புக்களையும் பொதுக்குழுவின் முடிவின்கீழ் வைத்துத் தீட்டப்பட்டுள்ள சட்ட திட்டங்களிலிருந்து கழகத்தில் அதிகாரங்களும், உரிமைகளும் சர்வாதிகாரத்திற்கு இட

யில்லாத வகையில் சனநாயக அடிப்படையில் பகிர்ந்து அளிக்கப்பட்டிருப்பதையும், சனநாயகம் நாளுக்கு நாள் மலர்ந்து வந்திருப்பதையும் நன்கு விளங்கிக்கொள்ளலாம்.

1960 செப்டம்பர் திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற தலைமைக் கழகத் தேர்தலுக்கு முன்னால், ஒரு பொதுச்செயலாளர், ஒருவரையோ அல்லது இருவரையோ துணைப் பொதுச்செயலாளர்களாகக் கொண்டு ஏற்றுக்கொண்டிருந்த பொறுப்புக்கள், இப்பொழுது அவைத்தலைவர், பொதுச்செயலாளர், பொருளாளர், ஐந்து துணைப் பொதுச் செயலாளர்கள், தணிக்கைக்குழு, தீர்ப்புக்குழு, சொத்துப் பாதுகாப்புக்குழு, ஆட்சி மன்றக்குழு ஆகியோரிடம் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. கழகத்தின் பணிகள் வளர வளரப், பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் சனநாயகத் தன்மையைக் கழகத்திலுள்ள அனைவரும் விரும்பி ஏற்றுக் கொண்டிருப்பதையே இது காட்டுவதாகும். 1949-இல் இருந்து 1955 வரையில் பதவி வகித்த பொதுச்செயலாளருக்கு இருந்த பொறுப்புக்கள், 1955-இலிருந்து 1960 வரையில் பதவி வகித்த பொதுச்செயலாளர் காலத்தில் துணைப் பொதுச்செயலாளரிடத்திலும், அவ்வப்போது ஏற்படுத்தப் பட்ட தனிக்குழுக்களிடத்திலும் பகிர்ந்தளிக்கப்பட்டன. இப்பொழுது அந்தப் பொறுப்புக்கள் எட்டுத் தலைமைக் கழக அலுவலாளர்களிடமும், நான்கு நிலையான குழுக்களிடமும் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கின்றன. இது வளருகின்ற சனநாயக முறையைத்தான் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டுகின்றது.

1949-இல் முன்னேற்றக் கழகம் துவக்கப்பட்ட பொழுது பொதுச்செயலாளரால் நியமிக்கப்பட்ட ஒரு பொதுக்குழுதான் அமைந்திருந்தது. கழகத்தைச் சனநாயக முறைப்படி இயக்கிச் செல்லச் சட்ட திட்டக்குழு ஒன்று 17-9-1949-இல் அமைக்கப்பட்டது. அந்தக் குழுவால்

உருவாக்கப்பட்ட சட்டதிட்டங்கள் 1951 டிசம்பர் திங்களில் நடைபெற்ற மாநில மாநாட்டில் நிறை வேற்றப்பட்டு, உடன் நடைமுறைக்குக் கொண்டு வரப்பட்டன. பின்னர் நடைமுறைக்கும், வளர்ச்சிக்கும் ஏற்றவாறு தேவையான அளவுக்குக் கழகச் சட்டதிட்டங் களைத் திருத்திப் புதுப்பிக்க, 6—6—1958-இல் சட்ட திட்டத் திருத்தக் குழு ஒன்று தலைமைச் செயற்குழுவால் அமைக்கப் பெற்றது. அந்தக் குழு ஓராண்டு காலமாக நன்கு ஆராய்து சிந்தித்துத் தெளிந்து உருவாக்கித் தந்த திட்டங்கள் 1959 சூலை 11, 12-ஆம் நாட்களில் மாயவரத்தில் நடைபெற்ற பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.

கழகத்தின் சட்ட திட்டங்கள் எந்த முறையில் அமைந் தால் நல்லது என்று திருத்தி அமைப்பதற்கான வாய்ப்பு பொதுவாகக் கழக உறுப்பினர்களுக்கு, குறிப்பாகப் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு, இன்னும் குறிப்பாகச் சட்ட திட்டக் குழுவினர்களுக்கு அளிக்கப்பட்டது. சட்ட திட்டங்களை ஏற்றவாறு திருத்தி அமைக்கும் முழு உரிமை யும் சட்ட திட்டக் குழுவினரிடம் அளிக்கப்பட்டிருந்தது. அவற்றை ஆய்ந்து பார்த்து ஏற்றுக் கொள்ளும் முழு உரிமையும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கு அளிக்கப்பட் டிருந்தது. எந்த வகையான சர்வாதிகாரக் குறுக்கீடும் எள்ளளவும் இல்லாத வகையில்தான் சட்ட திட்டக்குழு வில் இடம் பெற்றிருந்தோரின் முழு ஒப்புதலோடும், பொதுக்குழு உறுப்பினர்களின் முழு ஆதரவோடும் சட்ட திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. இப்படிப் புதுப்பிக் கப்பட்ட சட்ட திட்டங்கள் 1960 சூன் திங்களில் கிளைக் கழகத் தேர்தல்களை ஒட்டி நடைமுறைக்குக் கொண்டுவரத் தலைப்பட்டு, 1960 செப்டெம்பர் 25-ஆம் நாளிலிருந்து முழுக்க முழுக்க நடைமுறையில் ஏற்றுக் கொள்ளப்பட் டிருக்கின்றன. இப்பொழுது நடைமுறைக்குக் கொண்டு

வரப்பட்டுள்ள சட்ட திட்டங்களால் ஏற்படக்கூடிய நிறைபாடுகளையும், குறைபாடுகளையும் இன்னும் சில ஆண்டுகள் செயற்படுத்திப் பார்த்ததற்குப் பிறகுதான், குறைபாடுகளை நீக்க மீண்டும் திருத்தங்கள் வேண்டப்படும் நிலை ஏற்படக் கூடும். நடைமுறையில் பணியாற்ற முடியாமல் முட்டுக் கட்டையாகத் தவறி நிற்கும் சில சட்ட திட்டங்கள் அவ்வப்போது தேவையான அளவுக்குத் திருத்தப் படவும் கூடும். அப்படி முட்டுக் கட்டையாகக் காணப்பட்ட திருத்தம் ஒன்றுதான் பொதுச்செயலாளரின் தேர்தலின் போது கொண்டுவந்து நிறைவேற்றப்பட்டது. இவற்றிலிருந்து தி. மு. கழகம் சனநாயக முறைக்கு எவ்வளவு மதிப்பளித்து அதைப் போற்றிக் காப்பாற்றி வளர்த்துச் சர்வாதிகாரம் துளிகூடத் தலைதூக்காதபடி செய்து, அமைப்பு முறையை மேற்கொண்டிருக்கிறது என்பதை நன்கு அறியலாம்.

கழக அமைப்புக்களில் பொறுப்புக்களை ஏற்றிருப்போர் கழகத்திற்கு ஊறுதேடும் வகையில் தவறு செய்தால், அவர்கள் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து, அவர்களை அகற்றுவதற்கானமுறைகளையும், அதேபோன்று சாதாரண உறுப்பினர்களோ அல்லது பொறுப்பேற்றிருப்பவர்களோ அல்லது கீழ்அமைப்புக்களோ கழகத்திற்கு ஊறு நேரிடும் வகையில் தவறு செய்தால், அவர்கள்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதற்கான முறைகளையும் கழகச் சட்ட நூல் தெளிவான முறையில் கொண்டிருக்கிறது.

சனநாயக முறையிலே முழுக்க முழுக்க வளர்க்கப் பட்டு வரும் தி. மு. கழகத்தில் ஈடுபாடு கொண்டவர்களுக்கு, உரிமைகளும், கடமைகளும் முறைப்படி வழங்கப் பட்டிருக்கின்றன. கடமைகளைப் புறக்கணித்து, உரிமைகளைத் தர மறுப்பவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றப்படுவதும், உரிமைகளை மீறிக் கடமைகளை

மறப்பவர்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதும் கழகத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட சனநாயக முறைகளாக இருந்து வருகின்றன.

சனநாயகத்தில் உரிமைகள் எந்த அளவுக்கு இருக்கின்றனவோ அந்த அளவுக்குக் கடமைகளும் இருக்கின்றன. உரிமை இழக்காமல், கடமை தவறாமல் கழகத்தோழர்கள் ஆற்றிவரும் பணிகள்தாம், கழகத்தை மேலும் மேலும் சனநாயக வழியில் அழைத்துச் செல்வதாக அமைந்திருக்கின்றன.

# கழகமும்
# அண்ணாவும்

திராவிட முன்னேற்றக் கழகம் சனநாயக உணர்ச்சியின் அடிப்படையில் தோன்றிச், சனநாயகப் பண்புகளைக் கொண்டு, சனநாயக முறைகளோடு வளர்ந்து வருவதற்கு, முழுமுதற் காரணமாகவும், கழகத்திற்கு அதற்கான வழிவகைகளை வகுத்துக் காட்டும் அரசியல் பேராசிரியராகவும், கழகத்தை அந்த வழி வகைகளில் அழைத்துச் செல்லும் வழிகாட்டியாகவும், கழகத்தை அந்த வழிவகைகளில் அழைத்துச் செல்லுமாறு கழகத் தோழர்களுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பெருந்தகையாளராகவும் இருந்து வருபவர், அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள் என்பதைக், கழகத்தின் வரலாற்றினை நன்கு அறிந்த நற்பண்பும் நல்லறிவும் படைத்த அனைவரும் அறிவர்.

இந்தியத் துணைக்கண்டத்தில், குறிப்பாகத் தென்னாட்டில் உள்ள அரசியல் கட்சிகளை நடத்திச் செல்லும் தலைவர்களை எடுத்துக்கொண்டாலும். அல்லது அரசியல் கட்சிகளில் ஈடுபாடுகொண்டுள்ள தலைவர்களை எடுத்துக்கொண்டாலும், அல்லது அரசியலிலிருந்து அறவே ஒதுங்கி ஓய்வுபெறும் தலைவர்களை எடுத்துக்கொண்டாலும், அறிஞர் அண்ணா அவர்களை விடச் சிறந்த சனநாயகப் பண்புகள் படைத்த தலைவர், வேறு யாரும் இல்லை என்றே துணிந்து கூறலாம்.

சனநாயகத்தைச் சனநாயகப்பண்புகளாலும், சனநாயக முறைகளாலுந்தான் வளர்க்கவேண்டும். சனநாயகப் பண்புகளோடு வளர்க்கப்படும் சனநாயக முறைகள் தாம், சனநாயகத்தில் முழுவெற்றியைத் தேடித்தரும். சனநாயகப்பண்புகளைப் புறக்கணித்துச், சனநாயக முறைகளை மட்டும் போற்றிவந்தாலும், முழு வெற்றி கிட்டாது; அல்லது சனநாயகப் பண்புகளைப் பெற்றுச், சனநாயக முறைகளுக்கு இடமளிக்காமல் வந்தாலும், முழு வெற்றி கிட்டாது.

சனநாயகப் பண்பு—சனநாயக முறை இரண்டும் சனநாயக வெற்றிக்குத் தேவைப்படுபவை என்றாலும், சனநாயக முறையைவிட சனநாயகப் பண்பு முக்கியத்துவம் பெறுகின்ற ஒன்றாகும். ஏனெனில், சனநாயகப் பண்பு தான், சனநாயக முறையை ஏற்படுத்தத் தூண்டுகோலாக அமைகின்ற ஒன்றாகும்.

சனநாயகப் பண்பு இருந்தால், அது சனநாயக முறையை ஏற்படுத்த அல்லது சனநாயக முறைக்கு இடங் கொடுக்க உறுதுணையாக இருக்கும்; ஆனால், சனநாயக முறை, சனநாயகப் பண்பை உருவாக்கியே தீரும் என்று சொல்லுவதற்கில்லை.

சனநாயகப் பண்பு சனநாயக முறைக்கு எப்பொழுதும் இடமளித்தே தீரும்; ஆனால், சனநாயக முறை சனநாயகப் பண்பிற்கு எப்பொழுதும் இடமளித்தே தீரும் என்று கூறுவதற்கில்லை.

சனநாயகப் பண்புடையவர்கள், சனநாயக முறைக்கு மதிப்பளித்தே தீருவார்கள்; ஆனால், சனநாயக முறையில் இடம் பெற்றிருப்போர் அனைவரும், சனநாயகப் பண்பிற்கு மதிப்பளிப்பார்கள் என்று குறிப்பிடுவதற்கில்லை.

சனநாயகப் பண்பு இருந்தால், சனநாயகமுறை தானே கிட்டும்; ஆனால், சனநாயகமுறை மட்டுமே

இருந்தால், சனநாயகப் பண்பு, தானே கிட்டிவிடும் என்று சொல்லுவதற்கில்லை.

இந்தப்படி பார்த்தால், சனநாயகப் பண்பு, சனநாயக முறையைவிட ஏற்றம்பெற்று விளங்குவதோடு, சனநாயக முறையைத் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் தன்மையையும் பெற்றிருக்கிறது.

எனவேதான், சனநாயக முறையைவிட சனநாயகப் பண்பு முதலில் பேணிக் காக்கப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது என்று அறுதியிட வேண்டியிருக்கிறது.

சனநாயகத்திற்குப் பண்பும், முறையும் ஒரேபோது சம அளவில் தேவைப்படுபவைதாம் என்றாலும், சனநாயக வாதிகளில் சனநாயகப் பண்பிற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களைச் சனநாயகப் பண்பாளர்கள் என்றும், சனநாயக முறைக்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களைச் சனநாயக முறையாளர்கள் என்றும் பாகுபடுத்திக் கொண்டால், அறிஞர் அண்ணா அவர்கள் சனநாயகப் பண்பாளர் பட்டியலில் வைத்து எண்ணப்பட வேண்டிய சீரியதொரு தலைவராவார்கள். பொதுவாகச் சனநாயக அரசியலுலகில், சனநாயக முறையாளர்கள்தாம் மிகவாகக் காணப்படுவார்கள்; அத்தகையோரிடம் பெரும்பாலும் சனநாயகப் பண்புகள் காணப்படமாட்டா. சனநாயகப் பண்பாளர்கள் மிகவும் அருமையாகத்தான் காணப்படு வார்கள்; அப்படி அருகிக் காணப்படும் மிகச் சிலரில், தலைசிறந்து காணப்படுபவர் அறிஞர் அண்ணா என்று கூறினால் மிகையாகாது.

அறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்களிடத் திலும் சரி, கழக அமைப்புகளிடத்திலும் சரி, சனநாயகப் பண்புகள் வளரவேண்டுமென்பதிலே நீங்கா அக்கறை கொண்டவர்கள். ஒரு நல்ல குடும்பத்தில் இருக்கும், நல்ல

பண்புகளமைந்த, அண்ணன்—தம்பி—தமக்கை—தங்கை—தாய்—தந்தை ஆகியோரிடையே காணப்படக் கூடிய 'குடும்ப பாசம்' போன்றதொரு 'கழகப் பாசம்' கழகத் தோழர்களிடையே நிலவ வேண்டும் என்பதைத் தான், அண்ணா அவர்கள், அன்றும், இன்றும், என்றும், வற்புறுத்தி வருகிறார்கள். ஒரு நல்ல குடும்பத்திலுள்ளவர்கள், குடும்பக் கடமைகளை நிறைவேற்றுவதில், எப்படித் தத்தம் பொறுப்புக்களை மேற்கொண்டு, ஏற்றத் தாழ்வு பாராமல், சமத்துவ மனப்பான்மையில் பணியாற்றுகின்றனரோ, அப்படியே கழகத் தோழர்கள் அனைவரும் தத்தம் பொறுப்புக்களை மேற்கொண்டு 'கழகக் கடமைகளை' ஆற்றவேண்டும் என்றும், ஒரு நல்ல குடும்பத்தினர் எவ்வாறு மனக்கசப்பு—பொறாமை—பொச்செரிப்பு இன்றி, ஒருவரையொருவர் மதித்துக், கலந்து பேசித் திட்டமிட்டுக், குடும்ப வாழ்க்கையை நல்ல முறையில் நடத்துகின்றனரோ, அவ்வாறே கழகத் தோழர்களும் மனக்கசப்பு—பொறாமை—பொச்செரிப்பு ஆகியவைகளுக்கு இடங்கொடாமல், ஒருவரையொருவர் மதித்துச், சனநாயக முறையில், கழகப் பணிகளை ஆற்றிவரவேண்டும் என்றும், அண்ணா அவர்கள், வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வலியுறுத்தி வருகிறார்கள். சனநாயகப் பண்புகளுக்கு இடமில்லாத வகையில், சனநாயக முறைகள் மட்டும் வளருவதால், உருவான பலன் கிட்ட வழி ஏற்படாது என்ற கருத்தில்தான், அண்ணா அவர்கள், சனநாயகப் பண்புகளுக்கு அதிக முக்கியத்துவம் தருகிறார்கள். சனநாயகப் பண்புகளுக்கு முக்கியத்துவம் தருகிற அண்ணா அவர்கள், சனநாயக முறைகளில் அதிகக் கவனம் செலுத்த விரும்புவதில்லை என்றாலும், சனநாயக முறைகளை அவர்கள் புறக்கணிப்பதில்லை; முறைகள் ஏற்படுவதைத் தடுப்பதில்லை; முறைகளை விரும்பி ஏற்படுத்துபவர்களுக்கு முழு இடம் அளிக்கிறார்கள்; ஏற்படுத்தப்படும் முறைகளில்

தமக்கு எந்தப் பொறுப்பு அளிக்கப்பட்டாலும், அந்தப் பொறுப்பிலிருந்து கொண்டு பணியாற்ற முழு மனதோடு விரும்புகிறார்கள். கழகத்தின் முழு அதிகாரமும், உரிமையும் படைத்த பொதுக்குழு உறுப்பினர்கள், சென்ற பத்து ஆண்டுக் காலமாக, எப்படிப்பட்ட சட்ட திட்டங்களைச் சனநாயக முறைப்படி நிறைவேற்றித் தருகிறார்களோ, அந்தச் சட்டதிட்ட முறைகளை ஏற்றுக்கொள்வதில், அண்ணா அவர்கள், முழு ஆதரவு காட்டி வந்திருப்பதிலிருந்து, அவர்கள் முறைகளுக்கு எவ்வளவு மதிப்பு அளித்து வந்திருக்கிறார்கள் என்பதையும் அறிந்து கொள்ளலாம்.

அண்ணா அவர்கள், எப்படிப்பட்ட சனநாயகப் பண்புகளோடு கூடிய சிறந்த சனநாயகவாதியாகத் திகழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை, அவர்கள் திராவிடக் கழகத்திலிருக்கும் போதும், திராவிட முன்னேற்றக் கழகத்தில் ஈடுபாடு கொள்ளும்போதும் மேற்கொண்ட நடவடிக்கைகளிலிருந்து நன்கு தெரிந்து கொள்ளலாம்.

பெரியார் இராமசாமி அவர்களோடு அறிஞர் அண்ணா அவர்களை ஒப்பிட்டுப் பார்த்தாலே சர்வாதிகார மனப்பான்மைக்கும், சனநாயக மனப்பான்மைக்கும் உள்ள வேறுபாட்டை உணர்ந்து கொள்ளலாம்.

பெரியார் அவர்கள், கழகம் தனக்குச் சொந்தமானது என்றும், கழகத்தில் உரிமை கொண்டாட எவருக்கும் தகுதியில்லையென்றும், விரும்பினால் யாரும் தமது கழகத்தில் இருக்கலாமென்றும், விருப்பமில்லையென்றால் யாரும் கழகத்தை விட்டு வெளியேறி விடலாம் என்றும் கூறுபவர். ஆனால், அண்ணா அவர்களோ, கழகம், கழகத்திலுள்ள தகுதிவாய்ந்த உறுப்பினர்கள் அனைவர்க்கும் சொந்தம் என்றும், அவர்களைப் போன்று தாமும் கழகத்திற்கு உரிமையுடைய ஒருவர் என்றும் கருதுபவர்.

பெரியார் அவர்கள், தம்மைக் கண்ணை மூடிக்கொண்டு பின்பற்றுகிற முட்டாள்கள்தாம், தம் கழகத்திற்குத் தேவை என்று கூறுபவர். ஆனால், அண்ணா அவர்கள், தாம் கூறுகிற கருத்துக்களாயினும், கழகம் முடிவு எடுக்கிற கருத்துக்களாயினும் அவற்றைச் சிந்தித்துத் தெளிவு பெறுகிற அறிவுடையோரும், ஆற்றல்மிக்கோரும் தாம் கழகத்திற்குத் தேவை என்று கருதுபவர்.

பெரியார் அவர்கள், தாம் கூறுகிற கருத்துக்களைப் பிறர் கேட்டுக்கொள்ள வேண்டுமே தவிர, தமக்கு யோசனை கூறுகிற யோக்கியதை எவருக்கும் இல்லை என்று கூறுபவர். ஆனால், அண்ணா அவர்கள், தாம் கூறுகிற கருத்துக்களைக் கழகத்திலுள்ள முக்கியமானவர்களையும், செயற்குழுவையும், பொதுக்குழுவையும் சிந்திக்குமாறு கேட்டுக்கொள்வார்; தம் கருத்துக்கு மாறுபட இருப்பினும், முறைப்படி எடுக்கப்படுகிற முடிவுகளுக்குக் கட்டுப்பட ஒருப்படுவார்.

பெரியார் அவர்கள், தம் கழகத்திலுள்ள மற்றவர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்த வாய்ப்பு அளிக்கமாட்டார்; மற்றவர்கள் பெயரோ, புகழோ, பெருமையோ, செல்வாக்கோ பெற மனம் இசையமாட்டார். ஆனால், அண்ணா அவர்கள், கழகத்திலுள்ள மற்றவர்கள் தம் ஆற்றலை வெளிப்படுத்துவதற்கான எல்லா வாய்ப்புக்களையும், வசதிகளையும் அளிப்பார்;கழகத்திலுள்ள மற்றவர்கள் பெயரையும், புகழையும், பெருமையையும், செல்வாக்கையும் பெறுவதைக் கண்டு மகிழ்ச்சி யடைவார்.

பெரியார் அவர்கள், என்றென்றும் தாமே சர்வாதிகாரத் தலைவராக இருக்க வேண்டும் என்று எண்ணுபவர். ஆனால், அண்ணா அவர்கள், பலரும் பயிற்சிபெறத்தக்க வகையில் பதவிகளில் மாற்றம் ஏற்படவேண்டும் என்றும்,

பொறுப்புக்கள் பலரிடையேயும் முறைப்படி பகிர்ந்தளிக்கப்பட வேண்டும் என்றும் கருதுபவர்.

பெரியார் அவர்கள், கழகத்தின் வரவு—செலவுக்கணக்குகளை ஆராய எவருக்கும் உரிமையில்லை என்று வாதாடுபவர். ஆனால், அண்ணா அவர்கள், கழகத்தின் வரவு-செலவுக் கணக்குகளை அந்தந்த அமைப்புக்கள் முறைப்படி ஆராய்ந்து பார்க்க முழு உரிமையும் உண்டு என்று கருதுபவர்.

பெரியார் அவர்கள், தாமே இறுதியாக விளங்கும் பிறவித் தலைவர் என்றும், தமக்குப் பிறகு பிறவித் தலைவர் எவரும் பிறக்கப்போவதில்லை என்றும் கூறுபவர். ஆனால், அண்ணா அவர்கள், தாம் ஒரு சனநாயகவாதி என்றும், தம்மைப்போன்றே பிறரும் சிறந்த சனநாயகவாதிகளாகத் திகழவேண்டும், முடியும் என்றும் எண்ணுபவர்.

பெரியார் அவர்கள், தாம் பார்த்துப் போடுபவர்கள் தான் மாவட்டக் கழகத்திலும், மத்திய கழகத்திலும் இடம் பெறவேண்டும் என்று எண்ணுபவர். ஆனால், அண்ணா அவர்கள், முறைப்படி இயற்றப்பட்டுள்ள சட்ட திட்டத்தின்படி, முறைப்படியான தேர்தல்கள் நடைபெற்று, முறைப்படியான அமைப்புகள் ஏற்படவேண்டும் என்று கருதுபவர்.

இப்படியாகப் பெரியாரின் சர்வாதிகாரத் தன்மைக்கும் அண்ணா அவர்களின் சனநாயகத் தன்மைக்கும் பல எடுத்துக் காட்டுக்கள் காட்டலாம்.

கொள்கையின் உயர்வு கருதித் திராவிடக் கழகத்தில் ஈடுபாடு கொண்டிருந்த அண்ணா அவர்களும், அவரைப் போன்ற பலரும் பெரியாரின் சர்வாதிகாரத் தன்மையில் வெறுப்புக்கொண்டனர். சனநாயகப் பண்புகளுக்கும், சனநாயக முறைகளுக்கும் திராவிடக் கழகத்தில் இடமில்லையே என்று மனம் வெதும்பினர். பெரியாரிடத்தில் சனநாயகப்

பண்புகளும், திராவிடக் கழக அமைப்புக்களிடத்தில் சன நாயக முறைகளும் இருந்தால், பெரியார் மேலும் புகழும், செல்வாக்கும் பெறவும், கழகம் மேலும் வளரவும் வழி பிறக்குமே என்ற தூய எண்ணத்தின் அடிப்படையில்தான் அண்ணு அவர்கள் எண்ணினுர்கள். பெரியார் அவர்கள் சனநாயகப் பண்புகள் அனைத்தையும் பெற்ற ஒரு பெருந் தலைவராக என்றென்றும் திகழ வேண்டும், தாம் என் றென்றும் அவரைப் பின்பற்றி நடக்கிற ஒரு தொண்டராக இருக்க வேண்டும் என்ற கருத்தில்தான் அண்ணு அவர்கள், திராவிடக் கழகத்தில் சனநாயகப் போக்கை எதிர்பார்த் தார்கள். தமக்குப் பெரியார் அவர்கள் எந்த வகையிலும் உயர்ந்தவரல்லர் என்ற மமதையினுலோ, அல்லது பெரி யாரை அகற்றி விட்டு அந்த இடத்தில் உட்கார்ந்துகொள்ள வேண்டும் என்ற பதவிப் பேராசையினுலோ, அல்லது பெரி யாரின் புகழையும் செல்வாக்கையும் கண்டு பொறுக்க முடி யாத பொருமையினுலோ, அல்லது பெரியார் அவர்கள், தமக்கு மதிப்பு அளிக்காமல் மற்ற எவருக்கோ மிக்க மதிப்பு அளிக்கிருரே என்ற பொச்செரிப்பினுலோ, அல்லது பெரி யாருக்கும், அவரைச் சேர்ந்தவர்க்கும், எந்தக் காரணத் தினுலோ மாறுபட்டவர்கள் தூண்டுகிருர்கள், அவர்கள், தம்மைத் தலைவராக மதிக்கிருர்கள், அப்படி மாறுபட்ட வர்களுக்கு மனத்திருப்தியை அளித்து, அவர்களை என் றென்றும் தமக்குரியவர்களாக ஆக்கி வைத்துக்கொள்ள வேண்டும் என்ற நப்பாசையினுலோ அண்ணு அவர்கள் பெரியார் அவர்களிடம் மனவேறுபாடு கொள்ளவில்லை. ஒரு சர்வாதிகாரியிடத்தில், ஒரு சிறந்த சனநாயகவாதி கொள்ள வேண்டிய மனப்போக்கைத்தான் அண்ணு அவர் கள் கொண்டிருந்தார்கள்.

சனநாயகப் போக்கிலே விருப்பமுடையவர்களை ஒன்று சேர்த்துக்கொண்டு, சர்வாதிகாரப் போக்குடைய தலைவனை எதிர்த்துக் கிளர்ச்சி செய்து, பதவியிலிருந்து அகற்ற

முயற்சி எடுப்பதுதான் உலகெங்கணும் உள்ள முறையாக இருந்தபோதிலும், அறிஞர் அண்ணு அவர்கள் அந்த முறையை மேற்கொள்ளவில்லை; தம்முடையது என்று ஒரு குழுவை உருவாக்கிக் கொள்ளவில்லை; அப்படி ஒரு குழுவை உருவாக்கிக்கொண்டு, அதன் துணையை அடிப்படையாக வைத்து, பெரியாருக்கு எதிராகக் கிளர்ச்சி நடத்த வேண்டும் என்று எண்ணவில்லை; பெரியாரைப் பற்றி நேரிடையாகவும், வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் இழித்தும் பழித்தும் தூற்றித் திரிய வேண்டும் என்றும் கருதவில்லை. அறிவுரைகளாலும், அன்புரைகளாலும், அமைதியான முறையில் பெரியாரின் போக்கிலே மாற்றங்காண வழியில்லை என்பதைக் கண்டறிந்து கொண்டவுடனே, அண்ணு அவர்கள், தம்மை, மெல்ல மெல்ல, கழக அமைப்பிலிருந்தும், கழக நடவடிக்கைகளிலிருந்தும் விடுவித்துக் கொள்ளும் முயற்சியில்தான் பெரிதும் ஈடுபட்டார்கள். அண்ணு அவர்கள், தாம் விரும்பினால் கழகத்திற்குள்ளேயும் கழக ஆதரவாளர்களிடையேயும் ஒரு வலிவான ஆதரவைத் தமக்குப் பக்கவலிவாகத் திரட்டிக்கொள்ள முடியும் என்ற வாய்ப்பு இருந்தும், அப்படிப்பட்ட முயற்சியில் ஈடுபடாமல், தம்முடைய நேரத்தையும், நினைப்பையும், உழைப்பையும் வீண் கிளர்ச்சி—சச்சரவு சண்டை ஆகியவைகளில் செலவழிக்கக் கூடாது என்ற பெருநோக்கில் தாமாக மெல்ல மெல்லக் கழகத்தை விட்டு விலகிக் கொள்ளுவதுதான் சிறந்த வழி என்ற முடிவுக்கு வந்தார்கள். அண்ணு அவர்கள் கடைப்பிடித்த கண்ணியமான அரசியல் பண்பிற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும்.

அண்ணு அவர்கள், தாம் திராவிடக் கழகத்தை விட்டு மெல்ல மெல்ல விலகிச் செல்லும் நிலை எப்படியிருக்கும் என்பதை உணர்த்துவதற்காகத் "திராவிட நாடு" வார இதழில் எழுதப்பட்ட கட்டுரைகள்தாம், 'இராஜ பார்ட் ரங்கத்துரை', 'இரும்பாரம்', 'மரத்துண்டு' போன்ற கட்டுரை

கள். அந்தக் கட்டுரை பெரியாருக்கு அளிக்க வேண்டிய மதிப்பையும், சிறப்பையும், பெருமையையும் அளித்து, அண்ணாவின் நிலையை அடக்கமாய் அறிவித்துக்கொண்டவைகளே யொழிய, பெரியாரை இழித்தும், பழித்தும், ஏசியும், தூற்றியும் பார்க்க வேண்டும் என்பதற்காக எழுதப்பட்டவைகள் அல்ல.

1947 ஆகஸ்டு 15-ஆம் நாளைத் துக்கநாளாகக் கொண்டாட வேண்டும் என்ற அறிக்கையைப் பெரியார் அவர்கள் விட்டபோது, அந்த நாள் துக்கத்திற்குரிய நாள் அல்லவென்றும், வெள்ளையர் ஆதிக்கம் இந்தியத் துணைக்கண்டத்தை விட்டு அகலும் நிகழ்ச்சி மகிழ்ச்சிக்குரியதுதான் என்றும், அந்த நிலை ஏற்படுவதற்குப் பாடுபட்ட அனைவரும் பாராட்டுதலுக்குரியவர்கள் என்றும், பாடுபட்டு மறைந்தவர்களனைவரும் வீர வணக்கத்திற்குரியவர்கள் என்றும், எனவே 1947 ஆகஸ்டு 15-ஆம் நாள் மகிழ்ச்சிக்குரிய நாள்தான் என்றும் தெளிவான விளக்கத்தோடு கூடிய நீண்ட அறிக்கையை அண்ணா அவர்கள் 'திராவிட நாடு' இதழ் மூலம் வெளியிட்டார்கள். அறிக்கையின் இறுதியில், இப்படி அறிக்கை வெளியிடுவது, கழகக் கட்டுப்பாட்டிற்கு மீறிய செயல் என்று பெரியார் அவர்கள் கருதுவார்களேயானால், கழகம் அதற்காக என்ன தண்டனை கொடுத்தாலும் அதனை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாக அண்ணா அவர்கள் குறிப்பிட்டிருந்தார்கள். இதுவும் அண்ணாவின் பெருந்தன்மையையும், சனநாயகப் போக்கையும் காட்டுவதாகும்.

1949-இல் பெரியார் அவர்கள் திருமணம் என்ற பெயரால் வாரிசு முறை ஏற்பாடு ஒன்று செய்ய முனைந்தபோது, திராவிடக் கழகத்திலிருந்த பலர் வெட்கத்தோடும், வேதனையோடும் கண்ணீர் சிந்திக் கலங்கிக்கொண்டிருந்தனர். அப்பொழுதும் அண்ணா அவர்கள் அந்த வாய்ப்பைத் தமக்குத்

துணையாகப் பயன்படுத்திக் கொள்ளும் இழிசெயலில் இறங்கினரில்லை. அந்த ஏற்பாட்டைக் கைவிடும்படி பெரியாரைக் கெஞ்சிக் கேட்டுக்கொள்ளும் முயற்சிகளில்தான் ஈடுபட்டார்கள். 'திராவிடநாடு' இதழ் மூலம் நீண்ட வேண்டுகோள் அறிக்கை விடுத்துக் கெஞ்சிக் கேட்டுக் கொண்டார்கள். இரு தூதுக்குழுக்களைப் பெரியாரிடம், நேரிடையாகக் கேட்டுக் கொள்ளவேண்டி அனுப்பிவைத்தார்கள். திராவிடக்கழக மத்திய செயற்குழுவின் தீர்மானத்தின் மூலம், பெரியாரை, ஏற்பாட்டைக் கைவிடுமாறு கேட்டுக்கொள்வதென்று முடிவு எடுத்தார்கள். இவ்வளவையும் பொருட்படுத்தாமல், இலட்சக் கணக்கானவர்களின் வேண்டுகோள்களுக்கும் செவிசாய்க்காமல், பெரியார் அவர்கள், வழக்கம்போல், சர்வாதிகார மனப்பான்மையோடு, திருமண ஏற்பாட்டை முடித்துக்கொண்டார்கள். இந்த நிலைக்குப் பிறகு அண்ணா அவர்கள் அரசியலை விட்டு அறவே ஒதுங்கிவிடுவது என்ற முடிவுடன், காஞ்சிபுரம் சென்று, தம் இல்லத்தில் தங்கி விட்டார்கள். அண்ணா அவர்களுக்குச் சர்வாதிகாரப் பித்தும்,பதவிப் பேராசையும், விளம்பர நப்பாசையும் ஒரு கடுகளாவது இருந்திருக்குமேயானால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு, திராவிடக் கழகத்தைத் தம் வசப்படுத்த முயன்றிருந்திருப்பார்கள். அத்தகைய இழிந்த பண்பு அண்ணாவிடத்தில் ஒரு துளியும் இல்லாத காரணத்தால்தான், அரசியலுலகை விட்டு அகன்று. வாளா இருக்கத் தலைப்பட்டார்கள்.

பெரியாரின் போக்கு கண்டு, மனம் வெதும்பி, கண் கலங்கி நின்ற எண்ணற்றோர், என் செய்வது என்று தவித்துக்கொண்டிருந்த நிலையில், அத்துணைப்பேருடைய கண்ணீரையும் துடைத்து, அத்துணைப் பேர்க்கும் ஆறுதல் அளித்து, அறவழி காட்டி அழைத்துச் செல்லக்கூடிய அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும், பண்பும், பயிற்சியும், ஊக்கமும், ஆக்கமும், வலிவும், பொலிவும்,

சனநாயக உள்ளமும் போக்கும் கொண்ட ஒரு பெருந்தலைவர் அறிஞர் அண்ணாவைத் தவிர வேறு யாரும் இல்லை என்ற முடிவுக்குத், திராவிடக் கழகத்தி லிருந்த முக்கிய முன்னணி நண்பர்கள் அனைவரும் முன் வந்தனர்; அண்ணா அவர்களை வழிகாட்டுமாறு அழைத் தனர். அண்ணா அவர்கள் மறுத்தார்கள். நண்பர்கள் மீண்டும் மீண்டும் வற்புறுத்தினர்; தொடர்ந்து சில நாட் கள் வற்புறுத்தினர். அண்ணா அவர்கள் நண்பர்களின் அன்பு வேண்டுகோளைப் புறக்கணிக்க வழியில்லாமல், பலருடைய ஒத்துழைப்பின் பேரில், தக்க வழிவகை காண ஒருப்பட்டார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களைத், தக்க வழி காட்டுமாறு அழைத்த நண்பர்கள் பலரும் பெரியாரை எதிர்த்துப் போராடிப், பெரியாரைப் பதவியினின்றும் அகற்றித், திரா விடக் கழகத்தையும் அதன் சொத்துக்களையும் அப்படியே கைப்பற்றிவிடவேண்டும் என்று வாதிட்டனர். அரசியல் நாகரிகத்திற்கும்—நேர்மைக்கும்—பண்பாட்டிற்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கும் அண்ணா அவர்கள், திரா விடக் கழகத்தை விட்டு விலகி, அறவழியில் நின்று, தனி சனநாயக அமைப்புக் காணும் முறையைத்தான் திரும்பத் திரும்பத் தெளிவுபடுத்தினார்கள். அண்ணா அவர்கள் பல ரோடும், கூடிக்கலந்து, உரையாடி, தெளிவு படுத்திய பின்னர்த்தான்,பலரும் சேர்ந்து 1949 செப்டெம்பர் 17-ஆம் நாள் 'திராவிட முன்னேற்றக் கழகம்' என்ற சீரிய அமைப்பை உருவாக்கினர்.

திராவிடக் கழகத்திலிருந்து, அண்ணா காட்டும் வழிப்படி நடக்கப், பிரிந்து வந்தவர்கள் பலராவர்; திராவிடக் கழகத்திலேயே தங்கியிருந்தோர் சிலராவர். பெரும்பான்மையோரிடத்தில் அமைப்பை விட்டு விட்டுக், கருத்து வேறுபாடுகொண்ட சிறுபான்மையோர் அந்த அமைப்பிலிருந்து விலகி, வெளியேறுவதுதான் இது

வரையில் உலகம் பெரும்பாலும் கண்டறிந்த உண்மையாக இருந்து வருகிறது. சிறுபான்மையோரிடம் அமைப்பை விட்டு விட்டுச், சண்டை—சச்சரவு—கிளர்ச்சி போன்றவை களுக்குச் சிறுதுளியும் இடமளிக்காத வகையில், பெரும் பான்மையோரை அழைத்துக்கொண்டு, வெளியேறி, தனி அமைப்பினைச், சனநாயக அடிப்படையில் காண முன் வந்த சனநாயகப் பண்பு, அறிஞர் அண்ணு அவர்களிடம் அமைந் திருப்பதைப்போல், வேறு யாரிடமும் இதுவரையில் கண்ட தில்லை; இனிக் காண இயலுமா என்பதும் அரிதே.

அறிஞர் அண்ணு அவர்களிடத்தில் சனநாயகப் பண்பு கள் தலைசிறந்து விளங்கும் காரணத்தால்தான், தி. மு. கழகத்தில் சனநாயக முறைகள், படிப்படியாகவும் நிலையாகவும், உறுதியாகவும், நாளுக்கு நாள் வளர்ந்து, வளமும், வலிவும், பொலிவும் பெற்று வருகின்றன.

அண்ணு அவர்கள் கழகத்திலுள்ள மற்றவர்களின் முடிவுக்குத் தன்னை ஆட்படுத்திக்கொள்ள விரும்புகிற ஒருவரேயல்லாமல், தன்னுடைய கருத்தைப் பெரும் பான்மையோரின் முடிவுக்கு மாருகத் திணித்தே தீர வேண்டும் என்று எண்ணுபவர் அல்லர். கழகத் தோழர் களைத் தனித்தனியாகவோ அல்லது கூட்டாகவோ கண்டு அவர்களிடம் தெளிவு பிறக்கச் செய்ய முற்படுவாரே யன்றித், தம் கருத்தைத் திணிக்க ஒருபோதும் முயன்ற தில்லை. பொதுக்குழு, செயற்குழு போன்ற அமைப்புக் களின் முடிவு, தம் கருத்துக்கு நேர்மாருக இருந்தாலும், அந்த முடிவுக்குப் படிந்து, அந்த முடிவை நிறைவேற்று வதில் முனையும் சனநாயகப் பண்பு அறிஞர் அண்ணு அவர் களிடம் காணப்படுவதைப்போல், வேறு எந்தத் தலைவரிடத் திலும் காண இயலாது.

தி. மு. கழகத்தை ஒரு சர்வாதிகார அமைப்பாக ஆக்கவோ, அல்லது தம்மை ஒரு சர்வாதிகாரியாக ஆக்கிக்

கொள்ளவோ, வாய்ப்புக்களும் வசதிகளும் பல இருந்தும், அண்ணா அவர்கள் ஓர் அணு அளவும் முயன்றதில்லை.

தி. மு. கழகத்தைத் தோற்றுவித்த உடனேயே அண்ணா அவர்கள் சனநாயகப் பண்புகளையும், முறைகளையும் கழகத்தில் நிலைநாட்ட முயன்றார்கள். அண்ணா அவர்களுக்கு இருந்த அடக்கவுணர்ச்சியின் காரணமாகத் 'தலைவர்' என்றொரு பதவியை ஏற்படுத்துக்கொள்ளாமல், 'பொதுச்செயலாளர்' என்ற பொறுப்பை ஏற்படுத்திக் கொண்டார்கள். பொதுக் குழுவை முழு அதிகாரமும், உரிமையும் படைத்த அமைப்பாக அமைத்ததோடு, பிரச்சாரக்குழு, அமைப்புக்குழு, சட்டதிட்டக்குழு, நிதிக் குழு என்பன போன்ற பல்வேறு குழுக்களையும் அமைத்துப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கவும் முற்பட்டார்கள்.

1951-ஆம் ஆண்டில் கழகத்தின் சட்ட திட்டங்கள் முறைப்படி நிறைவேற்றப்பட்டன. மீண்டும் கழக வளர்ச்சியையும், நடமுறை நலத்தையும், பொறுப்புக்களை மேலும் பரவலாக்கும் தன்மையையும், விரிவாக்கித் தெளிவாக்கும் போக்கையும், தேவையையும் ஒட்டி 1960-ஆம் ஆண்டில் சட்ட திட்டங்கள் மீண்டும் திருத்தப் பட்டுப் புதுப்பிக்கப்பட்டு நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டுள்ளன. அண்ணா அவர்கள், சட்டதிட்டங்கள் உருவாக்கப்படும்போதும், புதுப்பிக்கப்பட்டுத் திருத்தப் படும்போதும், அந்தப் பணிகளில் குறிக்கிட்டதில்லை; தம் கருத்தை வற்புறுத்தியதில்லை; இப்படித்தான் இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டதில்லை. எப்படிப் பட்ட சட்ட திட்டங்கள் சனநாயக முறையில் உருவாக்கப் பட்டுச், சனநாயக முறையில் நிறைவேற்றப்பட்டாலும், அவற்றினை ஏற்று, அவற்றின் வழி நின்று நடக்கத் தாம் என்றும் தயார் என்ற உயர்ந்த சனநாயகப் பண்பைததான், அன்றும், இன்றும், என்றும் அண்ணா அவர்கள் கடைப் பிடித்து வருகிறார்கள்.

தாமே என்றும் பதவியிலிருக்க விரும்பாத காரணத்தாலும், கழகத்திலுள்ள மற்றவர்களும் சனநாயக முறைப்படி, கழகத்தை நடத்திச் செல்லும் பயற்சியைப் பெறவேண்டும் என்ற பெரு நோக்கத்தாலும், அண்ணா அவர்கள் 1955-இல் தாமே பொதுச்செயலாளர் பொறுப்பினின்றும் விலகிக்கொண்டார்கள். 1960-இல் கழகத் தோழர்களிடையே ஏற்பட்ட சிக்கலைப்போக்க, நெருக்கடியைத் தீர்க்க, வேறு வழியின்றி, வேண்டா விருப்போடு, தொல்லைகளைத் தாங்கிக் கொள்ளும் பெருந்தன்மையோடு மீண்டும் பொதுச்செயலாளர் பொறுப்பை ஏற்றுக் கொண்டார்கள்.

மத்தியப் பேரரசு அமைச்சர் திவாகருக்குக் கறுப்புக் கொடி காட்டுதல்—கவர்னர் ஜெனரலாக இருந்த ஆச்சாரியாருக்குக் கறுப்புக் கொடிகாட்டுதல்—குலக் கல்வித் திட்ட எதிர்ப்புப் போராட்டம்—கல்லக்குடிப் பெயர் மாற்றும் போராட்டம்—இரயில் நிறுத்தப் போராட்டம்—இந்திப் பெயரழிப்புப் போராட்டம்—நேருவுக்கு எதிராகக் கறுப்புக் கொடி காட்டுதல்—நங்கவரம் போராட்டம்—தஞ்சை பஸ் தொழிலாளர் போராட்டம்— இந்தி எதிர்ப்புப் போராட்டம் போன்ற பல்வேறு கிளர்ச்சிகளுக்கும், போராட்டங்களுக்கும் தலைமை தாங்கும் பொறுப்புக்களையும், ஈடுபடும் பொறுப்புக்களையும் பலர்க்கும் பகிர்ந்தளிக்கும் முயற்சிகளிலேதான், அண்ணா அவர்கள், தம் கவனத்தைச் செலுத்தி வந்திருக்கிறார்கள்.

ஒரு குடும்பத் தலைவன் எவ்வாறு அக்கம்பக்கத்தாரின் இழிசொற்களையும், பழிச்சொற்களையும், வசைமாரிகளையும், அவதூறுகளையும் தாங்கிக்கொண்டு, பொறுப்புணர்ச்சியோடு, குடும்பத்தாரிடையே பிளவு ஏற்படாமல், பொச்செரிப்பு ஏற்படாமல், மனக்கசப்பு வளராமல், மரியாதைக் குறைவு நிகழாமல், சண்டை சச்சரவு

றுளாமல், ஒற்றுமையும்—அன்பும்—பற்றும்—பாசமும்—உறவும் ஏற்படுகிற வகையில் அரும்பாடு படுகிறனே. அவ்வாறுதான் அறிஞர் அண்ணு அவர்கள் தி. மு. கழகத்தைக் கட்டிக் காத்து வருகிருர்கள்.

அறிஞர் அண்ணு அவர்கள் சனநாயகத்தை அளவுக்கு மீறி வாரி வழங்கியிருக்கிருர்கள், அவர்களிடத்தில் கண்டிப்பு இல்லை, குற்றஞ் செய்வோரை எளிதில் மன்னித்து விடுகிருர்கள், யாருக்கும் அன்பும் அருளும் காட்டுகிருர்கள் என்ற குற்றச்சாட்டைத்தான் பலரும் வீசுகிருர்களே யொழிய, அவர்கள் சனநாயகத்தை மறந்து. சர்வாதிகாரியாக நடந்துகொண்டார்கள் என்று எந்த ஒரு நல்லறிவு படைத்தவரும் கூறமாட்டார்கள். தி. மு. கழகத்தைக் 'குடும்பப் பாசத்தோடு' வளர்க்கும் எண்ணத்திலும், பொறுப்பிலும் தம்மை ஒப்படைத்திருக்கும் காரணத்தால் தான், அவர்கள் மேற்கண்டவாறு நடந்து கொள்ள வேண்டிய நிலைமைகள் ஏற்படுகின்றன.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து வேருகப் பிரித்துக் காண முடியாத அளவுக்கு, அறிஞர் அண்ணு அவர்கள் அதனுடன் இரண்டற ஒன்றிப் போயிருக்கிருர்கள். அறிஞர் அண்ணுவைக் கொண்டுதான் நாடு கொள்கைகளை அறிகிறது; கொள்கைகளைக் கொண்டுதான் கழகத்தை அறிகிறது.

உலகத்தில் வளர்ந்து அழிந்துபோன கட்சிகளும் சரி இருந்து வளர்ந்து கொண்டிருக்கும் கட்சிகளும் சரி, அவற்றின் ஓரிரு சீரிய தலைவர்களைக் கொண்டுதான், அவற்றின் கொள்கைகளையும், அமைப்புக்களையும் நாடுகள் அறிந்துகொண்டன. சிறப்பித்துச் சொல்லக்கூடிய—புகழ்ந்து பாராட்டக்கூடிய—ஏற்றிப் போற்றக்கூடிய தலைவனைப் பெருமல், எந்த ஒரு விடுதலை இயக்கமும் உலகில் சிறந்தோங்கி நின்று வெற்றி பெற்றதில்லை.

ஒரு விடுதலை இயக்கத் தலைவனுக்கு இருக்க வேண்டிய அறிவும் ஆற்றலும், திறமையும் தகுதியும், உறுதியும் ஊக்கமும், மாண்பும் சிறப்பும், பெருமையும் புகழும், அன்பும் அருளும், பெருந்தன்மையும் பெருநோக்கும், சனநாயகப் பண்பும் அறிஞர் அண்ணா அவர்களிடத்திலே மண்டிக்கிடக்கின்றன. இவ்வளவு சிறப்புக்களும் ஒருங்கே அமையப்பெற்ற தலைவர்கள், கண்ணுக்கு எட்டிய வரையிலும் காதுக்கு எட்டியவரையிலும் எங்கேயேனும் இந்நாட்டில் இருக்கிறார்களா என்று தேடித் தேடிப் பார்த்தாலும் ஒருவரைக்கூட காண முடியாத நிலைதான் இருந்து வருகிறது. அறிஞர் அண்ணா அவர்களுக்கு இணையான தலைவரும் இல்லை; எடுப்பான தலைவரும் இல்லை!

ஈடும் எடுப்பும் அற்ற தலைவர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவுறுத்தி வரும் கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு என்ற மூன்று சொற்களில் அடங்கியுள்ள பொருள்கள்தாம் கழகத்தைக் கட்டிக்காத்து வளர்த்து வருகின்றன. கழகத் தோழர்களிடையே கடமை தவறினால் கழகத்தின் வளர்ச்சி குன்றும்; கண்ணியம் குறைந்தால் கழகத்தின் பெருமை அழியும்; கட்டுப்பாடு குலைந்தால் கழகத்தின் வலிவு குறையும். இந்த உண்மையை நன்கு உணர்ந்திருக்கும் காரணத்தால்தான் கடமையுணர்ச்சி குன்றாமல், கண்ணியப் பண்பு குறையாமல், கட்டுப்பாட்டு உறுதி குலையாமல் கழகத்தைக் கட்டிக்காத்து வளர்த்து வருமாறு அறிஞர் அண்ணா அவர்கள் கழகத் தோழர்கள் அனைவரையும் மீண்டும் மீண்டும் வலியுறுத்தி வேண்டிக் கேட்டுக் கொள்கிறார்கள்.

சுருங்கக் கூறினால், சனநாயகத்தை எண்ணம்—மொழி—செயல் கொண்ட ஓர் உருவத்தில் காண வேண்டுமானால், அந்த உருவந்தான் அறிஞர் அண்ணா!

'தக்க வழிகளை ஆராய்ந்து கூறும் அறிஞரின் கூட்டத்தில் உள்ளவராய் நடக்கவல்ல ஒருவருக்கு, அவருடைய பகைவர் செய்யக்கூடிய தீங்கு ஒன்றும் இல்லை' என்னும் கருத்துப்படத் "தக்காரினத்தனாய்த் தானொழுக வல்லானைச் செற்றார் செயக்கிடந்ததில்" என்று வள்ளுவர் கூறியுள்ள கூற்றுக்கு இணங்க, தி.மு. கழகத்தின் ஒப்பற்ற ஒருபெரும் வழிகாட்டியாக விளங்கும் அறிஞர் அண்ணா அவர்களை கழகம் கொண்டிருப்பதால், கழகத்தின் பகைவர், கழகத்திற்குச் செய்யக்கூடிய தீங்கு எதுவும் இல்லை என்ற உணர்வோடுதான், கழகத்தினிடத்து நீங்காப்பற்றும், தணியா ஆர்வமும் கொண்டு திகழும் கழகத் தோழர்கள் அனைவரும் இனிது, வாளா வாழ்கின்றனர்.

தி. மு. கழகத்தை உருள்பெருந் தேருக்கு ஒப்பிடலாம். பொருளியல்–சமூகவியல் – அறிவியல்– கலையியல்–போன்ற கருத்துக்கள்தாம் தேரின் அடுக்குகளாகும். அறிஞர் அண்ணா அவர்களின் அறிவு–ஆற்றல் ஆகிய இரண்டுந்தாம் அந்தத் தேருக்கு இரு அச்சுகளாக அமைந்திருக்கின்றன. கருமம்—கடமை—கண்ணியம்–கட்டுப்பாடு ஆகிய நான்கும் அந்தத் தேருக்கு அமைந்த நான்கு உருளைகளாகும். நெஞ்சுறுதி – நேர்மைத்திறம் – நீதிப்போக்கு – நாணயத்தன்மை ஆகிய நான்கும், நான்கு வடங்களாகும்.

கழகத் தோழர்கள் இப்படிப்பட்ட தேரை 1949-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 17-ஆம் நாள் கட்டிமுடித்து, இன்பத் திராவிடம் என்னும் இலட்சியபுரி நோக்கி இழுத்துக்கொண்டு செல்லுகிறார்கள். தேரின் வலிவையும் பொலிவையும், சீரையும் சிறப்பையும், பெருமையையும் புகழையும், நலத்தையும் நன்மையையும் கண்டு, வடம் பிடித்திழுப்போரின் எண்ணிக்கை நாளுக்கு நாள் பெருகுகிறது. புதிய புதிய கிளைகளைச் சேர்ந்த கழக உறுப்பினர்களான புதிய புதிய படைவீரர்கள் வடங்களைப் பிடித்து இழுப்ப

திலே ஆண்டுக்கு ஆண்டு ஆர்வமும் எழுச்சியும் காட்டி வருகின்றனர். ஆண்டுக்காண்டு படைவீரர்களின் எண்ணிக்கை பெருகப்பெருக, தேரின் ஓட்ட விரைவும் பெருகிக் கொண்டுவருகிறது. இன்பத் திராவிடத்தை, அடைய இன்னும் நீண்டதொலைவு, செல்ல வேண்டியிருக்கிறது என்றாலும், மற்ற அரசியல் கட்சிகளின் தேர்கள் அவ்வவற்றின் இலட்சிய புரிகளை நோக்கிச்செல்வதைக் காட்டிலும், தி. மு. கழகத் தேர் நிலையாகவும், உறுதியாகவும் முன்னேறிச் சென்று கொண்டிருக்கிறது. மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட வீரர்கள் தேரின் வடங்களைப் பிடித்து இழுத்துக் கொண்டிருக்கிறார்கள். அறிஞர் அண்ணாவின் அறிவு—ஆற்றல் என்ற இரண்டு வலிவான அச்சுக்கள் அழுத்தந் திருத்தமாக, ஆட்டமுடியாமல் அசைக்க முடியாமல் அமைந்திருக்கும் காலத்திலேயே, தி.மு. கழகத் தேரை, 'இன்பத் திராவிடம்' என்னும் இலட்சியபுரியில் கொண்டுபோய்ச் சேர்க்க வேண்டும் என்று வீரர்கள் அனைவரும் எண்ணி ஓயாமல் ஒழியாமல் இழுத்துக்கொண்டிருக்கின்றனர்!

# கழகமும்
# சட்ட திட்டமும்

திராவிட முன்னேற்றக் கழகம் சனநாயகப் பண்பிலே பிறந்து, சனநாயக முறைகளோடு வளர்ந்து, சனநாயகப் போக்கிலே வெற்றியடைந்து வருகிற ஒரு சீரிய அமைப்பாகும். முறைப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட இரண்டு சட்ட திட்டக் குழுக்கள் நீடு ஆராய்ந்து, மற்ற சனநாயக அமைப்புக்களிலுள்ள சட்ட திட்டங்களோடு ஒப்பிட்டுப் பார்த்து, விவாதித்துத் தெளிந்து உருவாக்கிய சட்ட திட்டங்களைத்தான் அது ஏற்றுக் கொண்டிருக்கிறது. அப்படி முறைப்படி வரையறுக்கப்பட்ட சட்ட திட்டங்கள் காட்டும் வழியிலேதான் அது செம்மையுற இயங்கி வருகிறது.

ஓடுகின்ற நீரோட்டம் தன் விருப்பம்போல், கண்டபடி, கண்ட இடங்களில் சென்று பாயாமல், அதனை ஒழுங்கு படுத்திச், செல்லவேண்டிய இடத்திற்குச், செல்லவேண்டிய வழியில், செல்லவேண்டிய முறைப்படி இட்டுச் செல்வதற்கு, எப்படி இருகரைகள் ஓர் யாற்றுக்கு அமைந்திருக்கின்றனவோ, ஓடுகின்ற குதிரை யாரையும் கடிக்காமல், அப்படி இப்படிப் பாயாமல், இடக்குச் செய்யாமல், குறிப்பிட்ட நெறியில், குறிப்பிட்ட விரைவில், ஒழுங்காகச் செல்லுவதற்கு எப்படி ஒரு கடிவாளம் தேவைப்படுகிறதோ, ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள் நீரைத் தேக்கவும்,

உழுதுபோடவும், பயிரை வளர்க்கவும், பாதுகாக்கவும் ஒரு வயலுக்கு எப்படி வரப்புக்கள் வேண்டப்படு கின்றனவோ, அப்படித்தான் ஓர் அமைப்புக்குச் சட்ட திட்டங்கள் இன்றியமையாதனவாகத் தேவைப்படு கின்றன.

ஆற்றுக்காகத்தான் கரைகள்—குதிரைக்காகத்தான் கடிவாளம்—வயலுக்காகத்தான் வரப்புக்களே ஒழிய,கரை களுக்காக ஆறு—கடிவாளத்திற்காகக் குதிரை—வரப்புக் களுக்காக வயல் அல்ல. அதுபோலவேதான், ஒரு கட்சி அமைப்புக்குத்தான் சட்ட திட்டங்களே ஒழிய, சட்ட திட்டங்களுக்காக ஒரு கட்சி அமைப்பு அல்ல.

அரசியல்—பொருளியல்—சமூகவியல் போன்ற பல்வேறு துறைகள் பற்றிய சீரிய நோக்கங்களையும், கொள்கைகளையும் நிறைவேற்றி வைப்பதற்கான வழி வகைகள் காணவும், அந்த வழி வகைகளை உருவாக்கத் திட்டங்கள் தீட்டவும், தீட்டப்பட்ட திட்டங்களை நடை முறையில் கொண்டுவருவதற்கான முயற்சிகள் எடுக்கவும், எடுக்கப்படும் முயற்சிகளில் கட்சியைச் சார்ந்த அனைவரும் அவரவர் தகுதிக்கும், திறமைக்கும், நிலைக்கும், பொறுப்புக் கும், அலுவலுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு பங்கு பெறும்படி செய்யவும் சட்ட திட்டங்களோடு கூடிய அமைப்பு தேவைப்படுகிறது. அத்தகைய அமைப்பைச் சனநாயகப் பண்பின் அடிப்படையிலும், சனநாயக முறை யின் அடிப்படையிலும் வளர்த்துவரும் சீரிய முயற்சியில் தான், தி. மு. கழகம், அது தோன்றிய நாளிலிருந்து ஈடுபட்டு வருகிறது.

தி.மு. கழகத்தைத், தூய சனநாயகம் முழுக்க முழுக்க நிறைந்த ஓர் அமைப்பாக இயக்கிச் செல்லவேண்டும் என்ற விருப்பத்தில்தான்,கழகத்தில் தூய உள்ளத்தோடு ஈடுபாடு கொண்டுள்ள அனைவரும் அரும்பாடுபட்டு வருகின்றனர்.

1949-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 17-ஆம் நாள் தி. மு. கழகம் தோற்றங்கொண்டபோது, நாடெங்கணும் இருந்த கொள்கைப்பற்றும் தொண்டுச்சிறப்பும் கொண்ட முன்னணியினரைக்கொண்டு பொதுக்குழு அமைக்கப் பட்டது. அப்பொழுதுதான் கழகத்திற்கான சட்ட திட் டங்களை ஏற்ற முறையில் உருவாக்கித்தர, தோழர் கே.ஏ.மதியழகன்அவர்களைச்செயலாளராகவும், தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், இரா. செழியன், கே. கோவிந்தசாமி, இரா. இளம்வழுதி, காஞ்சி மணிமொழியார் ஆகியோரை உறுப் பினராகவும் கொண்ட முதல் சட்ட திட்டக்குழு தேர்ந் தெடுக்கப்பட்டது. அந்தக் குழு உருவாக்கித்தந்த சட்ட திட்டங்கள் 1951-இல் மதுரையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு, 1951 டிசம்பர் திங்களில் சென்னையில் நடைபெற்ற முதல் கழகப் பொது மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. 1949-ஆம் ஆண்டி லிருந்து 1958-ஆம் ஆண்டு வரையில் கழகத்தை இயக்கி வரும்போது, கழக அமைப்பில் கண்ட குறைபாடுகளைப் போக்கவும், நிறைபாடுகளைக் கொள்ளவும், பொறுப்புக் களைப் பரவலாகப் பகிர்ந்தளிக்கவும், தேவைக்கேற்றவாறு சட்ட திட்டங்களை விரிவாக்கவும்,நடைமுறைக்கும், வளர்ச் சிக்கும் ஏற்றவாறு விதிமுறைகளைப் புதுப்பித்துக்கொள்ள வும்—திருத்திக்கொள்ளவும்,1958-இல்,இரண்டாவதுசட்ட திட்டக் குழு ஒன்று, தலைமைச் செயற்குழுவால் தேர்ந் தெடுக்கப்பட்டது. அந்தக் குழுவில், தோழர் என். வி. நடராசன் அவர்கள் செயலாளராகவும்,தோழர்கள் ஈ.வெ.கி. சம்பத், மு. கருணாநிதி, இரா. செழியன், வி. பி. இராமன் ஆகியோர் உறுப்பினராகவும் இடம் பெற்றிருந் தனர். இந்தக் குழு நீடு ஆராய்ந்து விவாதித்துத், தெளிந்து, திருத்தியும், புதுப்பித்தும் உருவாக்கித்தந்த சட்ட திட் டங்கள், 1959-இல் மாயவரத்தில் நடைபெற்ற பொதுக்

குழுவால் நிறைவேற்றி வைக்கப்பட்டன. புதிய சட்ட திட்டங்கள் 1930 செப்டெம்பர்த் திங்கள் 25-ஆம் நாள் நடைபெற்ற தலைமைக் கழகத் தேர்தலிலிருந்து முழுக்க முழுக்க நடைமுறையில் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக் கின்றன.

கழகத்தின் நலத்திற்காகத்தான் சட்ட திட்டங்கள் அமைகின்றனவே யல்லாமல், சட்ட திட்டங்களுக்காகக் கழகம் இல்லை என்ற அடிப்படையில், இன்றியமையாத—தவிர்க்க முடியாத—வேறு வழி அகப்படாத சில சூழ்நிலை களை ஒட்டிச், சட்ட திட்டங்கள் திருத்தம் பெறுவது, முறைதான்; வரவேற்கத்தக்கதுதான். ஆனல், தக்க—இன்றியமையாத காரணமின்றிப், போதுமான நடைமுறைப் பயிற்சிக்கும், பழக்கத்திற்கும் இடமளிக்காமல், வேடிக்கை யாகவும், விளையாட்டாகவும், வேதனை தரக்கூடிய வகை யிலும், குழப்பத்தை உண்டாக்கக்கூடிய முறையிலும், ஆளுக்கொரு விதமாகவும், நேரத்திற்கொரு விதமாகவும், இடத்திற்கொரு விதமாகவும், பதவியில் இடம்பெற்றிருப் போரின் விருப்பு வெறுப்புக்கு ஏற்ற விதமாகவும், கழகத் தின் நலத்திற்கு ஏற்றதல்லாத வேறு நோக்கத்தை நிறை வேற்றிக்கொள்ளும் வகையிலும் சட்ட திட்டங்களை அவசரப்பட்டு, அடிக்கடி திருத்த முற்படுவது, எந்த ஒரு அமைப்பிலும், வெறுத்து, ஒதுக்கித் தள்ளிவிடவேண்டிய செயலாகத்தான் இருக்கும்.

1960-ஆம் ஆண்டில் புதிய சட்ட திட்டக் குழு வினரால் உருவாக்கப்பட்டுத் தலைமைச் செயற்குழுவால் ஆராயப்பட்டுப், பொதுக்குழுவால் சில பல திருத்தங் களோடு நிறைவேற்றப்பட்டு, இப்பொழுது, அண்மையில், சென்ற நான்கைந்து திங்கள்களாக நடைமுறைப் பழக்கத் திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் கழகச் சட்ட திட் டங்கள் (அமைப்பைச் சில பல வகைகளில் மீண்டும்

5

கலைத்துப் புதுப்பிக்கவேண்டிய அளவுக்குத்), திருத்தங்கள் செய்யப்படவேண்டிய தன்மையிலா அமைந்திருக்கின்றன என்றால், இல்லை என்றே கூறலாம். ஏனெனில், நீடு ஆராய்ந்து, விவாதித்து முடிவு செய்யப்பட்ட சட்ட திட்டங்கள் எப்படிச் செயல்படுகின்றன? அவற்றில் என்ன என்ன குறைகள் தென்படுகின்றன? அந்தக் குறைகள் தோன்றி மறையக்கூடிய குறைகளா அல்லது நீடித்து நிலைத்திருக்கக்கூடிய குறைகளா? அந்தக் குறைகள் பொறுப்புக்களைப் பொறுத்து ஏற்பட்டிருக்கின்றனவா அல்லது பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டிருக்கும் ஆட்களைப் பொறுத்து ஏற்பட்டிருக்கின்றனவா? நீக்கப்பட வேண்டிய குறைபாடுகள் என்பவை பொறுப்புக்களா அல்லது ஆட்களா? என்பவற்றைக் கண்டறிந்து முடிவு கட்டுவதற்குப் பொதுவாகச் சில பல ஆண்டுகளே தேவைப்படும்; அக்டோபர்—நவம்பர்—டிசம்பர்—சனவரி என்ற நான்கு திங்கள் கால அளவு அதற்குப் போதுமானவை அல்ல என்பதை நல்லறிவு படைத்தவர் அனைவரும் ஒப்புக் கொள்ளவே செய்வர்.

கழகத்தின் அமைப்பும், பொறுப்புக்களும் சில பல வகைகளில் கலைக்கப்படவும், புதுப்பிக்கப்படவுங் கூடிய வகையில் சட்ட திட்டங்கள் பல திருத்தங்களை உடனடியாகப் பெறவேண்டும் என்ற எண்ணம்,கழகத்தைச் சார்ந்த எவருடைய உள்ளத்திலேனும் எழுந்தால், அதனைக் கழகத்தைச் சீர்படுத்தும் எண்ணமாகக், கழகத்தின் நலத்திலே அக்கறை கொண்டுள்ள எவரும் கொள்ளமாட்டார்கள், ஏனெனில், கழகத்தின் புதிய சட்ட திட்டங்களை, மிக அண்மைக்காலத்தில், உருவாக்கித்தந்த குழுவினரோ, அல்லது அவற்றை நிறைவேற்றி வைத்த பொதுக்குழுவினரோ, கழகத்தைப்பற்றி ஏதும் அறியாதவர்களல்லர்—கொள்கை விளக்கம் தெரியாதவர்களல்லர்—புதிதாக வந்து

சேர்ந்தவர்களல்லர்—எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பொறுப்பற்ற போக்குடையவர்களல்லர்—அவசரப்பட்டு அக்கறையற்று எதனையும் நிறைவேற்றுபவர்களுமல்லர்; அவர்களில் மிகப் பெரும்பான்மையோர் கழகம் தோன்றுவதற்குக் காரணமாக இருந்து, கழகத்தோடு ஒன்றியிருந்து சேர்ந்து வாழ்ந்து வளர்ந்து வருபவர்கள்—கழகத்தின் வாழ்வுக்காகப் பாடுபடுபவர்கள், கழகத்தின் தாழ்வுக்காக வருந்துபவர்கள்—கழகத்தை அது தோன்றிய காலத்திலிருந்து முக்கிய நிருவாகப் பொறுப்புக்களில் இருந்து அதனைச் செவ்வையான முறையில் இயக்கி வந்தவர்கள். அப்படிப்பட்டவர்கள், அறியாமல் அவசரப்பட்டுச், சட்ட திட்டங்களை உருவாக்கி, நிறைவேற்றிவிட்டார்கள் என்று கருத்துக்குருடர்களைத்தவிர, வேறுயாரும் கூறமாட்டார்கள்

கழகத்திற்குச் சீரிய அமைப்பு வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு உருவாக்கப்பட்ட சட்ட திட்டங்கள், காலப்போக்கில், நடைமுறைப் பழக்கத்தில் ஏற்படும் குறை—நிறைகளை அடிப்படையாகக் கொண்டல்லாமல், உருமாறுகிற அளவுக்குத் திருத்தப்படவேண்டிய இன்றியமையாமை ஏற்பட வழியில்லை என்பதுதான், நல்லவர்கள் எல்லோராலும் ஒப்ப முடிந்த முடிவாகும். அமைப்பைக் கருத்தில் கொள்ளாமல், அமைப்பில் முறைப்படி அமர்ந்துள்ள பொறுப்பாளர்களைக் கருத்தில் கொண்டும், தமது விருப்பு வெறுப்புக்கு ஏற்றபடி, தமக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டியவர்களாக இருக்கிறவர்களுக்கு மிகவான உரிமைகளையும், அதிகாரங்களையும், அளிக்க வேண்டும் என்றும், தமக்குத் தனிப்பட்ட முறையில் வேண்டாதவர்களாக இருக்கிற பொறுப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிற அதிகாரங்களையும் உரிமைகளையும் குறைக்கவேண்டும் என்பதை உள்நோக்கமாகக் கொண்டும், அவற்றிற்கேற்றபடி சட்டதிட்டங்கள் மாற்றி

அமைக்கப்படவேண்டும் என்றும் வாதிட, யாரேனும் முன் வருவாராயின், அப்படிப்பட்டவரின் செயல் கழகத்தைச் சீரழிக்கிற ஒரு செயலாகவே அமையும். பொறுப்புக்களில் வந்து அமருகின்றவர்களைப் பொறுத்து அவர்களின் விருப்பத்திற்கிணங்க, சட்ட திட்டங்களை அவ்வப்போது, வேண்டிய மட்டும் திருத்திக்கொண்டு போகும் மனப் மனப்போக்கு எந்த ஓர் அமைப்பில் ஏற்பட்டாலும், அத்தகைய மனப்போக்கு அந்த அமைப்பைச் சீர்குலைக்கவே செய்யும்.

இப்பொழுது கழகத்தின் புதிய சட்ட திட்டங்களின் படி, பொறுப்புகளுக்கு, ஆராய்ந்து அளிக்கப்பட்டிருக்கும் உரிமைகளும், அதிகாரங்களும் மாற்றப்பட வேண்டியவையா? அல்லது திருத்தப்பட வேண்டியவையா? அல்லது கூட்டப்பட வேண்டியவையா? அல்லது குறைக்கப்பட வேண்டியவையா? என்பதைப் போதுமான அளவுக்கு நீடித்த நடைமுறைப்பழக்கத்தோடு கூடிய காலப்போக்குத் தான் தீர்மானிக்கவேண்டும். பொறுப்புக்களில் அறிந்தோ, அறியாமலோ தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் அறிவு—ஆற்றல் தகுதி—திறமை—நேர்மை—நாணயம் ஆகியவை அற்றவர்களாகக் காணப்படுவார்களாயின், அவர்களை முறைப்படி அகற்றுவதற்கும், ஏற்றவர்களை அந்தப் பொறுப்புக்களில் கொண்டுவருவதற்கும் முயலவேண்டுமேயொழிய, அதை விட்டுவிட்டுப் பொறுப்புக்களின் உரிமைகளையும், அதிகாரங்களையும் குறைக்கவும், பறிக்கவும், வேண்டியவர்களாயின அவைகளைக் கூட்டவும் முற்படுவது முறையான செயலாகாது. பொறுப்புக்களிலே அமர்ந்திருப்போர் அடிக்கடி முறைப்படி மாறும்படி நேர்ந்தால், அதனால் கழகத்திற்கு எந்தவிதத் தீங்கும் ஏற்பட்டுவிடாது. ஆனால், பொறுப்புக்களில் அமர்ந்திருப்போரைப் பொறுத்துப், பொறுப்புக்களின் உரிமைகளும் அதிகாரங்களும் அடிக்கடி மாறும்படி நேர்ந்தால், அதனால் கழகம் சீர்குலைந்துபோகும்.

கழகத்தின் புதிய சட்டதிட்டங்கள் நடைமுறைக்கு வந்த உடனேயே பொதுச்செயலாளராக அறிஞர் அண்ணு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட பொழுது, "பாராளுமன்ற—சட்டமன்ற—உள்ளாட்சி மன்றங்களில் உறுப்பினர்களாய் உள்ளவர்கள், பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப் பட்டால், இரண்டு பொறுப்புக்களில ஒன்றை விட்டுவிட வேண்டும்" என்னும் கருத்துப்பட அமைந்த விதி, சட்ட திட்ட நூலிலிருந்து தற்போதைக்கு நீக்கப்படும் என்ற திருத்தம், பொதுக் குழுவால் நிறைவேற்றப்பட்டுள்ளதே என்று சிலர் குறிப்பிடக்கூடும். பொதுச் செயலாளருக்கு வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களையும் உரிமைகளையும் பொறுத்த திருத்தம் அல்ல; இது பொதுச்செயலாளரின் தகுதியைப் பொறுத்த திருத்தமாகும். பொறுப்புக்களில் அமர்ந்திருப்போரின் தகுதியைப் பொறுத்து அடிக்கடி ஏற்படும் திருத்தங்கள் கழக அமைப்பைச் சீர்குலைக்காது; ஆனால், பொறுப்புக்களின் அதிகாரங்களையும், உரிமைகளையும் பொறுத்து ஏற்படும் திருத்தங்கள் அமைப்பைப் பெருமளவுக்குச் சீர் குலைக்கும். மேலும் இந்தத் திருத்தம் இன்றியமையாத—தவிர்க்க முடியாத—வேறுவழி அகப்படாத ஒரு திருத்தமாகச் சூழ்நிலை தேவையை ஒட்டிப், பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவராலும் ஒரே மனதுடன் நிறைவேற்றப்பட்டதாகும். மேலும், இந்தத் திருத்தம் பொதுச் செயலாளராக ஒரே மனதுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட அறிஞர் அண்ணு அவர்களால் தூண்டப்பட்ட—முயலப் பட்ட—விருப்பப்பட்ட—வேண்டப்பட்ட ஒரு திருத்தம் அல்ல. அறிஞர் அண்ணு அவர்கள், இந்த முறை, பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொள்ளவே விரும்பவில்லை; இறுதிவரையில் மறுத்தே வந்தார்கள; நண்பர்கள் வற்புறுத்திக் கூறிய நிலையிலும் பெரிதும் தயக்கம் கொள்ளவே செய்தார்கள். கழகத்தின் கட்டுக்கோப்பைக் காக்க வேண்டும் என்ற சீரிய நோக்கத்தோடும், கழகத்தின் முன்

ணணியிலுள்ள முக்கியமானவர்கள் பலரும் வற்புறுத்தி வேண்டிக் கேட்டுக்கொண்ட வேண்டுகோளுக்குச் செவி சாய்க்க வேண்டும் என்ற பெருந்தன்மையோடும், ஏற்றுக் கொள்ளுவதைத் தவிர வேறு வழியில்லை என்ற பொறுப் புணர்ச்சியோடும்தான் அறிஞர்அண்ணா அவர்கள் பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்கள். பொதுச் செயலாளர் பொறுப்பை ஏற்றுக்கொண்ட அண்ணா அவர் கள், சட்டதிட்ட விதிப்படி சட்டமன்ற உறுப்பினர் பதவியை விட்டுவிடத்தான் வேண்டும் என்று பொதுக்குழு உறுப்பினர்கள் எண்ணியிருந்திருப்பார்களேயாயின், அறிஞர் அண்ணா அவர்கள் அப்படிச் செய்யச் சிறிதுகூடத் தயங்கியிருக்கமாட்டார்கள். தம்முடைய நிலையைக் காப் பாற்றிக்கொள்ள அப்படி ஒரு திருத்தம் வேண்டும் என்று, அவர்கள் தாமாக விரும்பவுமில்லை; பொதுக்குழு உறுப் பினர் யாரையும் கேட்டுக்கொள்ளவுமில்லை; யாரையும் தூண்டவுமில்லை. பொதுக்குழு உறுப்பினர்கள் பலரும் தாமாகக் கொண்டுவந்து, எல்லோராலும் ஒரே மனதாக நிறைவேற்றப்பட்ட திருத்தந்தான் அது.

மேலும் பொதுச்செயலாளராக வருவோர், மேற்கூறிய வாறு இரண்டுவகைப் பொறுப்புக்களில் ஏதேனும் ஒன்றை விட்டுவடவேண்டும் என்ற விவாதத்திற்கு வந்தபோது, பொதுக்குழுவில், ஒட்டிய—மாறுபட்ட கருத்துக்கள் பெரு மளவுக்குத் தலைதூக்கி நிற்கவே செய்தன. விதியின் கருத்து அறவே என்றென்றும் ஒதுக்கித் தள்ளப்பட வேண்டிய ஒன்று என்று எவரும் கருதவில்லை. இப்போதைய சூழ் நிலைக்கு அப்படிப்பட்ட விதி தேவையில்லை என்றும், காலம் செல்லச் செல்ல, கழகம் வளர வளர, பொறுப்புக்கள் மிக மிக, இரு பொறுப்புக்களையும் வைத்துக்கொண்டு பணி யாற்ற முடியாத நிலை ஏற்படும்போது, அப்படிப்பட்ட விதியை ஏற்றுக்கொள்ளலாம் என்றும் சொல்லப்பட்டது. என்றாலும், விதிக்கு வேறுபட்ட எண்ணம் உடையவர்

களும், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையோடு, விதியை ஏற்றுக்கொள்வதால் பெருத்த கேடு எதுவும் இல்லை என்ற முறையில், ஒரேமனதாக நிறைவேற்றிவைக்க இசைந்து, அப்படியே நிறைவேற்றியும் வைத்தார்கள். கழகத்தின் தற்போதைய சூழ்நிலைக்கு அது அவ்வளவு பொருத்தமான தாகக் காணப்படாததன் காரணமாகத்தான், அந்த விதி தற்போதைக்கு நீக்கிவைக்கப்பட வேண்டிய நெருக்கடிக்கு உள்ளாகியது.

மேற்சுட்டிக் காட்டப்பட்டது போன்ற திருத்தம் நிறைவேறுவது, கழகத்தின் நலத்தைப் பொறுத்து, எவ்வளவு இன்றியமையாததொன்று என்பதைத் தெளிவுணர்வுடையோர் அனைவரும் அறிவர் என்பது திண்ணம். இப்படிப்பட்ட திருத்தங்கள் நிறைவேற்றப்படுவது வரவேற்கத்தக்கதேயாகும். அதனால் தவறு எதுவுமில்லை.

# கழகமும் கட்டுப்பாடும்

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்று குறிக்கோள் (Motto) ஒன்று உண்டு என்ருல், அதுதான், அறிஞர் அண்ணு அவர்கள் ஆன்ற அறிவோடு அழகாகவும், அருமையாகவும், அறிவுறுத்தியுள்ள 'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' என்ற பொருள் செறிந்த சொற்ருெடராகும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின், மொழிவழிப் பிரிந்து இனவழி ஒன்றுபடும் திராவிட நாட்டைத், திராவிடர்க்கு ஆக்கும் நோக்கத்தையும் (Aim), அரசியலிலே சனநாயகம், பொருளியலிலே சமதர்மம், சமூகவியலிலே சமத்துவம் காணும் கொள்கைகளையும் (Objects), அறிவியலையும் கலையியலையும் துணையாகக் கொண்டு, பகுத்தறிவு நெறியில் நின்று, இன்பவாழ்வுக்கு இன்றியமையாதனவாக வேண்டப்படும் வளங்களையும், வசதிகளையும் பெறும் திட்டங்களையும் (Schemes) ஏற்றுக்கொண்டு, கழகத்தில் சேர்ந்துள்ள கழகத்தோழர்கள் அனைவரும், கழகக் கடமைகளை—கண்ணியமானமுறையில், கட்டுப்பாடான வகையில் ஈடேற்றிஞல்தான், முயற்சியில் வெற்றிபெற முடியும் என்பதை, அறிஞர் அண்ணு அவர்கள், வாய்ப்பு நேரிடும் போதெல்லாம் வற்புறுத்தி வருகிருர்கள்.

'கட்டுப்பாடு' என்பது 'கட்டுப் படுத்துதல்' என்பதை யும் குறிக்கும்; 'கட்டுப்படுதல்' என்பதையும் குறிக்கும். 'கட்டுப்படுத்துதல்' என்பது ஆளுதலின் அறிகுறி; 'கட்டுப் படுதல்' என்பது அடக்கத்தின் அறிகுறி. கழகத்தின் எல்லா அமைப்புக்களிலும், கழக அலுவலாளர் பொறுப் புக்களைத் தாங்கி, முறையோடு பணியாற்றி வருபவர்கள், முறைப்படி கட்டுப்படுத்தலாகிய ஆளுதலை நிலைநாட்ட வேண்டிய கடப்பாடுடையவர்களாக இருக்கிறார்கள்; கழகத்தின் அந்தந்த அமைப்புக்களில், உறுப்பினர் தகுதி யோடு இருந்து பணியாற்றி வருபவர்கள், முறைப்படி கட்டுப்படுதலாகிய அடக்கத்தை மேற்கொள்ள வேண்டிய வர்களாக இருந்து வருகிறார்கள். எனவே, கழகத்தோழர்கள் அனைவரும் கட்டுப்பாட்டை முறைப்படி நிலைநாட்டியும், காப்பாற்றியும் வரவேண்டிய கடப்பாடுடையவர்களாக இருந்து வருகிறார்கள் என்பது பெறப்படும்.

அறிஞர் அண்ணா அவர்களால் வற்புறுத்தப்படும் கடமை என்பது, கழகத்தின் உணர்ச்சியைக் குறிக்கும்; கண்ணியம் என்பது, கழகத்தின் பண்பைக் குறிக்கும்; கட்டுப்பாடு என்பது, கழகத்தின் வலிவைக் குறிக்கும். கழகத்தில் கட்டுப்பாடு ஓங்க ஓங்கத்தான், கழகத்தின் வலிவும் நாளுக்கு நாள் மேலோங்கி நிற்கும். கழகத்தின் வலிவைப் பொறுத்துத்தான், அதன் வெற்றியின் அளவும் அமைந்திருக்கிறது. வலிவு பெருகப் பெருகத்தான், வெற்றி யும் மேலும் மேலும் கிட்டும். கட்டுப்பாடு குலைந்தால் வலிவு குறையும்; வலிவு குறைந்தால் வெற்றியின் அளவு குறையும்; வெற்றியின் அளவு குறைந்தால் கழகத்தின் நோக்கம் நிறைவேறாது—கொள்கைகள் செயல் படா— திட்டங்கள் பாழ்படும். எனவேதான், ஓர் அமைப்பு, குறிப் பாக ஒரு விடுதலை இயக்கம், அதுவும் குறிப்பாகப் பல வழிகளிலும், பல நிலைகளிலும், பல துறைகளிலும்

போராடிப் போராடி வெற்றி தேடவேண்டிய விடுதலை இயக்கமாக இருந்துவரும் திராவிட முன்னேற்றக் கழகம், கட்டுப்பாடு என்பதை, உறுதியோடும் ஊக்கத்தோடும், அறிவோடும் ஆற்றலோடும், முயற்சியோடும், விருப்பத்தோடும் கட்டிக் காக்க வேண்டிய கடப்பாடுடையதாக இருக்கிறது.

பல்வேறு வகையான வீரர்களைத் தன்னுள் அடக்கி மிகக் கட்டுக்கோப்போடு அமைந்திருக்கும் ஒரு போர்ப் படை, பகைவரைத்தாக்கும் வீரத்தைப்பெருமல் போனாலும் எதிர்ப்பில் பகைவரை விரட்டியடிக்கும் திறமையைப் பெருமல் போனாலும், கட்டுக்கோப்போடு கூடிய அணி வகுப்புத் தோற்றப் பொலிவை, அந்தப் படை கொண்டிருக்குமேயானால், அதுவே அந்தப் படைக்கு மிக்க சிறப்பைத் தரும் என்கிருர் வள்ளுவப் பெருந்தகையார்.

"அடற்றகையும் ஆற்றலும் இல்லெனினும் தானை
படைத்தகையால் பாடு பெறும்"

என்பது அவரது வாக்கு. பகைவரைத் தாக்கும் வீரமும், விரட்டும் திறமையும் அற்றிருந்தாலும், கட்டுப்பாடான அணிவகுப்புத் தோற்றப் பொலிவே, படைக்குச் சிறப்பைத் தரும் என்றால், அணிவகுப்புக் கட்டுக்கோப்போடு, சிறந்த வீரமும் திறமையும் உடன் சேர்ந்தால், இன்னும் எவ்வளவு சிறப்பை மேலும் மேலும் தரும் என்பதை உய்த்துணர்ந்துகொள்ளலாம். அதுபோன்று, மாற்றுக் கட்சியினரின் விரும்பத்தகாத கொள்கைகளையும், பேச்சுக்களையும், செயல்களையும் மிகவன்மையாக அறவழியில் நின்று எதிர்க்கும் வீரத்தையும்—விரட்டும் திறத்தையும் கொண்டிருக்கும் திராவிட நாட்டு விடுதலை அறப்போர்ப் படையான தி. மு. கழகம், கட்டுப்பாடு என்னும் அணி வகுப்புப் பொலிவோடு காட்சி தரும்பொழுது எத்துணை அளவு சிறப்பைத்தரும் என்பதை அறிந்து மகிழலாம்.

கட்டுப்பாடு என்பது மனிதனின் ஒவ்வொரு நிலையிலும், ஒவ்வோர் அளவிலும்—முறையிலும் வேண்டப்படுகிற ஒரு பண்பாகும். மனிதன் தன் உள்ளத்தில் தன்னைப் பொறுத்து ஊறி எழுகிற உணர்ச்சிகளையும், கருத்துக் களையும், அப்படியே வெளியிட்டுவிடுவதில்லை. சிந்தனையில் வைத்து உணர்ச்சிகளையும், கருத்துக்களையும் சீர்தூக்கிப் பார்க்கிறான். சிற்சில வேளைகளில் மனதிற்குள்ளேயே, எந்த எந்தக் கருத்தையும்—உணர்ச்சியையும் வெளிப் படுத்துவது, எவையெவைகளை வெளிப்படுத்தாது மனதி லேயே தடுத்துநிறுத்திக் கொள்வது என்பது பற்றிப் பெரும் மனப்போராட்டமே ஏற்படுகிறது. இறுதியில் எந்த எந்தக் கருத்துக்களையும்—உணர்ச்சிகளையும் வெளிப் படுத்துவது என்பது பற்றிய முடிவு ஒன்று மனதிலேயே ஏற்படுகிறது. அந்த முடிவை வெளிப்படுத்த முனைகிறான். உண்மை—நேர்மை—நாணயம் — அன்பு— அருள் — அறிவு போன்ற பண்புகளை அடிப்படையாகக் கொண்டு, எண் ணங்களாக வெளியிடத்தக்கவை, செயற்பட வேண்டிச் சொல்லத்தக்கவை, செய்துகாட்டத்தக்கவை இவை இவை என்று ஆன்றோரும் சான்றோரும் வரையறுத்துக்காட்டிய வழியில் நின்று, முடிவு செய்த கருத்தை வெளிப்படுத்த அந்த மனிதன் முனைகிறான். அதாவது, தனிமனிதன், தனக்கென்று ஒரு கட்டுப்பாட்டை வகுத்துக்கொண்டு வெளிப்படுத்த வேண்டியவற்றை மட்டும் வெளிப்படுத்து கிறான். ஆன்றோராலும் சான்றோராலும் இழிந்தவை என்று ஒதுக்கப்பட்ட கருத்துக்களைத் தள்ளி வைத்துச், சீரிய கருத்துக்களை மட்டுமே வெளிப்படுத்தும் சீரிய கட்டுப் பாட்டையுடைய மனிதன், நல்லறிவும், நற்பண்பும் படைத் தவன் என்று அழைக்கப்படுகிறான். மனிதன், தன்னை ஒரு சீரிய கட்டுப்பாட்டிற்கு உட்படுத்திக் கொள்ளாமல், மனதில் தோன்றிய இழிந்த தன்மையுடைய கருத்துக்களா யினும், அவற்றை. அப்படியே வாயில் வந்தபடியே

வெளியிடுபவனாக இருந்தால், அவன் இழிமகன் என்று அழைக்கப்படுகிறான். இதிலிருந்து ஒருவன் தன்னைத்தானே கட்டுப் படுத்திக்கொள்ள ஓர் அளவும் முறையும் இருக்கிறது என்பதும், அந்த அளவும் முறையும் காப்பாற்றப் பட்டால், அவன் ஒரு நல்ல மனிதனாகக் கருதப்படுவான் என்பதும், அவன் அந்த அளவையும், முறையையும், மீறியோ, தவறியோ நடப்பானேயானால், அவன் ஓர் இழி மனிதனாகக் கருதப்படுவான் என்பதும் பெறப்படும். இப்படிப்பட்ட கட்டுப்பாடு ஒரு தனிக்கட்சிக்கும் தேவைப் படத்தான் செய்கிறது.

சீரையும், சிறப்பையும் பெயரையும் புகழையும், மாண்பையும், மதிப்பையும் பெற விரும்புகிற ஒரு தனி மனிதன், எவ்வாறு தன்னைப்பொறுத்து எண்ணத்திலும், பேச்சிலும், செய்கையிலும் ஒரு விதக் கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாததொரு கடமையாக விளங்குகிறதோ, அதே போன்றுதான், எந்த ஒரு குடும்பமும், எந்த ஓர் அமைப்பும், எந்த ஒரு குழுவும், எந்த ஒரு சங்கமும், எந்த ஒரு பகுப்பும், எந்த ஒரு ஆட்சியும், எந்த ஓர் அரசியல் கட்சியும், தம்மைப் பொறுத்தும், தம்மோடு தொடர்புள்ளவைகளைப் பொறுத்தும் தாமே கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியது இன்றியமையாத தொரு கடமையாக இருக்கிறது,

தனி மனிதன், தன்னைப் பொறுத்துத், தான்மட்டுமே சிந்தித்து, எப்படி மனதிற்குள்ளேயே தள்ளிவிட வேண்டிய கருத்துக்களைத் தள்ளி, வெளிப்படுத்த வேண்டியவைகளை மட்டும் மனதிலேயே முடிவு செய்து கொண்டு, அவற்றைத் தன்னுடைய கருத்துக்களாக வெளிப்படுத்துகிறானோ, ஒரு தனிக்குடும்பமும். குடும்பத்திலுள்ளவர்களின் பலதரப் பட்ட கருத்துக்களையும் கேட்டுச் சீர்தூக்கிப் பார்த்துத் தள்ள வேண்டியவைகளைத் தள்ளிவிட்டுப், பெரும்பான்மை யோர் அல்லது முக்கியமானவர்களின் விருப்பத்திற்

இணங்கத் தேவைப்படும் கருத்துக்களை முடிவு செய்து கொண்டு, அவற்றைக் குடும்பத்தின் முடிவுகளாக வெளிப்படுத்துகின்றதோ, அது போலவேதான், ஓர் அரசியல் கட்சியும், தன் உறுப்பினர்களின் கருத்துக்களைக் கேட்டு, ஆய்ந்து, விவாதித்து, ஒட்டி வெட்டிப் பேசிச் சீர்தூக்கிப் பார்த்துப் பிறகு பெரும்பான்மையோரின் விருப்பப்படி கட்சியின் கருத்துக்களாகத் தேவைப்படுபவைகளை மட்டும் முடிவு செய்துகொண்டு, அவற்றைக் கட்சியின் முடிவுகளாக வெளிப்படுத்துவது நீதி நேர்மையின் பாற்பட்ட செயலாகும்.

தனிமனிதனின் உள்ளத்தில் தன்னைப் பொறுத்துப் பல்வேறு மாறுபட்ட, வேறுபட்ட கருத்துக்கள் எழுவது எவ்வளவு நியாயமோ, ஒரு தனிக்குடும்பத்தில் குடும்பத்தைப் பொறுத்தும் குடும்பத்தோடு தொடர்புள்ளவைகளை பொறுத்தும் குடும்பத்திலுள்ளவர்களிடையே கருத்து வேறுபாடுகள் ஏற்படுவது எவ்வளவு நியாயமோ, அவ்வளவு நியாயமானதுதான், ஓர் அரசியல் கட்சியிலுள்ள உறுப்பினர்களிடையே கட்சியைப் பொறுத்தும் கட்சியோடு தொடர்புள்ளவைகள் பொறுத்தும் கருத்து வேறுபாடுகள் எழுவதும், அவைபற்றி விவாதிப்பதும், ஆய்வதும், முடிவுக்கு வருவதும் ஆகும்.

தனி மனிதன் தன் உள்ளத்தில் தன்னைப்பொறுத்து எழுந்த மாறுபட்ட கருத்துக்களை எப்படித் தன்னுள்ளத்திலேயே அடக்கிவைத்துக் கொண்டு, முடிவுகளை மட்டும் தன்னுடைய முடிவுகளாக வெளிப்படுத்துகிறானோ, எப்படித் தனிக் குடும்பத்திலுள்ளவர்கள் மாறுபட்ட கருத்துக்களைத் தமக்குள்ளே அடக்கி வைத்துக்கொண்டு, முடிவுகளை மட்டும் குடும்பத்தின் ஒரே முடிவுகளாக வெளிப்படுத்துகிறார்களோ, அப்படியேதான் ஓர் அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களும், மாறுபட்ட கருத்துக்களைத்

தாம் மட்டுமே அறிந்து, தமக்குள்ளே அடக்கிவைத்து, தாம் மட்டுமே விவாதித்துத், தாம் மட்டுமே முடிவுகள் செய்து, அவற்றைக் கட்சியின் ஒரே முடிவுகளாக வெளிப் படுத்த வேண்டிய கடமையாளர்களாக இருக்கிறார்கள்.

தனிமனிதன் தன்னைப் பொறுத்துத் தான் நினைத்தவை கள் அனைத்தையும் அப்படியே வெளியிட்டுவிடுவது எப்படி முறையாகாதோ, தனிக்குடும்பத்திலுள்ளவர்கள், தாம் விவாதித்துப் பேசிக் கொண்ட பேச்சுக்கள் அத் தனையையும் அப்படியே வெளிப்படுத்துவது எப்படி முறை யாகாதோ, அவ்வாறேதான், ஓர் அரசியல் கட்சியிலுள்ள வர்கள் பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஒட்டியும் வெட் டியும் விவாதித்துப் பேசிய பேச்சுக்கள் அனைத்தையும் அப்ப டியே வெளிப்படுத்துவதும் முறையாகாது. முடிவுகள் மட் டும் வெளிவருவதுதான் முறையானதாகும்.

ஒரு தனிமனிதனின் வாயிலிருந்து அவனைப்பொறுத்து, மாறுபட்ட கருத்துக்கள் ஒரே சமயத்தில் சேர்ந்து வெளி வருவது எவ்வளவு அருவருக்கத் தக்கதோ, ஒரு குடும்பத் திலிருந்து அந்தக் குடும்பத்தைப் பொறுத்து, அந்தக் குடும் பத்திலுள்ளவர்களிட மிருந்து மாறுபட்ட கருத்துக்கள் ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் வெளிவருவது எவ்வளவு அருவருக்கத் தக்கதோ, அவ்வளவு அருவருக்கத் தக்க தொரு செயல்தான், ஓர் அரசியல் கட்சியைப் பொறுத்து மாறுபட்ட கருத்துக்கள், அந்த அரசியல் கட்சியினரிட மிருந்து ஒரே சமயத்தில் சேர்ந்தாற்போல் வெளிவருவதும் ஆகும். மாறுபாடுகள் அமையாத முடிவுகள் மட்டும் வெளிவருவதுதான் வரவேற்கத்தக்கதாகும்.

வெளியாரின் கண்ணுக்கும், காதுக்கும், கருத்துக்கும் தெரியாமல் தனிமனிதன் தான் மட்டுமே தன்னைப் பொறுத் துச் சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகள் இருப்பதைப்போல; பிறகுடும்பங்களுக்குத் தெரியாமல், தனிக்குடும்பம், தான்மட்டுமே தன்னைப் பொறுத்து

ஆய்ந்து முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகள் இருப்பதைப்போல, ஓர் அரசியல் கட்சியும் பிறர்க்குத் தெரியாமல் தான் மட்டுமே தன்னைப் பொறுத்துச், சிந்தித்து முடிவு எடுக்கவேண்டிய பிரச்சினைகளைக் கொண்டிருக்கிறது.

ஒரு மனிதன் தன்னைப் பொறுத்து எண்ணிய எண்ணங்களையும், கொண்ட உணர்ச்சிகளையும், நினைத்த நினைப்புகளையும் மனதில்பட்ட அவ்வளவையும், அப்படியே வெளியிடுவது எவ்வளவு பைத்தியக்காரத்தனமோ, அவ்வளவு பைத்தியக்காரத்தனந்தான், ஒரு கட்சியிலுள்ளவர்கள் கட்சிக் கூட்டத்தில் கூறிய எண்ணங்கள், விவாதித்த கருத்துக்கள், எடுத்துக்கொண்ட நிலைகள், காட்டிய மாறுபாடுகள், உணர்த்திய வேறுபாடுகள், முடிவுகளின் மீது வாக்களித்த தன்மைகள் அவ்வளவையும் அப்படியே பொதுமக்கள் முன்னால் வைப்பதும், அவர்களையும் விவாதத்தில் கலந்து கொள்ளச் சொல்லுவதும், அவர்களையும் சேர்ந்து முடிவு எடுக்கும்படி கேட்டுக்கொள்வதும் ஆகும். எந்த ஒரு நிறையை ஏற்படுத்துவதானாலும், எந்த ஒரு குறையைப் போக்குவதானாலும் அவை பற்றி முடிவு எடுக்க வேண்டிய இடம் உறுப்பினர் கூட்டமே ஒழிய, பொது மக்கள் கூடியிருக்கும் பொதுக் கூட்டமல்ல.

ஒரு கட்சியை எப்படி நடத்திச் செல்வது என்பதைச் சிந்தித்து, விவாதித்து, முடிவு கட்டவேண்டியவர்கள். அந்தக் கட்சியிலுள்ளவர்களே தவிர, பொதுமக்கள் அல்ல கட்சி எத்தகைய முடிவுகளை மேற்கொண்டிருக்கிறது என்று கேட்டறிந்து கொள்வதும், அத்தகைய முடிவுகளை ஆதரிக்கலாமா அல்லது வேண்டாமா என்ற முடிவுக்கு வருவதும், கட்சி முடிவு செய்த செயல்முறைத் திட்டங்களுக்கு ஒத்துழைப்புத் தருவதும் அல்லது தராமல் போவதும் பொதுமக்களின் கடமைகளாகும். கட்சியின் முடிவுகளைப் பற்றியும், திட்டங்களைப்பற்றியும் விளக்கங் கேட்டுக்கொள்ளத்தான் பொதுமக்களுக்கு உரிமை

உண்டே ஒழிய, எப்படி அப்படிப்பட்ட முடிவுகளுக்கு வரலாம் என்று கேட்கப் பொதுமக்களுக்கு உரிமை இல்லை. விருந்துண்ண வந்திருப்பவர்கள், விருந்து நன்றாக இருக்கிறதா இல்லையா? பரிமாறப்பட்டவைகளில் சுவையுள்ளவை எவை, சுவையற்றவை எவை? தமக்குப் பிடித்தமானவை எவை, பிடித்தமில்லாதவை எவை? என்று கூற உரிமைப் படைத்தவர்களே ஒழிய, தம்மைக் கேட்டுக் கொண்டு ஏன் காய்கறி வாங்கவில்லை? தம்மைக் கேட்காமல் ஏன் துவட்டலும், பொறியலும், வருவலும், கூட்டும், அவியலும் செய்யப்பட்டன? தம்மைக் கேட்காமல் ஏன் வெங்காயத்தின் தோல் உரிக்கப்பட்டது—வாழைக்காய் நறுக்கப்பட்டது—தேங்காய் திருகப்பட்டது—மிளகாய்ப் பொடி தூவப்பட்டது—உப்பு போடப்பட்டது—கீரை வதக்கப்பட்டது? தம்மைக் கேட்காமல் ஏன் குறிப்பிட்ட சமையல்காரர்கள் 'ஏற்பாடு செய்யப்பட்டார்கள்? என்று கேட்க உரிமைபடைத்தவர்களல்லர். இவற்றையெல்லாம் சிந்தித்து முடிவுகட்ட வேண்டியவர்கள் விருந்து வைப்பவர்களே அல்லாமல், விருந்துண்ண அழைக்கப்பட்டவர்களல்லர். விருந்து வைப்பவர்கள் தாம் ஒன்றுகூடி, சிந்தித்து, முடிவு செய்து சமைத்த உணவை விருந்தினர்க்குப் பரிமாறக் கடமைப் பட்டவர்களேயன்றி, எப்படிக் காய்கறியை நறுக்குவது? யாரைக்கொண்டு தேங்காயைத் திருகுவது? யார் கடையில் உப்பை வாங்குவது? என்று விருந்தினரைக் கேட்டுக்கொண்டு செய்யக் கடமைப்பட்டவர்களல்லர். ஒரு கட்சியை நடத்திச் செல்வோரை விருந்து வைப்பவர் நிலையில் வைத்துப் பார்த்தால், பொதுமக்களை விருந்துண்ணுபவர்கள் நிலையில்தான் வைக்கவேண்டும். எப்படிச் சமையல் செய்யப்பட்டது என்பது எப்படி விருந்தினர்க்குத் தெரிய வேண்டிய அவசியமில்லாத ஒன்றோ, அதே போன்றுதான், எப்படிக் கட்சியின் முடிவுகள் எடுக்கப்பட்டன என்பதைப்

பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டிய அவசியமில்லை. பொதுமக்களுக்கு வேண்டியவை, கட்சியின் முடிவுகளும், அவை பற்றிய விளக்கங்களுந்தாம்.

மேற்கூறப்பட்ட அரசியல் கட்சிக் கட்டுப்பாட்டின் அடிப்படையில்தான், திராவிட முன்னேற்றக் கழகமும் இயங்கிச் செல்ல வேண்டிய இன்றியமையாமையில் இருந்து வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் தனி ஒரு சர்வாதிகாரத் தலைமையால் இயக்கிச் செல்லப்படுகிற ஓர் அமைப்பு அல்ல என்பதும், கழகத்தைப் பொறுத்து முடிவுகள் எடுப்பதற்கான எல்லாவித உரிமைகளையும், அதிகாரங்களையும் படைத்தது பொதுக் குழுவாகும் என்பதும் முன்பே உணரப்பட்டன.

கழகத்தின் கொள்கைகள்—திட்டங்கள்—அமைப்பு முறைகள்—சட்ட திட்டங்கள்—விதிமுறைகள்—தேர்தல்கள்—நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள்—ஒழுங்கு நடவடிக்கைகள்—வேலை முறைகள்—நடவடிக்கைகள்—சொத்துக்கள்—நிதிகள் போன்ற பல்வேறு பிரச்சினைகளைப்பற்றி எடுக்கப்பட்ட முடிவுகள் பற்றியும், எடுக்கப்படவேணடிய முடிவுகள் பற்றியும் பொதுக் குழுவில் கருத்துரைகள் பகரவும், பரிந்துரைகள் வழங்கவும், ஒளிவு மறைவின்றி விவாதம் நடத்தவும் பொதுக்குழு உறுப்பினர்கள் அனைவர்க்கும் முழு உரிமை உண்டு; சட்டதிட்டப்படி முழு உரிமையும் வழங்கப்பட்டிருக்கிறது. முடிவு எடுக்கப்படுகிற வரையில், பிரச்சினைகளைப்பற்றி, ஒட்டிய அல்லது வெட்டிய அல்லது மாறுபட்ட அல்லது வேறுபட்ட அல்லது முரண்பட்ட அல்லது திருத்தப்பட்ட கருத்துக்களை முறைப்படி வழங்கப் பொதுக் குழுவினர்க்கு எல்லா உரிமைகளும் அளிக்கப்பட்டிருக்கின்றன. முடிவுகள் எல்லோராலும் ஒரேமனதாக நிறைவேற்றப்படுமே

யானல், அது விரும்பத் தக்கதாகவும், சாலச்சிறந்ததாகவும் இருக்கும். உறுப்பினரிடையே கருத்து வேறுபாடுகள் நிகழுமேயானல், வாக்கெடுப்பின் மூலம் முடிவு காண வேண்டிய நிலை ஏற்படும். எந்தக் கருத்துக்குப் பெரும்பான்மையான வாக்குகள் கிடைக்கின்றனவோ, அந்தக் கருத்து கழகத்தின் முடிந்த முடிவாக ஏற்றுக் கொள்ளப்படும். முடிவு ஏற்பட்டவுடன், அந்த முடிவை நடைமுறைக்குக் கொண்டுவர, எல்லாப் பொதுக்குழு உறுப்பினர்களும், மாறுபட்ட கருத்துக்களைப் பொதுக் குழுவில் தெரிவித்தவர்கள் உட்பட, அனைவரும், பாடுபட வேண்டும். இதுதான் உலகெங்கணும் சாலச் சிறந்ததாக ஒப்புக்கொள்ளப்பட்ட சனநாயக முறையாகும். எடுத்த முடிவை நடைமுறைக்குக் கொண்டுவர மனமில்லாதவர்கள்—அந்த நிலைக்குத் தங்களை ஆட்படுத்திக்கொள்ள விரும்பாதவர்கள், அந்த நிலையிலிருந்து அறவே விலகிக் கொண்டு விடுவதும் உலகெங்கணும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சனநாயக முறையாகும். இந்த முறைகளை விடுத்து, தாம்கொண்ட மாறுபட்ட கருத்துக்களைப் பொதுக் குழுவிலும் சொல்லுவோம், பொதுமக்களிடத்திலும் சொல்லுவோம், பொதுச் செய்தித்தாள்களிலும், மாற்றுக் கட்சியினரின் செய்தித் தாள்களிலும் வெளியிடுவோம் என்று யாரேனும் புறப்படுவார்களாயின், அதுகட்டுப்பாட்டை வேண்டுமென்றே சீர்குலைக்கும் இழிந்த செயலாகத்தான் கொள்ளப்படும். அமைப்பு எடுத்த முடிவுகளை, ஏற்றுக் கொள்ளவோ அல்லது அதை நடைமுறைக்குக் கொண்டு வரவோ மனமில்லாதவர்கள், அமைப்பைவிட்டு அறவே விலகி, எதிர்க்கட்சியில் சேர்ந்து கொண்டோ அல்லது எதிர்க் கட்சி அமைத்துக்கொண்டோ, மாறுபட்ட கருத்துக்களைத் தெரிவிப்பது தவருகவோ, குற்றமாகவோ கொள்ளப் படமாட்டாது. ஏனெனில், கழகத்துக்கு அப்பாற்பட்டவர்கள் கழகத்தின் கருத்துக்கு மாறுபடவோ அல்லது

வேறுபடவோ எல்லா வகையிலும் உரிமை படைத்தவர்கள். ஆனால், கழகத்தின் ஓர் உறுப்பாக ஆக்கிக் கொண்டிருப்பவர்கள், கழகத்தின் முடிவுக்கு மாறான கருத்துக்களை வெளியாரிடம் வெளிப்படுத்த முயலுவார்களேயாயின், அது கட்டுப்பாட்டை உடைத்த ஒரு செயலாகவே கருதப்படும்.

கழகத்தில் குறிப்பிட்ட முடிவுகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதற்கும், வாதாடுவதற்கும் ஒவ்வொரு கழக உறுப்பினர்க்கும் எவ்வளவு கடமையுணர்ச்சி உண்டோ, அவ்வளவு கட்டுப்பாட்டுணர்ச்சியோடு கழக முடிவுகளைக் காப்பாற்றவும், நடைமுறைக் கொண்டு வரவும் அவர்கள் முயல வேண்டும். அதுதான் சிறந்த சனநாயகப் பண்பு என்று கொள்ளப்படும்.

கழகத்தின் எல்லாக் கிளைகளிலும், குழுக்களிலும் இடம் பெற்றிருக்கும் உறுப்பினர்கள், முறையே அந்தந்தக் கிளைகள்—குழுக்களின் கூட்டங்களில் அமர்ந்து, அந்தந்தக் கிளைகள்—குழுக்களின் அதிகாரங்கள்—உரிமைகள்—கடவடிக்கைகள் பற்றிய பிரச்சினைகளைக் குறித்து ஆய்ந்து, விவாதித்து, முடிவுகள் எடுக்க, சட்டதிட்டப்படி உரிமைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. கழகத்தின் முழு அதிகாரம் படைத்த தலைமை அமைப்பாக விளங்கும் பொதுக் குழுவின் ஆய்வுக்குக் கழகம் பற்றியும், கழகத்தோடு தொடர்புள்ளவைகள் பற்றியும் உள்ள எந்த ஒரு பிரச்சினையையும், கழகத்தின் எந்த ஓர் அமைப்போ அல்லது எந்த ஓர் உறுப்பினரோ கொண்டுவர விரும்பினாலும், பொதுச் செயலாளர் மூலமாகவோ அல்லது யாரேனும் ஒரு பொதுக்குழு உறுப்பினர் மூலமாகவோ கொண்டுவர முழு உரிமை இருக்கிறது.

கழக உறுப்பினர்கள், கழகம் பற்றியும், கழகத்தோடு தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் உள்ள குறை

களைக் கூறி, நிறைவுகள் காண விரும்புவார்களாயின், அந்தப் பணியினைத் திறம்பட ஆற்ற வேண்டிய இடங்கள், முறைப்படி அமையும் அந்தந்த அமைப்புக்களின் உறுப்பினர் கூட்டங்களே தவிர, பொதுமக்கள் கூடியிருக்கும் பொதுக்கூட்டங்கள் அல்ல. கழகம் எடுக்கும் முடிவுகளை அறிவிப்பதற்கும், முடிவகளைப் பற்றிய விளக்கங்கள் தருவதற்கும், முடிவுகளுக்கு ஒத்துழைப்பைத் தருமாறு பொதுமக்களைக் கேட்டுக்கொள்வதற்கும், பொது மக்களோடு தொடர்புடைய பிரச்சினைகள் குறித்துக் கழகம் எடுக்கும் முடிவுகளைப் பொதுக்கூட்டத்தின் மூலம் நிறைவேற்றித் தருமாறு கேட்டுக் கொள்வதற்கும் பயன் படுபவைதாம் கழகப் பொதுக்கூட்டங்களே ஒழிய, கழகம் பற்றிய குறைகளை எடுத்துச் சொல்லி, பொதுமக்களைத் தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்வதற்கான இடங்கள் அல்ல.

உலகத்திலுள்ள எல்லா சனநாயக அமைப்புக்களும், வெளியார் அறியாவண்ணம் தனியாகக் கூடிக், கலந்து பேசி, விவாதித்து, முடிவு எடுத்து, எடுத்த முடிவின்படி அமைப்பை இயக்கிச் செல்லுகிற தன்மையைத்தான் காண்கிறோம். எடுத்துக் காட்டாகக் அகில இந்திய காங்கிரசு அமைப்பை எடுத்துக்கொண்டால், அது பொது வாகத் தன் செயற்குழுக் கூட்டங்களையும், பொது உறுப்பினர் கூட்டங்களையும், வெளியார் அறியாவண்ணம் தனிக் கூட்டங்களாகக் கூட்டித், தனித்திருந்து கலந்து பேசி, விவாதித்து, முடிவு எடுக்கிற பழக்கத்தைத்தான் கொண்டிருக்கிறது. அண்மையில் 1-2-61-இல், மத்தியப் பிரதேசத்தைச் சார்ந்த மாவட்டக் காங்கிரசுத் தலைவர்கள் —செயலாளர்கள் கலந்துகொண்ட மாநாடு, காங்கிரசுத் தலைவர் தோழர் சஞ்சீவியார் அவர்கள் தலைமையில் நடை பெற்றிருக்கிறது. இது வெளியார் அனுமதிக்கப்படாமல் இரகசிய மாநாடாகததான் நடந்தேறியிருக்கிறது.

மாநாட்டில் நடைபெற்ற விவாதங்கள், நிகழ்ச்சிகள் வெளியிடப்படவில்லை. மாநாட்டில் வற்புறுத்தப்பட்ட முக்கிய கருத்தாகத் தோழர் சஞ்சீவியார் அவர்கள் வெளியிட்ட கருத்து :

"பொது மேடைகளிலோ அல்லது செய்தித் தாள் களின் மூலமாகவோ, தமது கட்சியினரை வெளிப்படையாகக் கண்டிக்கும் காங்கிரசுக்காரர்கள் மீது, உடனடியாகத், தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். கட்சியின் உடன் உறுப்பினர்கள் குறித்துக் குறைகள் ஏதேனு மிருப்பின் அவற்றைப் போக்கிக்கொள்ள, கட்சியினுள் விவாதங்கள் மூலம் முயல வேண்டுமேயொழிய, உடனே ஓடிச்சென்று ஓர் அறிக்கை விடுத்துச் செய்தித் தாள்களில் அவை வெளியாகும்படி செய்யலாகாது. வெளிப்படையாக அவற்றைக் கூறிச் சலசலப்பு உண்டாக்கலாகாது கட்சியின் கண்ணியத்தையும், கட்டுப்பாட்டையும் நிலை நிறுத்த மேற்கூறிய ஒழுங்குமுறை கடைபிடிக்கப்பட வேண்டும்" என்பதாகும். இந்தச் செய்தியை எல்லா நாளிதழ்களும் வெளியிட்டிருக்கின்றன. உலகிலுள்ள எல்லா அமைப்புக்களும், குறிப்பாக எல்லா அரசியல் அமைப்புக்களும் எப்படிப்பட்ட கட்டுப்பாட்டு முறையை விரும்பி நிற்கின்றன என்பதற்குத் தோழர் சஞ்சீவியார் அவர்கள் கூற்றே போதுமான சான்றாகக் காட்சியளிக்கிறது. கருத்து வேற்றுமைகளைக் கட்சிக் கூட்டத்தில் பரிமாறிக்கொள்ள வேண்டுமேயல்லாமல், பொதுக் கூட்டத்தில் பேசுவதன் மூலமோ, நாளிதழ்களில் வெளியிடுவதன் மூலமோ எடுத்துச் சொல்லக்கூடாது என்றும், அப்படிச் செய்யும் செயல் கட்சிக் கட்டுப்பாட்டைச் சீர் குலைக்கும் செயலாகும் என்றும் பண்டித நேரு அவர்கள் சில நாட்களுக்குமுன் காங்கிரசு உறுப்பினர்க்கு அறிவுரை பகர்ந்துள்ளார். இதுவும் நினைவுகூரத்தக்கதாகும்.

கழகத்தில் கட்டுப்பாடு காக்கப்பட வேண்டிய தன்மை யைக், கழகச் சட்டதிட்ட நூல், விதி 35-இல் 'ஒழுங்கு நடவடிக்கை' என்ற தலைப்பின்கீழ்த் தெளிவு படுத்தி யுள்ளது.

"கழகத்தின் எல்லா உறுப்பினர்களும், அமைப்புக் களும், அமைப்புக்களிலுள்ள அலுவலாளர்களும், கழகத் தின் கட்டுப்பாட்டுக்கும் ஒழுங்கு நடவடிக்கை முறை களுக்கும் உட்பட்டவராவார்கள்" என்று பிரிவு 1–இல் கூறப்பட்டிருக்கிறது.

கழகத்தின் கட்டுப்பாட்டிற்கு மீறிய செயல்கள் என்று, முக்கியமான சில பிரிவு 2-இல் விளக்கிக் காட்டப் பட்டிருக்கின்றன.

கழகத்தின் கொள்கைக் குறிக்கோள்களுக்கு முரணை வகையில் செயல்படுதல்;

கழகத்தின் கண்ணியத்துக்கு மாசு ஏற்படும் வகையில் நடத்தல்;

கழகத்தின் சட்டதிட்டங்களுக்கும், மேலுள்ள அமைப்புக்களுக்கும் கீழ்ப்படியாதிருத்தல்;

கழகத்தின் முடிவுகளை நிறைவேற்ற மறுத்து, மாறு பட்டுக் காரியமாற்றுதல்;

கழகத்தின் ஒழுங்குமுறை குலையும் வகையில் நடந்து கொள்ளுதல்; போன்ற செயல்களைக் கட்டுப்பாட்டை மீறும் செயல்களாகக் கழகச் சட்டதிட்ட நூல் குறிப் பிடுகிறது.

தி. மு. கழகத்தைக் கட்டிக் காத்து, வளர்த்து வெற்றி யடையச் செய்ய விரும்பும் கழக உறுப்பினர்கள் அனைவரும் தூய உள்ளத்தோடும், உள்ளன்போடும், நேர்மைப் பண்போடும், நீதிப் போக்கோடும் கழகத்திற்கு வலிவு

டூட்டும் கட்டுப்பாட்டைப் பேணி வளர்க்கக் கடமைப் பட்டிருக்கிறார்கள்.

இந்தக் காரணம் பற்றித்தான் அறிஞர் அண்ணா அவர்கள் 'கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு' என்பதைக் கழகத்தின் குறிக்கோள்களாக ஏற்றுக்கொள்ளச் செய்து, அதை எந்நாளும் வற்புறுத்தி வருகிறார்கள்.

ஒரு படையானது போர் வீரர்களை மிகவாகக் கொண்டிருந்த போதிலும், அது அறிவும் ஆற்றலும் மிக்க படைத் தலைவரைக் கொண்டிராவிட்டால், அந்தப் படை இருந்தும் இல்லாத ஒன்றாகவே கருதப்படும் என்று திருவள்ளுவர் அழகுற விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

'நிலைமக்கள் சால உடைத்தெனினுந் தானை
தலைமக்க ளில்வழி இல்'

என்பது வள்ளுவர் வாய்மொழி.

போர் வீரர்கள் மிக்க படைக்குத் தேவைப்படும் அறிவும்ஆற்றலும் மிக்கபடைத் தலைவனைப்போன்றுதான், அறிவும் ஆற்றலும், நேர்மையும் நீதியும் பெயரும், புகழும் படைத்த அறிஞர் அண்ணா அவர்கள் அறப்போர் வீரர்கள் நிறைந்த தி. மு. கழகத்திற்கு வழிகாட்டியாக இருந்து அரும்பெருந்தொண்டு ஆற்றி வருகிறார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைகளையும், கருத்துரைகளையும் துணையாகப் பெற்று வளர்ந்து வரும் கழகம், கட்டுப்பாட்டை மேலும் மேலும் பெற்று, ஓங்கு புகழ் எய்திச் சிறப்படையச் செய்ய கழக உறுப்பினர்கள் அண்ணாவின் பணியும் பயன்படுவதாக!

# கழகமும்
# மொழிக் கொள்கையும்

திராவிட முன்னேற்றக் கழகம், மொழிக் கொள்கையைப் பொறுத்துத், தன்னுடைய கருத்தைத், திட்டவட்டமாகவும், தெளிவாகவும் பல்வேறு வாய்ப்புக்களில், விளக்கிக்காட்டியே வந்திருக்கிறது.

1. தமிழகத்தைப் பொறுத்த வரையில், நாட்டுக்குரிய மொழியான தமிழே மாநில ஆட்சி மொழியாகவும், பாட மொழியாகவும் இருக்கும். அதுபோலவே திராவிடத்தின் பிற பகுதிகளான ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய பகுதிகளில் முறையே தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய மொழிகள் ஆட்சி மொழியாகவும், பாட மொழியாகவும் இருக்கும்.

2. தமிழகம்—ஆந்திரம் — கருநாடகம் — கேரளம் ஆகிய நான்கு பகுதிகளும் சேர்ந்த திராவிடக் கூட்டாட்சி நாட்டின் ஆட்சி மொழிகளாய்த், தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுமே திகழும். (சுமார் நாற்பத்தைந்து இலட்சம் மக்களைக் கொண்ட சுவிட்சர்லாந்து நான்கு மொழிகளை ஆட்சி மொழிகளாகக் கொண்டிருப்பதைப்போல, சுமார் பத்துக் கோடி மக்களைக் கொண்ட திராவிடமும் நான்கு மொழிகளை எளிதாக ஆட்சி மொழிகளாகக் கொள்ள முடியும்.)

3. பிற உலக நாடுகளோடு அரசியல்—வாணிகம்—சமூகம் போன்ற பல்வேறு வழிகளிலும் தொடர்புகொள்வதற்கும், உலக அறிவியல் தொடர்புகொள்வதற்கும், உலக உயர்தரக் கல்வி பயில்வதற்கும், உலக நாடுகளோடு நெருங்கிப் பழகுவதற்கும் உலகப் பொது மொழியாக விளங்கும் ஆங்கிலமே தொடர்பு மொழியாக விளங்கும்.

மொழிக் கொள்கையைப் பொறுத்து, இந்த அடிப்படையில், திராவிடக் கூட்டாட்சி நிறுவப்படுவதைத் தான், திராவிட முன்னேற்றக் கழகம் வலியுறுத்தி வருகிறது. அதற்கான ஆதரவைத் திரட்டும் பெரும் பணியில் தான் தி. மு. கழகம் மிகத் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது. தி. மு. கழகத்தின் கொள்கைக்கு ஆதரவு தரும் அறிவுப் படையினரும், ஆற்றல் படையினரும் ஆங்காங்கு நாளுக்கு நாள் பெருகி வருகின்ற காட்சியையும் பார்க்கிறோம்.

தமிழ் மக்களுக்குத் தாய்மொழியான தமிழ் மொழிப் பயிற்சியும், தேவையானவர்களுக்குத்—தேவையான நிலையல்—தேவையானபோது மட்டும் பயன்படுவதற்கு ஆங்கில மொழிப் பயிற்சியும் இருந்தால் போதுமானது. வேறு மொழிப் பயிற்சியை அவரவர் விருப்பிப் பெற்றுக் கொண்டாலன்றி, இப்படியளவும் கட்டாயமாகப் பெற்றுத் தீரவேண்டிய இன்றியமையாமை இல்லை. தமிழன் தமிழனோடு பழகப்—பேச—உறவாட—உரிமை கொண்டாட—அன்றாட வாழ்க்கையை நடத்த—அரசியலை நடத்திச் செல்ல—தமிழன் தமிழனை ஆண்டுகொள்ள—தமிழன் தமிழனிடத்தில் துவக்கப் பள்ளியிலிருந்து பல்கலைக் கழகம் வரையில் பாடப் பயிற்சி பெறத் தமிழ் போதுமானது. தமிழால் செயலாற்ற முடியாத நிலையில், அதாவது அகில உலக அரசியல் தொடர்புகொள்ள, அகில உலக வாணிகத் தொடர்புகொள்ள, அகில உலக அறிவியல் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தின் தொடர்பு இன்றியமையாது

தேவைப்படுகிறது. அப்பொழுது மட்டும் பயன்படுத்திக் கொள்வதற்குத் தொடர்பு மொழியான ஆங்கிலத்தின் உதவி போதுமானது. தமிழன் தமிழ் மொழி அறிவையும், ஆங்கில மொழி அறிவையும் மட்டும் பெற்றுக்கொண்டால் போதுமானது. வேறு மொழியின் துணை சிறிதுகூட இல்லாமலேயே தமிழகத்தின் வாழ்வு இனிது நடைபெற முடியும். இது போன்றே ஆந்திரம்—கருநாடகப்—கேரளம் ஆகிய பகுதிகளும் அதனதன் தாய்மொழியோடு, தொடர்பு மொழியான ஆங்கில மொழியையும் வைத்துக்கொண்டு வாழ்ந்துவிட முடியும். அதாவது, தென்னக மக்களுக்குத் துணை மொழியாகவும், உலகத் தொடர்பு மொழியாகவும் ஆங்கில மொழி மட்டும் இருந்தால் போதுமானது. வேறு மொழியின் துணையை நாடவேண்டிய இன்றியமையாமை தென்னக மக்களுக்கு எந்த வகையிலும் ஏற்படாது. மேற்கூறப்பட்ட இந்தக் கருத்துக்களை தி. மு. கழகம் பல காலமாக வற்புறுத்தி வருகிறது.

இந்தி மொழியானது (1) அகில இந்திய தேசிய மொழியாகவும், (2) அகில இந்தியப் பொது மொழியாகவும், (3) அகில இந்திய ஆட்சி மொழியாகவும் இருக்க வேண்டும் என்ற காங்கிரசுக் கட்சி வற்புறுத்தத் தொடங்கிய காலத்திலேயே தமிழகத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப் பட்டது. எதிர்ப்புக்குக் கீழ்க்கண்ட வகைகளில் காரணங்கள் தெரிவிக்கப்பட்டன.

(1) இந்தியானது அகில இந்திய தேசிய மொழி என்று கூறும் கூற்றே பொருத்தமற்றதாகும். ஏனெனில், தேசியம் என்பது தானாக இயற்கையில் வளரும் மொழி—பண்பாடு—நாகரிகம் ஆகியவற்றின் ஒரு தொகுப்பே ஒழிய, திடீரென்று ஏற்படுத்திக் காட்டும் ஒரு பொருளல்ல. 'இந்தியா' என்பது ஒரே ஒரு தேசிய மொழியைக்கொண்ட ஒரு நாடல்ல. அது பல்வேறு தேசிய மொழிகளைக்

கொண்ட ஒரு துணைக் கண்டமாகும். இந்தியாவிலுள்ள பல்வேறு தேசிய மொழிகளில் இந்தியும் ஒரு தேசிய மொழியே தவிர, இந்தி மட்டுமே இந்தியாவின் ஒரே ஒரு தேசிய மொழி ஆகிவிடாது. இன்று 'கடிபோலி' என்ற ஒரு வகை இந்தி குறிப்பிடப்படுகிறது என்றால், அந்த மொழியினைப் பேசும் சுமார் ஒரு கோடி மக்களைக் கொண்ட டில்லியைச் சுற்றியுள்ள பகுதிக்கு வேண்டுமானால், அந்த இந்தி தேசிய மொழியாக விளங்கலாமே தவிர, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற பகுதிகளுக்கும் சேர்த்து ஒருகாலும் அது தேசிய மொழியாக ஆகமுடியாது. தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம்—மராத்தி—குசராத்—வங்காளம்—பஞ்சாபி—காஷ்மீரி—அசாமி போன்ற மொழிகள் அதனதன் நிலப்பகுதிகளில் தனித்தனி தேசிய மொழியாக இலங்குகின்றன. அவை வாழும் இடங்களில் கடிபோலி இந்தி தேசிய மொழியாக அழைக்கப்பட எள்ளளவும் நியாயமில்லை. எனவே, இந்தியாவின் தேசிய மொழி கடிபோலி இந்திதான் என்று சொல்லிக்கொண்டு தென்னகத்தில் நுழைய அதற்குச் சிறிதுகூட உரிமையில்லை.

(2) இந்தி, இந்தியத் துணைக்கண்டம் முழுவதற்கும் பொதுமொழியாகும் என்று திணிப்பாளர்களால் சொல்லப் படுகிறது. அப்படிப் பொது மொழியாகும் தகுதி இந்திக்கு அறவே இல்லை. இந்தியாவில் இலக்கண இலக்கியங்களிலே மிகச் சிறந்து விளங்கும் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், வங்காளம், மராத்தி, சமத்கிருதம் போன்ற செம்மொழிகளை அணைத்துக்கொண்டு செல்வதற்கேற்ற பொதுத்தன்மையோ, தகுதியோ, திறமையோ, சிறப்போ இந்தியிடம் எள்ளளவும் இல்லை. மேற்கூறப்பட்ட செம் மொழிகளெல்லாம் விரும்பி ஏற்றுப், பொது மொழியாக வைத்துப் போற்றுகிற அளவுக்கு இந்தியிடம் இலக்கணக் கட்டுக் கோப்போ, இலக்கியச் செறிவோ, சொல் பெருக்

கமோ, பொருளாழமோ, ஓசை யினிமையோ, தூய் மையோ, தனித் தன்மையோ, தொன்மையோ, உலக அரசியல் — அறிவியல் — வணிகவியல் போன்றவற்றில் தொடர்பு ஏற்படுத்தித் தரும் தன்மையோ ஒரு சிறிதும் இல்லை. இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பொதுமொழி ஒன்று தேவைப்படும் நிலையில், பொதுமொழியாக விளங்கு வதற்கேற்ற எல்லாவிதத் தகுதிகளையும், திறமைகளையும் பெற்று, அகில உலகப் பொதுமொழியாகச் சிறப்புற்று விளங்கி வரும் ஆங்கிலத்தையே, இந்தியாவிற்கும் பொது மொழியாகக் கொள்ளலாம். அதுதான் சிறந்ததும், பயன் தரத்தக்கதுமாகும். இந்தியைப் பொது மொழியாகக் கொள்ள எவ்விதக் காரணமும் இல்லை.

(3) இந்தி, இந்தியாவில் பெரும்பாலான மக்களால் பேசப்படுவதால், அதுவே இந்தியாவின் ஆட்சி மொழி ஆவதற்குத் தகுதி படைத்தது என்று கூறப்படுகிறது. இன்று இந்தியப் பேரரசால் திணிக்கப்படும் இந்தி, இந்தி யாவில் பெரும்பாலான மக்களால் பேசப்படுகிறது என்ற கூற்று உண்மைக்கு முற்றிலும் புறம்பானதாகும். 1951-ஆம் ஆண்டு எடுத்த மக்கள் எண்ணிக்கைக் கணக் குப்படி, இந்தியாவின் மொத்த மக்கள் தொகை 35,68,79,314 ஆகும். இவர்களில் இந்தி பேசுபவர்கள் என்று குறிப்பிடப் படுபவர்கள் 10,56,40,312 ஆவார்கள். இந்தியல்லாத அசாமி—வங்காளி — குசராத்தி—உருது— இந்துஸ்தானி — பஞ்சாபி — கன்னடம் — காச்மீரி—மலை யாளம் — மராத்தி — ஒரியா — சமஸ்கிருதம்—தமிழ்— தெலுங்கு போன்ற மொழிகள் பேசுபவர்கள் 25,12,39,082 ஆவார்கள். இதன்படி பார்த்தால் இந்தி என்ற பெயரில் பேசுபவர்கள் இந்தியாவின் மொத்த மக்கள் தொகையில் மூன்றில ஒரு பகுதிக்கும் குறைவான வர்களாகத்தான் இருக்கிறார்கள். மேலும் இந்தி மொழி யைப் பேசுவதாகக் குறிப்பிடப்படும் 10½ கோடி மக்களும்

ஓரேவகையான இந்தியைப் பேசவில்லை. பந்தேலி—கனோஜ்—பிரஜ் பாஷா—பங்காரு—கடிபோலி—அவதி—பகேலி—சாஸ்டிஸ்காரி—மைதிலி—போஜ்புரி—மகதி என்ற பதினொரு வகைப்படும் இந்திகளைத்தான் 10½ கோடி மக்கள் பேசுகிறார்கள். இந்தப் பதினொரு வகை இந்திகளில் இந்தியப் பேரரசினரால் திணிக்கப்படும் இந்தி 'கடிபோலி' என்ற இந்தியாகும். இந்தக் 'கடிபோலி' என்ற இந்தியைப் பேசுபவர்கள் சுமார் இரண்டு கோடிதான் இருப்பார்கள் என்று சொல்லப்படுகிறது. 'இந்த கடிபோலி இந்தி 1850-ஆம் ஆண்டுக்குப் பிறகுதான் இலக்கணக் கட்டுக் கோப்பு ஏற்பட்டதாகவும் சொல்லப்படுகிறது. இப்படியாக இலக்கண வளமும், இலக்கிய வளமும், சொல்வளமும், பொருள் வளமும் அற்ற 2 கோடி மக்களால் மட்டுமே பேசப்படுகிற கடிபோலி என்னும் இந்தி 36 கோடி மக்களுக்கு ஆட்சிமொழியாக ஆவது, எவ்வளவு கேலிக் கூத்தாகும் என்பது நடுநின்று ஆராய்வோர்க்கு நன்கு விளங்கும். திராவிடத்திலுள்ள தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய நான்கு மாநிலப் பகுதிகளும் முறையே தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய மொழிகளைத் தத்தம் மாநில ஆட்சி மொழிகளாகக் கொள்ள வேண்டும் என்றும், திராவிடக் கூட்டாட்சியின் மொழிகளாகத் தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுமே விளங்க முடியும்—சுவிட்சர்லாந்தில் இருப்பதைப்போல—என்றும், இந்தியத் துணைக்கண்டத் தொடர்பானாலும் சரி அல்லது அகில உலகத் தொடர்பானாலும் சரி, அவற்றிற்கு ஆங்கிலத்தையே தொடர்பு மொழியாகவும், பொதுமொழியாகவும் கொள்ளலாம் என்றும் தி. மு. கழகம் தட்ட வட்டமாகத் தெரிவித்து வருகிறது. மேற்கூறியவற்றால் இந்திமொழி இந்தியாவில் பெரும்பான்மையோரால பேசப்படுகிற மொழி அல்ல என்பதும், பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்த

வரையிலும், குறிப்பாகத் திராவிடத்தைப் பொறுத்த வரையிலும் இந்தி ஆட்சிமொழியாக அமைய இம்மியள வும் தேவைப்படவில்லை என்பதும் பெறப்படும். எனவே, இந்தி ஆட்சிமொழி என்ற பெயரில் தென்னகத்தில் புக வேண்டிய அவசியமோ அல்லது திணிக்கப்பட வேண்டிய அவசியமோ இல்லை.

தென்னகத்தில் அதிகார நோக்கத்தோடும், ஆதிக்க நோக்கத்தோடும் புகுத்தப்படும் இந்தி, திராவிட மொழி களின் ஆட்சியை அற்றுப்போகச் செய்யும்; திராவிட இலக்கிய வளங்களை மங்கி மடியச் செய்யும்; திராவிடப் பண்பாட்டையும், நாகரிகத்தையும் அடியோடு அழித்துத் தேவையற்ற வடவர் பண்பாட்டையும், நாகரிகத்தையும் பரவிடச் செய்யும்; திராவிடத்தை என்றென்றும் வட நாட்டுக்கு அடிமையாக்கித் தீரும்; வடவரின் அரசியல்— பொருளியல் — சமூகவியல் — மொழியியல் — வணிகவியல் ஆதிக்கங்களை என்றென்றும் திராவிடத்தில் நிலைநாட்டச் செய்யும்.

மேற்குறிப்பிட்டுள்ள முக்கிய காரணங்களின் அடிப் படையில் நின்றுதான், தி. மு. கழகம் இந்தித் திணிப்பை யும், இந்தி ஆதிக்கத்தையும், அடியோடு எதிர்த்து வரு கிறது. தென்னகத்தில், இந்தி ஆதிக்கத்தை எதிர்க்க வேண்டும் என்ற உணர்வு இப்பொழுது திடீரென்று ஏற்பட்டுவிடவில்லை. அகில இந்தியாவின் தேசிய மொழி யாகவும், பொது மொழியாகவும், ஆட்சி மொழியாகவும் இந்தி மொழியை (முதலில் இந்துஸ்தானி மொழியை) ஆக்கவேண்டும் என்று காந்தியாரும், அவரை ஒட்டி அகில இந்தியக் காங்கிரசும் திட்டம் போட்ட ஆரம்ப காலத் திலேயே பகுத்தறிவு இயக்கத்தினர் இந்திக்கு எதிர்ப்புத் தெரிவித்திருக்கின்றனர். 1930-க்கும் 1935-க்கும் இடை யில் வெளிவந்த 'குடி அரசு' இதழ்களில், இந்தியைத்

தேசிய மொழியாகவும் ஆட்சி மொழியாகவும் ஆக்கும் காங்கிரசாரின் போக்கு வன்மையாகக் கண்டித்து எழுதப் பட்டு வந்திருக்கிறது.

1937-ஆம் ஆண்டில் ஆச்சாரியார் சென்னை மாநில உயர்நிலைப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாய பாடமாகப் புகுத்தியபோது, இந்தித் திணிப்பை எதிர்த்துப் பெருங் கிளர்ச்சி துவக்கப்பட்டது. இந்தி எதிர்ப்பு இயக்கம் பெரியார் இராமசாமி, அறிஞர் அண்ணா, சோமசுந்தர பாரதியார், மறைமலையடிகள், ஈழத்துச் சிவானந்த அடிகள், கே. ஏ. பி. விசுவநாதம், அருணகிரி அடிகள், சண்முகானந்த அடிகள், டாக்டர் தருமாம்பாள் போன்ற சீரிய தலைவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. பல்லாயிரக்கணக்கானவர்கள் இந்தி ஆதிக்கத்தை எதிர்த்துச் சிறை புகுந்தனர்.

இந்தி எதிர்ப்பு உணர்ச்சி தமிழ்ப்பற்றைத் தமிழர்கள் உள்ளத்தில் பொங்கி எழச் செய்தது. தமிழ் மொழிப் பற்று, தமிழ் நாட்டுப் பற்றைக் கிளறிவிட்டது. அதன் காரணமாக, 1938-இல், சென்னைக் கடற்கரையில் நடை பெற்ற, மறைமலையடிகளார், சோமசுந்தர பாரதியார், பெரியார் இராமசாமி ஆகியோர் கலந்துகொண்ட இந்தி எதிர்ப்புக் கூட்டத்தில் 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்ற இலட்சிய முழக்கம் தீர்மான வடிவில் நிறைவேற்றப் பட்டது.

1940-இல் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில், தமிழ்மொழிப்பற்று திராவிட இனப்பற்றைத் தூண்டிவிட்டது. மாநாட்டில் கலந்துகொண்ட ஆந்திர—கருநாடக—கேரளப் பிரதிநிதிகள், எந்த எந்தக் காரணங் களுக்காகத் தமிழ் நாடு தனி நாடாக ஆவது நல்லது என்று தமிழர்கள் கருதுகிறார்களோ, அந்தந்தக் காரணங்கள் ஆந்திராவுக்கும், கருநாடகத்திற்கும், கேரளத்திற்கும்

பொருந்தி வருகிற காரணத்தால், 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்ற குறிக்கோளைக் கொள்வதைவிட, மொழி வழி பிரிந்து இனவழி ஒன்றுபட்ட திராவிடக் கூட்டாட்சி நாட்டைப் பெறுவது எல்லா வகையிலும் தென்னக மக்கள் அனைவர்க்கும் நன்மை பயப்பதாகும் என்று கூறிய காரணத்தால், 'தமிழ் நாடு தமிழர்க்கே' என்ற குறிக்கோள் 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்று மலர்ந்தது. அப்படி மலர்ந்த குறிக்கோள்தான், நீதிக் கட்சியின் குறிக்கோளாயிருந்து, பிறகு திராவிடக் கழகத்தின் குறிக்கோளாக மாறி, பிறகு திராவிட முன்னேற்றக் கழகத்தின் குறிக்கோளாகப் பொலிவோடும் வலிவோடும் வளர்ந்து வருகிறது.

திராவிடத்தின் விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு அரும் பாடுபட்டுவரும் திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியின் உதவி திராவிடத்திற்கு இம்மியளவும் தேவையில்லை என்ற உணர்வோடு, இந்தித் திணிப்பையும், ஆதிக்கத்தையும் எந்த வகையில்—எந்த முறையில்—எந்த வழியில் ஏற்படுத்தினாலும், அந்த இந்தி ஆதிக்கத்தை அடியோடு எதிர்த்து, அறவே அகற்றுவது என்ற முறையில் எதிர்ப்புணர்ச்சியைக் காட்டி வருகிறது.

ஆட்சியாளர்கள் அடக்குமுறைக் கருவிகளையும், அடக்குமுறைச் சட்டங்களையும் துணையாகக்கொண்டு எதிர்ப்பை அடக்க முயன்றாலும், வெற்றி கிடைக்கிற வரையில் வாய்ப்புக்கள் ஏற்படும் வழிகளிலெல்லாம் நின்று தி. மு. கழகம் எதிர்ப்பைக் காட்டிக்கொண்டுதான் இருக்கும். திராவிட நாட்டு விடுதலை வெற்றியோடுதான், இந்தி எதிர்ப்புக்கும் வெற்றி கிடைக்கும் என்றாலும், எதிர்ப்புணர்ச்சியைக் கழகம் நாளுக்கு நாள் வலிவோடு காட்டித்தான் தீரும். இந்தி எதிர்ப்பு அறப்போராட்டமே, திராவிட நாட்டு விடுதலைப் போருக்கு வலிவான அடிப்படையாக அமையும் என்றாகும்.

இந்திய யூனியன் ஆட்சியை ஆட்டிப்படைக்கும் வாய்ப்பை, எப்படியோ சூது, சூழ்ச்சி, தந்திரம், வஞ்சகம் முதலிய முறைகளைக் கையாண்டு, நீண்ட காலமாகத் திட்டமிட்டுப், பெற்றுக் கொண்டுவிட்ட இந்தி வெறியர்கள், தம் மொழியான அல்லது தமக்கு நெருங்கிய உறவாக விளங்கும் மொழியான கடிபோலி இந்தியை, ஏமாந்த பிறமொழியினர் மீது திணிப்பது என்ற முயற்சியில் பெரிதும் ஈடுபட்டு விட்டனர். இந்தி மொழியின் வளத்தையோ, வலிவையோ, பொலிவையோ, தகுதியையோ, திறமையையோ, அழகையோ, அறிவையோ, ஆற்றலையோ, இனிமையையோ, எடுப்பையோ, ஏற்றத்தையோ முன் வைத்துப் பொதுவாகப் பிற பகுதிகளில், குறிப்பாகத் தென்னகத்தில் இடம்பெறச்செய்ய இயலாத காரணத்தால், இந்தி மொழி வெறியர்கள் இந்தியப் பேரரசின் அதிகாரத்தையும், சட்டத்தையும், ஆதிக்கத்தையும், பண வலிவையும், படைவலிவையும் துணையாக வைத்துக்கொண்டு இந்தியை வலுக்கட்டாயமாகத் திணிக்கப் பார்க்கிறார்கள்.

அறியாமை—அலட்சியம்—அச்சம் ஆகியவை காரணமாக ஆரம்பததில் இந்தித் திணிப்புக்கு எதிர்ப்பு உணர்ச்சி கொள்ளாதவர்கள், திராவிட இயக்கத்தாரின் விளக்கங்களைக் கொஞ்சம் கொஞ்சமாகக் கேட்டதற்குப் பிறகும், கிளர்ச்சிகளை மெல்ல மெல்லக் கண்டதற்குப் பிறகும் இந்தி எதிர்ப்பு உணர்ச்சி கொள்ளத் தலைப்பட்டார்கள்.

1965-ஆம் ஆண்டிற்குப் பிறகு இந்திதான் இந்தியாவின் ஆட்சி மொழியாக அமையும் என்று, இந்தி வெறிச் சூதுக்காரர்கள் 1950-ஆம் ஆண்டில் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தில் சூழ்ச்சியாக ஏற்றியதற்குப் பிறகுதான், இந்தித் திணிப்பால் ஏற்படும் தீமைகளை உணராத பலர், ஆங்காங்கு உணரத் தலைப்பட்டார்கள். தமிழகத்தில் மட்டுமே நீண்ட காலமாகத் தலைதூக்கி நின்ற இந்தி

எதிர்ப்பு உணர்ச்சி, 1950-ஆம் ஆண்டிற்குப் பிறகு, வங்கத்திலும், மராட்டியத்திலும், பஞ்சாபிலும், ஆந்திரத்திலும், கருநாடகத்திலும், கேரளத்திலும் தலைதூக்க ஆரம்பித்தது. ஆங்காங்குள்ள மொழிப் பேராசிரியர்கள், மொழிப்பற்றுக் கொண்ட அரசியல் தலைவர்கள், அறிவியலறிஞர்கள், கல்வித்துறை வல்லுநர்கள், பொதுநல நோக்குடையவர்கள் பலரும் இந்தித் திணிப்பு கூடாது என்றும், இந்தி அறவே பயன்படாத மொழி என்றும், தாய்மொழி அல்லது வட்டார மொழியோடுகூட ஆங்கில மொழி மட்டும் இருந்தால் போதும் என்றும், இந்திய யூனியன் ஆட்சி ஆங்கில மொழியிலேயே நடைபெற வேண்டும் என்றும் குரல் கொடுக்கத் தலைப்பட்டனர். இந்தி எதிர்ப்பு உணர்ச்சியை இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அறிவாளிகள் பலரும் கொள்ளத் தலைப்பட்டனர்; அந்த உணர்ச்சியை வெளியிட்டுரைக்கவும் முற்பட்டனர்.

தமிழகத்தில் திராவிட இயக்கத்தினர் காட்டிவந்த இந்தி எதிர்ப்புணர்ச்சியும், இந்தியாவின் மற்றப் பகுதிகளிலுள்ள அறிவாளிகள் வெளியிட்ட இந்தி எதிர்ப்பு உணர்ச்சியும், இந்தியப் பேரரசினரை ஓரளவுக்கு ஆட்டின. அதன் விளைவாக, இந்தியை 1965-ஆம் ஆண்டிற்குப் பிறகு ஆட்சிமொழியாகக் கொண்டு வந்தே தீருவோம் என்று பிடிவாதம் காட்டிவந்த இந்தியப் பேரரசினர், ஆங்கிலத்தை 1965-ஆம் ஆண்டிற்குப் பிறகும் நீடிக்கச் செய்வோம் என்று சொல்லித் தீரவேண்டிய நிலைமைக்கு வந்து சேர்ந்தனர். இது இந்தி எதிர்ப்புணர்ச்சியின் முதல் வெற்றி என்னலாம்.

"இந்தி மொழி பேசப்படாத பகுதிகளிலுள்ள மக்களின் கருத்தறியாமல் இந்தி மொழி அவர்கள் மீது திணிக்கப்படமாட்டாது. இந்தி பேசப்படாத பகுதிகளில் இந்தி ஆட்சி மொழி ஆவதைப் பற்றித் தீர்மானிக்கும்

உரிமை இந்தியைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுக்கு இல்லை. இந்தியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களே அதனைத் தீர்மானிக்க வேண்டும்'' என்னும் கருத்துப் பட பண்டித நேரு, இந்தியப்பாராளுமன்றத்தில், 1959-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்களில், வாக்குறுதி அளிக்க முன் வந்தது, இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் இரண்டாவது வெற்றியாகும்.

1960-ஆம் ஆண்டு ஆகஸ்டு செப்டெம்பர்த் திங்கள்களில் திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கொள்வதாகத் திட்டமிட்டிருந்த இந்தி எதிர்ப்புப் போராட்ட நடவடிக்கைகளின் காரணமாகவும், அதிருப்தியின் அறிகுறியாகவும், இந்தியக் குடியரசுத் தலைவருக்குக் காட்ட இருந்த கறுப்புக் கொடி ஆர்பாட்ட நடவடிக்கையின் காரணமாகவும், "இந்தி எக்காலத்திலும் எவர் மீதும் திணிக்கப்படமாட்டாது."

இந்தி பேசப்படாத பகுதிகளில் உள்ளவர்கள் மத்திய அரசாங்க அலுவல்களில் நுழைய, இந்தித் தேர்வில் தேற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை.

1965-ஆம் ஆண்டிற்குப் பிறகும் ஆங்கிலம் ஆட்சி மொழியாக நீடிக்கும்.

பாராளுமன்றத்தில் இந்திய முதலமைச்சர் கொடுத்த வாக்குறுதி காப்பாற்றப்படும்.

இந்திய முதலமைச்சர் வாக்குறுதிக்கும், இந்தியக் குடியரசுத் தலைவர் அறிக்கைக்கும் முரண்பாடு இல்லை. இந்திய முதலமைச்சரின் வாக்குறுதியின் அடிப்படையிலே, குடியரசுத் தலைவரின் அறிக்கை நடைமுறைக்குக் கொண்டு வரப்படும்.

ஆங்கிலத்தை 1965-ஆம் ஆண்டிற்குப் பிறகும் தொடர்ந்து ஆட்சிமொழியாகக் கொள்ளத் தனிச் சட்டம் கொண்டு வரப்படும்.

இந்திய முதலமைச்சரின் உறுதிமொழியைப் பின்பற்றுவதில் இந்தியப் பேரரசு என்றும் பின்வாங்காது.

என்னும் உறுதிமொழிகளை இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் தமது பேச்சிலும், முதலமைச்சர் பண்டித நேரு அவர்கள் தம் முடங்கலிலும், உள்துறை அமைச்சர் பண்டித பந்த் அவர்கள் தமது பாராளுமன்ற உரையிலும் வெளிப்படுத்தியிருப்பது இந்தி எதிர்ப்பு உணர்ச்சியின் மூன்றாவது வெற்றியாகும்.

அண்மைக் காலத்தில் இந்த மூன்று வெற்றிகளும் ஏற்பட்டுள்ளன. என்றாலும், இந்தி எதிர்ப்பு இயக்கம் பெறவேண்டிய வெற்றிகள் இன்னும் பலப் பல இருக்கின்றன.

அஞ்சல் மடல், அஞ்சல் உறை, பணவிடைத்தாள் ஆகியவற்றை இந்தி மொழியில் வெளியிடுதல் போன்ற நடவடிக்கைகளை அஞ்சல் துறையிலும், இதுபோன்றே தந்தித் துறை, தொலைபேசித் துறை, இரயில்வேத் துறை, போர்ப்படைத் துறை, காவற்றுறை, வானொலித் துறை, பெருவழித் துறை, இந்திய அரசாங்கச் சார்புடைய அனைத்து அலுவலகத் துறைகளிலும், சென்னை மாநில அரசுத் துறைகள் பலவற்றிலும், குறிப்பாகக் கல்வித் துறையிலும் இந்தியை நேர்முகமாகவும், மறைமுகமாகவும் திணிக்கும் முயற்சிகள் மிகத் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. இவற்றை முழுமூச்சோடு எதிர்த்துத் தீர வேண்டிய கடமைகள் தி. மு. கழகத்திற்கு இருக்கின்றன.

(1) இந்தியத் அரசாங்கத்தின் சார்பாகத் தென்னகத்தைப் பொறுத்தவரை ஆங்கில மொழியையே ஆட்சிமொழியாகப் பயன்படுத்துகிற முறையில் இந்திய அரசியலமைப்புச் சட்டம் திருத்தப்பட வேண்டும்.

(2) ஆங்கில மொழியின் மூலமல்லாமல் இந்திமொழியின் மூலம் தென்னகத்தில் எந்த வகையிலும், எந்த வழியிலும், எந்த உருவிலும், எந்த முறையிலும் இந்தியப் பேரரசினர் தொடர்பு கொள்ளக்கூடாது.

(3) மாநில ஆட்சி மாநில மொழியிலேயே நடைபெற வேண்டும்.

(4) பாடப் பயிற்சி தாய்மொழியிலேயே நடைபெற வேண்டும். தேவையான நிலையில் ஆங்கில மொழியில் பாடப் பயிற்சி நடைபெற வேண்டும். ஆங்கில மொழி துணை மொழியாக இருக்கவேண்டும்.

(5) தாய்மொழி—வட்டாரமொழி—ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள் மட்டுமே கட்டாயமாகப் போதிக்கப் படவேண்டும். இந்திய மொழி என்ற பெயரில் வேறு எந்த மொழியும் கட்டாயப் படுத்தக்கூடாது. மூன்றாவது கட்டாய மொழி என்று ஒன்று தேவையில்லை.

(6) தென்னகத்தைப் பொறுத்த வரையில் இந்தி மொழிக்கு எந்த ஒரு துறையிலும், எந்த ஓர் இடமும் அரசாங்கத்தின் மூலம் தரப்படக்கூடாது.

திராவிட முன்னேற்றக் கழகம் மேற்கண்ட கருத்துக்களை நடைமுறைக்குக் கொண்டு வரப் பாடுபடுவதோடு, தனது மொழிக்கொள்கையை நிலைநாட்டவும் பாடுபடுகிறது. அவற்றிற்கான கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடத்தித்தான் கொள்கைகளை நிலைநாட்ட வேண்டிய நிலைமைகள் ஏற்படுமாயின், அவ்வப்போது கிளர்ச்சிகளும், போராட்டங்களும் நடத்தி வெற்றிகாண தி. மு. கழகம் தயங்காது. அறிஞர் அண்ணா அவர்களின் கூற்றுக்கு இணங்க, தி. மு. கழகம்போராட்டத்தைத் தேடி அலையாது; தேடிவரும் போராட்டத்தை விட்டு ஓடாது!

இந்தி மொழி வெறியர்கள் எப்படிப்பட்ட ஏகாதிபத்திய வெறிகொண்டு ஆடித்திரிகிறார்கள் என்பதை ஆச்சாரியார் அவர்கள் வடநாட்டுச் சுற்றுப்பயணம் சென்ற போது, பல ஊர்களிலும் உள்ள இந்திமொழி வெறியர்கள் எப்படி நடந்துகொண்டார்கள் என்பதிலிருந்து தெரிந்து கொள்ளலாம். அன்பர் ஆச்சாரியார் அவர்களுக்கு இந்தி தெரியாது என்று தெரிந்திருந்தும், அவரை இந்தியிலே பேசுமாறு வற்புறுத்திக், கூச்சல்போட்டுக், குழப்பம் செய்து, கூட்டங்களைக் கலைத்திருக்கிறார்கள் என்றால், அதிலிருந்து அவர்களின் வெறித்தன்மையை ஒருவாறு புரிந்துகொள்ளலாம். இந்தியைத் தவிர வேறு எந்த மொழியும் இந்தியத் துணைக்கண்டத்தில் வாழக்கூடாது என்ற அவர்களின் ஏகாதிபத்திய வெறியுணர்ச்சியை எவரும் நன்கு தெரிந்துகொள்ளலாம்.

தென்னாட்டை என்றென்றும் அடிமைப்படுத்தும் நோக்கத்தோடுதான், இந்திமொழி, இந்திமொழி வெறியர்களால் திணிக்கப்படுகிறது என்பதை, இந்திமொழி வெறியர்களுக்குத் தலைவராக விளங்கும் திரு. சேத் கோவிந்ததாஸ் என்பவரின் அறிக்கையிலிருந்து நன்கு புரிந்துகொள்ளலாம். அவர் அண்மையில், செய்தித்தாள் நிருபர்கள் கூட்டம் ஒன்றில் பேசும்போது, "இந்தியாவின் ஒற்றுமையை நிலைநாட்ட வேண்டுமானால், அது ஒரு மொழியால் மட்டுந்தான் முடியும் என்ற உண்மையை யாரும் புறக்கணிக்க முடியாது. அந்த ஒரு மொழியும் இந்தியாகத்தான் இருக்க முடியும். இந்தியாக மட்டுமேதான் இருக்கமுடியும்."

(One should not overlook the fact that the unity of the country could be maintained only by having one language and that language could be Hindi and Hindi only) என்று குறிப்பிட்டிருக்கிறார்.

எனவேதான் இந்தி மொழித் திணிப்பு திராவிடத்தின் உரிமையையும், வாழ்வையும், விடுதலை வேட்கையையும் பறிக்கின்ற ஒரு சதித்திட்டமாகும் என்கிறோம். திராவிடத்தின் விடுதலையையும், நல்வாழ்வையும் விரும்பி அரும்பாடு பட்டு வருபவர்களாகிய நாம் அத்துணைப் பேரும் இந்தச் சதித் திட்டத்தை, முழுமூச்சோடு எதிர்த்து, அழித்து, ஒழிக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இந்தித் திணிப்பை எவ்வாறு எதிர்த்து, அகற்றுவது என்பதற்கான திட்டத்தைத் தீட்டித்தரும் பொறுப்பு தி. மு. கழகப் பொதுக் குழுவினிடம் நாம் ஒப்படைத்திருக்கிறோம். பொதுக்குழு அவ்வப்போது தீட்டித்தரும் திட்டத்தை, நிறைவேற்றி, வெற்றிக்கொடி நாட்டி, திராவிடத்தின் விடுதலை முயற்சிக்கு அடிகோல அனைவரும் திரண்டெழுவோமாக!

தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்
உயிர்த் தித்திப்பை எண்ணிடப் போவதில்லை,
மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை எம்மை
மாட்ட நினைக்கும் சிறைச் சாலை.

# கழகமும் பாடமொழித் திட்டமும்

கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பயிற்று விக்கும் பாடமொழி எம்மொழியாக இருத்தல் நல்லது? என்பது பற்றிப் பலரும் பல்வேறு கருத்துக்களைப் பரிமாறி வருகின்றனர்.

தமிழகத்தைப் பொறுத்தவரையில் கூறப்பட்டு வருகின்ற கருத்துக்களை கூர்ந்து கவனித்தால், (1) இப்பொழுது பாடமொழியாக இருந்துவரும் ஆங்கிலமே தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று ஒருசாராரும், (2) அகில இந்தியா முழுவதிலும் ஒரே மொழிதான் பாடமொழியாக இருக்க வேண்டும், அதுவும் இந்திய மொழிகளில் ஒன்றாக இருக்க வேண்டும், அதுவும் இந்தி மொழியாகத்தான் இருக்க முடியும், இந்திமொழியாகத்தான் இருக்கவேண்டும் அதன்படி தமிழகத்திலும் இந்தி மொழியே பாட மொழி யாக அமையவேண்டும் என்று மற்றொருசாராரும், (3) அகில இந்தியா முழுவதற்கும் சமஸ்கிருத மொழியே அடிப் படை மொழியாக அமைந்ததாகும். அதுவே அகில இந்தியப் பாடமொழியாக அமைவதற்குத் தகுதி படைத்ததாகும், அதன்படி அதுவே தமிழகத்திற்கும் பாடமொழியாக அமையவேண்டும் என்று வேறொருசாராரும், (4) தமிழகத் தின் தாய்மொழியாக விளங்கிவரும் தமிழே தமிழகத்தின் பாடமொழியாக அமைய வேண்டும். ஆங்கிலம் அறவே

க்கப்பட வேண்டும். ஆங்கிலத்திற்குப் பதில் இந்திமொழி வரலாம் என்று இன்னொருசாராரும், (5) தமிழகத்தின் பாடமொழியாகத் தமிழ் அமைய வேண்டும், துணைபுரியும் மொழியாக ஆங்கிலம் இருந்து வரவேண்டும் என்று பிறிதொருசாராரும் கூறி வருவதைக் காணலாம்.

தமிழகத்தைப் பொறுத்த வரையில், முதல் நான்கு சாராரும் கூறும் கருத்துக்கள் அறவே பொருந்திவராது என்றும், ஐந்தாவது சாரார் கூறும் கருத்தே தமிழகத்திற்கு ஏற்றதாக இருக்கும் என்றும் திராவிட முன்னேற்றக்கழகம் திட்டவட்டமாகக் கூறிவருகிறது.

மொழிப் பிரச்சினையைப் பொறுத்துக் குறிப்பிடும் போது, தமிழகத்தின் ஆட்சிமொழியாகத் தமிழே விளங்க வேண்டும் என்றும், திராவிடக் கூட்டாட்சியின் மொழிகளாகத் தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கு மொழிகளுமே விளங்கலாம் என்றும், அகில உலக அரசியல் தொடர்பு—வாணிகத் தொடர்பு—பண்பாட்டுத் தொடர்பு ஆகியவற்றைப் பெறுவதற்கும், அரசியல்—பொருளியல் — சமூகவியல் — அறிவியல் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கும் ஆங்கிலம் தொடர்புமொழியாகவும் துணைமொழியாகவும் இருக்க வேண்டும் என்றும் தி. மு. கழகம் வரையறுத்துக் கூறி வருகிறது. தமிழன் தமிழனோடு தொடர்பு கொள்ளுகிற வாய்ப்புக்களிலெல்லாம், தாய்மொழியாகிய தமிழையே பயன்படுத்துவது எல்லா வகையிலும் சிறந்ததாகும் என்ற அடிப்படையில்தான், கல்லூரி, பல்கலைக் கழகங்களின் பாடமொழி தமிழாக அமைதல் வேண்டும் என்ற கருத்தைத், தி. மு. கழகம் வலியுறுத்தி வருகிறது.

ஆங்கிலமேதான் பாட மொழியாகத் தொடர்ந்து இருந்து வரவேண்டும் என்று வாதாடுபவர்கள், எல்லாத் துறைகள் பற்றிய அறிவை ஆங்கிலத்தில் மட்டுந்தான்

பயிற்றுவிக்க முடியும் என்றும், அந்தத் தகுதி தமிழிற்கு அறவே கிடையாது என்றும், அந்தத் தகுதியைத் தமிழ் என்றுமே பெறமுடியாது என்றும், தமிழில் பாடங்களைப் பயிற்றுவிப்பதற்காகப் பாடப் புத்தகங்கள் இல்லை என்றும் உருவாக்க முடியாது என்றும் கூறிவருகின்றனர். ஆங்கிலத்தின் அளவுக்குப் பாடங்களையெல்லாம் பயிற்றுவிக்கும் தகுதியையும் தமிழ் பெற்றுவிட்டது என்று நாம் வாதாட முன்வரவில்லை; முயன்றால் பெறமுடியும் என்றுதான் கூறுகிறோம்.

சுமார் பதினைந்து அல்லது இருபது ஆண்டுக்காலத்திற்கு முன்னால் 1-வது படிவத்திலிருந்து 6-வது படிவம் வரையில் எல்லாப் பாடங்களும் ஆங்கிலத்தில்தான் பயிற்றுவிக்கப் பட்டு வந்தன. அவற்றைத் தமிழிலேயே பயிற்றுவிக்க வேண்டும் என்ற முயற்சி எடுத்த அப்பொழுது, தமிழில் பயிற்றுவிக்க முடியாது, போதுமான அளவுக்குத் தமிழில் பாடபுத்தகங்கள் இல்லை என்றுதான் பலர் கூச்சலிட்டனர். இப்பொழுது பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகளில் 1-வது படிவத்திலிருந்து, 6-வது படிவம் வரையிலும் உள்ள எல்லாப் பாடங்களுமே தமிழில் பயிற்றுவிக்கப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு ஆண்டு நிலைமை சீர்பட்டு, இப்பொழுது எவ்வளவோ நல்ல நிலைமைக்கு உயர்நிலைப் பள்ளிகள் வந்து சேர்ந்திருக்கின்றன. 6-வது படிவம் வரையில் தமிழிலேயே பயிற்றுவிக்கப்படும் மாணவன், கல்லூரியில் நுழைந்த பிற்பாடும் கூடுமான வரையில் தமிழிலேயே பயிற்றுவிக்கப்படும் நிலையைப் பெறுவதுதான் முறையாகும். கல்லூரிப் பாடமொழியாகத் தமிழை ஆக்குவதற்குத் தமிழக அரசியலார் மெல்ல மெல்ல முயற்சி எடுத்து வருவது பாராட்டுதற்குரியதாகும்.

கல்லூரிப் பாடங்கள் அத்துணையும் பயிற்றுவிப்பதற்கான தகுதியை இப்பொழுது தமிழ் பெறுமலிருக்கலாம்;

ஆனால், அந்தத் தகுதியை அது என்றென்றுமே பெற முடியாது என்று சொல்லிவிடமுடியாது எடுத்த எடுப்பிலேயே பயிற்றுவிப்பதும், பாடஞ் சொல்லிக் கொடுப்பதற்கேற்ற பாட நூல்களைப் பெறுவதும், மாணவர்கள் படிப்பதற்கு ஏற்ற துணை நூல்களைப் பெறுவதும், பயிற்றுவிப்பதற்கேற்ற ஆசிரியர் கிடைப்பதும் அரியனவாக இருக்கலாம். ஆனால், ஒரு சில பாடங்களை ஒரு சில கல்லூரிகளில் பயிற்றுவிக்கத் தொடங்கி, மெல்ல மெல்ல முன்னேறிப், பிறகு பல்வேறு பாடங்களையும் பல்வேறு கல்லூரிகளிலும் பயிற்றுவிக்கும்படியான நிலைமையைப் பெறுவது கடினமானதல்ல.

'நீந்தத் தெரிந்து கொண்டு நீரில் இறங்குவதா? அல்லது நீரில் இறங்கிய பிறகு நீந்தக் கற்றுக்கொள்வதா?' என்ற பிரச்சினை எழும்போது, பாடமொழியாக ஆங்கிலமே இருக்கவேண்டும் என்று வாதாடுபவர்கள், "நீந்தத் தெரிந்து கொண்ட பிறகுதான் நீரில் இறங்க வேண்டும்" என்று வாதாடுகின்றனர்; அதாவது "தமிழ் பாட மொழியாகும் முழுத் தகுதி பெற்றதற்குப் பிறகுதான், அதனைப் பாட மொழியாக்க வேண்டும்" என்று கூறுகின்றனர். ஆனால், நாமோ, "நீரில் இறங்கிய பிறகுதான், நீந்தக் கற்றுக் கொள்ளமுடியும்" என்கிறோம்; அதாவது, தமிழைக் கல்லூரியில் பாட மொழியாக மெல்ல மெல்லப் புகுத்தியதற்குப் பிறகுதான், அது பாட மொழியாகும் தகுதியை மெல்ல மெல்லப் பெறும்" என்கிறோம். தமிழ் போதுமான அளவு தகுதியையும் திறமையையும் பெறுவதற்கு ஆங்கிலம் உறுதுணையாக இருந்து வரவேண்டும் என்பதோடு, தமிழால் உதவி செய்ய முடியாத அகில உலக அரசியல் தொடர்பு—உலக வாணிகத் தொடர்பு—உலகப் பண்பாட்டுத் தொடர்பு போன்ற தொடர்புகளுக்கும். அகில உலக அரசியல்—பொருளியல்—சமூகவியல்—அறிவியல் போன்ற இயல்களைக் கற்றுக்கொடுப்பதற்கும் ஆங்கிலம்

என்றென்றும் இருந்தே தீரவேண்டும் என்ற கருத்தையும் நாம் வலியுறுத்துகிறோம்.

தமிழே எல்லாக் கல்லூரிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் பாட மொழியாக ஆன பிறகும், ஆங்கில மொழி சொல்லிக்கொடுக்கப்படுகிற துணைமொழியாக அங்கெல்லாம் வைக்கப்படவேண்டும்; பெரும்பாலான கல்லூரிகள் தமிழிலே பாடம் பயிற்றுவிக்கப்படும் கல்லூரிகளாக ஆனபோதிலும், ஆங்கிலத்திலே பாடம் பயிற்றுவிக்கப் படும் சில கல்லூரிகள் ஆங்காங்கு நிலை நிறுத்தப்பட வேண்டும். அப்பொழுதுதான் தமிழகம் போதுமான அளவு ஆங்கில அறிவைப் பெற்று வாழ வழியேற்படும். தமிழக மக்கள் அடிப்படை அறிவையும் தங்களுக்குள் தொடர்பையும் பெற எல்லோரும் தமிழ் மொழியையும், உலகத் தொடர்பையும், உலக அறிவையும் பெற அவசிய மானவர்கள் ஆங்கில மொழியையும் கற்றுத் தீரவேண்டிய வர்களாக இருக்கிறோம். தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டுமே தமிழ் மக்களுக்குப் போதுமான மொழிக ளாகும். தமிழ் எல்லா நிலைகளிலும் பாடமொழியாக அமைய முடியும்; ஆங்கிலம் அவசியப்பட்ட போதெல்லாம் துணை மொழியாக இருக்க முடியும்.

இந்த முறையை விட்டுவிட்டு, ஆங்கிலத்தையோ அல்லது இந்தியையோ, அல்லது சமஸ்கிருதத்தையோ முழுக்க முழுக்கப் பாடமொழியாக ஆக்கத் திட்டமிடுவது. வேண்டத்தகாத ஒன்றாகும். ஆங்கிலத்தையே என்றென் றும் பாட மொழியாக வைத்துக்கொண்டால், தமிழும் போதிய வளர்ச்சி பெறாது. தமிழ் மாணவர்களும் எளிய முறையில் மிக்க பயனைப் பெற முடியாமல் போய்விடும். இந்தியைப் பாட மொழியாக்கும் முயற்சி இந்தி ஆதிக்

கத்தை நிலைநாட்டும் முயற்சியாகும்; இந்த முயற்சி தமிழகத்தின்—திராவிடத்தின் உரிமையைப் பாதிப்பதோடு, தமிழின் வளர்ச்சியைத் தடுப்பதுமாகும்; அது மட்டுமல்லாமல், இந்தியினால் தமிழ் மக்களுக்கு இம்மி அளவு பயனும் இல்லை, எனவே இந்தி அறவே தமிழகத்திற்கு—திராவிடத்திற்குத் தேவையில்லை. சமஸ்கிருதம் ஆங்கிலத்தின் அளவுக்கு உதவி செய்ய முடியாது என்பது மட்டுமல்லாமல், ஆங்கிலத்தை மீறி அது செய்யக்கூடிய உதவியும் எதுவும் இல்லை; எனவே, சமஸ்கிருதமும் அறவே தேவை இல்லை. ஆங்கிலத்தை அறவே புறக்கணித்துவிட்டுத் தமிழை மட்டும் வைத்துக்கொண்டு நாம் எவ்வித உருவான பலனையும் பெற முடியாது; எனவே தேவையான அளவுக்கு ஆங்கிலத்தின் உதவியை நாம் பெற்றே தீர வேண்டும்.

தமிழைக் கல்லூரிப் பாட மொழியாக்கும் தமிழக அரசியலாரின் முயற்சி வரவேற்கத்தக்கதாகும். இந்த முயற்சி ஆங்கிலத்தை அறவே ஒழிப்பதற்கான முயற்சியாகவோ, அல்லது ஆங்கிலம் அகற்றப்பட்ட இடத்தில் இந்தியைப் புகுத்தும் முயற்சியாகவே இருக்கக்கூடாது. அப்படிப்பட்ட வஞ்சக நோக்கம் தமிழக அரசியலார்க்கு இருக்குமேயானால், அது வன்மையாகக் கண்டிக்கத்தக்கதாகும்.

கல்லூரியில் தமிழைப் பாட மொழியாக்கும் முயற்சி, தமிழை வளர்க்கவும், தமிழுக்கு ஆக்கந்தரவும், தமிழ் மக்களுக்குப் பயன் விளைவிக்கவும் ஆன முயற்சியாக இருக்கவேண்டும். ஆங்கிலத்தை அழித்து, இந்தியைப் புகுத்துவதற்கு வழிதேடும் முயற்சியில் தமிழக அரசியலார் இறங்குவார்களேயானால், அப்படி இந்தியைப் புகுத்தும் அவர்களது இழிமுயற்சி கண்டித்து ஒதுக்கப்படவேண்டிய

தாகும். தமிழைப் பாட மொழியாக்கி, ஆங்கிலத்தைத் துணைமொழியாக்கிடும் முயற்சியைத்தான் நாம் எதிர்பார்க்கிறோம்; வரவேற்கிறோம். மேற்கூறப்பட்ட பிற முயற்சிகளெல்லாம் தமிழகத்திற்கு—திராவிடத்திற்கு ஊறுதேடும் முயற்சிகளாகும். எனவே, பாடங்களைப் பயிற்றுவிக்கத் தமிழகத்தைப் பொறுத்த வரையில், தாய் மொழியாம் தமிழும், தேவையான அளவு உலகப் பொது மொழியான ஆங்கிலமும் மட்டும் போதுமானவை. வேறு மொழி எதுவும் தேவை இல்லை.

# கழகமும் மாணவர்களும்

திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களை அரசியலில் இழுத்துக் கெடுப்பதாக மாற்றுக்கட்சியினர் குற்றம் சுமத்தி வருகின்றனர்.

திராவிட முன்னேற்றக் கழகம் மாணவர்களை அரசியலில் இழுக்கவுமில்லை; அவர்களைக் கெடுக்கவுமில்லை. மாறாக, மாணவர்கள் அரசியலில் இழுத்துக்கொள்ளப்படக் கூடாது என்றும், மாணவர்கள் தாம் அரசியல் உண்மைகளை அறிந்துகொள்ளுகிற அளவுக்கு நேரிய அரசியல் கருத்துக்களை இழுத்துக்கொள்ளவேண்டும் என்றும் கழகம் கூறி வருவதோடு, அந்தந்தத் துறைகளில் வல்லுநர்கள் ஆவதற்குரிய முழுக் கல்வி யறிவையும் பெற மாணவர்கள் இடைவிடா முயற்சியில் ஈடுபடவேண்டும் என்றும் கழகம் வலியுறுத்தி வருகிறது. மாணவர்களை அரசியலுக்கு நேரிடையாக இழுத்து, அவர்களைக் கெடுத்த அரசியல் கட்சி ஒன்று இந்த நாட்டில் உண்டு என்றால், அதுதான் காங்கிரசுக் கட்சியாகும். இந்த உண்மையைத் தமிழக முதலமைச்சர் அவர்களே ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். குடந்தையில், அண்மையில் நடைபெற்ற காங்கிரசு மாணவர்கள் மாநாட்டில் பேசும்போது, அவர், "காங்கிரசு ஒரே ஒரு முறைதான் மாணவர்களைப் பள்ளியை விட்டு வெளியே வரும்படி கேட்டுக்கொண்டது. படிப்புக்கு அறவே

முழுக்குப் போட்டுவிட்டு வரும்படிதான் மாணவர்களைக் கேட்டுக்கொண்டது" என்று குறிப்பிட்டுள்ளார். இந்தக் கூற்றே காங்கிரசின் போக்கைத் தெள்ளத்தெளிய விளக்கும். காங்கிரசு நடத்திய சட்டமறுப்பு இயக்கம், கள்ளுக் கடை எதிர்ப்புப் போராட்டம், சீமை துணிக் கடை எதிர்ப்புப் போராட்டம், சைமன் கமிஷன் எதிர்ப்புக் கிளர்ச்சி, உப்பு சத்தியாக்கிரகம், கொடிப் போராட்டம், தனிப்பட்டோர் சத்தியாக்கிரகம், 1942 ஆகஸ்டு கிளர்ச்சி போன்ற பல்வேறு போராட்டங்களில் மாணவர் காங்கிரசினர் பெரும் பங்கு கொண்டிருப்பதோடு, அவர்கள் பங்கு கொண்டதைப் பற்றிக் காங்கிரசுத் தலைவர்கள் பலரும் போற்றிப் பாராட்டிப் புகழ்ந்தும் கூறியுள்ளனர்.

மாணவர்கள் தங்கள் கட்சிக்குப் பயன்பட்டு வந்த காலம் வரையில் மாணவர்களை அரசியலுக்கு நேரிடையாக இழுத்த காங்கிரசுக் கட்சியினர், இப்பொழுது மாணவர்களில் பெரும்பாலோர் திராவிட முன்னேற்றக் கழகக் கருத்துக்களுக்கு ஆதரவு தரத் தலைப்படுகிறார்கள் என்பதை அறிந்ததும், மாணவர்களுக்கும் அரசியலுக்கும் அறவே தொடர்பு கூடாது என்றும், அப்படியே ஏதேனும் தொடர்பு இருக்கவேண்டி ஏற்பட்டால், காங்கிரசு அரசியலுக்கும் மாணவர்களுக்குந்தான் தொடர்பு இருக்க வேண்டும் என்றும் கூறி வருகின்றனர்.

மாணவர்களுக்கும் அரசியலுக்கும் இருக்கவேண்டிய தொடர்பைப்பற்றி மூன்று வகையினர் மூன்று விதமாக வற்புறுத்தி வருகின்றனர். (1) முதல் வகையினர், மாணவர்கள் நேரிடையாகவும் மறைமுகமாகவும் முழுக்க முழுக்க அரசியலில் பங்கு கொண்டே தீரவேண்டும் என்கின்றனர். (2) இரண்டாம் வகையினர் மாணவர்கள் அரசியலில் நேரிடையாகவோ, மறைமுகமாகவோ அறவே பங்குகொள்ளக் கூடாது என்கின்றனர். (3) மூன்றும் வகையினர், மாணவர்கள் அரசியலைப் பற்றி அறிந்து

கொள்ளத்தான் வேண்டும். ஆனால், அவர்கள் தம் கல்வி பாழாகக்கூடிய வகையில் அரசியல் கிளர்ச்சி போன்ற நடவடிக்கைகளில் நேரிடையாகப் பங்குகொள்ளக்கூடாது என்கின்றனர். ஆட்சிமனை ஏறுவதற்கு முன்னால் காங்கிரசுத் தலைவர்கள் முதல் வகையினராகக் காட்சியளித்தனர்; ஆட்சிமனை ஏறியதற்குப் பின்னர் அதே காங்கிரசுத் தலைவர்கள் இரண்டாம் வகையினராகக் காட்சியளித்து வருகின்றனர். ஆனால், திராவிட முன்னேற்றக் கழகத்தினர் தொடக்கத்திலிருந்து மூன்றும் வகையினராகத்தான் காட்சியளித்து வருகின்றனர்

காங்கிரசுக் கட்சி தன் நேரடி நடவடிக்கைகளை நிறைவேற்றுகின்ற வகையில்தான் மாணவர் காங்கிரசை அன்றும், இன்றும் பயன்படுத்தி வருகிறது. ஆனால், தி மு. கழகம், மாணவர்கள் அரசியல் உள்ளத்தையும், அரசியல் ஆர்வத்தையும், அரசியல் பயிற்சியையும் பெறும் வகையில் தான் திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்திற்கு ஆதரவு காட்டி வருகிறதேயல்லாமல், அவர்களை நேரடி அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடுமாறு தூண்டியதில்லை. அண்மையில் மூன்று திங்களுக்கு முன்னால், இந்தி எதிர்ப்புப் போராட்டத்திற்கான திட்டங்களைத் தி. மு. கழகம் தீட்டிக் கொண்டிருந்த போது, மாணவர்கள் இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபடக்கூடாது என்பதைக் கழகம் அறிக்கையின் மூலம் வெளிப்படுத்தியதிலிருந்து, தி. மு. கழகத்தின் திட்டவட்டமான தூயமையான போக்கை எவரும் எளிதில் அறிந்துகொள்ளலாம்.

இன்றைய உலகில் பொதுவாகக் கல்வியறிவும், குறிப்பாக அறிவியலறிவும் உயர்ந்திருக்கிற நாட்டில்தான்; வளமும், வசதியும் பெருகிக் கிடக்கின்றன. இதனைத் தி. மு கழகம் நன்கு உணர்ந்திருக்கிற காரணத்தால்தான், மாணவர்கள் தாம் பெறவேண்டிய கல்வியறிவு முழுவதை

யும் பெற்றுச், சிறந்த வல்லுநர்களாகத் தேர்வுபெற்று, நாட்டையும் மக்கள் வாழ்வையும் வளப்படுத்தும் சிறந்த சிற்பிகளாக முன்வருதல் வேண்டும் என்பதை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் வற்புறுத்தி வருகிறது.

காங்கிரசு, மாணவர்களை அரசியலில் இழுத்ததைப் போல், தி. மு. கழகம் ஒருபோதும் மாணவர்களை அரசியலில் இழுத்ததில்லை. ஆனால், தி. மு. கழகத்தின் அரசியல் கருத்துக்களை மாணவர்கள் விரும்பி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள் என்பது உண்மை. காரணம் என்னவென்றால், தி. மு. கழகம் எடுத்துரைக்கும் உண்மைகளை மாணவர்கள் தாம் படிக்கும் வரலாற்று நூலிலும், நில நூலிலும், மொழி நூலிலும், சமூகவியலிலும், அன்றாட வாழ்க்கை நிலைகளிலும் காண்கிறார்கள்; எனவேதான் தி. மு. கழகத்தின் கொள்கைகளில் பற்றுக்கொள்ளத் தலைப்படுகின்றனர். சர்க்கரையை விரும்பி எறும்புகள் ஊர்ந்து செல்லுவதைப் போல், தேனை விரும்பி வண்டுகள் செல்லுவதைப் போல், தி. மு. கழகத்தின் கருத்துக்களை நாடி, உண்மை விரும்பும் மாணவர்கள் முன்வருகின்றனர். பொறி வைத்து எலியைப் பிடிப்பதைப்போல், தி. மு. கழகம் மாணவர்களைப் பிடிப்ப தில்லை. ஆனால், இன்றைய காங்கிரசு கல்லூரிதோறும், பள்ளிதோறும் கட்சிப் பொறிவைத்து மாணவர்களைப் பிடிக்கும் செயலில் ஈடுபட்டிருக்கிறது.

தி. மு. கழகம் அடுக்குமொழி வலைவீசி மாணவர்களைக் கட்சிக் கூடைக்குள் பிடித்துப் போட்டுக் கொள்வதாகக் காங்கிரசு அமைச்சர்களும்—தலைவர்களும் கூறிவருகின்றனர். அடுக்கு மொழி வலையில் மாணவர்கள் மயங்கி விழுவதாக இருப்பது உண்மையாயின், தி. மு. கழகத்தாரைவிட மிக அழகான முறையில தேவாரம்—திருவாசகம்—திருவாய்மொழி — திருப்புகழ் — திருவருட்பா போன்ற அடுக்கு மொழி வலைகளைப் பின்னி வைத்திருக்கிற வைதீகர்

கள் வலைகளிலெல்லாம் மாணவர்கள் பெருவாரியினராக மயங்கி விழுந்திருக்கவேண்டும். மேலும், அடுக்கு மொழி வலையைப் பின்னும் உரிமை தி மு. கழகத்தினர்க்கு மட்டுமே அளிக்கப் பட்டிருக்கிறதா? அல்லவே! காங்கிரசு அமைச்சர்களும் அழகான அடுக்குமொழி வலையைப் பின்னி எதிர் வீச்சு வீசி மாணவர்களைத் தம் வலைக்குள் மயக்கி இழுத்துக் கொள்வதுதானே! அறிஞர் அண்ணு அவர்கள் எம். ஏ. பட்டம் மட்டுந்தான் பெற்றவர்கள். ஆனல், அமைச்சர் வெங்கட்ராமன் அவர்கள் எம். ஏ. பட்டத்தோடு பி. எல். பட்டமும் சேர்த்துப் பெற்றிருப்பவர்கள். அவர் அறிஞர் அணணு அவர்களைவிட மிகச் சட்ட நுணுக்கத்தோடு அடுககுமொழி வலையைப் பின்னி, மாணவர்களைப் பெருவாரியினராகத் தம் வலைக்குள் இழுத்துக் கொள்ளலாமே! ஆகவே மாணவர்கள் முன்னேற்றக் கழகக் கருத்துக்களிடத்துப் பற்றுக்கொள்வதற்குக் காரணம், அடுக்கு மொழி அல்லாத வேறு ஏதோ ஒன்றுதான் என்பது எவருக்கும் புலப்படும். அது என்ன என்று ஆய்ந்து பார்த்தால், அதுதான் ஆழ்ந்த பொருளுடைய கருத்துச் செறிவு என்பது புலப்படும்.

அடுக்குமொழியில் கூறிவிட்டால் மாணவர்கள் எதையும் அப்படியே நம்பி விடுவார்களா? எடுத்துக்காட்டாக, 'காமராசர் கானகம் கடந்து கானற்றில் களிறு கண்டு களித்துக் கடுமையாகக் காதலித்தார்' என்று அடுக்கு மொழியில் கூறினல், இந்தக் கருத்தை மாணவர்கள் அப்படியே நம்பிவிடுவார்களா? கருத்துக்கள் ஒன்றோடொன்று பொருந்தி வரக்கூடிய உண்மைகள்தாமா அல்லது அல்லவா? என்று ஆராய்ந்து பார்க்கவே மாட்டார்களா? கானகம் என்ருல் காடு; கானறு என்ருல் காட்டாறு; களிறு என்ருல் ஆண்யானே. காமராசர் காட்டினிடையேயுள்ள காட்டாற்றில் நின்ற ஆண்யானையைக் கண்டு

கடுமையாகக் காதலித்தார் என்னும் பொருள்பட, அடுக்கு மொழியில் கூறினால், மாணவர்கள் அப்படியே நம்பிவிடவா செய்கிறார்கள்? அவர்கள் சிந்தித்தும் பார்க்கவே மாட்டார்களா? யானை விலங்காயிற்றே! அதுவும் ஆண் விலங்கு ஆயிற்றே; காமராசர் மனிதராயிற்றே; மனிதரா போய் விலங்கைக் காதலிப்பார்? அதுவும் ஆண் யானையையா காதலிப்பார்? அதுவும் கடுமையாகவா காதலிப்பார்? என்று சிந்தித்துப் பர்த்து, சொல்லப்பட்ட கூற்றையும், அக்கூற்றினைச் சொல்லியவர்களையும் வெறுத்தொதுக்காமலா இருந்து விடுவார்கள்? அடுக்குமொழி என்பதற்காக எந்த அறிவற்ற கூற்றையும் மாணவர்களோ அல்லது மக்களோ நம்பவா செய்வார்கள்? ஒருநாளும் நம்பமாட்டார்களே! தி. மு. கழகக் கொள்கைகளிடத்து மாணவர்களுக்குப் பற்று ஏற்படுகின்ற தென்றால் அதற்குக் காரணம் கொள்கைகளிடத்தே இருக்கும் பொருட் செறிவு தான். இந்த உண்மையை முதலமைச்சர் அவர்களும், அவர் போன்றாரும் உணர்ந்து கொள்ள மறுத்தாலும், அறிவுடையோர் உலகம் இதனை ஏற்றுக் கொள்ளும் என்பது மட்டும் உறுதி.

# கழகமும் கலைஞர்களும்

திராவிட முன்னேற்றக் கழகத்தில், நடிகர்கள்—நாடக ஆசிரியர்கள்—கதை ஆசிரியர்கள்—திரைப்பட எழுத்தாளர்கள்—இசைவாணர்கள்—இசைப் பாடலாசிரியர்கள்—ஓவியர்கள்—சிற்பிகள் போன்ற கலைஞர்கள் ஈடுபாடு கொண்டிருப்பதைக் குறையாகவும், குற்றமாகவும் கருதிக்கொண்டு, இழித்தும், பழித்தும் பேசி வருவதிலே, மாற்றுக்கட்சியினரும், மனம் வேறுபட்டவர்களும், ஓயாமல் ஒழியாமல் ஈடுபட்டிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் 'சினிமாக் கட்சி' என்றும், 'நாடகக் கட்சி' என்றும், கழகத்தவர்களைக் 'கூத்தாடிகள்' என்றும், "நாடகமாடிகள்' என்றும் இழிவாகவும், ஏளனமாகவும் தோன்றும்படி சொல்லிக்காட்டியும் வருகின்றனர். இப்படியெல்லாம் இழித்தும், பழித்தும் பேசிவருவதன் மூலம், இழிவும், பழியும் கழகத்தைத் தொடர்ந்து, அவை கழகத்தை அடியோடு அழித்து, ஒழித்துவிடும் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர். உண்மையில் பார்க்கப்போனால், அழிந்து, ஒழிந்து, ஓய்ந்து, உட்காருபவர்கள் அவர்களாக இருக்கிறார்களே யொழிய, கழகமாக இருக்கவில்லை என்பதையும், மாறாகக், கழகம் நாளுக்கு நாள் வளமிகுந்து, வாழ்ந்து, வளர்ந்தோங்கி வருகிறதென்பதையும், அவர்கள் உணர மறுத்தாலும், நாட்டின் நல்லறிவு படைத்

தோர் அனைவரும் நன்கு உணர்ந்துவருகிறார்கள். அப்படிப் பட்ட நல்லறிவு படைத்தவர்கள் தரும் ஆதரவின் காரண மாகத்தான், கழகம், சிற்றூர்களிலும் பேரூர்களிலும், சிறு பட்டிகளிலும் பாக்கங்களிலும் சிறுசிறு குப்பங்களிலும் குடியிருப்புக்களிலும் நாளுக்கு நாள் வேரூன்றி வருகிறது.

கலைஞர்கள் கழகத்தைக் களங்கப் படுத்துகிறார்கள்;

கலைஞர்கள் கழகத்தைத் தம்முடைய வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்;

கலைஞர்கள் தம்முடைய பொருளைப் பெருக்கிக் கொள்ளக் கழகத்தைப் படிக்கட்டாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்;

கலைஞர்கள் கழகத்தைத் தம் விருப்பம்போல் ஆட்டிப் படைக்கிறார்கள்;

கலைஞர்கள் தம்முடைய திரைப்பட உலக வளர்ச்சி யைக் கழகத்தின் வளர்ச்சியாகவும், தம்முடைய வீழ்ச்சி யைக் கழகத்தின் வீழ்ச்சியாகவும் கணக்கிடவைக்கிறார்கள்;

கலைஞர்கள் கழகத் தலைவர்களாக ஆகிவிட்டார்கள்; கழகத் தலைவர்கள் கலைஞர்களாக ஆகிவிட்டார்கள்;

கலைப்பணி கழகப் பணியைப் புறக்கணித்துவிட்டது என்பன போன்றவைகளைக் குறைகளாகவும், குற்றச் சாட்டுக்களாகவும் ஆக்கிப், பொதுமக்களின் கண்முன் கழகத்தைத் தாழ்வாகவும், இழிவாகவும் காட்டிக், கழகத்தை அழித்து ஒழிக்கும் முயற்சியில் மாற்றாரும், மனம் வேறுபட்டோரும் மிகத் தீவிரமாக இறங்கிப் பார்க்கின்றனர்.

மேற் குறிப்பிட்ட கூற்றுக்களில் உண்மையோ, ஒழுங்கோ, நீதியோ, நேர்மையோ இருப்பதாக உண்மை நிலையைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்ப்பவர்கள் எவரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். உண்மைக்குப் புறம்பான,

பொருளற்ற, மேற்கண்ட குற்றச்சாட்டுக்களை அடுக்கடுக்காய் அடுக்கிக் கூறுபவர்கள், ஒன்று தி. மு. கழகத்தின் மீது ஏதேனும் வீண்பழி சுமத்த வேண்டும் என்ற காழ்ப்பு நெஞ்சம் கொண்டவர்களாக இருக்க வேண்டும்; அல்லது தி. மு. கழகத்தில் இருப்பதைப் போன்ற கலைஞர்கள் தம் கட்சிகளில் இல்லையே என்ற பொருமை கொண்டவர்களாக இருக்கவேண்டும்; அல்லது தி. மு. கழகத்தில் இருக்கும் கலைஞர்களால் தி. மு. கழகம் கவர்ச்சியும், வளர்ச்சியும் மிக வாகக் கொண்டிருக்கிறதே என்ற ஏக்கங்கொண்டவர்களாக இருக்க வேண்டும்; அல்லது தி. மு. கழகக் கலைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெயரும், புகழும், பெருமையும், செல்வாக்கும் தமக்கு இல்லையே என்ற அழுக்காறு கொண்டவர்களாக இருக்கவேண்டும்; அல்லது தமக்கு ஏற்பட வேண்டிய பெயரையும், புகழையும், பெருமையையும், செல்வாக்கையும் கலைஞர்கள் தட்டிப்பறித்துக் கொள்ளுகிருர்களோ என்ற ஐயப்பாட்டின் காரணமாக ஏற்பட்ட மன எரிச்சலாக இருக்கவேண்டும்; அல்லது கலைஞர்கள் எழுத்து—பேச்சு—இசை—நடிப்பு—தோற்றம் — போன்றவைகளில் ஒன்றையோ அன்றிப் பலவற்றையோ அன்றி எல்லாவற்றையுமோ கவர்ச்சிகரமாகக் கொண்டிருக்கிற காரணத்தாலல்லவா பொதுமக்கள் கலைஞர்களைப் பெரிதும் மதிக்கிருர்கள். ஆனால், அந்த அளவுக்குத் தம்மைப் பொது மக்கள் மதிக்காமலல்லவா இருக்கிருர்கள் என்ற தாழ்வு மனப்பான்மை கொண்டவர்களாக இருக்கவேண்டும்; அல்லது தம்முடைய மதிப்பைக் கலைஞர்களின் மதிப்பு அல்லவா மறைத்து விடுகிறது என்ற எரிச்சல் கொண்டவர்களாக இருக்க வேண்டும்; அல்லது தம்மைவிட கலைஞர்கள் சீராகவும், சிறப்பாகவும், வளப்பமாகவும், வசதியாகவும் வாழ்கிருர்களே என்ற மனப்புழுக்கம் கொண்டவர்களாக இருககவேண்டும் என்பன போன்ற முடிவுகளுக்குத் தான், அப்படி ஆராய்ந்து பார்ப்பவர்கள் வருவார்கள்.

தி. மு. கழகத்தைச் 'சினிமாக் கட்சி' என்றும், 'கூத்தாடிகள் கட்சி' என்றும் தூற்றுகிறார்கள். தி. மு. கழகத்தில் சுமார் மூன்றரை லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள். அவர்களில் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகமிகச் சிலர்தான் கலைஞர்களாகக் காட்சியளிக்கிறார்கள். மூன்றரை இலட்சம் தென்னை மரங்கள் உள்ள தோட்டத்தில், ஐந்தாறு மாமரங்கள் இருந்தால், அந்தத் தோப்பு 'மாந்தோப்பு' என்று அழைக்கப்படுவது எப்படி ஒரு பொருந்தாக் கூற்றோ, அதுபோலவே தான், மூன்றரை இலட்சம் கழக உறுப்பினர்களுக்கிடையே ஐந்தாறு சினிமாக் கலைஞர்கள் இருப்பதைக் கொண்டு, தி. மு. கழகத்தைச் 'சினிமாக் கட்சி' என்று அழைப்பதும் பொருந்தாக் கூற்றாகும்.

கழகத்தில் ஆசிரியர்கள், அலுவலாளர்கள், எழுத்தாளர்கள், வணிகர்கள், உழவர்கள், நெசவாளர்கள், தொழிலாளர்கள், பாட்டாளிகள், கட்டை வண்டித் தொழிலாளர்கள், கடைக் கணக்கர்கள், வழக்கறிஞர்கள், சலவைத் தொழிலாளர்கள், முடிதிருத்தும் தொழிலாளர்கள் மாட்டு வண்டிக்காரர்கள், குதிரை வண்டிக்காரர்கள், மூட்டை சுமப்பவர்கள், கூலி வேலை செய்வோர் போன்ற எண்ணிறந்த பல்வேறு வகையினரும் கொள்கைப் பற்றோடு உறுப்பினர்களாய் இருப்பதைப் போலவேதான், விரல்விட்டு எண்ணக்கூடிய சில கலைஞர்களும் கொள்கைப் பற்றோடு உறுப்பினர்களாய் இருக்கிறார்கள். அனைவரும் சேர்ந்து தொடங்கப் பெற்றதுதான் தி. மு. கழகமேயல்லாமல், சினிமாக் கலைஞர்களுக்காகச், சினிமா கலைஞர்களால், சினிமாக் கலைஞர்களின் பயன் கருதித் தொடங்கப்பெற்றது அல்ல.

கலைஞர்கள் ஈடுபட்டிருப்பதே, கட்சிக்குக் களங்கம் ஏற்படக் காரணமாகும் என்னும் கருத்துப்பட, சிலர் கூறி வருகிறார்கள். நல்ல கலைஞர்கள் என்பவர்கள் நாகரிக மேம்

பாடு கொண்ட எந்த நாட்டிலும், எந்தச் சமூகத்திலும் போற்றிப், பாராட்டி, மகிழ்ந்து வரவேற்கப்பட வேண்டிய வர்களாகக் காட்சியளித்து வருகிறார்களேயல்லாமல், கயவரைப்போல், வஞ்சகரைப்போல், பொறாமைக்காரர்களைப் போல், களங்கப்படுத்துபவர்களாகக் கருதப்படுவதில்லை. கலைஞர்கள் அனைவரும் அப்பழுக்கற்ற—முற்றும் துறந்த அறவோர் என்று கூறவில்லை. அவர்களிற் சிலர் விரும்பத் தகாத குணங்கள் படைத்தவர்களாக இருக்கக்கூடும். ஆனால், தீய பண்புகள் முழுக்க முழுக்கக் கலைஞர்களிடத் தேமட்டுந்தான் காணப்படுபவை போலவும், கலைஞர்களைத் தவிர்த்த மற்றவர்களிடத்தில் அவை காணப்படாதவை போலவும் கூறுவது அறிவுடைமையாகாது. தீய பண்புகள் கலைஞர்களிடத்திலும் காணப்படலாம், கலைஞரல்லாத ஏனையோரிடத்திலும் காணப்படலாம். அவை எங்குக் காணப்பட்டாலும், எவரிடத்தில் காணப்பட்டாலும் களையப்பட வேண்டியவையேயொழிய, அவை கலைஞர்களிடத்திலே மட்டுந்தான் காணப்படும்; அவர்கள் மட்டுமேதான் களங்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள்' அவர்கள் மட்டுமே தான் கட்சியை விட்டுத் துரத்தியடிக்கப்படவேண்டியவர்கள் என்று சொல்லுவது மடமையாகும். பொதுவாக மக்கள் கூட்டத்தில் இருப்பதைப் போன்று கலைஞர்களிலே கண்ணியமானவர்களும் இருக்கக்கூடும், கண்ணியமற்றவர்களும் இருக்கக்கூடும். கயமை—வஞ்சகம்—பொறாமை—ஒழுக்கக்கேடு போன்றவைகள் களங்கத்தை ஏற்படுத்துமேயல்லாமல், கலையறிவு களங்கத்தை ஏற்படுத்தும் என்று எந்தத் தெளிவறிவுடையோரும் கூறமாட்டார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் அறிஞர் அண்ணா, கலைஞர் கருணாநிதி, மாறன், அரங்கண்ணல் போன்ற முக்கியமான திரைப்பட எழுத்தாளர்களும், நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி, புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்

திரன், நடிகமணி டி. வி. நாராயணசாமி, வளையாபதி முத்து கிருட்டினன் போன்ற முக்கியமான நடிகர்களும் விரல் விட்டு எண்ணக்கூடிய மிகச் சிலராக இடம்பெற்றிருக்கிறார்கள் என்றாலும். இவர்களில் யாரும் கழகத்துக்கு விலை கொடுத்து வாங்கப்பட்டவர்களு மல்லர்; விலைகொடுத்துக் கழகத்தில் சேர்ந்தவர்களும் அல்லர். அவர்கள் அனைவரும் தூயகொள்கைப்பற்றோடு, கொள்கையில் தோய்ந்து, கொள்கையிலே திளைத்துத், தணியா ஆர்வத்தோடு, நெஞ்சுறுதியோடு, நேர்மைத் திறத்தோடு, நீதிப்போக்கோடு, நாணயத் தன்மையோடு திகழ்ந்து வருபவர்கள் ஆவார்கள். இப்படிப் பட்ட அருமையான கலைஞர்களைப் பெறாத சில அரசியல் கட்சிகள், நல்ல கலைஞர்களை விலைகொடுத்தேனும் வாங்கி வைத்துக்கொள்ளத் தேடித்தேடி அலைகின்றன. சில கலைஞர்கள் ஏதேனும் ஓர் அரசியல் கட்சி, விலைபெற்றுக் கொண்டேனும், தம்மைச் சேர்த்துக் கொள்ளாதா என்று அலைந்து திரியவும் செய்கிறார்கள். ஆனால், இந்த நிலை தி. மு. கழகத்தைப் பொறுத்தும், கழகக் கலைஞர்களைப் பொறுத்தும் ஏற்படவில்லை.

கலைஞர்கள் தம்முடைய பொருளைப் பெருக்கிக் கொள்ள தி. மு. கழகத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள் என்ற குற்றச்சாட்டு எள்ளளவும் உண்மையில்லாத ஒன்றாகும். கலைஞர்கள், குறிப்பாக நடிகர்களான எம். ஜி. ஆர்., எஸ். எஸ். ஆர்., கே. ஆர். ஆர்., டி. வி என். முத்துகிருட்டினன் போன்றவர்கள் திராவிட முன்னேற்றக் கழக வீரர்களாகத் திகழ்ந்துவரும் ஒரே காரணத்துக்காக, அவர்களைக்கொண்டு படமெடுக்க முன்வராத முதலாளிகள் பலப்பலர்; அவர்களோடு சேர்ந்து நடிக்க முன்வராத நடிக நடிகையர்கள் பலப்பலர்; அவர்கள் நடிக்கும் படங்களுக்குக் கதை வசனம் எழுதித்தர முன்வராத எழுத்தாளர்கள் பலப்பலர்; அவர்கள் நடிக்கும் திரைப்படங்களை வரவழைக்க மறுத்த கொட்டகைகள் பலப்பல; அவர்கள்

நடிக்கும் நாடகங்களைப் போட மறுத்த அரங்குகள் பலப்பல; கொள்கைகளுக்குப் புறம்பான புராணப் படங்கள் என்பதற்காக அவர்களாகவே நடிக்க மறுத்து நடிக்காமல் விட்டுவிட்ட திரைப்படங்கள் பலப்பல; கழகக்கொள்கைக்குப் புறம்பானவர்கள் அழைக்கிறார்கள் என்பதற்காகவும், கொள்கைக்குப் புறம்பானவர்களுக்குப் பயன்படக்கூடாது என்பதற்காகவும் நாடகம் ஆடிக்காட்ட மறுத்து, நிறுத்திக் கொள்ளப்பட்ட நாடகங்கள் பலப்பல.

இப்படியாகத் தி. மு. கழகத்தில் முழுமூச்சோடு ஈடுபட்டிருக்கும் காரணமாகக், கழகநடிகர்கள், வாய்ப்புக்களை-வசதிகளை — திரைப்படங்களை — வருவாய்களை — படவுலகத்தாரின் கூட்டுறவுகளை — ஒத்துழைப்புக்களை ஏராளமாக இழந்திருக்கிறார்கள். அவர்கள் கழகத்தில் ஈடுபட்டதன் காரணமாகப் பெற்றவை புரட்சி மனப்பான்மையர் என்ற புகழ்—இலட்சிய வீரர்கள் என்ற பெயர்-நடிப்பில் இசையில் புலவர்கள் என்ற பெருமை—கடமை வீரர்கள் என்ற பாராட்டு—கொள்கையை விட்டுக்கொடுக்காத பெருந்தகையானவர்கள் என்ற போற்றுதல் — வேண்டுவார்க்கு வேண்டுவன ஈயும் வள்ளல்கள் என்ற சிறப்பு ஆகியவைகள் தாம், வருவாயை இழந்து அப்பழுக்கற்ற புகழையும், பெருமையையும் பெறுவதிலே கழகநடிகர்கள் மனமகிழ்ச்சி கொண்டிருக்கிறார்களே யல்லாமல், மனவருத்தம் கொள்ளவில்லை.

திரைப்பட எழுத்தாளர்களாகக் காட்சியளிக்கும் அறிஞர் அண்ணா, மு. கருணாநிதி, மாறன், அரங்கண்ணல் ஆகியோரை எடுத்துக்கொண்டாலும் அவர்கள் இழந்த வாய்ப்புக்களும், விட்டுவிட்ட வாய்ப்புக்களும் ஏராளம்; அவர்கள் பெற்ற வாய்ப்புக்கள் மிக மிகக் குறைவு. இது வரையில் வந்துள்ள தமிழ்த் திரைப்படங்களின் எண்ணிக்கையையும், அவற்றில் இவர்கள் வசனம் எழுதியுள்ள

படங்களின் எண்ணிக்கையையும் தெளிவறிவுடையோர் ஒப்பிட்டுப் பார்ப்பார்களாயின், இவர்கள் எழுதியுள்ளவை மிக மிகக் குறைவு என்பது தென்படும். அறிஞர் அண்ணு அவர்களுக்கும், கலைஞர் கருணுநிதி அவர்களுக்கும் கதை வசனம் எழுதும் ஆற்றல் ஆரம்பகாலந்தொட்டே யிருந்தும், மிக நீண்ட காலத்திற்குப் பிறகுதான், அவர்கள் திரைப்பட உலகில் சிறிதளவு ஏற்றுக்கொள்ளப்பட்டார்கள். நடிகர்களின் நடிப்புத்திறனும், எழுத்தாளர்களின் எழுத்துத்திறனும், அவர்களாக அவர்கள் முயற்சியிலே பெற்றுக்கொண்டவைகளே யொழிய, கழகம் கற்றுக்கொடுத்தவைகள் அல்ல. கற்றுக்கொடுக்கும் ஆற்றல் கழகத்திற்கு இருந்திருக்குமேயானல், மூன்று இலட்சம் உறுப்பினர்களையும் நடிகர்களாகவும், கலைஞர்களாகவும் ஆக்கிக் காட்டியிருக்கும். அறிஞர் அண்ணு அவர்களும், கலைஞர் கருணுநிதி அவர்களும், நடிகர்களும் அரசியலை விட்டு விலகிக், கொள்கைகளைப்பற்றிக் கவலைப்படாமல், முழுமூச்சோடு கலைத்துறையில் பணியாற்றுவது என்று அவர்கள் முற்பட்டிருந்தால், இதுவரையில் அவர்கள் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் பொருளைக் குவித்திருப்பார்களே! கழகத்தைப் பயன்படுத்திக்கொண்டு கலைஞர்கள் வளருகிருர்கள் என்பதில் ஏதேனும் உண்மை இருந்திருக்குமானல், கழகம் தோன்றிய சாதாரண நிலையில், திரைப்பட உலகில் மிக உச்சியில் ஏறி நின்றிருந்த நடிப்பிசைப் புலவர் கே. ஆர். இராமசாமி அவர்கள், இப்பொழுது கழகம் வளர்ந்திருக்கும் இந்த நிலையில், இன்னும் மிக உச்சியிலல்லவா அவர் ஏறி நின்றிருக்கவேண்டும்? அவர் திரைப்பட உலகில் எந்த நிலையில் இருக்கிருர் என்பதை நாடு நன்கு அறியுமே. கழகத்திற்கும், நடிகர்களின் வளர்ச்சி—வீழ்ச்சி ஆகியவற்றிற்கும் எவ்விதத் தொடர்பும் இல்லை என்பதை மேற்கண்ட உண்மையிலிருந்து யாவரும் நன்கு அறிந்துகொள்ளலாம். கலைஞர்கள் வளருவதற்கும்

வீழ்வதற்கும் அவர்களுடைய அறிவு—ஆற்றல்—திறன்—ஊக்கம்—முயற்சி—உணர்ச்சி—எழுச்சி—வாய்ப்பு—வசதி—சூழ்நிலை—போட்டி—ஆதரவு—எதிர்ப்பு போன்றவைகள் காரணமாகுமேயல்லால், கழகம் ஆதரித்தால் ஒரு கலைஞன் வளருவான் என்றோ, கழகம் ஆதரிக்காவிட்டால் ஒரு கலைஞன் வீழ்வான் என்றோ கூறுவதற்கில்லை. கழகத்தில் சேராத கலைஞர்கள் எவ்வளவோ பேர்கள் வளத்தோடு, வசதியோடு, வாய்ப்போடு இருக்கிறார்கள்; கழகத்தில் சேர்ந்துள்ள கலைஞர்கள் எவ்வளவோ பேர்கள் இருக்கும் இடம் தெரியாமல் இருக்கிறார்கள். கழகத்தைக் கலைஞர்கள் பயன்படுத்திக்கொள்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை மாற்றார்கள் வீசுவதற்குக் காரணம், அவர்கள் கழகத்தின்மீது கொண்டுள்ள பகையுணர்ச்சியும், கலைஞர்கள்மீது கொண்டுள்ள பொறாமையுணர்ச்சியுமாகும்.

கலைஞர்கள் தங்களுடைய வளர்ச்சிக்குக் கழகத்தைப் பயன்படுத்திக்கொள்ளுகிறார்கள் என்பது பெருந் தவறு; ஆனால், கழகம் தன்னுடைய வளர்ச்சிக்குக் கலைஞர்களைப் பயன்படுத்திக்கொள்கிறது என்பது எவ்வளவோ பெரிய உண்மை. கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள கலைஞர்கள், கலைஞர்களாக மட்டும் காட்சியளிக்காமல், அவர்கள் கழகச் சொற்பொழிவாளர்களாகவும் — பொறுப்பாளர்களாகவும் — அலுவலாளர்களாகவும்—பிரதிநிதிகளாகவும் — தொண்டர்களாகவும்—சட்ட மன்ற, உள்ளாட்சி மன்ற உறுப்பினர்களாகவும் காட்சியளிக்கிறார்கள். கழகத்தின் வளர்ச்சிக்கு அவர்கள் ஆற்றிவந்த—ஆற்றிவரும் பணிகள் அளப்பரியன. அவர்கள் கலைஞர்கள் என்ற முறையில் கலைத்துறைகளாகிய நாடகம்—நாட்டியம்—திரைப்படம்—இசை—ஓவியம்—சிற்பம் போன்றவைகளின் மூலம் கழகத்தையும், கழகக் கொள்கைகளையும், கழகக் கொடியையும் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துகிறார்கள்; அவர்கள் சொற்பொழிவாளர்கள் என்ற முறையில் கழகக் கருத்துக்

களை அழகாகவும், கவர்ச்சிகரமாகவும், இனிமையாகவும், எளிமையாகவும், தெளிவாகவும், திட்பமாகவும், ஊக்கத்தோடும், ஆக்கத்தோடும், உணர்ச்சியோடும், எழுச்சியோடும் மாநாடுகள்—சிறப்புக் கூட்டங்கள்—பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றின் மூலமாகப் பொது மக்களிடையே எடுத்துவைக்கிறார்கள்; அவர்கள் பொறுப்பாளர்கள் என்ற முறையில், கழக நிதி—கட்டிட நிதி—தேர்தல் நிதி—நாளிதழ் நிதி—பாதிக்கப்பட்டோர் நிதி—நன்கொடை நிதி போன்ற பல்வேறு நிதிகளைக் கழகத்திற்குச் சேர்த்துத் தரும் பொறுப்புக்களை ஏற்றுக்கொண்டு தாமே நன்கொடை ஈந்தும், நன்கொடையாளர்கள் பலரை அணுகியும், நாடகம் ஆடியும், நிதிச் சிறப்புக் கூட்டங்களில் பேசியும் நிதிகளைத் திரட்டித் தருகின்றனர்; அவர்கள் அலுவலாளர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும்போது, அந்தந்த அலுவல்களில் இருந்து அவற்றிற்குரிய பணிகளை முறையோடும், செம்மையாகவும் செய்கிறார்கள்; அவர்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகளாக மேல் அமைப்புக்களுக்குத் தேர்ந்தெடுக்கப்படும்போது, பிரதிநிதியின் கடமைகளை மேற்கொள்ளுகிறார்கள்; அவர்கள் தொண்டர்களாக இருந்து, கழகம் அவ்வப்போது இடும் தொண்டுகளைச் செவ்வனே செய்து முடிக்கிறார்கள்; அவர்களைச் சட்டமன்ற, உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் போட்டியிடும்படி கழகம் கட்டளையிட்டால், போட்டியிடுகிறார்கள்; சென்று பணிபுரிகிறார்கள்.

மற்றும் தொண்டர்கள்—அலுவலாளர்கள்—சொற்பொழிவாளர்களைவிடப் பொதுமக்களோடு கழகத்தையும், கழகக் கருத்துக்களையும் எளிமையாகவும், பரவலாகவும், பெருவாரியாகவும், தொடர்புபடுத்த, கழகத்தில் ஊறிப்போன கலைஞர்கள் பேருதவியாக இருக்கிறார்கள். கழகச் சொற்பொழிவாளர்களிடத்தில் கடமையுணர்ச்சி—கொள்கைப்பற்று—பேச்சுத்திறன் ஆகியவைகள் இருக்கின்றன

என்றால், கழகக் கலைஞர்களிடத்தில் இவ்வளவும் இருக்கின்றன! பொதுமக்களைப் பெருவாரியினராகத் தம்பால் ஈர்க்கும் கவர்ச்சியும் இருக்கிறது. கலைஞர்களுக்கு மிகப் பெருங்கூட்டம் கூடுகிறது என்றால், அது பயன்படுத்திக் கொள்வதற்குரிய ஒரு நல்ல வாய்ப்பே தவிர, உதறித் தள்ள வேண்டிய தொன்றல்ல!

கழகக் கலைஞர்கள் கலந்துகொள்ளும் திரைப்படம்—நாடகம்—பொதுக்கூட்டம் ஆகியவற்றின் மூலம் கழகத்தின் கொள்கை பரவ ஒரு வழி ஏற்படுகிறது; இப்படியாகக் கலைஞர்கள் கழகத்திற்குப் பயன்படுகிறார்கள் என்பதற்காக அவர்களுக்குக் கழகத்தில் தனி உரிமைகள் எவையும் வழங்கப்பட்டுவிடவில்லை. கடமையுணர்ச்சி—பொறுப்புணர்ச்சி—உரிமைகள் ஆகியவைகள் கழகத்திலுள்ள மூன்று இலட்சம் உறுப்பினர்களுக்கும் ஒரேபடியாகத்தான் அமைந்திருக்கின்றன. பெயர்—பெருமை — புகழ் — செல்வாக்கு போன்றவைகள் வேண்டுமானால் அவரவர்களின் அறிவு—ஆற்றல்—தகுதி — திறமை — பண்பு — உழைப்பு போன்றவைகளுக்கு ஏற்றபடி அமைவதாக இருக்கக் கூடும்.

கலைஞர்கள் என்பதற்காகக் கழகத்தில் தனி உரிமைகள் எவையும் வழங்கப்படவில்லை. எல்லா உறுப்பினர்களுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிற உரிமைகள்தாம், அவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கின்றன. கழகத்தை, நடிகர்கள் போன்ற கலைஞர்கள் ஆட்டிப்படைக்கிறார்கள் என்பது எந்த வகையிலும் பொருளுடைய கூற்று ஆகாது. நடிகர்கள், கழகம் இடுகின்ற கட்டளைகளை நிறைவேற்றி வைக்கும் நிலையில் இருந்து வருகிறார்களே யல்லாமல், தாங்கள் திட்டமிடுகிற வழியில்தான் கழகம் இயங்க வேண்டும் என்றோ, தாங்கள் கொண்டுவருகிற தீர்மானங்களைப் பொதுக்குழு நிறைவேற்றியே தீரவேண்டும்

என்றோ, தாங்கள் கொண்டுவருகிற தீர்மானங்களைப் பொதுக்குழுவில் பெரும்பான்மையோர் ஏற்றுக்கொள்ளா விட்டாலும், பொதுச்செயலாளர் அவற்றை நிறை வேற்றியே தீரவேண்டும் என்றோ பிடிவாதம் செய்கிற நிலையில் அவர்கள் இல்லவே இல்லை. நடிகர்கள், கழகத்தின் திட்டங்கள் வகுக்கும்போது குறுக்கிட்டார்கள் என்றோ, தங்கள் கருத்துக்களைப் பிடிவாதமாக எடுத்துவைத்தார்கள் என்றோ ஒரு துளியும் கூற முடியாது.

கழகக் கலைஞர்கள் ஈடுபாடு கொள்ளும் திரைப்படங்களின் வெற்றியைப் பொறுத்துக் கழகம் வளருவதும், அவற்றின் தோல்வியைப் பொறுத்துக் கழகம் வீழ்வதுமாக இருந்து வருவதாகச் சிலர் கூறுகிறார்கள். கழகக் கலைஞர்கள் ஈடுபாடு கொண்டுள்ள திரைப்படங்கள் சில வெற்றி பெற்றிருக்கின்றன; சில தோல்வியடைந்திருக்கின்றன. அந்த வெற்றி தோல்விகள் கழகத்தைச் சிறிதளவும் பாதித்ததில்லை. தி. மு. கழகம் 1949 ஆம் ஆண்டிலிருந்து நாளுக்கு நாள் சீராகவும், சிறப்பாகவும், பொலிவோடும், வலிவோடும் வளர்ந்து வந்துகொண்டிருக்கிறதே தவிர, திரைப்படங்களைப் பொறுத்து வளர்ந்து, வீழ்ந்துகொண்டிருக்கவில்லை. திரைப்படங்களின் வெற்றி வேண்டுமானால் கழக வளர்ச்சிக்கு சிறிது ஊக்கம் தந்திருக்கலாமே தவிர, படங்களின் தோல்வி கழகத்தின் வளர்ச்சியை இம்மியளவும் பாதிக்கவில்லை. வெற்றி பெற்ற திரைப்படங்கள் வேண்டுமானால் கழகத் தோழர்களுக்குப் புத்துணர்ச்சியை அளித்திருக்கக்கூடும்; ஆனால், தோல்வியுற்ற திரைப்படங்கள் புதிய உணர்ச்சியை வேண்டுமானால் அளிக்காமலிருந்திருக்கலாம். அவை முன்னே இருந்த உணர்ச்சியை எந்த அளவிலும் கெடுக்கவில்லை.

கலைப்பணி கழகப் பணியைப் புறக்கணித்துவிட்டதாகக் கூறுவது, வெற்றி ஆரவாரக் கூச்சலாகும். கலைப்

பணி கழகப்பணிக்கு வாய்ப்பும்—வசதியும—ஆக்கமும்—ஊக்கமும்—உணர்ச்சியும் எழுச்சியும் ஊட்டி வருகின்றதே யல்லாமல், கழகப்பணியைக் கிஞ்சிற்றும் புறக்கணித்து விடவில்லை. கலையார்வம் கழகத்துக்கு ஊக்கம் அளித்து வருகின்ற பல வாய்ப்புக்களில் ஒன்றேயாகும்!

கலைஞர்கள், கழகத்திலுள்ள மற்றவர்களைப்போல, பொறுப்புணர்ச்சி கொண்ட கடமை வீரர்களாய்க் கழகத்தின் மிக மிகச் சிறு பகுதியினராய்த் தொண்டாற்றி வருபவர்களே யல்லாமல், 'தாமேதான் கழகம், கழகமே தான் தாம்' என்று கருதுபவர்களல்லர்!

நல்ல கருத்துக்களை நாட்டு மக்களிடம் பரப்ப, கலையுலகம் ஒரு நல்ல வாய்ப்பு என்பதைத் தவிர, கலைவளர்ச்சி ஒன்றுதான் கழகத்தின் குறிக்கோள் எனக் கூறுவது, வெறுப்புணர்ச்சியின் மீது எழுந்த வெற்றுரையேயன்றி, உண்மை நிலையுணர்ந்த பண்புரை அன்று!

# கழகமும் தொழிலாளர்களும்

தொழிலாளர்கள் தங்கள் உரிமைகளையும் கடமைகளையும் வரையறுத்துக் கொள்ளவும், தங்கள் வாழ்வையும் வளத்தையும் பெருக்கிக் கொள்ளவும், தங்கள் ஒற்றுமையையும் உறுதியையும் வலுப்படுத்திக் கொள்ளவும், தமக்குரிய நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டிக் கொள்ளவும் உலகத் தொழிலாளர்கள் உலகு எங்கணும் போராடி வருகின்றனர்.

வடக்கே மாஸ்கோவிலிருந்து தெற்கே மெல்போர்ன் வரையிலும், மேற்கே சான்பிரான்ஸிஸ்கோவிலிருந்து கிழக்கே விளாடி வாஸ்டாக் வரையிலும் உள்ள பல்வேறு நாடுகளிலும், நகரங்களிலும், சிற்றூர்களிலும், பேரூர்களிலும், தொழிலாளர் குடியிருப்புக்களிலும் மிக உணர்ச்சியோடும் எழுச்சியோடும் உரிமைக்குப் போராடி வருகின்றனர்.

தீர்க்கப்படவேண்டிய தொழிலாளர்களின் பிரச்சினைகள் நாட்டுக்கு நாடு, நகருக்கு நகர், ஊருக்கு ஊர், தொழிற்றுறைக்குத் தொழிற்றுறை, தொழிற்சாலைக்குத் தொழிற்சாலை வேறுபட்டும், மாறுபட்டும் இருக்கின்றன. அந்தந்தப் பிரச்சினைகளை அந்தந்தத் தொழிலாளர்கள் அந்தந்த நிலைகளிலே நின்று போராடித் தீர்த்துக் கொள்ளவேண்டியவர்

களாக இருக்கிறார்கள். திராவிடநாட்டைப் பொறுத்துத் தொழில் துறைகள் வளரவும், பெருகவும், தொழிலாளர்களின் தகுதியும், திறமையும் ஓங்கவும், அவர்களின் வாழ்க்கைத்தரம் உயரவும், அவர்களின் வாழ்வும், வளமும் மிகவும் எங்கெந்தப் பிரச்சினைகளில் கவனம் செலுத்த வேண்டுமோ, அந்தந்தப் பிரச்சினைகளில் ஈடுபாடு கொண்டு வரும் திராவிட முன்னேற்றக் கழகம் உரிய முறைகளில் போராடி வருகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தில் பங்குகொண்டு பணியாற்றுபவர்களில் பெரும்பாலோர் தொழிலாளராகவும், பாட்டாளிகளாகவும் உழவர் பெருமக்களாகவுந்தான் இருந்து வருகின்றனர். இவர்களுக்கு அடுத்தபடியாகத்தான் நடுத்தர வகுப்பு மக்கள் கழகத்தில் பங்கு கொண்டிருக்கின்றனர்.

தொழிலாளர்கள் நியாயமான—தேவையான உரிமைகளைப் பெறவேண்டும் என்பதையும், உண்மையோடும் உள்ளன்போடும், நாணயமாகவும், நேர்மையாகவும் அவர்கள் தங்கள் கடமைகளைச் செய்து வரவேண்டும் என்பதையும் தி. மு. கழகம் வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் மிக அழுத்தந் திருத்தமாக வற்புறுத்தி வருகிறது.

காலம் ஒன்று இருந்தது, முதலாளிகள் கிழித்ததே கோடு வைத்ததே சட்டம் என்ற முறையில். அப்பொழுது, முதலாளிகள் தாங்கள் இடும் பணிகளையெல்லாம் தொழிலாளிகள் செய்தே தீரவேண்டும், தாங்கள் கொடுக்கும் கூலிகளையே பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தது. தொழிலாளர்களும் வாய்திறக்காமல் சொல்லிய வேலைகளைச் செய்து, கொடுத்த கூலிகளைப் பெற்றுவந்தனர். தொழிலாளர்கள் வாய் திறக்க முடியாமல் இருந்த காலம் அது. உலகில் சிந்தனையாளர்களும், விடுதலை வீரர்களும் தோன்றத் தோன்ற உரிமை வேட்கையுணர்வு எல்லாத்

துறைகளிலும் மெல்ல மெல்ல ஏற்பட்டது. அதன் காரணமாகத் தொழிற்றுறைகளில் கருத்துப் புரட்சி ஏற்பட்டது; தொழிற் புரட்சிகளும் ஏற்பட்டன. தொழிலாளர்கள் நாடுகள் தோறும் வாய் திறந்து உரிமை வேட்கைக் குரலை எழுப்பத் தொடங்கினர். அதன் விளைவாகத் தொழிலாளர்கள் தங்கள் சக்திக்கு ஏற்றவாறுதான் உழைப்பார்கள்; தங்களது உழைப்புக்கேற்ற ஊதியத்தை முதலாளிகள் தந்தே தீரவேண்டும் என்ற முறை நிலைநாட்டப்பட்டது. தொழிலாளர்களின் நலன்களும், உரிமைகளும் போராடிப் போராடிப் பெற்று வரப்படுகின்றன. 'சக்திக்கேற்ற உழைப்பு, உழைப்புக்கேற்ற ஊதியம்' என்ற கோரிக்கையை நிலைநாட்டும் முயற்சியில்தான், உலகிலுள்ள பல்வேறு தொழிலாளர் இயக்கங்களும் அரும்பாடுபட்டு வருகின்றன. உலகிலுள்ள பகுத்தறிவுச் சிந்தனையாளர்களும், விடுதலை வீரர்களும், உரிமை வேட்கையாளர்களும் எதிர்பார்க்கும் நிலை என்ன என்றால், 'சக்திக்கு ஏற்ற உழைப்பு, தேவைக்கு ஏற்ற வசதி' என்பதுதான். மனித சமுதாயத்திலுள்ள அத்துணைப் பேரும் தங்கள் அறிவு ஆற்றலுக்கு ஏற்ப உழைக்கவேண்டும்; அத்துணைப்பேரும் தங்கள் தேவைக்கேற்ற வசதிகளைப் பெறவேண்டும் என்ற கொள்கையை நடைமுறைப் படுத்தும் ஆவலோடு, அதற்கான முன்னேற்பாடுகளில் உரிமைவேட்கையாளர் பலரும் ஈடுபட்டிருக்கின்றனர். திராவிட முன்னேற்றக் கழகமும் அத்தகைய கொள்கையை அடிப்படையாகக் கொண்டுதான், பொருளாதாரத் துறையில் பாடுபட்டு வருகிறது.

மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாதன என்று படும் தொழில்கள் அத்துணையும், மக்களின் சார்பாக விளங்கும் நல்ல அரசால் நடத்தப்பட வேண்டும் என்ற கொள்கையை வாய்ப்பு ஏற்படும் போதெல்லாம் கழகம் வற்புறுத்தித்தான் வருகிறது.

தொழிலாளர் சங்கங்களைப் பொறுத்தவரையில், அவை தொழிலாளர்களின் ஒன்றுபட்ட உணர்வோடு, தொழிலாளர்களின் நலன் கருதி இயங்கும் அமைப்புகளாகத் திகழவேண்டும் என்ற கருத்தைத்தான் கழகம் வலியுறுத்தி வருகிறது.

தொழிலாளர் சங்கம், அரசியல் கட்சிகளால் தங்கள் நலனுக்கு ஏற்றவாறு ஆட்டிப்படைக்கப்படும் பொம்மையாக இருக்கக் கூடாது. தொழிலாளர் சங்கத்தைக் கொழுகொம்பாகக் கருதி, அரசியல் கட்சிகள் அதன்மீது படரும் முல்லைக் கொடிகளாக மாறக்கூடாது. அரசியல் கட்சிகளைக் கொழு கொம்புகளாகக் கருதி, தொழிலாளர் சங்கம் அவற்றின் மீது படரும் முல்லைக் கொடியாக அமைய வேண்டும். அரசியல் கருத்து வேறுபாடுகள் கொண்ட பல்வேறு அரசியல் கட்சியினரும் ஒரே தொழிலாளர் சங்கத்தில் ஈடுபாடு கொண்டிருக்க முடியும். அவரவர்கள் தங்கள் தங்கள் அரசியல் கருத்துக்களை அரசியல் பணி புரியும் போது, உறுதியாகக் கடைப் பிடித்து, ஒரு குறிப்பிட்ட தொழிலகத்தைச் சேர்ந்த தொழிலாளர்கள் என்ற முறையில் அவர்கள் ஒன்று கூடும் போது, தம் அரசியல் கருத்துக்களை அடக்கிவைத்துக் கொண்டு, தொழிலாளர் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் மட்டும் கவனம் செலுத்தி முடிவுகள் எடுக்கவோ, பணிகள் புரியவோ முற்படவேண்டும். தொழிலாளர் சங்கப் பணிகள் முடிவடைந்த பிறகு, அந்தந்த அரசியல் கட்சிகளைச் சார்ந்தோர், அந்தந்த அரசியல் கட்சிகளின் பணிகளைச் செய்யச் செல்லுவது முறையாகும். இந்தக் கருத்தை வற்புறுத்தவும், வரவேற்கவும் தி. மு. கழகம் எப்பொழுதும் தயாராக இருக்கிறது. அரசியல் கட்சிக் கருத்து வேறுபாடுகளுக்கு இடம் கொடுக்காமல், தொழிற்சங்க முறையில் தொழிலாளர்கள் ஒன்று கூடி அமைக்கும் தொழிலாளர் சங்கத்தைத் தி. மு. கழகம் வரவேற்று, எல்லாவகை

யிலும் அதற்கு ஒத்துழைப்பு தர எப்பொழுதும் ஆயத்த மாக இருக்கிறது. ஒரு தொழிற்றுறையில் காங்கிரசு—கம்யூனிசுட்டு—சோசியலிசுட்டு—பிரசா சோசியலிசுட்டு போன்ற கட்சிகள் தனித்தனியாகக் கட்சி அடிப்படையில் தொழிற்சங்கங்களை அமைத்துப் பணிபுரிய முற்படும் போது, திராவிட முன்னேற்றக் கழகமும் இயற்கை யாகவே, தி. மு. கழகப் பற்றுடைய தொழிலாளர்களைக் கொண்டு, தனித் தொழிற்சங்கம் நிறுவ வேண்டிய கட்டத் திற்குத் துரத்தித்தள்ளப்படுகிறது. அந்த வேளைகளில் தான் தி. மு. கழகத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கங் களை அமைக்க வேண்டி வருகிறது.

தி. மு. கழகத்தார் பங்குகொள்ளும் பொதுத் தொழிற் சங்க அமைப்பாக இருந்தாலும் சரிதான், தனித் தொழிற் சங்க அமைப்பாக இருந்தாலும் சரிதான், கழகத்தார் தொழிலாளரின் உரிமைகளை எவ்வளவுக்கு எவ்வளவு வற் புறுத்தி வருகிறார்களோ, அவ்வளவுக்கு அவ்வளவு தொழி லாளர்களின் கடமைகளையும் வற்புறுத்தி வருகின்றனர்.

உலக நாடுகளின் தொழிலாளர் நிலை வளர்வது போலவே, திராவிடத் தொழிலாளர்களின் நிலையும் வளர்வ தாக! ஓங்குக அவர்தம் ஒற்றுமை! வளர்க அவர்தம் முயற்சி! வாழ்க அவர்தம் சங்கங்கள்!

# கழகமும்
# பொதுத்தேர்தலும்

வரப்போகும் 1962-ஆம் ஆண்டு பொதுத்தேர்தல் இப்பொழுதே காங்கிரசு அமைச்சர்களுக்குக் கிலியைத் தர ஆரம்பித்துவிட்டது!

ஆளுங்கட்சிக்கு எதிராக, எதிர்க்கட்சிகள் எங்கே ஒன்று சேர்ந்து ஆளுங்கட்சியை முறியடித்து விடுமோ என்ற அச்சம் ஆட்சி பீடத்திலே இருப்பவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. எனவே, தேர்தலில் காங்கிரசுக்கு எதிராக ஓர் அணி உருவாவதை அமைச்சர்கள் விரும்பவில்லை, மறைமுகமாக அப்படிப்பட்ட அணி உருவாவதைக் தடுத்து விட முயல்கின்றனர். கேலி செய்தும், கிண்டல் செய்தும், அச்சம் காட்டியும், எச்சரிக்கை விடுத்தும் எதிர்க்கட்சியினரைத் தேர்தலில் பிரித்து வைக்கப் பார்க்கின்றனர்.

"சுதந்தராக் கட்சியுடன் தி. மு. கழகம் கூட்டுச் சேர்ந்தால், தி. மு. க. அழிந்துவிடும்!" என்றும் முதலமைச்சர் காமராசர் அவர்கள் பேசியுள்ளார்கள்.

காமராசர் அமைச்சரவை நீடித்திருக்க வேண்டும் என்பதில் காமராசரைவிட அதிக அக்கறை காட்டுகிற பெரியார் இராமசாமி அவர்கள், "சுதந்தராக் கட்சியுடன் தி. மு. க. உடன்படிக்கை செய்துகொண்டால், இராசகோபாலாச்சாரியார் தி. மு. கழகத்தைச் சதுரங்கக்காய்

மாதிரி உபயோகப்படுத்துவார்! தி. மு. க. அதன்பின் அழிந்துவிடும்!' என்ற பொருள்படப் பேசி வருகின்றார்.

இவர்கள் இருவரும் "தி. மு. கழகம் வாழவேண்டும்!" என்று என்றைக்கும் வாழ்த்தியவர்களல்லர். தி. மு. க. வின் அழிவு தங்களுக்கு வளர்ச்சி எனக் கருதுபவர்கள்; கொள்கைகளை மறந்து, திட்டங்களை ஒதுக்கிவைத்து, இலட்சியத்தைக்குறுகிக்கொண்டு, எப்படியாவது தி. மு. கழகத்தை ஒழித்துவிட்டால் போதும் என நினைப்பவர்கள்! அப்படிப்பட்டவர்கள் "தி. மு. கழகம் அழியப் போகிறதே!" என்று கவலைப்பட்டால், அது "ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுத" கதையைப் போல இருக்கும்

ஆட்டை அடித்து, அதன் உயிரை அழித்து, அதனைத் தின்று ஒழிப்பதிலே கண்ணுங் கருத்துமாக இருக்கும் ஓநாய் ஆடு நனைவதைக் கண்டு வருந்துகிறது என்று கூறினால், ஆட்டைப்பற்றி ஓநாய்க்கு எவ்வளவு உள்ளன்பு இருக்கக் கூடும் என்று கருதப்படுமோ, அவ்வளவு உள்ளன்பு திராவிடமுன்னேற்றக் கழகத்தைப்பற்றிக் காமராசருக்கும் பெரியார் இராமசாமி அவர்களுக்கும் இருக்கமுடியும்.

தி. மு. கழகம் தன் அறிவையும், தன் ஆற்றலையும் நம்பித் தணியாத் தன்னம்பிக்கையோடும், தன் மதிப்போடுந்தான், சென்ற பதினோராண்டுக் காலத்திற்கு மேலாக அரும்பணி ஆற்றி வருகிறது. அதன் விளைவாகத்தான், இவ்வளவு குறுகிய காலத்தில், வேறு எந்த அரசியல் கட்சியும் தென்னாட்டில் பெறமுடியாத புகழையும் பெருமையையும், சீரையும் சிறப்பையும், வலிவையும் பொலிவையும் தி. மு. கழகம் பெற்று, வளர்ந்து வந்திருக்கிறது. தி. மு. கழகத்திற்குத் தன்னைத் தானே காப்பாற்றிக் கொள்ளுகிற அறிவும் ஆற்றலும் நிறைந்த அளவுக்கு இருந்து வருகின்ற காரணத்தால் தான், பெரியார் இராமசாமி அவர்கள் உட்பட மாற்றுக் கட்சியினர்பலரும் ஏசியஏச்சுக்களையும், பேசிய பழிச்சொற்

களையும், தூற்றிய தூற்றல்களையும், வீசிய இழி மொழி களையும், இழைத்த கொடுமைகளையும், கொடுத்த தொல்லை களையும், செய்த துயரங்களையும், ஏற்படுத்திய கட்டங்களை யும், நட்டங்களையும் தாங்கிக் கொண்டு வந்திருக்கிறது. இதுவரை பொலிவோடும் வலிவோடும் தன்னைத் தானேகாப் பாற்றிக் கொள்ளத் தெரிந்த தி.மு. கழகத்திற்குக் காம ராசர் அவர்களின் அச்சுறுத்தலினின்றும், பெரியார் அவர் கள் குறிப்பிடுகின்ற 'இராசகோபாலாச்சாரியாரின் சூழ்ச்சி' யினின்றும் காப்பாற்றிக் கொள்ளத் தெரியும் என்பதைத் திட்டவட்டமாகவும், அழுத்தந் திருத்தமாகவும்தெரிவித்துக் கொள்ள முடியும்.

தி.மு. கழகத்திற்கும் சுதந்தராக் கட்சிக்கும் இது வரை தேர்தல் உடன்படிக்கை எதுவும் ஏற்படவில்லை. அப்படியே ஏதேனும் உடன்பாடு எதுவும் எதிர்காலத்தில் தேர்தலை முன்னிட்டு ஏற்பட்டாலும் அதில் தவறோ அல்லது வியப்போ ஏற்படுவதற்கு எதுவும் இல்லை. ஆளுங் கட்சி யின் அநீதியை, நேர்மையற்ற போக்கை, சர்வாதி காரத்தை, முறை கெட்ட போக்கை, எதேச்சாதிகாரத்தை, ஒழுங்கீனத்தை, இழிசெய்கையை எதிர்க்க எதிர்க் கட்சிகள் அவ்வப்போது ஒன்று சேர்ந்து ஒருமித்த எதிர்ப் பைக் காட்டுவது என்பது சனநாயக முறைக்கு மாறுபட்ட ஒன்றல்ல. இது சனநாயக நாடுகளிலெல்லாம் காணப்படு கிற காட்சிகள்தான்; இது உலக ஆன்றோராலும் சான் றோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, ஆதரிக்கப்பட்ட முறைதான்.

சில குறிப்பிட்ட பிரச்சினைகளில் எதிர்க்கட்சிகள் ஒன்றுபட்டு நின்று அந்தக் குறிப்பிட்ட பிரச்சினைகளைப் பொறுத்து, ஆளுங்கட்சிக்கு எதிராக, ஒருமித்த எதிர்ப் பைக் காட்டுகின்றன என்றால், அந்த எதிர்க்கட்சிக ளெல்லாம் தமக்குரிய கொள்கைகளையும், குறிக்கோள்களை

யும், நோக்கங்களையும் அடியோடு கைவிட்டுவிட்டு ஒன்றுபட்டு நிற்கின்றன என்று பொருளாகிவிடாது; அந்தந்தக் கட்சிகளுக்குரிய கொள்கைகளும், குறிக்கோள்களும் நோக்கங்களும் அந்த அந்தக் கட்சிகளிடத்தேதான் அசைக்க முடியாமலும் ஆட்டமுடியாமலும் இருக்கின்றன என்றும், குறிப்பிட்டபிரச்சினைகளுக்காகப், பிரச்சினைகளைப் பொறுத்துப் பிரச்னைகளை நிறைவேற்றும் முறையில், பிரச்சினைகள் நிறைவேறும் வரையில் அந்தக் கட்சிகளெல்லாம் ஒன்றுபடுகின்றன என்றும் பொருள்படும்.

சில வேளைகளில் ஆளுங் கட்சியும் எதிர்க் கட்சிகளும் சேர்ந்து, ஒன்றுபட்டு நின்று பிரச்சினைகளை அணுக வேண்டிய இன்றியமையாமைகூட ஏற்பட்டு விடுகிறது. எடுத்துக் காட்டாகக் கோவா விடுதலைப் பிரச்சினையை எடுத்துககொண்டால், கோவா, அயலார் ஆதிக்கத்தினின்றும் விடுதலை பெறவேண்டும் என்பதில், இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அவ்வளவு கட்சிகளுக்கும் அக்கறை இருக்கிறது என்பதை அவனியோர்க்கும், குறிப்பாகப் போர்த்துகீசியர்க்கும் அறிவிக்கவேண்டிய நெருக்கடி நிலைமை ஏற்பட்டபோது, இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அவ்வளவு கட்சிகளும் ஒன்று சேர்ந்து நின்று தம் ஒருமித்த எதிர்ப்பைக் காட்டிக் கொண்டன. கோவா பிரச்சினையை ஒட்டிப் பொது வேலை நிறுத்தம், பொது ஊர்வலம், பொதுக்கூட்டம் ஆகியவற்றை ஊருக்கு ஊர் ஏற்பாடு செய்யப்பட்டபோது, அந்த நிகழ்ச்சிகளில் ஆளுங் கட்சியான காங்கிரசும் எதிர்க் கட்சிகளான தி. மு. கழகம், திராவிடக் கழகம், கம்யூனிசுட்டுக் கட்சி, பிரசா சோசியலிசுட்டுக் கட்சி, சோசியலிசுட்டுக் கட்சி, தமிழரசுக் கழகம், முசுலிம் லீக், இந்துமகாசபை, சனசங்கம் போன்றவைகளும் ஒன்று சேர்ந்து நின்று பணியாற்றின.

கோவா பிரச்சினையைப் பொறுத்து ஒன்று சேர்ந்த காரணத்தினாலேயே காங்கிரசு தன் கொள்கையை விட்டு விட்டதா? அல்லது தி. மு. கழகம் தன் கோட்பாட்டை விட்டு விட்டதா? அல்லது மற்ற எதிர்க் கட்சிகள் தத்தம் குறிக்கோளை விட்டு விட்டனவா? அல்லவே! சென்னையில் நடைபெற்ற திருவள்ளுவர் படத்திறப்பு விழா ஒன்றில், காங்கிரசைச் சேர்ந்த தோழர்கள் டாக்டர். சுப்பராயன் அவர்களும் சி. சுப்பிரமணியம் அவர்களும், தி. மு. கழகத்தைச் சேர்ந்த அறிஞர் அண்ணா அவர்களும், கம்யூனிசுட்டுக் கட்சியைச் சேர்ந்த தோழர் ப. சீவானந்தம் அவர்களும், தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த தோழர் ம. பொ. சிவஞானம் அவர்களும், மற்ற மற்றக் கட்சிகளைச் சேர்ந்த பலரும் கலந்து கொண்டார்கள். அவர்கள் எல்லோரும் தத்தம் அரசியல் கொள்கைளை அடியோடு விட்டுவிட்டுக் கலந்து கொண்டார்கள் என்று பொருள் படும்? அல்லவே! திருவள்ளுவர் படத்தைத் திறந்து வைப்பதில் ஒன்றிய கருத்து, எல்லாக் கட்சியினரிடையேயும் நிலவிய காரணத்தால், திருவள்ளுவர் படத்திறப்புப் பிரச்சினையைப் பொறுத்து எல்லாக் கட்சியினரும் ஒன்று பட்டனர்.

மேற்சுட்டிக்காட்டப்பட்டவையன்றி, ஆணவம் பிடித்த—மமதை கொண்ட — சர்வாதிகாரம் நிறைந்த—எதேச்சாதிகாரம் நிரம்பிய—தன்னலம் மிகுந்த காங்கிரசை அரியணையிலிருந்து அகற்றுவதைப் பொறுத்த பிரச்சினையில், எதிர்கட்சிகளான தி. மு. கழகம்—கம்யூனிசுட்டுக் கட்சி—சுதந்திராக் கட்சி—சோசலிசுட்டுக் கட்சி—பிரசா சோசியலிசுட்டுக் கட்சி போன்றவைகள் தேர்தலின்போது ஓர் உடன்பாட்டிற்கு வருவது எந்த வகையிலே தவறுடையதாகும்? எந்தச் சிற்றறிவு படைத்தவனும் எந்த வகையிலும் கூற முடியாதே!

தேர்தலில் கட்சிகள் சிலபல உடன்பாடுகளுக்கு வருகின்றன என்றால், அதற்காக அக்கட்சிகள் தத்தம் கொள்கைக் கோட்பாடுகளை விட்டுவிட வேண்டும் என்ற இன்றியமையாமை இல்லையே! கொள்கைகளை அடியோடு விட்டு விட்டுத்தான் பிறகு எந்த ஓர் உடன்பாட்டிற்கும் வரவேண்டும் என்ற தேவையில்லையே! அடுத்து வரும் பொதுத் தேர்தலின்போது தி. மு. கழகமும் சுதந்தராக் கட்சியும், அல்லது தி. மு. கழகமும் கம்யூனிசுட்டுக் கட்சியும்,அல்லது தி. மு. கழகமும் பிரசா சோசியலிசுட்டுக் கட்சியும், அல்லது தி. மு. கழகமும் சோசியலிட்டுக் கட்சியும் ஆளுங் கட்சியான காங்கிரசுக் கட்சியை முறியடிப்பதைப் பொறுத்து, ஒரு தேர்தல் உடன் பாட்டிற்கு வருகின்றன என்றால், அதில் என்ன தவறு இருக்கமுடியும்?

தேர்தல் உடன்பாடு செய்துகொள்ள, சர்வாதிகாரக் காங்கிரசை முறியடிப்பது என்ற ஒரு காரணம் மட்டும் இருந்தால்கூடப் போதுமே! வேறுவேறு பலப்பல காரணங் கள் வேண்டுமென்ற அவசியம்கூட இல்லையே! தி. மு. கழகமும் சுதந்தராக் கட்சியும் அல்லது தி. மு. கழகமும் மற்றக கட்சிகளும் தேர்தல் உடன்பாட்டிற்கு வருவதற்கு வேறு பல காரணங்கள், கொள்கைகள்—குறிக்கோள்கள் —நோக்கங்கள்—திட்டங்கள்—செயல் முறைகள் ஆகிய வற்றைப் பொறுத்து ஏற்பட்டாலும் நல்லதுதான். அப்படிப்பட்ட காரணங்கள் ஏற்படாவிட்டாலும கவலை யில்லையே! காரணம்—சர்வாதிகாரக் காங்கிரசை முறியடிக் கும் காரணம்—மட்டுமே இருந்தால் கூடப் போதுமே!

கொள்கைகளை விட்டு விட்டுத்தான் அரசியல் கட்சி கள் தமக்குள் ஒரு தேர்தல் உடன்பாட்டிற்கு வரவேண்டு மென்று கூறுபவர் யாரேனும் உண்டென்றால், அவர் ஒன்று அரசியலைப் புரியாதவராக, தெரியாதவராக இருக்க

வேண்டும்; அல்லது அவர் சித்தம் குழப்பி உளறிக் கொட்டும் ஒருவராக இருக்கவேண்டும். ஆனால், இன்னமும் தி. மு. கழகத்துக்கும் சுதந்தராக் கட்சிக்கும் இடையில் எவ்விதமான பேச்சு வார்த்தையோ அல்லது உடன்பாடோ ஏற்படவில்லை என்பது மட்டும் உண்மை. இனிமேல், எதிர் காலத்தில் ஏற்பட்டாலும் அதில் தவறு ஒன்று மில்லை.

வேறுபட்ட கொள்கைகளையும் குறிக்கோள்களையும் கொண்டிருக்கிற தி. மு. கழகம்—சுதந்தராக் கட்சி——கம்யூனிசுட்டுக் கட்சி ஆகியவைகள் எப்படித் தேர்தல் உடன்பாட்டிற்கு வரமுடியும் என்று கேட்டுக், கிண்டல் மொழிகளையும், கேலி மொழிகளையும் முதலமைச்சர் காமராசர் அவர்களும் அவருக்கு, முழுக்க முழுக்க ஆதரவு தந்துவரும் தி. க. தலைவர் பெரியார் இராமசாமி அவர் களும் வீசுகிறார்கள். அவர்கள் இருவரும் தங்களைத் தாங்களே மறந்துவிட்டுப் பேசுகிறார்களே என்றுதான், நமக்கு அவர்கள்பால் கழிபேரிரக்கத்தை உண்டாக்குகிறது; அவர்களின் அறியாமையைக் கண்டு சிரிக்கத் தோன்று கிறது.

தி. மு. கழகமும், சுதந்தராக் கட்சியும், கம்யூனிசுட்டுக் கட்சியும் உடன்பாடு செய்துகொள்வதைக் (அப்படிப்பட்ட நிலை இன்னும் உருப்பெறவில்லை) கேலி செய்யும் தோழர் காமராசர் அவர்கள், எந்த முகத்தை வைத்துக்கொண்டு கேரளாவில், காங்கிரசு—பிரசா சோசியலிசிட்டு—முசுலிம் லீக் ஆகியவற்றிற்கிடையே ஏற்பட்டுள்ள 'முக்கூட்டுக் கட்சி, முறையை ஏற்றுக்கொண்டிருக்கிறார்? எந்த நாக்கை வைத்துக்கொண்டு அதனைப் பாராட்டுகிறார்? கேரளத்தில் 'முக்கூட்டணியை' ஆதரித்துவிட்டுத், தமிழ் நாட்டில் எதிர்க்கட்சிகளின் தேர்தல் உடன்பாட்டைக் கேலி

செய்யும் தோழர் காமராசரின் போக்கை என்ன என்று சொல்வது? இப்படிப்பட்ட நிலைக்குத் தம்மை ஆளாக்கிக் கொண்டிருக்கும் தோழர் காமராசர் அவர்கள், தம் நிலைக்காக வெட்கித் தலைகுனிய வேண்டாமா?

ஒரிசா மாநிலத்தில், பெரும் பணக்காரர்கள், முன்னைய மன்னர்கள், சமின்தார்கள் ஆகியோர்கள் அடங்கிய கன தந்திர பரிசத் என்ற கட்சியுடன் காங்கிரசுக் கட்சி ஒன்ருக இருந்து நேற்றுவரை மந்திரிசபை வைத்திருந்ததே. அதைக் கண்டு வெட்கப்படாத காமராசர்தான் இன்றைக்கு எதிர்க் கட்சிகள் கூட்டுசசேர்வது பற்றிக் கேலி பேசுகிருர்.

கேரளத்தில் கம்யூனிசுட்டுக் கட்சியின் ஆட்சியை முறியடிக்க வேண்டும் என்ற ஒரே ஒரு காரணத்திற்காகக் காங்கிரசு — பிரசா சோசியலிசுட்டு — முசுலிம் லீக் ஆகிய மூன்று கட்சிகளும் 'கூட்டணி' (United front) அமைத்துக் கொண்டு, ஒன்ருக இருந்து, ஒன்ருக வேலை செய்து வந்தன. காங்கிரசுக்கும் முசுலிம்லீக்குக்கும் இருந்த உறவு முறைகள் எப்படிப் பல காலமாக இருந்து வருகின்றன என்பதை நாட்டினர் நன்கு அறிவார்களே! கீரியும் பாம்பும்போல் வாழ்ந்த அந்த இரண்டு கட்சிகளுமே தேர்தலில் 'கூட்டணி' அமைத்துக்கொள்ள முடிகின்றது என்ருல், அடிக்கடி பல பிரச்சினைகளைப் பொறுத்து ஒன்றுபடும் வாய்ப்புகளைப் பெற்றிருக்கிற தி. மு கழகமும் கம்யூனிசுட்டுக் கட்சியும், மோதிக்கொள்ளும் வாய்ப்பை இதுவரையில் ஏற்படுத்திக் கொள்ளாமலிருக்கும் தி. மு. கழகமும் சுதந்தராக்கட்சியும் 'தேர்தல் உடன்பாடு' செய்து கொள்வதில் என்ன தவறு இருக்கமுடியும்?

மேலும் கேரளத்தில் அமைந்திருப்பது 'கூட்டணி' (United front). கூட்டணியில் சேர்ந்துள்ள கட்சிகள் மூன்றும் தனித்தனித் தேர்தல் அறிக்கைகளை வெளியிடவில்லை. அவைகள் மூன்றும் சேர்ந்து கூட்டணியின் சார்

யாக ஒரே தேர்தல் அறிக்கையைத்தான் வெளியிட்டன. தி. மு. கழகமும் சுதந்தராக் கட்சியும் ஏதேனும் ஒரு வகையில் தேர்தல் உடன்பாட்டிற்கு வருகின்றன என்றாலும், அந்தத் தேர்தல் உடன்பாடு 'கூட்டணி' அமைப்பாக இருக்காது என்பதை, இரு கட்சிகளையும் சார்ந்த தலைவர்கள் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டியுள்ளார்கள்.

சுதந்தராக் கட்சியின் பொதுச் செயலாளராக விளங்கும் தோழர் மசானி அவர்கள், "சுதந்தராக் கட்சியும் தி. மு. கழகமும் கூட்டணியாக அமையாது. தொகுதிகளை ஒன்றிற்கு ஒன்று விட்டுக்கொடுக்கும் தன்மையிலும், ஒரு கட்சியின் வேட்பாளருக்கு மற்றொரு கட்சி ஆதரவு தரும் முறையிலும் உடன்பாடு ஏற்படலாம்" என்னும் கருத்துப் பட அறிக்கை யொன்று அண்மையில் வெளியிட்டுள்ளார்கள்.

அதே போன்று தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்கள், பொங்கல் விழாப் பொதுக் கூட்டத்தில் பேசும்போது தி. மு. கழகமும் சுதந்தராக் கட்சியும், கம்யூனிசிட்டுக் கட்சியும் தேர்தலைப் பொறுத்துக் கூட்டணி ஏற்படுத்திக்கொள்ளாது. காங்கிரசுக் கட்சிக்கு எதிராகவுள்ள வாக்குகள் சிதைவுறாதபடிக்கு உடன்பாட்டின் பேரில், அக்கட்சிகள் சிலபல ஏற்பாடுகளைச் செய்து கொள்ளக்கூடும்!" என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

பொதுத்தேர்தலின்போது தி. மு. கழகம் தன்னுடைய தேர்தல் அடையாளமான 'உதய சூரியனை' அடையாளத்தோடுதான் போட்டியிடும். போட்டியிடும் வேட்பாளர்களும் தான் 'தி. மு. க. வேட்பாளர்கள்' என்று சொல்லிக் கொண்டுதான் நிற்பார்கள்; தி. மு. கழகம் தன்னுடைய தேர்தல் கொள்கைகளை உள்ளடக்கித், தனியான 'தேர்தல் அறிக்கை'யைத்தான் வெளியிடும்! அது போலவேதான், கம்யூனிசுட்டுக் கட்சியும், சுதந்தராக் கட்சியும் தங்களுக்

குரிய சேர்தல் சின்னங்களோடு, தனித்தனித் தேர்தல் அறிக்கைகளோடு போட்டியிடும் என்று சொல்லப்படுகிறது.

தி. மு. கழகம், சுதந்தராக் கட்சி, கம்யூனிஸ்ட்டுக் கட்சி ஆகியவற்றிற்கிடையே ஏதேனும் உடன்பாடு ஏற்பட்டால், காங்கிரசுக் கட்சிக்கு எதிராக உள்ள வாக்குகள் சிதறாதபடிக்கு எந்தெந்தத் தொகுதியில் யார் யாருக்கு விட்டுக் கொடுப்பது, காங்கிரசை முறியடிக்கும் வகையில் எப்படியெப்படி ஒருவருக்கொருவர் ஆதரவு தருவது என்பதைப் பொறுத்துத்தான் ஏற்படக்கூடும்.

எதிர்க் கட்சிகளுக்கிடையில் மேற்கண்டவாறு உடன்பாடு ஏற்படும் நிலை உருவானால், அந்த நிலையை விளக்கி வேண்டுமானால் தனியாக ஒரு பொது அறிக்கை வெளிவந்தாலும் வரக்கூடும் அல்லது வராமல் போனாலும் போகக் கூடும். ஆனால், தனித்தனித் தேர்தல் அறிக்கைகளைத் தத்தமது கட்சியின் சார்பாக வெளியிட்டு விட்டுத்தான் இந்தக் கட்சிகள் தேர்தலில் போட்டியிடும் என்பது உறுதி.

தி. மு. கழகத்தைத் தோழர் இராசகோபாலாச்சாரியார் அவர்கள் சதுரங்கக் காயாகப் பயன் படுத்திக்கொள்வார் என்னும் கருத்துப்படப் பெரியார் இராமசாமி அவர்கள் கூறியுள்ளார்கள். வரலாற்றைக் கூர்ந்து கவனித்தால், தோழர் இராசகோபாலாச்சாரியார்தான் தி. மு கழகக் கொள்கையின் பக்கம் வந்து சேர்ந்திருக்கிறாரே யொழிய, தி. மு. கழகத்தார் தோழர் இராசகோபாலாச்சாரியாரின் கொள்கைப் பக்கம் போகவில்லை. தி. மு. கழகத்தார் திராவிட கழகத்தாராக இருக்கும்போதும் சரி, நீதிக்கட்சியினராக இருக்கும் போதும் சரி, காங்கிரசை எதிர்த்து வந்தனர்; இப்பொழுதும் எதிர்த்து வருகின்றனர்; ஆனால், அன்பர் ஆச்சாரியார் அவர்கள் அப்பொழுது காங்கிரசை முழுமூச்சோடு ஆதரித்தார்கள்; இப்பொழுது அந்தக் காங்கிரசைக் கழகத்தாரைப்போல முழுமூச்சோடு எதிர்க்

கிறார்கள். கழகத்தார் அன்றும் இந்தித் திணிப்பை எதிர்த்தார்கள்; இன்றும் எதிர்த்துக்கொண்டு வருகிறார்கள். ஆனால், ஆச்சாரியார் அவர்கள் அன்று இந்தித் திணிப்பை ஆதரித்தார்கள்; இன்று கழகத்தாரைப்போல எதிர்க்கிறார்கள். ஆச்சாரியார் முன்பு கழகக் கொள்கைகளை முழுக்க முழுக்க எதிர்த்தார்கள்; இப்பொழுது கழகத்தின் சிலபல கொள்கைகளை ஆதரிக்கிறார்கள். இவற்றையெல்லாம் பார்க்கும்போது, ஆச்சாரியார்தான் கழகக் கொள்கைகளின் பக்கம் வந்தார் என்று ஆகுமேயல்லாமல், கழகத்தார் ஆச்சாரியாருடைய கொள்கைகளின் பக்கம் சென்றார்கள் என்று ஆகாது. தி. மு. கழகம் தனக்குச் சரியானவை என்றுபட்ட நேரிய கொள்கைகளைத்தான் இதுவரை கடைப்பிடித்து ஒழுகி வந்திருக்கிறது. கழகம் வேறு யாருக்காகவும் வேண்டாத கொள்கைகளை ஏற்றுக் கொண்டதுமில்லை; வேறு யாருக்காகவும் உள்ள கொள்கைகளை விட்டுக்கொடுத்ததுமில்லை. இவையெல்லாம் தி. மு. கழகம் ஆச்சாரியாருக்குச் சதுரங்கக் காயாக ஆகி விடாது என்பதையும், தி. மு. கழகம் ஆச்சாரியாரை சதுரங்கக்காயாகப் பயன்படுத்த விரும்பாது என்பதையுந் தான் வலியுறுத்தும்.

தி. மு. கழகத்தைப் பார்த்து எச்சரிக்கைவிடும் திராவிடக் கழகத்தாரின் நிலைதான் மிகவும் வருந்துவதற்குரியதாகவும், மிகவும் இரங்குவதற்குரியதாகவும் இருக்கிறது. ஏனெனில், இன்று அவர்கள்தான் தோழர் காமராசர் அவர்களின் சதுரங்கக்காயாக ஆகியிருக்கிறார்கள்; அவர்கள்தான் தோழர் காமராசர் அவர்களை அளவுக்கு மீறிப் புகழத் தலைப்பட்டிருக்கிறார்கள்; 'பச்சைத் தமிழர்' என்று கூறிப் பாராட்டுகிறார்கள்; காமராசரைப் போன்று 'அறிவாளியாக' வந்த முதலமைச்சரே இதற்கு முன் இல்லை என்கிறார்கள்; காமராசருடைய சாதனைகளை நூல் வடிவில் வெளியிட்டு விற்பனை செய்துவருகிறார்கள்.

காமராசருக்கு எல்லாவகையான ஆதரவுகளையும் பொது மக்கள் தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறார்கள். காமராசரின் படத்தை ஊராட்சி மன்றம்—நகராட்சி மன்றம்தோறும் திறந்துவைக்கிறார்கள். காமராசரைச் சேர்ந்த காங்கிரசுக்காரர்களின் பணத்தில் திராவிடக் கழகக் கூட்டம் நடத்திக் கொள்கிறார்கள். காமராசரைச் சார்ந்த காங்கிரசுக்காரர்கள் தயவில் கூட்டங்களுக்குச் சென்று வருகிறார்கள். இப்படிப்பட்ட உறவுகள் தி மு. கழகத்திற்கும் ஆச்சாரியாருக்கும் இடையில் எள்ளளவும் இல்லை.

உண்மை நிலையை ஆராய்ந்து பார்த்தால், திராவிட கழகம்தான் தோழர் காமராசர் அவர்களுக்குச் சதுரங்கக் காயாக ஆகியிருக்கிறது என்பதும், தோழர் காமராசர் அவர்கள்தான் திராவிட கழகத்தைச் சதுரங்கக் காயாகப் பயன் படுத்திவருகிறார் என்பதும் தெளிவாகத் தெரியும்.

மனநோய் மருத்துவமனையின் கம்பிகளுக்கு உள்ளே இருக்கும் நோயாளிகள், கம்பிகளுக்கு வெளியே உள்ளவர்களைப் பார்த்து, "பைத்தியக்காரர்கள்" என்று அழைப்பார்கள். அது போலத்தான் மாற்றார்கள் தி. மு. கழகத்தாரைப் பார்த்துக் கூறும் கூற்றும் அமைந்திருக்கிறது!

# கழகமும்
# காங்கிரசும்

இந்திய தேசிய காங்கிரசுக்கும்—திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் உள்ள வேறுபாடுகளைக் காண வேண்டுமென்றால், அவ் விரு கட்சிகளின் பெயர்களைக் கூர்ந்து கவனித்தாலே, அவை நன்கு புரியும்.

காங்கிரசு, இந்தியத் துணைக் கண்டத்தைத், தான் பாடுபடுவதற்குரிய நிலப் பரப்பாகக் கொண்டிருக்கிறது. ஆனால், கழகம் திராவிட நாட்டை அவ்வாறு கொண்டிருக்கிறது.

இந்திய தேசிய வுணர்ச்சியை வளர்ப்பதிலே காங்கிரசு கண்ணுங் கருத்துமாக இருந்து வருகிறது. ஆனால், கழகமோ திராவிட நாட்டின் அரசியல்—பொருளாதார—சமூக முன்னேற்றத்திலே முழுக்கவனம் செலுத்தி வருகிறது.

காங்கிரசு என்றால் 'கூட்டம்' என்று பொருள்படும். இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பல்வேறு வகையான மக்களையும் ஒன்று சேர்த்து ஒரே கூட்டமாகக் கற்பனை செய்து கொள்ளும் காரணத்தால், 'கூட்டம்' என்று பொருள் தரும் சொல், காங்கிரசுக்குப் பொருந்தி வருகிறது போலும்! நாட்டு நலனிலே அக்கறை கொண்ட

அறிவாளிகள் பலரும் கூடும் அமைப்பிற்குப் பெயர் 'கழகம்' என்பது. ''கண்ணுதற் பெருங்கடவுளுங் கழகமோ டமர்ந்து பண்ணுறத் தெரிந்தாய்ந்த பசுந்தமிழினை'' என்று புலவர் ஒருவர் கையாண்டிருப்பதிலிருந்து, 'கழகம்' என்ற சொல்லின் பொருளை எவரும் இனிது உணரலாம். திராவிட நாட்டின் பல்வேறு துறைகளின் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டு வரும் அறிவுடையார் பலரும் கூடி, நாட்டின் நல் விளைவுகளுக்கான வழிதுறைகள் பற்றி ஆய்ந்து, ஆக்கம் பயக்கும் அமைப்பு என்பதைக், ''கழகம்'' என்ற சொல் சுட்டிக் காட்டி நிற்கிறது.

காங்கிரசு வெள்ளையர்களின் துணையால் துவக்கப் பெற்று, இந்தியர்களின் முயற்சியால் நடத்தப்பட்டு வருகிறது. கழகம் திராவிடர்களால் துவக்கப் பெற்றுத், திராவிடர்களால் வளர்க்கப்பட்டு வருகிறது.

காங்கிரசு, இல்லாத இந்தியப் பற்றை அதிகாரத்தால் நிலைநாட்டப் பார்க்கிறது. கழகம், இருந்த திராவிட இனப் பற்றை நினைவுபடுத்திக் காப்பாற்றப் பார்க்கிறது.

காங்கிரசு காப்பாற்றிவரும் இந்தியாவின் எல்லை, வெள்ளைக்கார ஆதிக்க வழி, துப்பாக்கி முனையின் துணை கொண்டு வகுக்கப்பட்டதாகும். ஆனால் திராவிடத்தின் எல்லை, திராவிடமொழி வழி, இயற்கையின் துணையால் அமைந்ததாகும். இந்தியாவின் எல்லைக்கு அடிப்படைக் காரணம் ஆதிக்க வெறியாகும்; ஆனால், திராவிடத்தின் எல்லைக்கு அடிப்படைக் காரணம் மொழியுணர்வாகும்.

காங்கிரசு கோரும் இந்தியாவில், மொழி—கலை—நாகரிகம்—பண்பாடு—உணவு—உடை—பழக்க வழக்கம் போன்றவைகளைப் பொறுத்துப் பொதுவாக நோக்கினால், பல்வேறு பகுதிகளிடையேயும் வேற்றுமைகள் மிகவாகவும், ஒற்றுமைகள் மிக மிகக் குறைவாகவும் காணப்படும்; சிற்சில பகுதிகளுக்கிடையே ஒற்றுமைகள்

அறிவே இருக்காது என்றுகூட அழுத்தந் திருத்தமாகக் கூறலாம். ஆனால், கழகம் கோரும் திராவிட நாட்டில், மேற் கூறப்பட்ட தன்மைகளைப் பொறுத்துப் பொதுவாக நோக்கினால், திராவிடப் பகுதிகள் நான்குக்குமிடையே, வேற்றுமைகள் மிகமிகக் குறைவாகவும், ஒற்றுமைகள் மிகவாகவும் தென்படும்.

காங்கிரசு, "வெள்ளையர் ஆட்சி வெளியேற வேண்டும்; இந்தியா விடுதலை பெற வேண்டும்" என்ற அரசியல் குறிக்கோளையே முழுமுதற் குறிக்கோளாகவும், முடிந்த முடிவானவொரு குறிக்கோளாகவும் கொண்டு பாடுபட்டு வந்தது. ஆனால், கழகமோ அரசியலில் திராவிடம் விடுதலை பெற்ற நாடாகவும், குடியரசு நாடாகவும் திகழ வேண்டும் என்பதையும், பொருளாதாரத் துறையில் சமதர்ம நோக்கத்தின் அடிப்படையில் எல்லோரும் சக்திக்கேற்ற அளவு உழைக்க வேண்டும், எல்லோரும் தேவைக் கேற்ற வசதியைப் பெற வேண்டும் என்பதையும், சமூகத் துறையில் பிறப்பில் உயர்வு தாழ்வு கற்பிக்காத சமத்துவ நெறியும், பகுத்தறிவு நெறியும் தழைக்க வேண்டும் என்பதையும் முக்கிய குறிக்கோள்களாக வைத்துப் பாடுபட்டு வருகிறது.

காங்கிரசின் ஒரே நோக்கமாக இருந்து வந்த 'இந்திய விடுதலை நோக்கம்' இப்பொழுது நிறைவேறிவிட்டது; இப்பொழுது அதற்கென்று வலுவான கொள்கை நோக்கம் எதுவும் இல்லை; எனவேதான் அது மக்களின் பிடிப்பை மெல்ல மெல்ல இழந்து வருகிறது. கழகத்தின் அரசியல்—பொருளாதார—சமூக நோக்கங்களை நிறைவேற்றும் முயற்சிகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால், கழகம் உயிர்த் துடிப்புள்ள வலுவான கொள்கைகளைக் கொண்ட இயக்கமாக இருந்து வருகிறது; எனவேதான், அது மக்களின் பிடிப்பை மெல்ல மெல்லப் பெற்று வருகிறது.

காங்கிரசு, கழகத்தை ஒரு பகை இயக்கமாகக் கருதி வருகிறது. ஆனால், கழகமோ காங்கிரசைப் பகை இயக்கமாகக் கருதவில்லை. காங்கிரசானது இந்திய விடுதலையாகிய முதல் தேவையை நிறைவேற்றிய அமைப்பு என்றும், திராவிட விடுதலையாகிய இரண்டாவது தேவையை நிறைவேற்றி வைக்க முன்வராத—முன்வர இயலாத அமைப்பு என்றும் கழகம் அதைப்பற்றிக் கருதி வருகிறது. காங்கிரசிடத்துக் கொண்ட பகையின் காரணமாக அல்ல தி. மு. கழகம் தோன்றியிருப்பது; காங்கிரசு செய்யத் தவறிய சில இன்றியமையாத் தேவைகளை நிறைவேற்றி வைக்கவே அது தோன்றி இருக்கிறது.

காங்கிரசு, கழகத் தோழர்களை அழித்தொழிக்க எண்ணுகிறது; ஆனால், கழகமோ காங்கிரசுக்காரர்களைத் தெளிவு பெறச் செய்ய விரும்புகிறது. காங்கிரசு, கழகத்தைக் கண்டு ஆத்திரங் கொள்கிறது; ஆனால், கழகம் காங்கிரசைக் கண்டு இரக்கங் கொள்ளுகிறது. காங்கிரசு, வன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக் கழகத்தை எதிர்க்கிறது; ஆனால், கழகமோ இன்முறைச் செயல்களில் ஈடுபட்டுக் கழகக் கருத்துக்களைப் பரப்புகிறது. காங்கிரசு ஏசுகிறது; ஆனால், கழகமோ அறிவுரை பகர்கிறது. காங்கிரசு கழகத்தைப் பொறாமைக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறது; ஆனால், கழகமோ காங்கிரசைக் கழிபேரிரக்கக் கண்ணோட்டத்தோடு பார்க்கிறது.

பொதுவாக நோக்கினால் காங்கிரசு நாளுக்கு நாள் வீழ்ந்து கொண்டு வருகிறது; ஆனால், கழகமோ நாளுக்கு நாள் வளர்ந்துகொண்டு வருகிறது. காங்கிரசும் இன்னும் வீழவேண்டிய அளவுக்கு வீழ்ந்துவிடவில்லை; கழகமும் இன்னும் வளரவேண்டிய அளவுக்கு வளர்ந்துவிடவில்லை. ஆனால், காங்கிரசு வீழ்ந்து கொண்டிருக்கிறது என்பதும், கழகம் வளர்ந்து கொண்டிருக்கிறது என்பதும் மட்டும்

உறுதி. காங்கிரசின் வீழ்ச்சி நிலையோடு, கழகத்தின் வளர்ச்சி நிலையை ஒப்பிட்டுப் பார்த்தால், அதன் வீழ்ச்சி நிலை இதன் வளர்ச்சி நிலையைவிட இன்னும் உயரத் திலேயேதான் இருந்து வருகிறது என்பதும், இன்னும் சமநிலைக்குக்கூட இரண்டும் வந்து சேரவில்லை என்பதும், காங்கிரசு சிறிது சிறிதாக வீழ்கிறது, கழகம் சிறிது சிறிதாக வளர்கிறது என்பதும் தெள்ளத் தெளிவாக விளங்கும்.

நாட்டிலுள்ள நூற்றுக்கு நூறு ஊராட்சி—நகராட்சி—மாவட்டாட்சி மன்றங்கள் அனைத்தும் காங்கிரசு ஆதிக்கத்தின் கீழ்தான், என்ளுருகாலம் இருந்தது; இப்பொழுது மிகப் பெரிய நகராட்சி மன்றமான தமிழக மாநகராட்சி மன்றம் காங்கிரசின் கையிலே இல்லை, கழகத்தின் கையில் இருக்கிறது. அதற்கு அடுத்த பெரிய நகராட்சி மன்றம் மதுரை நகராட்சி மன்றமாகும். அதில் காங்கிரசு ஆதிக்கம் கொண்டிருந்தது; இப்பொழுது சுதந்தராக் கட்சி ஆதிக்கம் செலுத்துகிறது. அதற்கு அடுத்த நகராட்சி மன்றம் கோவை; அதில் காங்கிரசு இருந்தது; இப்பொழுது கம்யூனிசுட்டுக் கட்சித் தோழர் ஆட்சி செலுத்தி வருகிருர். அதற்கு அடுத்த நகராட்சி மன்றம் சேலம்; அதில் காங்கிரசு இல்லை; சுயேச்சை உறுப்பினர் ஆட்சி செலுத்தி வருகிருர். இப்படிப் பல நகராட்சி மன்றங்கள், ஊராட்சி மன்றங்கள் காங்கிரசின் கையிலே முன்பு இருந்தன; இப்பொழுது இல்லை. பத்து ஆண்டுக்காலத்திற்கு முன்னுல் ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், சட்ட மன்றம், பாராளு மன்றம் ஆகியவற்றில் கழகம் அறவே நுழைய முடியாது என்ற நிலை இருந்தது; இப்பொழுது நூற்றுக்கு இருபதுக்கு மேற்பட்ட ஊராட்சி மன்றங்கள் கழகத் தோழர்களின் ஆட்சியில் இருக்கிறது என்று கூறலாம்; பல ஊராட்சி, நகராட்சி மன்றங்களில் கழகத் தோழர்கள் வியக்கத்தக்க அளவுக்கு நுழைந்திருக்கின்றனர்; சட்ட மன்றத்தில் வீற்றிருக்கின்றனர்; பாராளு மன்றத்

திரந்தச் சென்றிருக்கின்றனர். முன்பு கிளைகள் இல்லாத ஊர்களிலே கிளைகள் தோன்றி இருக்கின்றன; கழகக் கொடி பறக்காத பல ஊர்களில் கழகக்கொடிகள் வானுற ஓங்கிப் பறக்கின்றன; படிப்பகங்கள் இல்லாத பல ஊர்களில் படிப்பகங்கள் தோன்றியிருக்கின்றன; கழகக் கூட்டங்களைக் காணாத பல ஊர்களில் கழகக் கூட்டங்கள் சீரும் சிறப்பும் பெற நடைபெற்று வருகின்றன; கழக உறுப்பினர்கள் எண்ணிக்கையும், ஆதரவாளர்கள் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் வளர்ந்து வருகின்றன. ஆகவே இவை யெல்லாம் கழகம் மெல்ல மெல்ல வளர்ந்து வருகிறது என்பதைக் காட்டும் அறிகுறிகளாகும்!

காங்கிரசு அதிகாரம்—பணம்—சாதி ஆகிய வலிவுகளை வைத்துக்கொண்டுதான் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. ஆனல், கழகமோ கருத்து—பண்பு—உழைப்பு ஆகியவற்றை வைத்துக்கொண்டுதான் பொதுமக்களின் நல்லாதரவைப் பெற முயன்று வருகிறது.

கழகத்திற்குக் கூட்டம் கூடும்; ஆனல், காங்கிரசுக்கு ஓட்டுக் கிடைக்கும் என்று தமிழக முதலமைச்சர் அவர்கள் கூறிய கூற்று உண்மைதான். அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டவர்கள் கொஞ்சம் கொஞ்சமாகத்தான் வளருகிறர்கள்; அவர்கள் வளர வளரத்தான் கழகத்திற்குக் கூட்டம் சிறிது சிறிதாகச் சேர்கிறது. சிறிது சிறிதாகச் சேரச் சேரத்தான், ஓட்டுகளும் சிறிது சிறிதாகக் கிடைக்கின்றன. அரசியல் விழிப்புணர்ச்சி கொண்டவர்களைக் காட்டிலும், விழிப்புணர்ச்சி அற்றவர்கள்தான் நாட்டிலே ஏராளம். அவர்களுக்கு அரசியல் அவ்வளவாகப் புரியாது. அவர்களுக்கெல்லாம் என்ன புரியும் என்பது தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும். அவர்களில் பெரும்பாலோருக்கு அரசியலைவிட பணந்தான் தெளிவாகத் தெரியும் என்பது தமிழக முதலமைச்சர் அவர்

களுக்குப் புரியும். எனவேதான், தமிழக முதலமைச்சர் அவர்கள், வாக்காளருக்குப் புரிந்த பணத்தைக் கொடுத்து, அவர்களுக்குப் புரியாத ஓட்டுகளைப் பெறுவதிலே கண்ணும் கருத்துமாக இருப்பதோடு, அதனைத் திறம்பட நிறைவேற்றுவதில் வல்லுநராகவும் இருந்து வருகிறார். பணத்திற்கும், சாதிக்கும் மயங்குகிற கூட்டமும், அதிகாரத்திற்கு அஞ்சுகிற கூட்டமும் இருக்கிற வரையில், தமிழக முதலமைச்சர் பாடு கொண்டாட்டந்தான். ஆனால், இந்தக் கூட்டம் மெல்ல மெல்லக் குறையும் என்பதும், அரசியல் விழிப்புணர்ச்சி கொண்ட மாணவர்கள் கூட்டமும், இளைஞர்கள் கூட்டமும் நாளுக்கு நாள் வளரும் என்பதும், வளருகின்ற கூட்டம் கழகத்திற்கு ஆதரவு தருவதாக அமையும் என்பதும் சூழ்நிலைகளை ஆராய்ந்து பார்ப்பவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்!

மேலும் அகில இந்திய தேசியத்தைப்பற்றி நிற்கும் காங்கிரசு, பண்டித நேரு காலம் வரையிலுந்தான் வலிவு பெற்று விளங்கும். பண்டித நேரு காலத்திற்குப் பிறகு அகில இந்திய தேசியம் பட்டுப்போகும் என்பது திண்ணம். அது பட்டுபோனல், அதன்மீது கட்டப்பட்டிருக்கும் காங்கிரசும் அறவே அற்று விழும் என்பதும் உறுதி பிடிப்பில்லாத அகில இந்திய தேசியத்தைவிட, பிடிப்புள்ள திராவிட இனப்பற்று மேலும் மேலும் வளரும், வளம் பெறும், வாழும் என்பது கண்கூடு. திராவிட இனப்பற்றும், நாட்டுப்பற்றும், விடுதலை வேட்கையும், பற்றும் வளர வளரக் கழகம் வலிவும் பொலிவும் பெறும் என்பது தெளிவு. கழகம் பரவப் பரவக் காங்கிரசு மறையும்; கழகம் வளர வளரக் காங்கிரசுக்காரர்கள் மாறுவார்கள்.

காங்கிரசு வரலாற்றை முடித்துக்கொண் டிருக்கிறது; கழகம் வரலாற்றைத் துவக்கிக்கொண் டிருக்கிறது!

# கழகமும்
# புதிய கட்சியும்

திராவிட முன்னேற்றக் கழகத்திலே ஈடுபாடுகொண்டிருந்தவர்களில் மிகச் சிலர், மன வேறுபாடு கொண்டு, கழகத்தைவிட்டு விலகித் 'தமிழ்த் தேசியக் கட்சி' என்னும் பெயரில், புதிய தேசியக் கட்சி ஒன்றை, அதன் தலைவராக அமைந்துவிட்டவரின் விருப்பத்திற்கேற்ப உண்டாக்கியிருக்கிறார்கள்.

இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பதைக் கண்டு, தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களும், ஆதரவாளர்களும் மிகவும் மனவேதனைக்குள்ளாகி யிருக்கிறார்கள்.

நாட்டில் நல்லதோர் அரசியல் விழிப்புணர்ச்சியும், நல்லதோர் அரசியல் சூழ்நிலையும், நல்லதோர் ஆட்சி மேம்பாடும் ஏற்படவேண்டும் என எண்ணி, அவற்றைத் தி. மு. கழகம் மெல்ல மெல்ல ஏற்படுத்தி வருவதைக் கண்டு மகிழ்ந்துகொண்டிருக்கும் பொதுமக்கள் மிகவும் வருத்தப்படுகிறார்கள்.

மிகவும் கட்டுக்கோப்போடு வளர்ந்துவரும் தி. மு. கழகம் நிலைகுலைந்து சரிந்து வீழ்வதற்கு இந்த நிலைமை பயன்படாதா, என்று எண்ணிக் காங்கிரசு அமைச்சர்களும் காங்கிரசுத் தலைவர்களும் அகமகிழ்கிறார்கள்.

தலைவர்களையும், தொண்டர்களையும் விலை கொடுத்தாவது வாங்கி, அவர்களைத் தம் கட்சியில் சேர்த்துத், தம் கட்சியின் வலிவையும், உறுப்பினர் எண்ணிக்கையையும் பெருக்கிக்கொள்ள வழி ஏற்படாதா என்று எண்ணித், தேடியலைந்து திரிந்துகொண்டிருக்கும் சில கட்சியினர், இந்த நிலைமையை மிக ஆவலோடு வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் "இவ்வளவு காலம் கழித்த பிறகாவது என் மகனுக்கு என் புத்தி வந்ததே என்று எண்ணி மகிழ்கிறேன்" என்னும் கருத்துப்படக் கூறி, இந்த நிலைமையைக் கண்டு பூரித்துப் போயிருக்கிறார்கள்.

திராவிடக்கழகத்தைச் சார்ந்தவர்கள், தந்தை பெரியார் அவர்களின் சொத்துக்களுக்கும், தந்தை பெரியார் அவர்களின் பாதுகாப்பில் இருந்துவரும் அறநிலையச் சொத்துக்களுக்கும், தந்தை பெரியார் அவர்களால் கட்டிக் காத்து வளர்க்கப்படும் திராவிடக் கழகச் சொத்துக்களுக்கும், தந்தை பெரியார் அவர்களால் இப்பொழுது 'இறுதியாகச்' சொல்லப்பட்டுவரும் கொள்கைகளுக்கும் வாரிசாக அமையக்கூடிய வகையில், மகனுல் புதிய கட்சி ஒன்று ஏற்றவாறு தோற்றுவிக்கப்பட்டிருக்கிறதே என்பதை அறிந்து மகிழ்ந்துகொண்டிருக்கிறார்கள்.

தி. மு. கழகக் கலைஞர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பெயர்—பெருமை—புகழ்—மதிப்பு போன்றவைகளைக் கண்டு பொருமை யுள்ளத்தோடு பொருமிக்கொண்டிருந்த கலையுலகத்தைச் சேர்ந்த சிலர், தி. மு கழகத்தில் ஏற்பட்டிருக்கும் பிரிவு கண்டு உவகை கொண்டுள்ளார்கள்.

வடநாட்டு ஆதிக்கத்தை எதிர்த்துப் போராடிவரும் தி. மு. கழகத்தில் பிளவு என்பது, வடநாட்டு ஆதிக்கக்காரர்களுக்கு—வடநாட்டு முதலாளிகளுக்கு—வடநாட்டு

அரசியல் தலைவர்களுக்கு—வடநாட்டு அமைச்சர்களுக்குப் பூரிப்புத் தரும் செய்தியாக அமைந்துவிட, தி. மு. கழகம் வளர்வது தங்கள் வளர்ச்சிக்குத் தடை என யார் யார் கருதினார்களோ, அவர்களெல்லாம், மனங்குளிரப் புதிய கட்சி அமைவதை வரவேற்றுள்ளனர், வாழ்த்தியுள்ளனர். எல்லாவிதமான ஆதரவையும் உதவியையும் தர முன் வந்துள்ளனர்.

குற்றம்—குறை—இழிபண்பு—இழிநடத்தை — நாணயக் குறைவு—நீதிக்குப் புறம்பான போக்கு—கடமை தவறுதல்—கட்டுப்பாட்டை மீறுதல்—ஒழுங்கைப் புறக்கணித்தல் போன்ற பல்வேறு காரணங்களுக்காகத் தி. மு. கழகத்தை விட்டு விரட்டப்பட்டவர்கள்—விலக்கப்பட்டவர்கள் — ஒதுக்கப்பட்டவர்கள் — தள்ளி வைக்கப்பட்டவர்கள்—தானே விலகி ஓடினவர்கள்—மேலும் அரசியலிலே கைவிடப்பட்ட திக்கற்றவர்கள்—இடந்தேடிகள்—நல்ல அரசியல் கட்சிகளால் தீண்டப்படாதவர்கள் போன்றவர்களெல்லாம் தாம் புகலிடம் பெறுவதற்கு ஏற்ற வகையில் புதுக் கட்சி தோன்றியிருக்கிறதே என்று எண்ணி இறும்பூதெய்துகிறார்கள்.

தி. மு. கழகத்தின் நலத்திலே நாட்டங்கொண்டுள்ள நல்லவர்களுக்கு இப்பொழுது ஏற்பட்டுள்ள வருத்தமும், வேதனையும், சில நாட்களில் குறைந்துவிடக் கூடியனவே யாகும். தி. மு. கழகத்திற்கு இழிவும்—பழியும்—வீழ்ச்சியும்—அழிவும் ஏற்படவேண்டும் என்று எண்ணிக்கொண்டிருக்கிற தீயவர்களின் மகிழ்ச்சியும்—பூரிப்பும்—உவகையும் அதைவிட இன்னுஞ் சில நாட்களுக்குள்ளாகவே குறைந்துபோகும் என்பது உறுதி. இதனை, இப்பொழுது தரப்படும் விளக்கங்களைவிட சில நாட்கள் கழித்துக் காணப்படும் நிலைமையே மிகத் தெள்ளத் தெளிவாக விளக்கிக் காட்டும்.

கழகத்தவர்கள் வருத்தமும், வேதனையும் கொள்ளுகிறார்கள் என்றால், அதற்குக் காரணம், சிலபல ஆண்டுகளாகத் தம்மோடு 'குடும்பப்பற்றோடு' பழகிவந்த நண்பர்கள் அந்தப் பற்றினை அறவே விட்டுவிட்டுப், பிரிந்து போகிறார்களே என்பதுதான். கழகத்தை விட்டுப் புதிய கட்சிக்குப் பிரிந்து சென்றவர்கள் மிகமிகச் சிலர்தான், அதாவது மூன்று இலட்சத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்களில், ஏப்ரல் திங்கள் மூன்றாவது வாரத்திற்குள்ளாகப் பிரிந்தவர்களின் எண்ணிக்கை நானூற்றுப் பதினொன்றுதான். என்றாலும், அந்தச் சிலர்கூடப் பிரிந்துசெல்லும்படியான நிலைமை ஏற்பட்டுவிட்டதே என்பதை எண்ணித்தான் கழகத் தோழர்கள் வருந்துகிறார்கள். இப்பொழுது சிலர் பிரிந்து போயிருப்பது மகிழ்ச்சிக்குரிய நிகழ்ச்சியா என்றால், இல்லை; இல்லவே இல்லை! பொதுவாக வருந்துவதற்குரிய, வேதனைப் படுவதற்குரிய நிகழ்ச்சிதான். ஆனால், இந்த நிகழ்ச்சியை "இனி என்ன செய்வோம்?" என்று எண்ணிக் கலங்குவதற்குரிய நிகழ்சியாகவோ, அல்லது "கழகம் அழிந்து விடுமோ!" என்று நினைத்து அஞ்சுவதற்குரிய நிகழ்ச்சியாகவோ கழகத் தோழர்கள் எவரும் கருதவில்லை; மிக மிக எளிமையாகச் சமாளிக்கக்கூடிய மறக்கக்கூடிய நிகழ்சியாகவே கருதுகிறார்கள். ஏனெனில், மன எரிச்சலின் காரணமாக மனம் வேறுபட்டுக், கழகத்திடத்து வெறுப்புக் கொண்டு, கழகத்தைவிட்டு வெளியேறுபவர்கள் எவ்வளவு பேர்கள் இருப்பார்கள் என்று கணக்கிட்டால், அவர்கள் மிகமிகக் குறைவானவர்கள்தான். ஆனால், மனத் தெளிவு ஏற்பட்டு, மனமகிழ்ச்சியோடு கழகத்தில் வந்து புதிதாகச் சேருபவர்கள் என்று கணக்கிட்டால் அவர்கள் மிகப் பெரும்பாலானோராவார்கள்.

தி. மு. கழகம் தோற்றம் கொண்டதற்குக் காரணம், திராவிடக் கழகத் தலைவர் பெரியார் இராமசாமி அவர்களின் போக்கிலே மாற்றம் ஏற்பட்டதுதான்; ஆனால், புதிய தேசி

யக் கட்சி ஏற்படுத்தப்பட்டிருப்பதற்குக் காரணம், தி. மு. கழகத்தை விட்டுப் பிரிந்து புதிய கட்சியைக் கண்டுள்ள தலைவரின் போக்கிலே மாற்றம் தோன்றியிருப்பதுதான்.

திராவிடக் கழகத்திலே தலைவர் பெரியார் இராமசாமி அவர்கள் திருமணம் என்ற பெயரால் கழகத்திற்கான ஒரு ஏற்பாடு செய்ய முற்பட்டுத், தம் கொள்கையையும், போக்கையும் மாற்றிக்கொண்டார்கள்; அப்பொழுது பிரிந்து சென்றவர்கள் தம் கொள்கையையோ, போக்கையோ மாற்றிக் கொள்ளவில்லை; ஆனால், இப்பொழுது, தி. மு. கழகத்தின் வழிகாட்டியான பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களோ, கழகத்தில் இருந்து தொண்டாற்றுபவர்களோ, தம் கொள்கையையோ அல்லது போக்கையோ மாற்றிக்கொள்ளவில்லை; தி.மு. கழகத்தை விட்டுப் பிரிந்து சென்றவர்கள்தாம் தம் கொள்கைகளையும், போக்கையும் மாற்றிக் கொண்டுள்ளனர்.

அப்பொழுது நெருக்கடியான—சனநாயகமற்ற—புதிய சூழ்நிலையை உருவாக்கவேண்டாம் என்று, பிடிவாதம் செய்த தலைவர் பெரியார் அவர்களைக், கழகத் தோழர்கள் கண்ணீர்த்துளிகளாய் மாறிக் கெஞ்சிக்கேட்டுக் கொண்டார்கள்; ஆனல், இப்பொழுது, கழகப் பொதுச்செயலாளர் அறிஞர் அண்ணா அவர்களும், மற்ற கழகத்தோழர்களும், பிடிவாதத்துடன் ஆத்திரக்காரராய் மாறிப் பிரிந்து சென்ற புதிய கட்சியின் தலைவரைத், இய புதிய சூழ்நிலையை உருவாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொண்டுள்ளனர்.

அன்று, தி. கழகத்தினராகத் தங்கியவர்கள் சிலர்; தி.மு. கழகத்தினராகப் பிரிந்தவர்கள் மிகப் பலர்; ஆனல், இன்று, தி. மு. கழகத்தினராகத் தங்கியிருப்பவர்கள் பலர்; புதிய தேசியக் கட்சியினராகப் பிரிந்தவர்கள் மிகச் சிலர்.

அன்று, கழக உறுப்பினர்கள் பலரும் தாமாகப் பிரிந்து, அறிஞர் அண்ணா அவர்களை வழிகாட்டியாக இருக்கும்படி

கேட்டுக்கொண்டார்கள்; ஆனால், இன்று ஏதேதோ காரணங்களால் மனம் வேறுபட்டுப் பிரிந்த ஒருவர், தாம் வழிகாட்டியாக இருப்பதாகக்கூறி, மற்றவர்களைத் தி. மு. கழகத்தை விட்டுப் பிரிந்து வரும்படியாகக் கேட்டுக்கொண்டுள்ளார்.

அன்று திராவிடக் கழகத்தில் பிரிவு ஏற்படத் 'தந்தை' காரணமாக இருந்தார்; ஆனால் இன்று, தி. மு. கழகத்தில் பிரிவு ஏற்படத் 'தனயன்' காரணமாக இருக்கிறார்.

அன்று அறிஞர் அண்ணா அவர்கள், புதியதோர் அரசியல் கட்சியின் தலைமைப் பொறுப்பேற்று நடத்த, தம்மால் இயலாது என்று அடக்கவுணர்வின் காரணமாகக் கூறி, ஒதுங்கிவிடவே முதலில் எண்ணினார்கள்; ஆனால், இன்று, புதிய கட்சியின் தலைவர், தலைமைப் பொறுப்பை ஏற்று நடத்த, தமக்கு எல்லாவிதத் தகுதிகளும் இருக்கின்றன என்பதை,ஆணவ உணர்வு தோன்றப் பேச்சிலும், எழுத்திலும் காட்டித், தமக்காகத் தலைமைப் பதவியை ஏற்படுத்தி, ஏற்றுக்கொண்டுள்ளார்.

அன்று, தி. மு. கழகம் திராவிடக் கழகத்தின் அடிப்படைக் கொள்கைகளை மாற்றிக்கொள்ளவில்லை. செம்மையாகச் செயலாற்ற, முறைகளையும், திட்டங்களையும், போக்குகளையும் மட்டுந்தான் உண்டாக்கிக்கொண்டது; ஆனால், இன்று, புதிய தேசியக் கட்சி, திட்டங்களையும் அடியோடு மாற்றிக்கொண்டிருப்பதோடு, அடிப்படைக் கொள்கைகளையும் அடியோடு மாற்றிக்கொண் டிருக்கிறது.

தி. மு. கழகம், பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் என்ற நான்கு திராவிட மாநிலங்களைச், சமத்துவ அடிப்படையில் கொண்ட திராவிடக் கூட்டாட்சி நாடு அமைய வேண்டும்

என்று கோருகிறது; ஆனால், புதிய கட்சி பிரிந்துபோகும் உரிமையோடு கூடிய மாநிலங்களைக் கொண்ட இந்தியா ஒரேநாடாக இருந்தால் போதும் என்கிறது.

தி. மு. கழகம், திராவிடம் வடநாட்டினின்றும் விடுதலைபெற்று, முழு ஆட்சி உரிமை கொண்ட தனிக் கூட்டாட்சி நாடாக விளங்கவேண்டும் என்று கூறுகிறது; ஆனால், புதிய கட்சி இந்தியா ஒரு கூட்டாட்சி நாடாகவே இருக்கட்டும், தமிழகம் மாநிலத் தன்னாட்சி பெற்றால்மட்டும் போதும் என்று கருதுகிறது.

தி. மு. கழகம், வடவரின் ஆட்சி ஆதிக்கமோ, வடவரின் வாணிக ஆதிக்கமோ—தொழிலாதிக்கமோ அல்லது வேறு எந்த வெளிநாட்டவரின் வாணிக—தொழிலாதிக்கமோ திராவிடத்தில் இருக்கக்கூடாது என்றும், திராவிடத்தின் நலத்திற்குகந்த முறையில் சட்டதிட்டங்களுக்கு உட்பட்ட அனுமதியின்பேரில் அவர்கள் வாணிகமோ, தொழிலோ திராவிடத்தில் நடத்த வேண்டும் என்றும் கூறுகிறது; ஆனால், புதிய கட்சி வடநாட்டவர்கள் தமிழகத்தில் எவ்வளவு தொழில்களை வேண்டுமானாலும் துவக்கி, எவ்வளவு வாணிகம் வேண்டுமானாலும் செய்து கொள்ளலாம் என்னும் கருத்துப்படச் சொல்லியுள்ளது.

தி. மு. கழகம், சமத்துவத்தையும், சமதர்மத்தையும் அடிப்படையாகக்கொண்டு, 'சக்திக்கு ஏற்றபடி எல்லோரும் உழைத்தே தீரவேண்டும், தேவைக்கேற்ற வசதிகளை எல்லோரும் பெற்றே தீரவேண்டும்' என்ற பொருளியல் கொள்கையைக் கொண்டிருக்கிறது; ஆனால், புதிய கட்சி எந்த ஓர் 'இசத்தை'யும் (கொள்கை வகை) பின்பற்றப்போவதில்லை என்று கூறியிருக்கிறது.

இவற்றிலிருந்து பெறப்படுவன என்னவென்றால், புதிய கட்சி, தி. மு. கழகம் கொண்டிருக்கும் 'திராவிட

நாட்டு விடுதலை வேட்கை' யுணர்வை விட்டுவிட்டுக், காங்கிரசுக் கட்சி கொண்டிருக்கும் 'அகில இந்திய தேசிய' உணர்வைப் பெற்றுக்கொண்டிருக்கிறது என்பதும், தி. மு. கழகம் மேற்கொண்டிருக்கும் 'சமதர்மக்' கொள்கையை விட்டுவிட்டுக், காங்கிரசுக் கட்சி கடைப்பிடிக்கும்,—இருக்கும் நிலையை அப்படியே காப்பாற்றித் தரும் 'மாதிரி சமதர்மக்' கொள்கையை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்பதும், தி. மு. கழகம் எதிர்த்துவரும் வடநாட்டுப் பொருளாதார—அரசியல் ஆதிக்கத்தைப், புதிய கட்சி, வலிந்து ஏற்றுக்கொண்டுள்ளது என்பதும் ஆகும்.

புதிய கட்சியின் கொள்கைகள், தி. மு. கழகத்தின் கொள்கைகளைவிட மிகச் சிறந்தவை என்றோ, செம்மைப் பட்டவை என்றோ, சீர்பெற்றவை என்றோ, வளர்ச்சி பெற்றவை என்றோ வரலாறு அறிந்த எவரும் ஒப்புக் கொள்ளமாட்டார்கள். ஏனெனில், அந்தக் கொள்கைகளிலிருந்து படிப்படியாக, முறையாகச், செம்மையாக, நடைமுறைப் பழக்கத்தில் வளர்ந்து வந்த கொள்கைகளைத்தான் தி. மு. கழகம் கொண்டிருக்கிறது.

முதல் கட்டமாக வெள்ளையர்கள் இந்த நாட்டை ஆண்டுவந்த காலத்தில், அவர்கள் மாநிலங்களைக், கண்ட கண்டவாறு, ஒரு கொள்கை அடிப்படையில்லாமல் பிரித்து வைத்திருந்தார்கள்.

பிறகு இரண்டாவது கட்டமாகக், காங்கிரசுக் கட்சி வளர்ந்து, இந்திய விடுதலை வேட்கை யுணர்வைக்கொண்ட காலத்தில், மொழி அடிப்படையில் மாநிலம் அமைய வேண்டும் என்ற உணர்வு தோன்றி, தமிழ் மொழி வழங்கும் பகுதி 'தமிழ் நாடு' என்று தனி மாநிலமாக அழைக்கப் படவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பிறகு மூன்ருவது கட்டமாக, மத்திய அரசிடம் குவிந்துகிடக்கும் உரிமைகள், மாநிலங்களுக்கிடையில்

பரவலாகப் பகிர்ந்தளிக்கப்படவேண்டும் என்ற உரிமை வேட்கை தோன்றிய காலத்தில், "தமிழ் நாடு" மிக உரிமை பெற்ற தன்னாட்சி மாநிலமாக ஆகவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பிறகு, நான்காவது கட்டமாக, தமிழகத்தில் நாட்டுப் பற்றும், மொழிப்பற்றும் கொண்ட அறிஞர் பெருமக்கள், விடுதலை வேட்கை புணர்வுகொண்டு வீறிட்டெழும்பிய காலத்தில், வடநாட்டு மத்திய ஆட்சியினின்றும் அறவே விடுபட்டுத், தமிழுக்கே முழு உரிமையும் உடைய 'தமிழ் நாடு' அமையவேண்டும் என்று வற்புறுத்தப்பட்டது.

பிறகு, ஐந்தாவது கட்டமாகத் திருவாரூரில் நடைபெற்ற நீதிக்கட்சி மாநாட்டில் கூடிய தமிழக—ஆந்திர—கருநாடகக்—கேரளத் தலைவர்கள், தாம் நால்வரும் மொழி வழி வேறுபட்டிருந்தாலும், திராவிட இனவழி ஒன்றுபட்ட ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற உணவு பெற்ற காலத்தில், தமிழகம் எந்த எந்தக் காரணங்களுக்காக வடநாட்டிலிருந்து பிரியவேண்டும் என்று கூறப்படுகிறதோ, அந்தக் காரணங்கள் அனைத்தும், ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய பிற திராவிட மாநிலங்களுக்கும் பொருந்தி வரக்கூடியவைகளாக இருக்கின்றன என்றும், தமிழகம் வடநாட்டினின்றும் பிரிவதால் ஏற்படும் நன்மைகள், ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய மாநிலங்களும் தனித்தனியாகப் பிரிவதால் அவற்றிற்கும் ஏற்படுகின்றன என்றும், இனம்—மொழி—பழக்க வழக்கம்—உணவு—உடை-சிற்பம்—ஓவியம்—வரலாறு—வாணிகம்—கொடுக்கல் வாங்கல்—கொள்வினை கொடுப்பினை—நிலத்தொடர்பு — மலைத்தொடர்பு — ஆற்றுத்தொடர்பு—நாகரிகம்—பண்பாடு ஆகியவற்றால் ஒருமைப்பாடுகொண்ட நான்கு மாநிலங்களும், தேவையான வழிகளில், குறைந்த அளவு திட்டங்களில், ஒன்றுபட்ட ஒரு கூட்டாட்சி நாடகத் திகழுமேயானல், மேலும் பல நன்மைகள் ஏற்பட

வழியிருக்கிறது என்றும், ஆகவே திராவிடர்க்கே முழு உரிமையும் கொண்ட திராவிட நாடு அமையவேண்டும் என்றும் வற்புறுத்தப்பட்டன.

திராவிட முன்னேற்றக் கழகம், படிப்படியாக உயர்ந்து, ஐந்தாவது கட்டத்தில் உருவாகியுள்ள கொள்கைகளில்தான் தொடர்ந்து, அப்பழுக்கற்ற முறையில், ஐயப்பாட்டிற்கு இடமில்லாத வகையில், நீங்காப்பற்றோடும், தணியா ஆர்வத்தோடும், அறிவாராய்ச்சித் திறனோடும், அவ்வப்போது உலகியலில் வளர்ந்துவரும் நிலைமைகளோடு ஒப்பிட்டுப் பார்த்துத் தெளிவுபெறும் திறனோடும், தன் முழுக் கவனத்தையும் செலுத்திக்கொண்டு வருகிறது. இப்பொழுது கொண்டிருக்கும் கொள்கைகளை விட மேலும் வளர்ச்சியுற்ற சிறந்த நிலை ஏற்படுகிறவரையில், இப்பொழுது கொண்டுள்ள கொள்கைகளைக் கடுகளவும் மாற்றிக்கொள்ளவேண்டிய இன்றியமையாமை தி. மு. கழகத்திற்கு ஏற்படவில்லை. மேலும், தி. மு. கழகம், தன் கொள்கைகள் வெற்றி பெறுவதற்கான சூழ்நிலைகளும், வாய்ப்புகளும், வசதிகளும் தமிழகத்திலும், திராவிடத்திலும், இந்தியத் துணைக்கண்டத்திலும், உலகிலும் மெல்ல மெல்ல வளர்ந்து வருவதையும் கண்டு, அவற்றை மகிழ்ச்சியோடு வரவேற்றுக்கொண்டிருக்கிறது. ஆனால், புதிய கட்சியினர், தன்னம்பிக்கையற்றுத், தமிழ் நாடு, இந்தியாவில் தன்னாட்சி உரிமை பெற்ற தனி மாநிலமாகத் திகழ்ந்தால் போதும் என்ற மூன்றாவது கட்டத்திற்குப் போயிருக்கிறார்கள். ஐந்தாவது கட்டத்திலிருந்து மூன்றாவது கட்டத்திற்குப் போயிருப்பது பின்னோக்கிச் சென்ற செயலாகுமே யல்லாமல், தி. மு. கழகத்தைவிடத் தீவிரமாக முன்னோக்கிச் சென்ற செயலாகாது. முதல் நான்கு கட்டங்களைப் பற்றிய நிலைமைகளை ஆராய்ந்து பார்த்த பிறகுதான், தி. மு. கழகம், ஐந்தாவது கட்டத்தின் நிலையை ஏற்றுக் கொள்ள முன்வந்ததேயல்லாமல், அவற்றை அறியாமல்

அல்ல. மூன்றாவது கட்ட நிலைமையைவிட ஐந்தாவது கட்ட நிலைமைதான் மிகவும் நன்மைகள் பயப்பது என்பதைத் தி. மு. கழகம் தெளிவாக அறிந்திருக்கிறது. எனவேதான், 'திராவிட நாடு திராவிடர்க்கே' என்று தொடர்ந்து முழக்கமிட்டு வருகிறது.

பொருளியல் துறையில் சமதர்மத்தையும், சமூகவியல் துறையில் பகுத்தறிவு நெறியையும் கொண்டிருக்கும் தி. மு. கழகத்தின் கொள்கைகள், புதிய கட்சி மேற்கொண்டிருக்கும் கொள்கைகளைவிடச் சாலச்சிறந்தவை என்பதை ஆராய்ச்சியறிவு மிக்க எந்த நல்லறிவுடையோரும் எடுத்த எடுப்பில் எளிமையாக ஒப்புக்கொள்வார்கள்.

புதிய தேசியக் கட்சியைச் சேர்ந்தவர்கள், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவு—ஆற்றல்—தகுதி—திறமை—நீதி—நேர்மை—நாணயம்—கண்ணியம் — பெருந்தன்மை—பெருநோக்கு—பண்பாடு—சனநாயகப் பண்பு ஆகியவற்றை ஐயப்பாட்டிற்கு உள்ளாக்கி, அவற்றை இழித்தும், பழித்தும் பேசி வருகிறார்கள் என்றால், அதற்காகத் தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்கள் கவலைப்பட்டு விடையிறுக்க வேண்டிய தேவையில்லை. அவற்றிற்கான தக்க விடைகளை ஆணித்தரமாகவும், அழுத்தந்திருத்தமாகவும், தக்க ஆதாரத்தோடும், புதிய கட்சியின் தலைவரும், அவரைச் சார்ந்தவர்களுமே சென்ற பதினொரு ஆண்டுக் காலத்திற்கு மேலாக, அடுக்கடுக்காக, ஆயிரக்கணக்கில் கூறி வைத்திருக்கிறார்கள். அவைகளே அவர்களின் மனக்கண்முன் நின்று அறைந்தாற்போல் விடையிறுக்கும்.

'அறிஞர் அண்ணா', 'அண்ணா வாழ்க', 'திராவிடநாடு திராவிடர்க்கே', 'வடநாடு தென்னாட்டை வஞ்சிக்கிறது', 'தென்னாடு வடநாட்டால் வதைக்கப்படுகிறது', 'வடவராட்சி திராவிடரின் உரிமைகளைப் பறிக்கிறது', 'வடவரின் தொழிலாதிக்கமும், வாணிக ஆதிக்கமும் தென்னாட்டை

வாட்டுகிறது' போன்ற சொற்றொடர்களைப் புதிய கட்சியினர் இப்பொழுது பழிக்கத் தொடங்கியிருக்கிறார்கள் என்றால், அதற்காகக் கழகத்தைச் சேர்ந்தவர்கள் கவலைப்பட வேண்டியதில்லை. 1949-ஆம் ஆண்டு செப்டெம்பர்த் திங்கள் 17-ஆம் நாளிலிருந்து 1961-ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18-ஆம் நாள்வரையில் இப்படியும் அப்படியுமாகப் புரண்டு அப்பொழுதெல்லாம் கூறிய கருத்துக்களை. அந்த நாக்குகளே அவர்களுக்கு நினைவுபடுத்தி, அவர்களின் ஓய்வு நேரங்களில் அவர்களைப் பழித்துக்கொண்டிருக்கும்.

எனவே புதிய கட்சி இழிவையோ—பழியையோ—அழிவையோ—அச்சத்தையோ—கலக்கத்தையோ தி. மு. கழகத்திற்கு ஒருநாளும் ஏற்படுத்தவல்லது அல்ல என்ற உணர்வோடு, தி. மு. கழகத் தோழர்கள் தம் கடமைகளைக் கண்ணியமான முறையில், கட்டுப்பாட்டோடு, நேர்மைப் பண்போடு, நீதிப்போக்கோடு, நாணயந் தன்மையோடு என்றும்போல் நிறைவேற்றுவார்களாக!

# கழகமும் கனவும்

திராவிட முன்னேற்றக் கழகம் தனது முக்கிய அரசியல் குறிக்கோளாகவும், கொள்கையாகவும் கொண்டிருக்கிற "திராவிடநாடு திராவிடர்க்கே" என்ற கோட்பாட்டைக்கனவு என்றும்—வெறுங் கனவு என்றும்—வீண் கனவு என்றும், வெட்டிக் கனவு என்றும்—பகற்கனவு என்றும் வெறும் பகற்கனவு என்றும் இழித்துப் பழித்துப் பேசி, அலுத்து அயர்ந்துபோன அரசியல் கட்சிக்காரர்கள் ஒருபுறமிருக்கபுதிய தேசியக் கட்சியினர், கவைக்குதவாத கருத்தற்ற கூற்று என்று வெறுத்தொதுக்கி வைக்கப்பட்ட அந்தப்பழைய பல்லவியை எடுத்து வைத்துக்கொண்டு கேட்போர் செவிக்குப் புளிப்பை உண்டாக்கக் கூடிய வகையில், ஈனக்குரலில், அதனைப் பாடத் தலைப்பட்டிருக்கிறார்கள்.

திராவிட முன்னேற்றக் கழகம், "திராவிடநாடு திராவிடர்க்கே ஆக வேண்டும்" என்ற கனவைக் கண்டு கொண்டிருக்கிறது என்பது உண்மை—அதுவும் தி. மு. கழகம் துவக்கப்பட்டதிலிருந்து மிகத் தீவிரமாகக் கண்டு கொண்டிருக்கிறது என்பதும் உண்மை—அதுவும் தி. மு. கழகத்தில் ஈடுபாடு கொண்டுள்ள முக்கியமானவர்கள் பலரும், 1940-ஆம் ஆண்டில் திருவாரூரில் நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டிலிருந்தே அந்தக் கனவைத் காணத்

தலைப்பட்டிருக்கிறார்கள் என்பதும் உண்மை—அதுவும் தி. மு. கழகத்தினர் எல்லோரும் அந்தக் கனவைப் பகற் கனவாகக் கண்டு கொண்டிருக்கிறார்கள் என்பதும் முழுக்க முழுக்க உண்மை; ஆனால், அந்தப் பகற்கனவு வீண் கனவு—வெறுங் கனவு—வெட்டிக் கனவு என்பது மட்டும் தவறு; அந்தப்பகற்கனவு விருப்பத்தோடும் வேட்கையோடும், விளக்கத்தோடும் வீரத்தோடும், அறிவோடும் ஆற்ற லோடும், தெளிவோடும் திண்மையோடும், உணர்ச்சியோடும் ஊக்கத்தோடும், எழுச்சியோடும் ஏற்றத்தோடும், பொலி வோடும் வலிவோடும் காணப்படுகின்ற கவின்மிகுந்த கனவாகும்; அந்தக் கனவு நனவாகக்கூடிய நலமெலாம் ஒருங்கே பொதிந்து காணப்படும் நல்ல கனவாகும்!

திராவிட முன்னேற்றக் கழகம் காணுகிற கனவு பகற் கனவுதான்—விழிப்புணர்ச்சியோடு பகலில் காணுகிற பகற்கனவுதான்; இது இரவுக் கனவு அல்ல—தூக்க வுணர்ச்சியோடு இரவில் காணுகிற இரவுக் கனவு அல்லவே அல்ல!

'பகற் கனவு' என்பது : பட்டப்பகலில் கண்கள் இரண்டையும் அகலத் திறந்து வைத்துக்கொண்டு, விழிப்போடு, தெளிவறிவின் துணையோடு காணும் கனவு; ஆனால் 'இரவுக் கனவு' என்பது இராக்காலத்தில், (சிற்சில வேளைகளில் இராக்காலமாக ஆக்கிக்கொண்டே பகற் காலத்தில்) இரண்டு கண்களையும் இறுக மூடிக்கொண்டு, தூக்கத்தில், தெளிவறிவில்லாத நிலையில் காணும் கனவு!

'பகற்கனவு' என்பது, ஐம்புலனறிவின் துணை கொண்டு, சிந்தனையறிவு, மிகத் தெளிவோடும், தொடர் போடும், காரணகாரிய விளக்கத்தோடும் பெற்றெடுக்கும் ஒழுங்கான கற்பனைக் காட்சி யாகும்; 'இரவுக் கனவு' என்பது, சிந்தனை நினைவு ஐம்புலனறிவின் தொடர்பில்லா மலும், மிகத் தெளிவில்லாமலும், காரண காரிய விளக்க

மில்லாமலும் பெற்றெடுக்கும் ஒழுங்கற்ற கற்பனைக் காட்சியாகும்.

இவ்வாறு பகுத்துக் காணப்படக் கூடிய முறையில் அமைந்த 'பகற் கனவினை'க் காண்பதிலே தி. மு. கழகம் வெட்கமோ வேதனையோ, துக்கமோ, துயரமோ கொள்ள வில்லை; 'பகற் கனவு' காணுகிற அளவுக்குச் செழுமையை யும், சிறப்பையும் கொண்டிருப்பதிலே பெருமையும், பூரிப்புமே கொள்கிறது; இதில் இழிவும் இல்லை; பழியும் இல்லை..

'இரவுக் கனவு' காண்பவர்கள், அந்தக் கனவுலகிலே ஒன்றியிருந்துவிட்டுப், பின் கண் விழித்துப் பார்க்கும் போது, உண்மை உலகம் தெரிய, கனவுலகிலே கண்ட காட்சிகள் பலவற்றையும் நினைந்து வெட்கம், வேதனை, துக்கம், துயரம் போன்ற உணர்ச்சிகளைப் பெறுவ தோடு, அந்தக் கனவை உண்மை என்று நம்பி, அவர்கள் நடந்து கொள்வார்களேயானால், அப்பொழுது அவர்கள் இழிவையும், பழியையும் தேடிக் கொண்டவர்கள் ஆவார்கள்.

பகற் கனவு தோன்றி, நிலைத்து நின்று, தொடர்ந்து வளர்ந்து வரக்கூடிய தன்மையைக் கொண்டது; ஆனால், இரவுக் கனவு தோன்றி, உடனே அழிந்து மறைந்துவிடும் தன்மையது. பகற் கனவு காரணகாரிய விளக்கங்களோடு தோன்றி, முறையாக வளர்ந்து, வெற்றி கொள்ளும் தன்மையது; ஆனால், இரவுக் கனவு காரண காரிய விளக்க மில்லாமல், திடீரென எதிர்பாராத விதமாகத் தோன்றி, வளர்ச்சிக்கு இடமில்லாமல், தோல்வியோடு அழிந்து ஒழியும் தன்மையதாகும்.

இப்பொழுது விந்தைக்குரிய நிகழ்ச்சியாகக் காணப் படுவது என்னவென்றால், திடீரென்று 'இரவுக் கனவு' காணத் தலைப்பட்டிருக்கும் சிலர், தொடர்ந்து 'பகற் கனவு' கண்டுகொண்டு வரும் பலரைப் பார்த்து இழித்தும்,

பழித்தும் பேசத் தலைப்பட்டிருப்பதுதான். அப்படிப்பட்டவர்களின் நிலையையும், நினைப்பையும், போக்கையும் கண்டு ஆத்திரப்படுவதற்கு ஒன்றுமில்லை. கழிபேரிரக்கந்தான் கொள்ள வேண்டியிருக்கிறது!

கனவு காணாமல் உலகத்தில் உயர்ந்த மனித இனத்தையோ, தனிப்பட்ட மனிதனையோ எங்கும், எப்பொழுதும் காணவே முடியாது. மனித இனமோ அல்லது தனிப்பட்ட மனிதனோ கண்ட கனவுகள் எல்லாம் நனவாகாமல் போயிருக்கக்கூடும்; ஆனால், கண்ட கனவுகள் நனவாகாமல் வளர்ந்த மனித இனமோ அல்லது மனிதனோ இருக்கவே முடியாது!

சிந்தித்துச் செயலாற்றும் அறிவாற்றலைப் பெற்ற மனிதன், முதலில் கனவு கண்டுதான், அதுவும் பகற் கனவாகக் கண்டுதான், பிறகு அப்பகற் கனவின் வழியே நின்று, கொள்ள வேண்டிய கருத்துக்களையும், சொல்ல வேண்டிய மொழிகளையும், செய்ய வேண்டிய செயல்களையும் உருவாக்கிப், பெறவேண்டிய பயன்களைப் பெறுகிறான்.

பரம்பரையறிவு—பட்டறிவு (அனுபவ அறிவு)—உள்ளது சிறத்தலறிவு வழியன்றிப், புதிது சிந்தித்துச் சிறப்படையும் தகுதியும், திறமையும், அறிவும், ஆற்றலும் அற்ற விலங்கினங்கள், பறவையினங்கள், ஊர்வன, நகர்வன, நீந்துவன, இருப்பன போன்ற உயிரினங்கள் வேண்டுமானால், கனவு, அதுவும் 'பகற்கனவு' காணும் தன்மையைப் பெறாமலிருக்கலாம். ஆனால், நாகரிகச் சிறப்பிலும், பண்பாட்டுச் சிறப்பிலும் நாளுக்கு நாள் மேலோங்கி வரும் மனித இனம், நாளுக்கு நாள் புதிய புதிய பகற் கனவுகளைக் கண்டு, அவற்றை நிறைவேற்றி வைக்கும் வழிவகைகளை அறிந்து, அந்த வழி வகைகளில் முயன்று, அப்படிப்பட்ட முயற்சிகளில் வெற்றுபெற்றுக்,

கனவுக் காட்சிகளை நனவுக் காட்சிகளாக்குவதிலேதான் ஓயாமல், ஒழியாமல் ஈடுபட்டு வந்திருக்கிறது.

எனவே பகற்கனவு காணுவதென்பது, தனிப்பட்ட மனிதனின் இயல்பு—சேர்ந்து வாழும் மக்கள் சமூகத்தின் இயல்பு—தனித்தனி மனிதப் பிரிவின் இயல்பு—மனித இனம் அனைத்தின் இயல்பு ஆகும்.

இந்த அடிப்படையில் தி. மு. கழகம் பகற் கனவு கண்டு வருவதும் இயல்புதான்—ஏற்றதுதான்—எதிர் பார்ப்பதுதான்—எழில்மிக்கதுதான்!

முதன் முதலில் சோற்றைச் சமைத்தவன்—செங்கல்லை அறுத்தவன்—பானை பண்ணினவன்—பனையோலை முடைந்தவன்—வேட்டி நெய்தவன்—வெற்றிலை பாக்குப் போட்டவன்—வண்டி ஓட்டினவன்—வரப்பு அமைத்தவன்—குடம் செய்தவன்—கோயிலைக் கட்டினவன்—மாளிகை எழுப்பினவன்—மடம் அமைத்தவன்—வேட்டையாடினவன்—வேடிக்கை காட்டினவன்—சிற்பம் வடித்தவன்—சிலம்பு ஆடினவன்—ஓவியம் தீட்டினவன்—ஒண்பொறி கண்டவன்—இசை பாடினவன்—இனியவை வழங்கினவன்—நாடகம் ஆடினவன்—நாட்டை மீட்டவன்—கூத்து ஆடினவன்—குடி அமைத்தவன்—அரசு அமைத்தவன்—ஆட்சி நடத்தினவன்—இலக்கியம் செய்தவன்—இலக்கணம் வகுத்தவன் என்றவாறெல்லாம் பெயர் பெற்றவர்கள் எத்துணையோ பகற் கனவுகளைக் கண்டதற்குப் பிறகு தானே அப்படிப்பட்ட பெயர்களைப் பெற்றார்கள்!

இன்று நம்முன் காட்சியளிக்கும் வான்வெளிப் படகு — வானவூர்தி — வானொலி — வானொளி — புகைவண்டித் தொடர்கள்—புகைபோக்கி ஆலைகள்—தொலைபேசிகள்—தொலைக் காட்சிகள்—மாடமாளிகைகள்—கூட கோபுரங்கள்—பூங்காக்கள் — புதுநகர்கள்—பேசும் படங்கள்—பேசும் பெட்டிகள்—நிழற்படங்கள்—நிலவூர்திகள்—மின்

விளக்குகள்—மின்பொறிகள் போன்ற பலவற்றையும் கண்டுபிடித்த அறிவியலறிஞர்கள் அத்துணைப் பேர்களும், எத்தனையோ பகற்கனவுகளைக் கண்டிருக்கிறார்கள்!

உலகைத் திருத்திய உத்தமர்களாகக் கருதப்படும் புத்தர் — ஏசு — திருவள்ளுவர் — கன்பூசியஸ் — நபிகள் நாயகம் — சாக்ரடீஸ் — அசோகன் — கரிகாலன்—ஆப்பிரகாம் லிங்கன்—வால்டேர் — ரூசோ—மாசினி—கரிபால்டி—காரல் மார்க்ஸ்—லெனின் — கமால்—சன் யாட்சென்—காந்தியார் போன்ற பலரும் கண்ட பகற் கனவுகள் கொஞ்சமா, நஞ்சமா?

உலகின் விடுதலை வீரர்களாகக் காட்சியளித்தவர்களெல்லாம் களத்தில் நின்று போராடிய போதும், நாடு கடத்தப்பட்டு அலைந்து திரிந்தபோதும், சிறையில் கிடந்து வாடிய போதும், செருக்கர்களால் அலக்கழிக்கப்பட்ட போதும், விடுதலைப் பாசறைகளிலிருந்து பணிபுரிந்த போதும் எவ்வளவு பகற்கனவுகளைக் கண்டிருந்திருப்பார்கள்?

தனித் தீவிலே தள்ளிவைக்கப்பட்டிருந்தபோது நெப்போலியன், அலைகடலைக் கடந்து, பிரான்ஸ் நாட்டைக் கைப்பற்றவேண்டி எவ்வளவு பகற்கனவுகளைக் கண்டிருந்திருப்பான?

சைபீரியா பனிப்பாலை வெளியில் அலைந்து திரிந்த லெனின், உருசியப் பேரரசை மாற்றி அமைக்க எவ்வளவு பகற்கனவு திட்டங்களைத் தீட்டியிருந்திருப்பார்?

அவனி முழுவதும் வென்று அடக்க நினைத்த அலெக்சாண்டர் பகற்கனவுகள் பல காணுமலா, நாடுகள் பலவற்றையும் படையெடுத்துப் பிடித்தான்?

இமயமலையில் விற்கொடியைப் பொறித்துவிட்டு மீண்ட இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் எத்துணைப் பகற்

கனவுகள் கண்ட பிறகு வடநாடு நோக்கிப் படையெடுத்துப் போயிருப்பான்?

பகற்கனவே காணுமலா சேரன் செங்குட்டுவன் வடநாடு சென்று, கனக விசயர்களை வென்று, அவர்களின் தலையிலே இமயத்தின் கல்லைக் கொண்டுவந்து, கண்ணகிக்குப் படிவம் சமைத்தான்?

காவிரிக்கு அணையும், கரையும் எழுப்பிய கரிகாற் சோழன் பகற்கனவு காணுமலா, ஈழநாட்டை வென்று, சிங்கள அடிமைகளைக் கொண்டுவந்து காவிரிக்குக் கரை கட்டும் அடிமைத் தொழிலில் அடிமைப்படுத்தினன்?

பகற்கனவு எதுவும் காணுமலா வாசிங்டன் அமெரிக்க விடுதலைப் போரை நடத்தினர்?

பகற்கனவு சிறிதுகூடக் காணுமலா போர்வீரன் நிலையிலிருந்த இட்லர், அகில உலகத்தையும் ஆட்டிப்படைக்கும் நிலைக்கு வந்தான்?

அலிபுரம் சிறையில் கிடந்தபோதும் ஏரவாடா சிறையில் கிடந்தபோதும் பண்டித நேரு, இந்தியாவின் எதிர் காலம் பற்றிப் பகற்கனவு காணுமலா இருந்திருப்பார்? காலை—மாலை—இரவுச் சாப்பாடுகளை மட்டுமேவா எண்ணிக்கொண் டிருந்திருப்பார்?

சென்னையின் கோட்டையிலே காங்கிரசுக் கொடியை ஏற்றிப் பார்க்கத்தான் போகிறோம் என்று, காலஞ்சென்ற சத்தியமூர்த்தி அவர்கள் பல தடவைகள் பகற் கனவுகள் காணவில்லையா?

இவர்களெல்லாம்கண்ட பகற்கனவுகள் அற்ப சொற்பமாகவா இருந்திருக்கும்? எண்ணிலடங்காதனவாக அல்லவா இருந்திருக்கும்? அவர்கள் கண்ட பகற்கனவுகளிலே பலப்பல வெற்றி பெற்றிருக்கின்றன; பலப்பல வெற்றிபெருமல் போயிருக்கவும் கூடும். இவற்றைக்

காலந்தான் அறுதியிட்டு உறுதியாகக் கூறிவருகின்றது. பகற்கனவுகள் வெற்றி பெறுவதும், வெற்றி பெறுமற் போவதும், அந்தக் கனவுகளைக் கண்டவர்களுடைய அறிவு—ஆற்றல்—தகுதி—திறமை ஆகியவை, அவர்களுக்குத் துணையாக அமையும் ஆதரவான ஆட்கள்—சூழ்நிலைகள்—வாய்ப்புகள்—வசதிகள் ஆகியவை, அவர்கள் மேற்கொள்ளும் காலம்—இடம்—பொருள்—ஏவல் ஆகியவை போன்ற பல்வேறு வாய்ப்புகளும், வசதிகளும் அமைவதைப் பொறுத்தும், அமையாமல் போவதைப் பொறுத்தும், முறையே நிகழக்கூடும். ஆனால், இந்த நிலைமைகளைக் காலந்தான் வரையறுத்துக் கூறும் தன்மையது. மாற்றாரின் விருப்பு வெறுப்புக் கேற்ப ஒருவரின் பகற்கனவு வெற்றி பெறவோ, பெறமுடியாமற் போகவோ செய்யாது.

திராவிட முன்னேற்றக் கழகம்,

"தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் ஆகிய திராவிட மொழி மாநிலங்கள் நான்கும், மொழிவழித் தனித்தனி எல்லைகளை அமைத்துக்கொண்டு, தேவையான முழு உரிமைகளையும், அதிகாரங்களையும், ஆதிக்கங்களையும் ஆட்சி வகைகளையும் தனித்தனியே பெற்றுக்கொண்டு, பிரிந்து போகும் உரிமையோடு, தேவையான குறைந்த அளவுத் திட்டங்களில், தங்களுடைய நலத்திற்கும், வாழ்விற்கும், பாதுகாப்பிற்கும் தேவையான வகைகளில் ஒன்று சேர்ந்து ஒரு திராவிடக் கூட்டாட்சி அமைப்பாக அமைந்து அரசியலில் மக்களாட்சித் தன்மையின் அடிப்படையில் அமைந்த குடியரசையும், பொருளியல் துறையில் சமதர்மக் கோட்பாட்டின் தன்மையின் அடிப்படையில் அமைந்த ஏற்றத்தாழ்வு அற்ற பொருளாதாரச் சமத்துவத்தையும், சமூகத்துறையில் பகுத்தறிவு நெறியின் அடிப்படையில், அமைந்த ஏற்றத் தாழ்வு அற்ற சமூகச் சமத்துவத்தையும் கொண்டு திகழவேண்டும்

"அந்தந்த மாநிலங்களின் மொழிகள் அந்தந்த மாநிலங்களில் ஆட்சிமொழிகளாய் அமைதல் வேண்டும்; தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் என்ற நான்கு மொழிகளும் திராவிடக் கூட்டாட்சியின் ஆட்சி மொழிகளாக அமைதல் வேண்டும்; அகில உலகப் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலம், எல்லா வழிகளிலும் திராவிடத்தோடு உலகத் தொடர்பை ஏற்படுத்தித் தரவும், திராவிடத்திற்கு உலக அறிவியலறிவையும், அரசியலறிவையும், பொதுவியலறிவையும் புகட்டவும் துணை மொழியாக அமைதல் வேண்டும்.

"திராவிடத்தின் வளங்களும், வரிப்பணங்களும், வசதிகளும், வாய்ப்புக்களும் உரிய முறையில் திராவிடத்திற்கே பயன்படவேண்டும்.

"திராவிடத்து மக்களின் அறிவும், ஆற்றலும், உழைப்பும் உரிய முறையில் திராவிடத்திற்கே பயன்பட வேண்டும்.

"திராவிடத்திற்கு என்று தனிக்கொடி, தனிப்படை தனி ஆட்சி, தனி அமைச்சு இருக்கவேண்டும்.

"திராவிடப் பகுதிகள் நான்கும் சமத்துவ அடிப்படையில் கூட்டாட்சியில் பங்கு கொண்டு, நியாயமான உரிமைகளையும், அதிகாரங்களையும், வசதிகளையும் உரிய முறையில் பெறவேண்டும்.

"திராவிடம் மற்ற மற்ற உலக நாடுகளைப்போல ஐக்கிய நாடுகள் அவையில் உரிய முறையில் இடம்பெற்று, உரிய உரிமைகளைப் பெற்று, உரிய முறையில் வாழ வேண்டும்.

"திராவிடம் அறிவியலிலே வளர்ந்து, கலையியலிலே ஓங்கி, நாகரிக மேம்பாடும், பண்பாட்டுச் சிறப்பும் பெற்று, ஈடும் எடுப்பும் அற்ற சிறந்ததொரு நாட்டாகத் திகழ வேண்டும்.

"திராவிடத்தின் விளைபொருள் உற்பத்தியும், செய்பொருள் உற்பத்தியும் பெருகி, அனைவரும் வயிறார உண்ண உணவு பெறவும், மானமார உடுக்க உடை பெறவும், தேவையார இருக்க இடம் பெறவும், அறிவாரக் கல்வி பெறவும், வாழ வழி பெறவும், ஓய்வு நேரம் பெறவும், இன்பம் நுகருவதற்கான வசதிகள் பெறவும் வேண்டும்;

"திராவிடம் உலகப் படத்தில் தனி நாட்டிற்குரிய இடத்தையும், மதிப்பையும், செல்வாக்கையும் பெற வேண்டும்."

என்று பலவாருகப் பகற்கனவுகள் பலவும் கண்டு வருகிறது!

தி. மு. கழகம் காணுகிற கனவுகளெல்லாம் மனித முயற்சிக்கு அப்பாற்பட்ட, நடைபெற முடியாத, இயற்கைக்கு மாறுபாடான, இதுவரையில் உலகில் வேறு எங்கும் கண்டறியாத கனவுகள் அல்ல. தி. மு. கழகம் காணுகிற கனவுகள் எல்லாம் நம்பிக்கைக்குரியவை—தன் மதிப்புப் பெற்றவை—தன்னூற்றல் கொண்டவை—மக்களின் ஆதரவை நாளுக்குநாள் தேடித்தருபவை—நாளுக்குநாள் வலிவும் பொலிவும் பெற்று வருபவை—மக்களின் ஒத்துழைப்பின்பேரில் எளிதாகக் கைகூடி வரத்தக்கவை—பல்வேறு கலை, மொழி, வரலாறு, இலநூல், நாகரிகம், பண்பாடு போன்ற சான்றுகளைத் தமக்கு ஆதரவாகக் கொண்டவை — திராவிடத்தின் வாழ்வையும் வளத்தையும், செழிப்பையும் செல்வத்தையும் பெருக்கக்கூடியவை ஆகும். கழகத்தின் சார்பாகக் கனவுகளைக் காணுகிற தலைவர்களும் முன்னணியினரும், தொண்டர்களும் கனவுகளை நனவு

களாக ஆக்குவதற்கு ஏற்ற அறிவும், ஆற்றலும், தகுதியும், திறமையும், உணர்ச்சியும், எழுச்சியும், ஊக்கமும், ஆக்கமும் பெற்றவர்களாவார்கள். தி. மு. கழகம் போகிற போக்கு நீதி—நேர்மை—நாணயம்—நல்ல பண்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டதாகும். கழகம் போகிற வழி கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு. என்ற அறவழியாகும். இவ்வளவு தன்மைகளையும கொண்டிருக்கிற தி. மு. கழகம் காணுகிற கனவுகள் நனவுகள் ஆகியே தீரும். அந்த நிலைமையை வருங்காலம் காட்டியே தீரும்.

திராவிடத்தைவிட நிலப்பரப்பிலும், எல்லைப் பாதுகாப்பிலும், மக்கள்தொகையிலும், வரலாற்றுச் சிறப்பிலும், பண்பாட்டுத் தன்மையிலும், நாகரிக மேம்பாட்டிலும், மொழிவளப்பத்திலும், கலைச்செறிவிலும், கடற்கரை நீளத்திலும், நிலவளத்திலும், நீர்வளத்திலும், கனிச்செல்வத்திலும், தட்பவெப்ப நிலையிலும் மிகமிகக் குறைந்தும்—அறவே அற்றும்—சொத்தை போகியும்—சோடைபாய்ந்தும்—நலிவு எய்தியும்—நலம் குறைந்தும் காணப்படும் நாடுகள் எவ்வளவோ இருக்கின்றன. அவையெல்லாம் வாழும்போது, 5400 மக்களை மட்டுமே கொண்ட அந்தோரா வாழும்போது, மூன்று இலட்சம் மக்களை மட்டுமே கொண்டு கடற்கரைப்பகுதியில்லாமல் ஐங்கிய நாடுகள் அவையில் வீற்றிருக்கிற லக்சம்பர்க் வாழும் போது, பனிப்பாறைகள் நிறைந்த நார்வே வாழும்போது, பாலைவனம் நிரம்பிய அராபியா வாழும்போது, புல்வெளி மட்டுமே நிறைந்த டென்மார்க் வாழும்போது, நாகரிக மற்றவர்கள் வாழும் காஙு நாடு வாழும்போது, இரும்புக் கனி இல்லாத சப்பான் வாழும்போது, பருத்தி விளையும் காடு இல்லாத கிரேட் பிரிட்டன் வாழும்போது, இந்தியாவினின்றும் இரண்டு துண்டுகளாகப் பிரிந்த பாக்கிச்தான்

வாழும்போது, அந்தந்த வகையில் மிகச் சிறந்து விளங்கும் திராவிடம் எப்படி வாழமுடியாமற் போய்விடும்? எனவே தான், கழகம் காணும் கனவுகள் நல்ல கனவுகள், நடந் தேறக்கூடிய கனவுகள், நனவாகக் கூடிய கனவுகள் என்று துணிந்து தன்னம்பிக்கையோடும், தன் னுற்றலோடும், தன்மதிப்போடும் கூறவேண்டியிருக்கிறது.

"திராவிட நாடு திராவிடர்க்கே" என்ற கோட்பாடு நடந்தேற முடியாத வெறும் பகற்கனவு என்று பழித்துக் கூற, பகைவர்கள்—அதுவும் புதிதாகப் பகைவர்களாகத் தோற்றமளிக்கும் புதிய தேசியக் கட்சியினர் முன்வருகிறார் களென்றால், அவர்களுக்குக் கழகத்தவர்கள் யாரும் விடை யிறுக்கவேண்டிய இன்றியமையாமை இல்லை. அவர்க ளுடைய முன்னைய பேச்சும், எழுத்தும், கருத்தும், வாத மூமே அவர்களை இப்பொழுது எதிர்த்து, மறுத்து, இழித் துப், பழித்து, அடக்கி, ஒடுக்கி, உட்கார வைக்கக்கூடிய வல்லமை பெற்றவையாகும்.

அறிஞர் அண்ணு அவர்கள் "திராவிட நாடு" இதழில் சுட்டிக் காண்பித்திருப்பதற்கிணங்கப், புதிய தேசியக் கட்சியின் தலைவரின் முன்னைய கருத்தே, அவருடைய இப்போதைய கருத்தை அழுத்தந் திருத்தமாகவும், வன்மை யாகவும் கண்டித்துக் கூறுகிறது.

"திராவிட நாடு என்பது விண் மனக்கோட்டை— வெறும் கனவு என்கிறார்கள் சிலர்.

"கனவு காண்பதென்பது ஒரு சமுதாயத்துக்கு மிக மிகத் தேவை.

"இதோ வானத்தில் வண்ணமதி நிலவுகிறது. சில தினங்களுக்கு முன்பு இருந்த சந்திரன் வேறு—இப்பொழுதுள்ள சந்திரன் வேறு. பத்து நாள் முன் வாழ்ந்த வையம் வேறு.

"ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் யாரோ ஒருவன் கனவு கண்டதன் விளைவாகத்தான் சந்திரனை எட்டிப் பிடித்துப், பூமியிலிருந்த பொருளைச் சந்திரனில் சேர்க்க முடிந்தது. இன்று சந்திர மண்டலத்தை 'ராக்கெட்டு' எட்டிப் பிடிக்க வித்தூன்றியவன் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் கனவு கண்டவன்தான். அப்படிக் கனவு காண்பதற்கு இன்று சிலர் தேவைப்படுகிறார்கள்.

"அண்ணா அவர்கள் அப்படிப்பட்டதோர் அரிய கனவைக் காண்கிறார். அந்தக் கனவு நனவாக நாம் மனமார உழைத்தால், நம் காலத்திலேயே அதைச் சாதிக்கலாம்."

இது புதிய தேசியக் கட்சித் தலைவர், 'இரவுக் கனவு' காணாமல், 'பகற்கனவு' கண்டுகொண்டிருந்தபோது, அதாவது, 17-9-59-இல், சென்னைக் கடற்கரைக் கூட்டத்தில், அறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழாவையொட்டிப் பேசிய பேச்சில் உதிர்த்த சொல் முத்துக்களாகும். அந்தச் சொல் முத்துக்களைச் சொத்தைகள் என்று கூறுமளவிற்குப் புதிய கட்சியின் தலைவர் 'இரவுக் கனவு' காணத் தொடங்கிப், 'பகற்கனவு' காணும் கழகத்தவர்களைப் பழிக்கிறார். 'பழிப்பு' சொல்லியவரைத்தான் மிகவாகத் தாக்குகிறதேயல்லாமல், கழகத் தோழர்களை எள்ளளவும் தீண்டும் தன்மையைப் பெறவில்லை.

"உள்ளுவ தெல்லாம் உயர்வு உள்ளல்" (நினைப்பதை யெல்லாம் உயர்வாகவே நினைத்தல் வேண்டும்) என்று வள்ளுவர் கூறியதற்கிணங்க, தி. மு. கழகம் தான் காணும் கனவை உயர்வாகவே காணுகிறது—உண்மையாகவே காணுகிறது—உள்ளன்போடேயே காணுகிறது—நல்லதாகவே காணுகிறது—நனவாகும்படியாகவே காணுகிறது.

திராவிட நாடு திராவிடர்க்காகுக!

அந்த நல்ல பகற்கனவு நல்ல பண்புள்ள நனவாகுக!

★